பாலகுமாரன்
கண்ணாடிக்
கோபுரங்கள்

கண்ணாடி கோபுரங்கள்

சிவபிரகாசத்துக்கு முழங்கை வரையில் கேழ்வரகு கூழ் பரவியிருந்தது. மொண்டு மொண்டு ஊற்றுகிற வேகத்தில் முகத்தில் கூட நாலைந்து பெரிய துளிகள் தெறித்தன. புருவத்தில் தெறித்த பெரிய துளியை இடக் கையால் துடைத்திருக்க, விபூதி கோடு மாதிரி ஒற்றையாய் காது வரை பரவியிருந்தது.

''அப்படியே போட்டேனா மூஞ்சி மேல. போ அண்ணாண்ட.''

நாற்பது வயசு பெண் பிள்ளையை நெட்டித் தள்ளி விட்டு அடுத்த ஆளுக்குக் கூழ் ஊற்றினான். புவனேஸ்வரி புருஷன் படுகிற அவஸ்தையை இருபது அடி தொலைவிலிருந்து எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நாலு பேர் துணைக்கு நின்று வரிசையாக்கியும் ஜனம் கட்டுப்படவேயில்லை. கடைசிச் சொட்டு வழித்துக் கொடுக்கிற வரையில் கட்டுப்பட மாட்டார்கள். இடுப்பு உயர அண்டாவை எட்டி எட்டிப் பார்த்து விட்டுப் போவார்கள்.

''இந்த தடவ கூழு குறைச்சிட்ட போ. பேர் பாதி வூட்டுக்கு எடுத்துகினு போய்ட்டியா, காலைலேர்ந்து

ஊத்தப்போற...ஊத்தப் போற...ஊத்தப் போறேன்னு நிக்கறேன். ராவுண்டு கூட கிடைக்கல. வாங்கின பொம்பளையே நாலு தடவ வாங்கினா...யார் கேட்கறது? பின்னால நிக்கற ஜனத்துக்கு ஊத்தவேயில்லை.''

கோபமாய் பொருமி விட்டுப் போவார்கள்.

'நாயக்கரமா எதுனா எடுத்து வச்சிருந்தா ஒரு சொம்பு ஊத்தேன்.'

நாலு பெண் பிள்ளைகள் சுற்றிச் சுற்றி வருவார்கள்.

கூட்டம் கலைந்த பிறகு உண்மையாகவே கிடைக்க வில்லை என்று சொல்பவர்களுக்குத் தனியே ஒரு தவலை கூழ் கூடை போட்டு மூடியிருக்கிறது. பாதி தவலை ஊற்றி விட்டு மீதியை உறவுக்காரர்கள் சிலருக்கு அனுப்பிய பிறகு ஒரு சொம்போ, அரை சொம்போ மிஞ்சும்.

அதுதான் இன்று பகல் ஆகாரம்.

சிவப்பிரகாசம் திணறிக் கொண்டிருந்தான். நாலா பக்கமும் நீட்டின பாத்திரத்தில் ஒன்று நொச்சென்று முகத்தில் இடிக்க ஒரு கணம் நெற்றியில் கை வைத்து அழுத்திக்கொண்டு, இடித்த பாத்திரத்துக்கு முதலில் ஊற்றி பின்னுக்குத் தள்ளினான்.

நெற்றியில் நல்ல இடி போலிருக்கிறது. பொத்திக் கொண்டு இடதுகை எடுக்காமல் மொண்டு மொண்டு நீட்டின பாத்திரங்களில் எல்லாம் கூழ் நிரப்பினான்.

புவனாவின் காலின் கீழ் ஒரு நோஞ்சான் குழந்தை இடுப்புத் துணியில்லாமல் வெறும் சட்டையுடன் நின்று பாத்திரம் நீட்டி கெஞ்சிற்று. இடதுகையில் பாத்திரத் தோடு நீல நிற பிளாஸ்டிக் ஸ்பூன் வைத்துக் கொண்டிருந்தது. எவள் பெத்ததோ? நெஞ்சுக்கூடு

இறுகி மூக்கில் சளி ஒழுகி, கண்களில் உயிர் வைத்துக் கொண்டிருந்தது.

''தரேன்...தரேன்...அங்க போய் நில்லு.''

சொன்னது புரியவில்லையா அல்லது சொல்வதை கேட்க விருப்பமில்லையா? மறுபடி பாத்திரம் ஏந்தி கெஞ்சிற்று.

''போ அப்பால'' புவனா விரட்டினாள். இதுக்கு முதல்ல ஒரு குவளை ஊற்றி அனுப்ப வேண்டும் என்று மனசுக்குள் குறித்துக்கொண்டாள்.

கைபாத்திரம் லொட்டென்று அண்டாவுக்கு அடியில் படும் ஓசை கேட்டது. இன்னும் ஐந்து நிமிடத்தில் முடிந்துவிடும். உடம்பு முழுக்க கூழும், வியர்வையும் சட்டை ஒட்டி புருஷன் அருகே வந்து, ''போகலாமா புவனு?'' என்று கேட்க கிளம்பிவிடலாம்.

அடி சத்தம் கூட்டத்துக்கும் கேட்டு விட்டது போலும். மேலும் இறக்கி பாத்திரம் சூழ்ந்தது.

''போங்க. அப்பால போங்க. கூழ் ஊத்த முடியாது போங்கு'' இடது வலதாய் கூட்டம் தள்ளி பிரகாசம் கால் அகட்டி நின்றான்.

''என்ன ஜனம், என்ன ஜனம், ஆம்பளையாலையே முடியலையே, நீ என்னா கதி ஆயிருப்பே? தலைபாடா நான், நாயக்கரை இட்டா, நாயக்கரை இட்டான்னு சொல்றது இதுக்குத்தான்.''

—முத்துலெட்சுமி புடவை தூசு தட்டி எழுந்துநின்று கொண்டாள். தனியே வைத்திருந்த தவலையிலிருந்து முத்துலட்சுமிக்கு இரண்டு சொம்பு கூழாவது கொடுக்க வேண்டும். கூழ் கிளறினதே முத்துலட்சுமியும் அவள் வீட்டுக்காரன் அழகிரியும்தான்.

''நீ விடு நாயக்கரே'' அழகிரி அப்படியே அண்டாவைப் பற்றிக்கொண்டு தெருவுக்கு எதிர்ப்பக்கம் போனான்.

நடைபாதையில் ஏறி அண்டாவை வைத்து விட்டு வழி மறித்துக் கொண்டான்.

''வரிசையா நின்னா கூழு. இல்லேன்னா இல்லை.'' கூட்டம் திசை மாறிற்று. சிவப்பிரகாசத்தை விட்டுவிட்டு அண்டாவைச் சுற்றிக்கொண்டது. சட்டென்று பாட்டில் தண்ணீர் எடுத்துக்கொண்டு புவனா புருஷனை நோக்கி ஓடினாள்.

''இந்தாங்க'' என்று நீட்டினாள். இடக்கையால் அப்படியே வாயில் கவிழ்த்துக்கொண்டு நிற்க, அவன் தோள்துண்டு எடுத்து வலக்கையைத் துடைத்தான்.

''அழகிரிகிட்ட சொம்பு கொடுத்துட்டு வாங்க.''

''இல்ல புவனா, கூட்டம் அண்டாவை கவிழ்த்துடும். அடில இன்னும் அரைத்தவலை கூழு இருக்கு.''

'அழகிரி, இந்தா சொம்பு பிடி.''

அவனிடம் தூக்கிப்போட்டு கூட்டத்தை தள்ளி ஒழுங்குப்படுத்தி அண்டாவிலிருந்து பையன்களை அப்புறப் படுத்தி ஒவ்வொரு ஆளாய் சிவப்பிரகாசம் விட, ஒருமாதிரி அமைதியாயிற்று.

புவனா மறுபடி தன்னிடத்துக்கு வந்தாள். காலருகே எதுவோ பிராண்டுவது போலிருந்தது. அந்த நோஞ்சான் பிள்ளை, கையிலுள்ள பாத்திரத்தால் முழங்கால் வருடிற்று.

''இருடா, இருடா''—அப்படியே அவனை வாரி அழகிரி எதிரே நிறுத்தி, ''இந்தப் பாத்திரத்துல ஊத்து'' என்று கட்டளையிட, அழகிரி அண்டாவை சரித்து ஒரு சொம்பு வாரி தூக்கின குழந்தையின் பாத்திரத்தில் ஊற்றினான். பிடித்த பிடி விடாது குலுங்கலுடன் கீழிறங்கும்போது கூழ் கனம் தாங்காது தடேரென்று நாலடி உயரத்திலிருந்து அந்த நோஞ்சான், பாத்திரத்தை

போட்டது. நீல பிளாஸ்டிக் ஸ்பூனை மட்டும் விடாது பிடித்துக் கொண்டிருந்தது.

தரை முழுக்க கூழ் சிந்த, தெரு நாய்கள் சீறியபடி கூழுக்கு ஓடி வந்தன. நக்கித் தின்றன.

''போடா, ஒரு துளிகூட சிந்தாத எல்லாருக்கும் கொடுக்கணும்னு நினைச்சேன். இப்படி போட்டுட்டியே.''

பிள்ளையை முன்னால் அனுப்பி கூழ் கேட்டிருப்பாள் போலிருக்கிறது. தாயார்க்காரி பேய் மாதிரி ஓடிவந்தாள். தரையில் நின்று முழித்துக் கொண்டிருந்த பிள்ளையின் முடிபிடித்து மடக்கி முதுகில் 'பளீர் பளீ' ரென்று அறைந்தாள். அது வலியில் துடித்தது. பிரண்டு தவித்தது.

''ஐயோ, அடிக்காதம்மா, அடிக்காதே'' புவனா தடுத்தாள்.

''அடிக்காத என்னா பண்றது? சட்டி கூழு தரைல போட்டிருச்சே, தரித்திரம். இது புறந்த நாளைலேர்ந்து விடியாத போயிருச்சு எனக்கு.''

''விடியா...த'' என்கிறபோது 'நச்'சென்று ஒரு குட்டு குழந்தையின் தலையில் விழுந்தது. பிள்ளை தலை பொத்தி குனிந்து கதறிற்று.

உச்சி மண்டை வலிக்க அழுத, அந்தக் குழந்தையைப் பிடித்து புவனா இழுத்துக் கொண்டாள்.

''பச்சை புள்ளைய அடிக்காதம்மா. கூழுதானே, நான் தரேன்.''

சிவப்பிரகாசம் அங்கிருந்து திரும்பிப் பார்ப்பது புவனாவுக்குத் தெரிந்தது. என்ன எவளாவது உன்னை முறைக்கிறாளா என்கிற ரீதியில் திரும்பிப் பார்த்தான்.

அண்டா சரித்து கடைசி குவளை கூழ் ஊற்றினான். கூழ் ஊற்றிய புது அலுமினியக் குவளையை தலைசுற்றி தெருவில் வீசினான். அதை எடுக்க பத்து பேர் பாய்ந்தார்கள்.

''என்ன புவனா, போலாமா?''

''போலாங்க, இந்த புள்ளைக்கு ஒரு சொம்பு ஊத்தணும். கீழ கொட்டிட்டான்.'

''இரண்டு நிமிஷம் இரு. கூட்டம் போய்டட்டும்.''

கூட்டம் அண்டாவை எட்டிப் பார்த்துவிட்டு கலைந்து கொண்டிருந்தது. வழக்கம்போல நாலைந்து பெண்கள் காலி பாத்திரத்தோடு, 'எதுனா இருக்கும் ஊத்துவாங்க' என்கிற நம்பிக்கையோடு அருகே நின்றார்கள்.

''இதுக்கு மட்டும் நானில்லாத வராதே புவனா. உன்னை கூட்டம் மிதிச்சுப் போட்டுரும்.''

''நா சொன்னேனே அம்மாகிட்ட, நாயக்கர் வராத நீ மூடி திறக்காத. ஒரு சொம்புகூட எடுத்து ஊத்தாதேன்னுட்டேனே. இறக்கி காலவரு ஆச்சு. உன்னியக் காணோம், கூட்டம் ஊத்து ஊத்துணுது. நல்லவேளை, வந்தீங்க.''

''போன இடத்துல நேரமாயிடுச்சு. லொட்டுன்னு இடிச்சுட்டாம்பார்.'' சிவப்பிரகாசம் அருகே வந்து நெற்றியைக் காட்டினான். சிவந்திருந்தது.

''அப்படியே கோயில் மஞ்சா எடுத்து அப்பு, சரியாயிடும்.''

''கொஞ்சம் விட்டா கண்ணுல பட்டிருக்கும். எப்ப கூழு ஊத்து, எத்தினி கூழு ஊத்து இந்தப் பேட்டை ஜனங்களுக்கு போதும் என்றதே கிடையாது. பொம் பளைங்க இடிக்கறாங்க பாத்திரத்தாலேயே''—அழகிரி அலுத்துக் கொண்டான்.

''கண்ணு போயிருந்தா என்னா கதி?'' கொஞ்சம் இடைவெளி விட்டு முணுமுணுத்தான்.

''அதெல்லாம் ஒன்னும் போவாது. ஆத்தாளுக்கு செய்யறவங்க யாருக்கும் எந்த குறையும் வராது''

முத்துலட்சுமி கூடை வைத்து மூடியிருந்த தட்டிலிருந்து மஞ்சள் கலவையை எடுத்து புவனாவிடம் நீட்டினாள். புவனா அப்படியே புருஷன் நெற்றியில் அப்பி விரலால் தடவினாள்.

''புருஷனும் பொண்டாட்டியும் ஒரு கும்புடு கன்னத்தில் போட்டுக்கிட்டு கிளம்புங்க. வூடு போய் சேரலாம்.''

கூட்டம் சுத்தமாய் கலைந்துவிட எதிரே காத்திருந்த நாலைந்து பெண்களுக்கு தவலையிலிருந்து மொண்டு நாலு சொம்பு கூழ்ஊற்ற, அடிவாங்கின அந்தக் குழந்தையும் பாத்திரம் நீட்டிற்று. பாத்திரத்தை இறுகப் பிடிக்கச் சொல்லி புவனா வழிய வழிய ஊற்றினாள்.

பிள்ளை தடுமாற, ''மறுபடி விட்டுறப்போற'' என்று கத்தினாள். பெற்றவள் பாத்திரம் வாங்கி பிள்ளையை இடுக்கிக்கொண்டு போனதும் புருஷனும் மனைவியும் சன்னதிக்கு போய் விழுந்து வணங்கினார்கள்.

முத்துலட்சுமி தவலையை தூக்கிக் கொள்ள, கூடைகளை அழகிரி எடுத்துக் கொள்ள, கார் நோக்கி நடந்தார்கள்.

'என்னா சிவப்பிரகாசம், கூழ் ஊத்தினியா?' யாரோ வெள்ளைச் சட்டை ஆள் எதிரே வந்தபடி கேட்டார்.

''ஆமாங்க. கடைசி வெள்ளி, வழக்கமா செய்யறது.''

''எதிர சொல்லிகிட்டுப் போனாங்க. நாயக்கர் கூழ அரைத்தவலை தூக்கி நடக்க முடியாதுன்னாங்க.''

''ஏதோ நம்மால முடிஞ்சது.''

''செய், நல்லா செய். சும்மா பேருக்கு கூழுன்னு கரைக்காத, நாலுபேருக்கு ஊத்திட்டு அவ்வளவுதான்னு சொல்லாத, நூறு ஜனம் சந்தோஷமா சாப்பிடற மாதிரி தான் செய்யணும். வரட்டா?''

முத்துலட்சுமியும் அழகிரியும் கூழ் தவலையுடன், பின்னால் உட்கார, கதவு சாத்தினாள்.

வண்டியில் சாவி போட்டு சிவப்பிரகாசம் திரும்பி ஸ்டார்ட் செய்தான். ஸ்டியரிங் தொட்டு கும்பிட்டுவிட்டு வண்டி எடுத்தான். வளைத்து திரும்பி தார் ரோடுக்கு வந்தான்.

''உனக்கு தாட்சாயினி பிறந்தபோது ஊத்த ஆரம் பிச்சே. இதோ அதோன்னு இருபது வருஷம் ஓடிப் போச்சு இல்லம்மா?''

முத்துலட்சுமி வியப்பாய் பேசினாள்.

''இருவதில்லை, பத்தொம்பது. இவ புள்ளை தாச்சியா இருக்கறபோது நீ வேலைக்கு சேர்ந்தியா?''

''ஆமா நாயக்கரே?...''

''நாலு மாசம் கழிச்சா தாட்சாயினி பிறந்தா. முத வருஷம் அவ ஆண்டு நிறைவுக்கு ஊத்தினது அப்பவெல்லாம் தவலைலதான் கூழ் கரைக்கறது.''

''வாங்கறதுக்கு ஆள் இருக்காது. கூப்பிட்டு கூப்பிட்டு ஆத்தா பிரசாதம்னு தரணும். ஒருவாய் குடிச்சுட்டு முக்கா டம்ளர் திரும்பக் கொடுத்துடுவாங்க. இப்ப பாருங்க, கூட்டம் வந்து மொய்கிறதை'' அழகிரி அலுத்துக் கொண்டான்.

''ஜனம் பெருத்துப்போச்சு பட்டணத்துல. நாட்ல கழனி வேலை செய்திட்டுருந்தவங்க பட்டணத்துக்கு சைக்கிள் ரிக்ஷா ஓட்ட வந்துட்டாங்க.''

''அது சரி நாயக்கரே, நானும் முத்துவும் அப்படிதான் வந்தோம், நாடு விட்டுப் பஞ்சம் பிழைக்க.''

''நீ வந்தது வேற காலம் அழகிரி. பட்டணத்துல கூப்புட்டு கூப்புட்டு வேலை கொடுத்தான். கிடைச்ச வேலையை நீ ஒழுங்கா செய்தே. இப்ப எங்க சோறு விழுதுன்னு சுத்தரானே கண்டி.''

''நெத்தி நோவுதுங்களா...''—புவனா இடைமறித் தாள்.

''ஆமா நோவுது.''

''பளார்ன்னு அடிச்சிடுவீங்களோன்னு நினைச்சேன் நாயக்கரே. அதுக்கு முதல்ல ஊத்தி அனுப்பிட்டீங்க.''

''பசி, அவசரப்படறான். அதுக்குப் போய் அடிச்சா செய்யறது கெட்டுப் போய்டும்.''

''நம்ம தாட்சாயினிக்கு கல்யாணமும் கட்டி கொடுத் தாச்சு. அதும் வூட்டுக்கு கூழ் அனுப்பணுமா?''

''ஆமா அழகிரி. ஒரு தூக்குல ஊத்தித் தரேன். கொண்டு போய் கொடுத்துரு. அண்ணா நகருக்கு ஆட்டோல போய்டு அழகிரி. சைக்கிள் மிதிக்க வேணாம்.''

''சரிம்மா.''

''அஞ்சாம் வருஷம் ஐயா ஊர்ல இல்லை. இவரும் இல்லை. நானும் அம்மாவும்தான் ஊத்தினோம். இப்படித் தான ரெண்டு வருஷமா ரோதனையா போயிடுச்சு, கூழ் ஊத்தறது. இடுப்பு உசர அண்டா. ஏம்மா நூறு பேருக்கு ஊத்தியிருக்க மாட்டோம்...''

''இருக்கும். மேலேயே இருக்கும்.''

''முத்துலட்சுமி...''

''ஐயா?''

''போன வருஷம் உம் பேச்சு கேட்டு கதம்ப சாதம் போட்டமே, வெந்து பேச்சு போ. இந்த அடிதடிக்கு கதம்ப சாதம் போட்டிருந்தோம்.''

''ஆசைப்பட்டவன் கை போட்டு எடுத்துக்கடான்னு உன்னிய கூட்டிவிட்டு தொலைவா நின்னுட்டிருப்பேன் நாயக்கரே''—அழகிரி பதில் சொன்னான்.

''அரைமணி காத்தாட வச்சும் சாதம் சூடாறலை என்னா செய்யறது...'' முத்துலட்சுமி நினைவு கூர்ந்தாள்.

ஆறியா போடறது கதம்ப சாதம்? சூடா போடு சூடா போடு' கூட்டம் கத்த அகப்பையில் கிளறி அள்ளி போட 'சுள் சுள்' என்று பருக்கை சூடாய் முகத்தில் அடித்தது. தவறி விரல்பட, நகக்கண்ணு சிவந்தது. இலையில் சாதம் வாங்கி தவித்தவர்களைப் பார்த்து சிரிப்பு வந்தது.

ஆனால் இரண்டு நாட்கள் கதம்ப வாசம் கையிடுக்கில் இருந்தது.

முத்துலட்சுமி திடீரென்று கெக்கே என்று சிரித்து வாய் பொத்திக் கொண்டாள்.

''என்னா முத்து?'' சிவப்பிரகாசம் கேட்டான்.

இவரு கால்ல போட்டுகினு கத்தனாரே. நினைப்பு வந்தது.' சிவப்பிரகாசமும் வாய்விட்டு சிரித்தான். புவனா புன்னகையுடன் அழகிரியைத் திரும்பிப் பார்த்தாள்.

பெரிய அகப்பை தயார் செய்து கம்பீரமாய் அழகிரி நாயக்கருக்கு இணையாய் இறங்கி, வழிய வழிய வாரி அருகில் இருந்த பெண்மணியின் பாத்திரத்துக்கு அடித்து வீச, குறி தப்பி பொத்தென்று அகப்பை சாதம் சூடாய் அழகிரியின் தொடையில் விழுந்தது. அகப்பையை போட்டு விட்டு கையால் ''ஐயோ'' என்று சோறு வழிக்க

பிறகு கை உதற வேண்டியிருந்தது. பாத்திரம் நீட்டின பெண்கள் வெகுநேரம் சிரித்தார்கள்.

''நான் கதம்ப சாதம் வேணான்னேன் நாயக்கரே. நீயும் கேட்கலை. அம்மாவும் கேட்கலை. இதும் பேச்சுக் கேட்டு பேஜாரா போச்சு.''

''ஏன், நாயக்கரு போடலை கடைசி முட்டும்? அவருக்கு சூடு இல்லையா?'' முத்துலட்சுமி மடக்கினாள்.

' நான் நெருப்புல நிக்கறவன் முத்து. இது மாதிரி நூறு மடங்கு சூட்ல நின்னு வேலை செய்யறவன். அழகிரி செடிக்கு தண்ணி காட்டறவன். இன்னிக்கு கூட்டத்தை சமாளிச்சதே அழகிரிதான்!''

''நான் தான் பாக்டரிக்கு வரேன் வரேன்றேன்...',

''வேணாம் அழகிரி வீடு கவனிக்க ஆள் வாணாமா?''

''இந்தத் தடவ போனஸ் உண்டுங்களா?''

''கொடுக்கணும், பன்னெண்டு கேட்கறான். பத்தாச்சும் கொடுக்கணும். அது பேசத்தான் காலைல போய்ட்டேன். பன்னெண்டு தாண்டி கடனா அஞ்சு பர்ஸன்ட் தரணுமாம். இந்த வருஷம் ஆர்டர் கிடைக்கறது பொறுத்து தரேன்னேன். புவனா நம்ம எஞ்சினீயர் வீட்டுக்கு ஒரு சொம்பு அனுப்பு. கேட்டாரு அழகிரி...''

''கொடுத்துடறேங்க.''

''பாவம் அந்த ஆள், இரண்டு நாள் கம்பனியிலேயே இருக்கான்.''

''ஏங்க?'' புவனா கேட்டாள்.

''கரி வரலை, விட்டா வாரி வாரி கொட்டிருவாங்க, வகைதொகை இல்லாத எரியும்.''

''போன வாரமே வருதுன்னீங்க ஐத்ராபாத் லேர்ந்து?''

''ரயில் சரியில்லை. எங்கேயோ வண்டி இறங்கிடுச்சாம். இதோ அதோன்றாங்க. இந்த வாரம் வரலைன்னா இரண்டு நாள் மூடிட வேண்டியதுதான்.''

''வந்துரும் — முத்துலட்சுமி முந்திக் கொண்டு பேசினாள்.

''வரணும், நம்பிக்கைதான். முத்துலட்சுமியே வந்துரும்ணு சொல்றப்போ...''

''கம்பனி என்ன புள்ளைதாச்சியா வயிறு பார்த்து பொண்ணா புள்ளையான்னு சொல்றதுக்கு''—அழகிரி கிண்டல் செய்தான்.

''ஆனா முத்துலட்சுமி உனக்கு இரண்டும் பொண்ணுதான்னு சொன்னா அப்படித்தானே நடந்தது?'' சிவப்பிரகாசம் பின்னால் ஒருகணம் திரும்பி பேசினான்.

''மனசுல பட்டது சொல்றேன் நாயக்கரே. எனக்கு என்னா ஜோஸ்யமா தெரியும்?''

வண்டி திரும்பி வீட்டுக்குள் நுழைந்து சின்ன தோட்டம் தாண்டி ஷெட் விளிம்பில் நின்றது. முத்துலட்சுமி தவலையை காரிலிருந்து இறக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள். நடந்து ஹாலுக்குப் போனாள்.

''எனக்கே இடுப்புவுட்டு போச்சு. நாயக்கருக்கு எப்படி இருக்கும்? உடம்பு துடைச்சு விட்டு ஆளுக்கு ஒரு டம்ளர் குடிங்க. பாப்பாவை காணமே அபிராமி...'' ஹால் தாண்டி அறை விளிம்பில் நின்று குரல் கொடுத்தாள்.

''என்னா'' உள்ளிருந்து இளங்குரல் கேட்டது.

''வந்து ஒரு லோட்டா கூழ்குடி.''

''எனக்கு வேணாம்.''

''ஆத்தா படையலு வேணாம்னசதே கண்ணு. வா' உள்ளே போய் அபிராமியை இழுத்து வந்தாள். ''இது பிறந்த வருஷமே அண்டா கூழு ஊத்த ஆரம்பிச்சுட்டோம் இல்லையாம்மா?'' முடியும் போனிடெயிலுமாய் டம்ளர் கூழை அபிராமி முகர்ந்து பார்த்தது.

புவனா சிவப்பிரகாசம் இருக்கும் அறைக்குள் போனாள்.

சிவப்பிரகாசம் சட்டை வேட்டி களைந்து விட்டு ஜட்டியுடன் பாத்ரூம் கதவு திறந்து முகம் கழுவினான். பிடரி துடைத்தான். கைகளை புறம்வரை கழுவி மார் துடைத்து வெளியே வந்தான். புவனா லுங்கியும் துண்டும் எடுத்துக் கொடுத்தாள்.

''யம்மம்மா. இப்ப நோவுது தோளு. ஊத்தறப்ப தெரியலை. அடுத்த வருஷம் இரண்டு மூணு தவலையா பிரிச்சுடணும். ஒருத்தரே ஊத்தறது முடியாது. இங்க ஒரு அழுத்து அழுத்தேன்.''

''ஊத்தின ஆளுதானே? இப்ப வயசாயிடுச்சு முடியலை,'' புவனா புருஷன் தோளை அழுத்தி பிடித்து விட்டாள். ''ஆடி மாசம் கடைசி வெள்ளிக்கிழமைதானே பிறந்திங்க இன்னியோட நாப்பத்தி மூணு வயது''

''அதுல என்ன. முடியலைன்னு சொல்லியிருக்கேனா என்னிக்காவது'' சிவப்பிரகாசம் அவள் இடுப்புத் தழுவினான்.

''அது இல்லப்பா. ஒருத்தரா செய்யறது இனி கஷ்டம்னேன்.''

''கூழ் ஊத்தறதுதானே சொல்றே?''

''அடச்சீ. பட்டப் பகல்ல பேச்சு பாரு...''

''புவனா...''

''என்னப்பா''

''இன்னிக்கு என்னமோ கொண்டையெல்லாம் போட்டு டக்கரா இருக்கே.''

''ஆடி வெள்ளியன்று புதுசு உடுத்திக்கிட்டேன். இந்த புடவைக்கு கொண்டை நல்லா இருக்குமென்று பட்டது.''

''பவுடர் கலையவேயில்லை''

''நானா கஷ்டபட்டேன்...நீங்கதானே?''

''கஷ்டபடுத்தறப்போகூட பவுடர் கலைய மாட்டேங்குது...''

''யேய்ய.''

''பவுடரு தலைமுடி எல்லாம் ஒரு நாள் கலைச்சி வுட்டுடுறேன். அப்படியே வேர்த்து ஊத்தி...''

''கடவுளே.''

''இன்னிக்கு தங்கரதமா?''

''எங்க?''

''நம்மவூட்டுல.''

''அடப்போப்பா, முப்பத்தியெட்டு வயசாச்சு எனக்கு. தங்கமும் வெள்ளிரதம்ன்னுகிட்டு. இருபது வருஷம் தேர் ஓட்டினது போதாதா?''

''போதலையே.'' அவள் இடுப்பை இறுக்கி வயிற்றில் முத்தமிட்டான். இடுப்பு முழுக்க முகத்தால் இழைத்தான். சட்டென்று உடம்பும் மனசும் புவனாவுக்கு கிறங்கின.

கல்யாணமான புதிது. தங்கரதம் வந்தது வீதியிலே, பாட்டு. 'ஒரு தளிர் மேனி வந்தது தேரினிலே' என்கிற

பாலமுரளி கிருஷ்ணாவின் குரல் பாட்டும் குரலும் பாப்புல ரான நேரம்.

சிவப்பிரகாசம் புவனாவை நேரில் வரச்சொல்ல வில்லை, புவனாவையே தேராக்கினான். அரையிருட்டில் வெள்ளைவெளேர் என்று நிற்கிறவளைக்கண்டு கட்டைக் குரலுடன் பாடினான், உடம்பெல்லாம் முத்தமிட் டான்.

மரகதத்தோரணம் அசைந்தாட...

புவனாவின் விரல்களில் ஓடும் பச்சை மரகத நரம்புகள் நெகிழ்ந்தன.

நல்ல மாணிக்க மாலைகள் கவிபாட...தன்னை மறைத்துக் கொள்ள புருஷன் கழுத்தில் மாணிக்க மாலையாய் தொங்கினாள். மோகம் உலாவந்த காலம் அது.

அன்றிலிருந்து 'தங்க ரதம்' என்றால் இரவு சந்தோ ஷத்தில் ஒரு குறிப்பிட்ட பாவனை' என்று புருஷன் மனைவிக்குள் சங்கேதமாயிற்று.

''என்னா பேச்சு காணாம்?''

''இப்ப என்னத்துக்கு அந்தப்பேச்சு, கோயிலுக்கு போய்ட்டு வந்த கையோட.''

''அலுப்பு முத்திப்போச்சுன்னா தூங்க முடியாது. இன்னும் அலுப்பு வரப்படியா காரியம் பண்ணாதான். ஆகா பொண்டாட்டி நேர்ந்துகிட்டதுக்கு புருஷன் பாடுபட்டிருக்கேனே, ஒரு நன்றி விசுவாசம் கிடையாதா?''

''நிறைய இருக்கு. ஒரு டம்ளர் கூழ் குடிச்சிட்டு படுங்க, மற்றது அப்புறம் பேசிக்கலாம்.''

''புவனா...''

''என்னப்பா?''

''சந்தோஷம்தானே?''

''நிறைய முத்து சொன்ன மாதிரி பத்தொன்பது வருஷம் தாட்சியாயினி பிறந்த முதவருஷத்துலேர்ந்து ஊத்தினது ஆத்தாளுக்கு குறைவில்லாத செய்ய முடியிதே, கொடுப்பனை இது.'

புருஷனும் மனைவியும் விரல் பின்னி இருபது வருட குடித்தன சந்தோஷத்தை இரண்டு நிமிடங்களில் அசை போட்டார்கள்...

''ஏம்பா எனக்கு இந்தப்புடவை நல்லா இருக்கா?''

''ம்ம்...இப்படி கட்டித் தழுவி கேட்டா எப்படி சொல்ல முடியும், நகரு அப்படி போ...அப்படி வாசப் படியாண்ட போ, டி.வி.ல புடவைக்கார பொம்பளைங்க வருவாங்களே அப்படி வா...கரெக்ட் அ...ள்...மொத்தமும் போர்த்திக்கக்கூடாது. கொஞ்சம் இடுப்புத் தெரியணும். கொஞ்சம் மாரு தெரியணும்.''

''நா மாட்டேன்,'' புவனா கால் உதறி சிணுங்கினாள்.

''புடவை நல்லா இருக்கான்னு நீதானே கேட்டே?''

''ஏன் போர்த்திக்கிட்டா புடவை தெரியாதா?''

''உனக்கு...உனக்கு இந்தப்புடவை நல்லா இருக்கா? அதானே கேள்வி. நீயும் தெரியணும். புடவையும் தெரியணும். அப்பத்தான் சொல்ல முடியும்.''

''நாயக்கரே.''

''என்னம்மா?''

''திமிருதானே இது?''

''இது ஆத்தா கொடுத்த வரம். என் திமிரு என் உழைப்பினுடைய பலன். நடந்து வா...நடந்து வா.''

இடக்கை விரித்து புவனா புடவைத் தலைப்புத் தொங்கவிட்டு இடுப்புப்பக்கம் ஒதுக்கிக் கொண்டாள்.

இன்னொரு முறை அலட்சியமாய் இடக்கை வீசி சுழல முன்புற வலது வளைவு தெரிந்தது. குலுங்கி நடந்தாள். இரண்டு பெற்று இருபது வருடங்கள் புருஷன் தடவி வளர்த்த உடம்பு. சந்தோஷம் விளங்கின உடம்பு. கொஞ்சம் கட்டு நெகிழ்ந்திருப்பினும் கூடவே குலுங்கிற்று. நெஞ்சு ஜதி பேசியது. இடுப்புத் தசை குழைந்து நெகிழ்ந்தது.

''ஆத்தா...தூள்...'' இரண்டு கைகளும் கொட்டி சிவப்பிரகாசம் வியந்தான்.

''எது?''

''நீ...உன் புடவை இரண்டும்.''

காது குளிர பாராட்டு கேட்ட மகிழ்வில் புவனா கை நீட்டி மறுபடி சுழன்றாள். வேண்டுமென்றே கைப் புடவையால் அவன் முகம் மூடி இழுத்தாள். புடவை யெல்லாம் பெண் வாசனை. சிவப்பிரகாசம் கிறங்கினான்.

''யம்மோவ்'' சின்ன அலறலாய் ஹாலில் முத்துலட்சுமியின் குரல் கேட்டது.

''இங்க வாங்களேன். யம்மோய்?'' பதட்டம் அதிகம் காட்டிற்று.

''என்ன முத்து'' புடவையை தோளில் போர்த்தி கதவு திறந்து ஹாலுக்கு புவனா நுழைந்தாள்.

சிவப்பிரகாசம் தோளில் துண்டு போட்டு பின்னே நடந்தான்.

''இதுல பாரேன்.''

முத்து கூம் தவலையை சுழற்றிக் காட்டினாள். ''த்தே... போய் ஒரு கரண்டி எடுத்தா'' புருஷனை விரட்டினாள்.

அழகிரி உள்ளே ஓடி கரண்டியுடன் வேகமாய் திரும்பினான்.

''என்னவோ கருப்பா இவ்வளவு நீளம் இருக்கு தும்மா...''

புவனாவுக்கு 'சொரேர்' என்றது.

அடியில கரண்டி விட்டு துழாவினாள். சட்டென்று ஏதோ வெளியே மிதந்து சுழன்று உள்ளே அடங்குவது பார்த்து திகைத்தாள். மறுபடி துழாவினாள். எதோ தட்டுப்பட்டது. முத்து எட்டி பார்த்தாள்.

''தலைய எடுறி'' பதட்டமும் கோபமுமாய் தன் மனைவியை நகர்த்தினான். மறுபடி வாரி எடுக்க, அது வெளியே வந்தது. கரண்டி கூழில் நின்றது.

''ஐயோ'' என்று முத்துலட்சுமி வாய் பொத்திக் கொண்டாள். புவனா பயத்தில் உறைந்து போய் நின்றாள்.

சிவப்பிரகாசம் அந்த கரண்டியை வாங்கி அப்படியே ஹாலில் கவிழ்க்க, ஒரு நீல நிற பிளாஸ்டிக் ஸ்பூன் தரையில் விழுந்து துள்ளிற்று.

''ச்சே, பயந்துட்டேன் தேவையில்லாத ஏன் கத்தறே முத்து?'' சிவப்பிரகாசம் அதட்டினான்.

''நானும் பயந்துட்டேன் நாயக்கரே, தப்பாயிருச் சோன்னு பயந்துட்டேன்''

''எனக்கும் அப்படித்தான் பட்டுது.''—புவனா திகில் குறைந்து பேசினாள்.

''ஒரு நிமிஷம் எல்லாம் ஜனமும் கண்ணெதிர வந்து போயிருச்சும்மா.''

''அந்தக் குழந்தை வச்சுருந்தது... எப்படி தவலைல...?''

''நாம் பராக்கு பார்க்கச் சொல்ல நடுவுல வந்து கூடை நிமிர்த்தி ஒரு ஸ்பூனா வாரியிருக்கும். உள்ள போட்டிருக்கும் கருப்பா விரல் நீளம் இருட்ல பார்த்ததும் பக்குன்னு ஆயிருச்சு. வெளியில போட்டதும் தான் நீலம்ன்னு தெரியுது.''

அழகிரி அந்த பெண்ணிடம் ''எனக்கொரு டம்ளர் கூழ் கொடு.''

அழகிரி ஊற்றிக் கொடுக்க, சிவப்பிரகாசம் நீன்ற வண்ணம் குடித்தான்.

''அம்மா உனக்கு?''

''இன்னும் திகிலே போவலடி... அது என்ன மாதிரி பட்டதோ அப்படியே இருக்கு மனசுக்குள்ளார எனக்கு வேணாம்.''

''அப்படி சொல்லாதம்மா...குடி.''

புவனா அரை டம்ளர் குடித்தாள். அறைக்குள் ஆடிய சந்தோஷம் அறவே போய்விட்டது.

'கவலைப்பட ஏதுமில்லை' என்று தெரிந்தும் ஒரு கவலை பற்றிக் கொண்டது. சிவப்பிரகாசம் அறைக்குள் போய் கட்டிலில் சாய்ந்தான். புவனா மறுபடி கரண்டி விட்டு கூழ் கிளறிப் பார்த்தாள். எதுவும் இல்லை.

''யம்மா...''

''சொல்லு முத்து''

''என்னவோ கண்ணைக் கட்டுதம்மா,''

''என்னவோன்னா?''

''சொல்ல தெரியலை. என்னவோ கண்ணை கட்டுது''

''நல்லதாவா, கெட்டதாவா?''

முத்து பேசாதிருந்தாள்.

இடத்தை நுணியால் துடைத்து விட்டு அந்த நீல நிற பிளாஸ்டிக் ஸ்பூனை பலம் கொண்ட மட்டும் வெளியே வாசலிலிருந்து தெருவுக்கு எறிந்தாள்.

அது பறந்து சுவர் விளிம்பில் பட்டு தோட்டத்துக் குள்ளே விழுந்தது. மல்லாந்து வானம் பார்த்தது.

2

கன்னியப்பன் தரையிலிருந்து கரி மொத்தமும் துறட்டியில் அள்ளி நெருப்புக்குள் போட்டான். துறட்டியை உள்ளே கொடுத்து. போட்ட கரித்துண்டுகளை சமமாய் தட்டினான். ஒரு பெரிய கரித் துண்டு உடையாமல் நீட்டி நீன்றது.

அது கரியா. கருங்கல் துண்டா? தெரியவில்லை. துறட்டியை போட்டு விட்டு நீண்ட இரும்புக் கழி எடுத்து அடித்தான். கரிக்கட்டை புரண்டு எகிறி நெட்டுக்குத்தாய் நின்றது. மறுபடி உற்றுப் பார்த்தான். அதிக நேரம் பார்க்க முடியவில்லை. கண்கள் கூசின. நெருப்பு. உஷ்ணம் முகத்தை கருக்கியது. சதுரக் கருப்புக் கண்ணாடி எடுத்து. டிராயரின் பின்பக்கம் துடைத்து விட்டு கருப்புக் கண்ணாடி வழியே பார்த்தான்.

கரிக்கட்டை எந்த அசைவும் இல்லாது. தீயினால் பாதிக்கப்படாது நின்றிருந்தது.

''பாதி கரி பாதி கல்லு அனுப்பறாங்க''

மறுபடி இரும்புக் கழியை அடுப்புக்குள் விட்டு தூக்கி படீரென்று அடிக்க இரும்புக் கழி எகிறி மேலே தகித்துக் கொண்டிருந்த இரும்புச் சட்டியில் பட்டது. பட்டவுடன் பொத்துக் கொண்டதுபோல விசித்திரமாய் சத்தம் கேட்டது.

பாத்திரம் பொத்துட்டமோ... பயத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தான். தொழிற்சாலையில் உள்ள நாற்பத்தைந்து பேரும் அவரவர் வேலையில் கவனமாக இருந்தனர். இரும்புக் கழியை ஓரம் போட்டு விட்டு, கரி வண்டியை ஒரு கையில் பிடித்து இழுத்துக் கொண்டு போனான்.

போய் மறுபடி கரி அள்ளினான். வண்டியில் போட்டான், தள்ளி அடுப்பருகே வந்தான். செங்குழம்புக் கோடாய் அடுப்புக்குள் இறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மெல்ல மெல்ல குழம்பு பரவி தீ வேகத்தைக் குறைத்துக் கொண்டிருந்தது.

''ஏங்க போர்மன்... ஏங்க போர்மன்...''—கத்திக் கொண்டு ஓடினான், வாசலில் உட்கார்ந்து காற்றாட 'மாலை முரசு' படித்துக் கொண்டிருந்த போர்மனிடம் ''பாத்திரம் பொத்துக்கிச்சு போல... ஒழுவது போல...'' என்றான்.

''எப்படிரா?''

''தெரியலையே... புகை வருதே. அடுப்பு நனைஞ்சுக் கிட்டே போவுதே.''

''ஏகாம்பரம், ஜோஸப் ஓடியா...'' போர்மன் குரல் கொடுத்துக் கொண்டே அடுப்பருகே ஓடினான். புகை அதிகமாய் இருந்தது. குனிந்து பார்த்தான். செங்குழம்பு கட்டை விரல் தடிமனாய் கீழே ஊற்றிக் கொண்டிருந்தது.

''எடுத்துருங்க கொக்கிமாட்டி பாத்திரம் தூக்கிடுங்க, பொத்துக்கிச்சு.''

கிரேன் கொக்கி மாட்டி அப்படியே பாத்திரம் தூக்கினார்கள். பாத்திரம் அசைய ஒழுகல் பெரிதாயிற்று.

''எடுக்காத... எடுக்காத... போ... வேணாம்.''

''எல்லாம் ஊத்திடுங்க.''

''எடுத்தா உம்மேல ஊத்தும்டா.''

''ஒழுவறாப்பலதான் இருக்கு. அப்படியே மோல்டுல ஊத்திடலாமே.''

''சரியா வராது.''

''எட்டு மோல்டு இருக்கு. அப்படியே நகர்த்தி ஊத்திடலாம் போர்மன்.

''தூக்கச்சொல்ல பெரிசா பொத்துக்கும்.''

''பெரிசா பொத்துக்கறதுக்குள்ள ஊத்திடலாம் தலைவரே.''

''மொள்ள தூக்கு.''

கோடாய் குழம்பு இறங்கிற்று. ''தள்ளி நின்னு வலிடா. அப்படியே தூக்கு.''

''தள்ளிப் போ. மத்த ஆளு தேவையில்லை போ'' பாத்திரம் உயர எழும்பியது. கொக்கி போட்டு பாத்திரத்தை அடுப்பிலிருந்து இழுத்தார்கள்.

''மொள்ள இழுங்கடா.''

அடுப்புக்கரியில் குழம்பு சிதறி மேலே படார் படார் என்று எகிறி விழுந்தது. அடுப்பு ஓரம் வழிந்து நிமிடத்தில் கருப்பு இரும்பாயிற்று.

''எட்ட நின்னு இழு. வா... வா... மொள்ள வா.''

எல்லா ஆட்களும் தள்ளிப்போய் குழம்பு தபதப வென்று கீழே பொத்து ஒழுகுவதைப் பார்த்தார்கள்.

''நேர மோல்டுக்கு வாடா. மொள்ள வா.''

''கீழ அதிகம் போவுது போர்மன்.''

''போட்டும் டா... மொள்ள வா.''

இரும்புப் பாத்திரம் புகையை கக்கிற்று.

''இன்னும் இழுத்துக்கடா... இழு''

''இழுக்க, பாதி கல்லில் பாத்திரம் ஆடிற்று. உள்ளே குழம்பு இடமும் வலமும் தளதளத்து அலைவதை உணர முடிந்தது.

''இழு.''

மறுபடி ஆடிற்று.

''இழு.''

மறுபடி ஆடிற்று.

அடுப்பு விட்டு வெளியே வந்தது.

''க்ரேன் கொஞ்சம் தூக்கு.''

பாத்திரம் ஒரு அடி மேலேறியது.

குழம்பு தரையில் விழுந்து தட்தட்டென்று தெறித்தது. ஜோசப் கால் எகிறி நெருப்புக் குழம்பிலிருந்து தப்பித்தான்.

''முடியுமா ஜோசப்?''

தெரியலை சார்.''

''வுட்டுரு அப்ப.''

''ஒரு வலி வலிச்சுப் பார்க்கட்டுமாடா?'' ஏகாம்பரம் கூவினான்.

''மொள்ள வலி.''

இரும்புப் பாத்திரம் இழுபட, ஆடிற்று தளார்புளார் என்று மேல் பக்கம் எகிறி வழிந்தது. கீழே ஓட்டை பெரிதாகி தடதடவென்று குழம்பு மேலே கொட்ட, ஏகாம்பரம் தடால் என்று கம்பி விட்டு விட்டு ஓடினான். ஜோசப் கால் மிதித்துக் கொண்டு வெளியே வந்தான்.

குழம்பு பெரிய திருகாணி மாதிரி சுழன்று கொட்டியது. திருகலில் பெரிதாகி, அடி மொத்தமும் பொத்து தடேரென்று கீழே சிதறி நாலாபுறமும் வழிய புகை பெரியதாய் பரவ, எல்லோரும் வெளியே ஓடினார்கள்.

கருப்பு மண் மொத்தமும் குழம்பு சிதறி, வெளிக் காற்றால் நிமிடமாய் நிறம் மாறி அணைந்து இரும்பாய்

வழிந்தது. வழிந்த விதமாய் மண்ணோடு மண்ணாய் போயிற்று.

''யப்பா... உன்னை ஃபாக்டரிலேர்ந்து கூப்புட றாங்க'' புவனா குரல் கொடுத்தாள்.

''கரி வரும்னு சொல்லு புவனா...

''கரி வருமா''... பதில் சொன்னாள்.

''நாளைக் காலைல ஒரு லாரி வரும்னு சொல்லு,''

''நாளைக் காலைல... என்னா...? இருங்க கூப்பிட றேன். ஏங்க உங்ககிட்ட பேசணுமாம்.''

''என்னடா... அரை நாள் கூடப் படுக்கவுடாத.'' சிவப்பிரகாசம் எழுந்து அவிழ்ந்த லுங்கி தூக்கி நெஞ்சு வரைக் கட்டி போனுக்கு அருகே போனான்,

''யாரு பேசறது?''

''போர்மன்''—புவனா பதில் சொன்னாள்.

''காபி எடுத்தா... என்னப்பா...?'' போனைக் காதில் பொருத்திக்கொண்டான். பேசுவதை உற்றுக் கேட்டான்.

''எப்படீங்க பாத்திரம் பொத்துக்கும்? போன மாசம் மாத்தின பக்கெட்தானே அது என்ன ஆச்சு?'', மொத்தமுமா... மொத்தமுமா ஊத்திக்கிச்சு? சரி... சரி யாருக்கும் ஒன்னும் ஆகலையே... வெளியே போய் நிக்கச் சொல்லு, புகை புடிச்சா விழுந்துடப்போறான், இதோ நான் அங்கே நேரா வரேன். யாரு கரி போட்டது? கன்னியப்பனா? கரி போடச்சொல்ல பக்கத்துல இருந் தீங்களா? நான் விவரம் தெரியாம லொட்டலொட்டுன்னு கம்பி விட்டு அடிச்சு... பாத்திரம் பொத்துப் போயிருக்கும் நான் வரேன். வச்சுடு. புவனா, நான் ஃபாக்டரி ஒபோறேன்.''

''காபி கேட்டீங்களே...''

''வேணாம்.''

அறைக்குள் வேகமாய் ஓடி உடைகள் அணிய, புவனா அவனைக் கவலையுடன் பார்த்தாள்.

''பாத்திரம் பொத்து மொத்தமும் ஒழுகிருச்சாம்.''

''ஐயோ...''

''நல்லவேளை ஒருத்தருக்கும் ஒன்னும் ஆகலை. பொத்தல்போன பாத்திரம் இழுத்தா எங்க வேணா உடைச்சுக்கும்.''

''அப்ப காபி வேணாமா?''

''வேணாம்.''

''ரெண்டு நிமிஷத்துல போடறேன்.''

''பாரு...இன்னிக்கு உன்னை எங்கயாவது அழைச் சுட்டுப் போலாம்னு நினைச்சேன். நினைக்கறப்பவே ஏதா வது வருது...''

''மத்தியானம் கூழ் மட்டும்தான் குடிச்சது. பசியா இருக்குமே. ஒரு வாய் காபி குடிச்சிட்டுப் போங்க.''

''சொல்றதைக் கேளும்மா. எங்கினா எதாவது சாப் பிட்டுகிறேன். விடு என்னை.''

''பசியோட போவாதப்பா. அப்புறம் அங்க போய் சுள்ளு புள்ளுன்னுவ. ரகளையாவும். என்ன இப்ப...? குழம்பு கொட்டிப்போச்சா...யாருக்கும் ஒன்னுமில்லை தானே...? போகட்டும். பதட்டப்படாம உட்காருங்க.''

''சொன்னா கேளு புவனா.''

''நானும் வரேங்க உங்கக் கூட.''

''எதுக்கு?''

''எங்கனா வெளியே கூப்பிட்டு போறேன்னீங்கள்ள. அப்படியே உங்களோட ஃபாக்டரிக்கு வந்து உங்களோடயே திரும்பிடறேன்.''

''ஏன் அங்கெல்லாம்?''

''சும்மா வீட்டிலிருந்து போரடிக்குது. நீங்க வேற பதட்டமா வண்டி ஓட்டுவீங்க.''

''சரி...காபி கொண்டா.''

''முத்துலட்சுமி...'' பின் பக்கமாய் குரல் கொடுத்தாள் புவனா. அடுப்படிக்கு ஓடினாள்.

''என்னம்மா?''

''முத்துலட்சுமி நானும் நாயக்கரும் வெளிய போறோம். வீடு பாத்துக்க. தாட்சாயினி என்ன செய்யுது?''

''தோட்டத்துல உட்கார்ந்து படிக்குது.''

காபி கலந்து ஹாலுக்கு வந்து ஆற்றினாள்.

''என்னம்மா, கலாட்டாவா?''

''இல்லடி. பாக்டரில எதோ பொத்துக்கிச்சாம், இப்ப போன் வந்தது. அங்க போய் நாளும் கிழமையுமா இவரு கத்துவாரு. அதான் நானும் கூடப் போறேன்.''

''ஐயோ''

''ஆளுங்களுக்கு ஒன்றுமில்லை. அதுவரைக்கும் புண்ணியம். ஒரு ஆத்தி ஆத்தி நாயக்கருக்குக் கொடு. நான் முகம் துடைச்சிக்கிட்டு வந்துடறேன்.''

காபி தம்ளரை முத்துலட்சுமியிடம் நீட்டினாள். வாஷ் ரோமினுக்கு ஓடினாள். முகம் கழுவிக்கொண்டாள். பொட்டு இட்டுக் கொண்டாள்.

''ஆத்திட்டியா? கொடு'' சிவப்பிரகாசம் முத்துலட்சுமியிடமிருந்து வாங்கிக்கொண்டான். ஒரே மடக்கில் குடித்தான்.

''முத்துலட்சுமி, உனக்கு காபி போட்டுக்க. உன் புருஷனுக்கும் கொடு, நான் போயிட்டு உடனே திரும்பிடறேன். தாட்சாயினி...'' குரல் கொடுத்தபடி வாசலுக்குப் போனாள்.

''எங்க கிளம்பிட்டீங்க ரெண்டு பேரும், என்னை வுட்டுட்டு''—பெண் எழுந்து மிடி பறக்க வந்தது.

''எங்கியும் இல்லை. ஹாட்ல உட்கார்ந்து படி...பூச்சி பொட்டு இருக்கற இடத்துல உட்கார்ந்துகிட்டு...''

''சரி. எங்க போற? நானும் வரேனே போரடிக்குதும்மா.''

''பாக்டரிக்குப் போறேன். நீ எதுக்கு? அங்க ஏதோ பொத்துக்கிச்சாம்.''

''நானும் வரேனே...யப்போவ்''

''வரட்டும் வுடு.''

கார் எடுத்து மடக்கி, போர்டிகோவுக்கு வந்து மறுபடி பின்னால் எடுத்து வாசலில் நிறுத்த பெண் பின்னால் ஏறிக்கொள்ள, புவனா முன்னால் உட்கார்ந்தாள்

''புது பக்கெட்டு எப்படி போயிருக்கும்?''

வண்டி கிளப்பி தெருவில் இறங்கினான்.

''எப்படி வேணா போயிருக்கட்டும். வண்டி நிதானமா ஓட்டுங்க''

''பக்கெட்டு பத்து ரூபா. உள்ள இரும்பு நாப்பது ரூபா, மோல்டு அடிச்சிருப்பாங்க. அது ஒரு எட்டு ரூபா குறைஞ்சது அம்பதாயிரம் ஊத்திக்கிட்டிருக்கும் ஒழுங்கா ஊத்தினா எண்பதாயிரம் ஒரு லட்சம் சரக்கு அது.''

''என்ன இப்ப...அடுத்ததுல சரியா ஊத்திக்கறது.''

''இந்த வியாபாரமே இப்படித்தான். எப்படி தூக்கும் எப்ப கவுக்கும்னு தெரியாது. கூடவே நின்னு பார்த்துப் பார்த்து விரட்டணும். சரி தட்டறேன்னு பக்கெட்ல கம்பியால இடிச்சிருப்பான். வெயிட்டோட இருக்கற சூடு பக்கெட்...லொட்டுன்னு புளந்திருக்கும்.''

''ஏன் வேலை தெரியாத ஆளை வேலைக்கு வைக்கிறீங்க?''

''கரி போடறவனுக்கு அஞ்சு வருஷ எக்ஸ்பீரியன் சுன்னா கூப்பிட முடியும்? ஏதோ வயித்துக்கில்லாதவன் இங்க வந்து வறுபட்டு வேலை செய்வான்.''

''இந்த வேலை கஷ்டமாப்பா?'' பெண் கேட்டது.

''வந்து பாரு இரண்டு நிமிஷம் நிக்கமாட்ட...புவனா, புடவைய தூக்கிக்கிட்டுதான் நிக்கணும். தழைய விடாத செருப்பு போட்டிருக்கீங்களா? செருப்பில்லாம நடந்துடா தீங்க...மாடு மாதிரி குறுக்க வாரம் பாரு சைக்கிள் காரன், ஏய்...''

''கூவாதப்பா.''

சைக்கிள் இடமிருந்து வலமாய் பாய்ந்து கார் தாண்டிப் போயிற்று.

''போடா சோம்பேறி போய் எங்கினா லாரில விழுடா,'' சிவப்பிரகாசம் சீறினான்.

சைக்கிள் நின்று முறைக்க,

''முறைச்சே, கொன்னுடுவேன்.''

''சும்மா இருப்பா.''

''மயிரு மாதிரி வண்டி ஓட்டறான்.'' வண்டி குலுங்கி கிளம்பிற்று.

அம்மாவும் பெண்ணும் அமைதியாய் இருக்க, சிறிய கோபத்தோடு சிவப்பிரகாசம் வண்டி ஓட்டினான். வால்டாக்ஸ் ரோடு வந்து கூவம் கரையோரம் வண்டி திருப்பினான். கரையோர நாலு கட்டிடம் தாண்டி கம்பெனி எதிரே ஹார்ன் அடித்தான்.

வெளிக் கதவு திறந்து வண்டி உள்ளே போயிற்று.

அங்கங்கே உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து தகரக் கொட்டகைக்குள் நகர்ந்தனர். போர்மன் எதிரே வந்தான்.

''என்னப்பா...என்ன ஆச்சு?'' வண்டி கதவு திறந்தார்.

''அம்மா வந்திருக்காங்களா?''

''சும்மாதான். இவரு கவலையா வண்டி ஓட்டப் போறாரேன்னு கூட வந்தேன், நல்லா இருக்கீங்களா?''

''இருக்கேங்க... அட... பாப்பா கூட வந்துருக்கு பள்ளிக்கூடம் இல்லையா?''

''ஏதோ லீவாம். வீட்ல இருந்திச்சு. யாருக்கும் ஒன்னும் ஆவலையே?''

''இல்லம்மா.''

''இஞ்சினீயர் எங்கய்யா?''

''அவரு மத்தியானமே முடியலைன்னு. வீட்டுக்குப் போயிட்டாருங்க.''

''என்னாவாம்?''

''தலை சுத்தல்ன்னாரு.''

''இரண்டு நாள் கண்ணு முழிச்சாரில்ல...'' புவனா நினையூட்டினாள்.

''மத்த இரண்டு அடுப்பும் எரியுதுல்ல...?''

''எரியுதுங்க.''

உள்ளே போய் பார்த்தார்கள். தடதடவென்ற நெருப்பு இரண்டு அடுப்புகளில் சத்தமிட்டு எரிய' கன்னியப்பன் கரி தள்ளிக்கொண்டு போனான். முதல் அடுப்புக்கருகே சரிய விட்டு துறட்டியால் வாரி வாரி உள்ளே கொட்டினான்.

''மோல்டு பாழாயிடுச்சா?''

''இரண்டு மூணுதாங்க நெருப்புப் பட்டிருச்சு.''

''போகட்டும். ரொம்ப புகையா?''

''எல்லாரையும் வெளியே துரத்திட்டு நானும் ஏகாம்பரமும்தான் இழுத்தோம். மோல்டு ஊத்திட லாம்னு தூக்கினா, பட்டுனு கழண்டமாதிரி கொட்டிச்சு.''

உருகி பாளம் பாளமாய் கிடக்கிற இரும்பை சிவப் பிரகாசம் செருப்புக் காலால் புரட்ட, பெண் பின்னால் வந்தது. வேறு பாளம் புரட்டியது.

''ச்சு...போ அப்படி.''

''ஏம்மா?''

''சூடா ஆறிடுச்சான்னு எப்படி தெரியும் உனக்கு?''

''புகை வரலியே. தொட்டு எடு.''

''பெண் குனிந்தாள்.

''பாப்பா வேணாம்,'' போர்மன் கத்தினான். பெண் பின்வாங்கியது.

''தொடட்டும். விடுய்யா.''

''படிக்கிற புள்ளைங்க. கை பொத்துக்கிட்டா?... பாப்பா, இது உள்ள சூடு இருக்கும். தொட்டே...பொசுங் குடும். இதோ பார்.'' வழிந்த உருகும் பாளம் கம்பியால் புரட்ட, மெல்ல சூட்டுப் புகை எழுந்தது.

''சில்லுன்னு ஆற ஒரு நாள் ஆவும்.''

''இது வேஸ்ட்டாப்பா?''

''இல்லை, மறுபடி காச்சி ஊத்தலாம்.''

''அப்ப ஏன் கவலைப்படறீங்க?''

''கரி, பக்கெட் காசு, லேபர். அது வேஸ்ட்இல்லையா? அடுப்பு சுத்தம் பண்ண மறுபடி பத்தி எரிய இரண்டு நாள் ஆவும். யாருப்பா பக்கெட் தட்டினது?''

''தானா பொத்துக்கிச்சுங்க.'' ஏகாம்பரம் பதில் சொன்னான்.

''எப்படி தானா பொத்துக்கும்? யார் பார்த்தது?''

''கன்னியப்பனுங்க.''

''நினைச்சேன். வாடா இப்படி. வாடா...'' குரல் கொடுத்து அதட்டினான்.

கன்னியப்பன் பயத்துடன் அருகில் வர, சட்டென்று எட்டி தலைமயிரைக் கொத்தாய் பிடித்தான். ''சொல்லு, கம்பி வுட்டு தட்டினியா?''

''இல்லீங்க.''

''ஒரே மெறி. கொன்னுடுவேன்.''

''சத்தியமா இல்லீங்க.''

''கம்பி எடு. போய் கம்பி எடுறான்னா...''

கன்னியப்பன் கம்பி எடுக்க நகர...

''ஏங்க சின்னப் பையனைப் போட்டு மிரட்டிக்கிட்டு... விடுங்க'' புவனா தோள் தொட்டு அமைதிப்படுத்தினாள்.

''பொய் சொல்றான் புவனா யோவ், நீ எங்க இருந்த பொத்துக்கற போது...?''

''வாசல்ல இருந்தேங்க.''

''ஏன்?''

''மூச்சு முட்டுச்சு. காத்து வாங்க நின்னேன்.

கன்னியப்பன் கம்பி கொண்டு வர, சிவப்பிரகாசம் அதன் நுனியைச் சோதித்தான்.

நுனியில் இரும்பு உருக்கல் ஒட்டிக் கொண்டிருந்தது. நிமிர்ந்து கன்னியப்பனைப் பார்த்தான். மறுபடி விரலால் கிள்ளி சோதித்தான். உதிர்ந்தது.

''என்னங்க?'' புவனா ஆவலுடன் கேட்டாள்.

''தட்டி உடைச்சிருக்கான்.''

''எப்படி?''

''இரும்பு உருக்கு இதுல ஏன் ஒட்டணும்?''

''கீழே வழிஞ்சது தெறிச்சுருக்குமோ?''

''பார்த்துடலாம்.''

நகர்ந்து கம்பி இருந்த இடத்தைச் சோதித்தான்.

''புவனா. இங்க வா.''

புவனா சேலை தூக்கிப் பிடித்தபடி அவன் அருகே போனாள். ''இந்த இடத்துலேர்ந்து தான் கம்பி எடுத்தான். இடம் பார்த்தியா?''

''சுத்தமா இருக்கு.''

''ஒரு உருக்கு கூட இல்லை. கம்பில மட்டும் எப்படி இருக்கும்?''

''தட்டியிருக்குது.''

''ஒரே அறை. இங்கியே அடிச்சு கொன்னுடுவேன். சொல்லு. கம்பி உள்ள வுட்டு தட்டினியா?'' கை ஓங்கி கன்னியப்பனிடம் விரைந்தான்.

''கரி தட்டினேங்க.''

''முண்டம். நாப்பதாயிரம் கீழ கவுத்திட்டியே...'' லொட்டு லொட்டென்று இரண்டு அடி தலையில் விழுந்தது.

புவனா சிவப்பிரகாசம் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''வாங்க போகலாம்'' என்றாள்.

''இந்த வேலைல தப்பு வரும். பொய் சொல்றாம் பாரு. இல்லவே இல்லைன்றான் பாரு. அதான் கோவம் வருது எனக்கு.''

''விடுங்க. ஆபீஸுக்கு போகலாம் வாங்க.''

''ஊத்திக் கவுத்துடுங்கடா. எல்லாத்தியும் உங்க இஷ்டத்துக்கு ஊத்திக் கவுத்துடுங்க. ஆள் பக்கத்துல இருந்தா ஒருவேலை இல்லாட்டி ஒருவேலை. தூத்தெறிங்க ...சம்பளம் வாங்கலையாடா? மனசாட்சி இல்லை...? கை உதறி ஆபீஸ் அறைக்கு போனான்.

மனைவியும் மகளும் பின்தொடர்ந்தார்கள்.

இஞ்சினியர் ஸ்கூட்டரில் வந்து இறங்குவது கண்ணாடி ஜன்னல் வழியே தெரிந்தது. போர்மன் அவரை மடக்கி உள்ளே கூட்டிப் போவது தெரிந்தது.

''இந்த, இஞ்சினியர் மேல எனக்கு நம்பிக்கை இல்லை.''

''வூட்டுக்குப் போகாத இரண்டு நாள் இருந்தார்னீங்க''

''அதான் சந்தேகம்.''

''என்ன சந்தேகம்?''

''கரி குறையுது புவனா. கால் டன், அரை டன்... பக்கு பக்குன்னு குறையுது'' கவலையுடன் விட்டம் பார்த்தான்.

புவனாவுக்கு அவன் கவலை வேதனையாய் இருந்தது.

ஆணுக்கு எத்தனை போராட்டம். எத்தகை வகை தொந்தரவு. எவ்வளவு வேதனைகள். இத்தனை இம்சைப் பட்டு இவன் சம்பாதிக்க, நான் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறேன். ஊருக்குக் கூழ் ஊற்றுகிறேன். தாயே...மாரியாத்தா இவர் வேதனையைத் துடைக்க வழி செய். உதவி செய்.

உள்ளே வேண்டினாள்.

பெண் காலைப் பேப்பரில் 'சாணக்கியன் சொல்' படித்துக் கொண்டிருந்தது.

3

ஒரு நிமிடம் யோசித்தான். டெலிபோன் அருகே இழுத்து சுழற்றினான்.

''ராஜகோபாலன் இருக்கானா, கொடு'' விரல்கள் மேஜை மீது தாளம் போட்டன.

''கோபாலு, நான் சிவப்பிரகாசம் பேசறேன். எதுனா கரி வச்சிருக்கியா? மட்ட சரக்கா இருந்தாலும் பரவாயில்லை. நாளை காலைக்கு வேலை இல்லை. அரை லாரி லோடாவது அனுப்பு. இருக்கறது கொடுப்பா. அடுப்ப அணைச்சுட்டா மொத்தமும் நின்னுடும். எத்தினி...? பத்து மூட்டையா, பத்தாதே. கூட ஒரு பத்து கொடு.

துட்டு தரேன். எவ்வளவு? டேய் அதிகம்டா. சரி, இப்ப வண்டி அனுப்பறேன். காலைல துட்டு தரேன். சரி... சாயந்திரம் தரேன். வீட்டுக்கு உன் பையனை அனுப்பி வாங்கிக்க. நிச்சயமா தரேன், நம்புடா.''

போனை வைத்தான். நாளைக் கதை முடிஞ்சுது. மீதிக்கு? நாலைந்து பேரிடம் பேசினான், இல்லை என்றார்கள். அதிக விலை சொன்னார்கள்.

எஞ்சினியர் உள்ளே நுழைந்து வணக்கம் சொன்னார். தூக்கம் கலைந்தவர் போல் இருந்தார்.

''என்னங்க பத்மனாபன் இது? பக்கெட் உடைச்சிட்டான். என்ன பண்றது இப்ப...?''

''இது லோகல் பக்கெட். அப்படித்தான் ஆவும். மூணுமே லோக்கல் மேக்தான்''

''நாம ஊத்தற காஸ்டிங்குக்கு இம்போர்ட்டட் வேறயா?''

''சட்டி பானை மாதிரிதான் இதெல்லாம். எத்தனை நாள் வரும், எப்ப உடையும்னு சொல்ல முடியாது. இதெல்லாம் வராத இருக்கணும்னா நாம கொஞ்சம் மார்டன் ஸிஸ்டம் கொண்டாரணும். கரி தட்டற துன்றதே தப்பு. கல்லும் கட்டியும் முதல்லேயே எடுத்துடணும். எது சரியான 'கோல்'... அது பார்த்து போடணும். அடிச்ச அடில பெரிசா பொத்து வெடிச்சது, செத்து கருகியிருப்பான். சார்... கரிக்கு ஏற்பாடு பண்ணீங்களா...?''

''இருவது மூட்டை வருது.''

''மூட்டை மூட்டையா வந்து புண்ணியமில்லை சார்...''

''என்னய்யா பண்றது... தங்கம் விலை சொல்றானுங்க.''

''ஆயில் ஃபர்னஸ் வாங்குவோம்''

''நாளைக்கு வழி பாருங்க பத்மனாபன்.''

''இப்படி நாளக்கு நாளைக்குன்னு தட்டி கழிச்சுட்டு இருந்தா ப்ராப்ளம் வரத்தான் செய்யும்.''

புவனா இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வர ஆர்டருக்கு நம்ம பாக்டரி ரொம்ப பெரிசுங்க. அவனவன் பத்தடிக்கு பத்தடில காச்சி ஊத்தறான்'' சிவப்பிரகாசம் அலுத்துக் கொண்டான்.

''வந்த ஆர்டரையும் சரியானபடி கவனிக்க முடியலையன்ற போது ஒட்டு மொத்தமா புதுசு பண்றது நல்லது.''

''எல்லாரையும் ஒரு மாசம் லூட்டுக்கு அனுப்பிட்டுல்ல செய்யணும். நடத்தற காரியமா பேசுங்க.''

''இம்போர்ட்டட் பக்கெட் பெட்டர். பாம்பேல இருக்கும் லாரில அனுப்பினா நாலு நாள்.''

''கரிக்கு என்ன செய்யப்போறா?''

''ஏற்பாடு பண்ணனும்.''

இஞ்சினியர் விட்டம் பார்த்தார்.

''ராஜகோபால் கம்பெனிக்கு வண்டி அனுப்புங்க. இருபது மூட்டை வரட்டும். வீட்டுக்குப் போய் வேற ஏதாவது யோசனை பண்றேன். நீங்க போறதுன்னா போங்க.''

''எனக்கு தூக்கம் இல்லை ரெண்டு நாளா.''

''போய் படுங்க சார் நல்லா தூங்குங்க. நான் கரிக்கு ஏற்பாடு பண்ணிட்டு நாளைக் காலை ஃப்ளைட்ல பாம்பே போய் பக்கெட் நாலு, கரி லோடு எல்லாம் பார்க்கறேன்.'' மறுபடி வெளியே போய் எரிகிற அடுப்புகளைப் பார்த்தான்.

''வாங்க போகலாம்'' பெண்ணையும், மனைவியையும் கூப்பிட்டான்.

''அப்பா, இந்த பேப்பர் எடுத்துக்கட்டுமா?''

''எடுத்துக்கம்மா.''

பெண் கொலை வழக்கு. வழி முழுக்க படித்துக் கொண்டு வந்தது. மறுநாள் காலை பம்பாய்க்கு மவுண்ட்ரோடில் ப்ளேன் டிக்கெட் வாங்கினான். திரும்பி அடையார் பக்கம் காரைச் செலுத்தினான்.

''எங்கப்பா போறீங்க?'' புவனா கேட்டாள்.

''சேட் வீட்டுக்கு.''

''சேட் மெட்ராஸ் வந்திருக்காரா...?''

''இல்லை. அவரு பொண்ணு வீட்லேர்ந்து போன் பேசப் போறேன் பம்பாய்க்கு.''

''காசுக்கா?''

''இல்லம்மா. பாம்பேல நம்ம நின்னு இது வாங்க முடியாது. அந்த ஆள் மனசு வச்சா எதுவேணா வாங்கித் தருவான்.''

''சேட் பொண்ணுக்கு இதுதானே மாசம்... வெறும் கையோட போறமே...''

''நல்ல வேளை ஞாபகப்படுத்தின. வழில நிறுத்தறேன் பூவும் பழமும் வாங்கிக்க.''

''போதுமா?...''

''இது ஒரு மரியாதைக்கு வெறும் கையோட போகக் கூடாதுன்னு... அவனுக்கு என்னத்தைன்னு நாம கொடுக்

கறது? அவன்கிட்ட இல்லாததுன்னு ஏதாவது இருக்கா? நீ ஒரு தடவை வந்திருக்கல்ல... அவன் வீட்டுக்கு.''

''ஏதோ விருந்துன்னு போனமே... வீடு பூரா ஜனம்.''

அடையார் மூலையில் பழங்களும், மல்லிகை இறுகக் கட்டின செண்டுமாய் வாங்கிக் கொண்டான். காருக்குள் மல்லிகை கிறங்க அடித்தது.

பெரிய இரும்பு கதவுகளுக்கு எதிரே ஹாரன் அடித்தான். வெளியே வந்து ஆட்கள் காருக்குள் பார்த்து விட்டு சலாம் செய்தார்கள். கதவு திறந்து விட்டார்கள். சிமெண்ட் தரையில் சுவரோரம் வளர்ந்த செடு வழியே கார் போயிற்று. இரண்டு பக்கமும் உயரமாய் அரளிச் செடிகள். திரும்பியதும் பளீரென்று வெள்ளை பங்களா. வாசற்படியில் நாய்கள் குரைத்தன.

அங்கே இரண்டு பேர் வந்து நாய்களை அதட்டி கம்பி வலைக்குப் பின்னே அனுப்பினார்கள். காரிலிருந்து இறங்கிய சிவப்பிரகாசத்தைப் பார்த்து கை கூப்பினார்கள்.

''பாப்பா இருக்குதாப்பா...? வீட்ல பார்க்கணும் னாங்க கூட்டிட்டு வந்தேன். போன் வேலை செய்ய லையா? எடுக்கவேயில்லையே'' சலவைக்கல் படியேறி னான். புவனா பின் தொடர்ந்தாள் பெண் காரிலேயே விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

''டேய்... அபிராமி கூடை எடுத்தாடா. பழக்கூடை எடுத்தா.''

''பாப்பா சௌக்கியமா இருக்குதில்லை?''

ஹால் சங்கீத ஹால் மாதிரி லஸ்தரும், சுவர் விளக்கும், மார் உயர பூப்போட்ட சலவைக் கல்லும், தரை முழுக்க ரத்தினக் கம்பளமுமாய் இருந்தது. ராஜஸ் தானத்து சோபாவில் வெல்வெட் மின்னிற்று. இப்போது

இருக்கிற சேட்டின் தாத்தாவின் படம் தெய்வ ஓவியமாய் இருந்தது.

''புவனா...'' அடிக்குரலில் கூப்பிட்டான்.

''என்னங்க...''

''சும்மா...சௌக்கியமா இருக்கா...புள்ளைத் தாச்சிப் பெண்ணுன்னு பார்க்க வந்திருக்கோம், சரியா''

''சரிங்க.''

''பொதுவா விசாரி. உடம்பு எப்பிடி...? டாக்டர் கிட்ட போறியா...?''

''தமிழ் பேசுமா?''

''சுமாரா, விசாரி.''

வெள்ளை 'மஸ்லின்' புடவையில் அதே கலர் எம்பிராய் டரி நேர் கோடு மாதிரி போட்டு முப்பது வயதுப் பெண்மணி ஹாலுக்கு வந்தாள்.

''வாங்கோ வாங்கோ'' என்று கரம் கூப்பினாள்.

''பாப்பா...தொந்தரவு பண்ணிட்டமா?''

''இல்ல இல்ல...உட்காருங்க அண்ணா'' என்று தமிழில் கொச்சையாய் பேசினாள்.

''வீட்ல பார்க்கணும்னாங்க. இன்னிக்கு காலைல உன்னைப்பத்தி பேச்சு வந்தது...நீ உண்டாயிருக்கறது சொன்னேன்.'' அவள் விழிக்க... ''அதான் ப்ரக்னண்டா இருக்கறது சொன்னேன்...'' அவள் சட்டென்று வெட்க மானாள்.

''எப்படி இருக்கற பாப்பா...? டாக்டர் கிட்ட போனியா?''

தலையாட்டிற்று.

''இது இரண்டாவதுங்களா'' புவனா கேட்டாள்.

''ஆமா...பாப்பா. இது என் வொய்ப். ஞாபகம் இருக்கா...? ஒரு தடவை பார்த்தது. கூட்டத்தோட கூட்டம். இது என் பொண், பழம் கொண்டாம்மா'' கூடைப் பழங்களும், புஷ்பப் பொட்டலமும் மேஜையில் வைக்கப்பட்டன.

''ஆ...ஜாஸ்மின்'' ஆவலோடு அந்தப் பெண் பூப் பொட்டலம் எடுத்து முகர்ந்து விட்டு மேஜையில் வைத்தாள்.

''எப்பம்மா நாளு?'' புவனா கேட்டாள்.

''டெலிவரி டைம் கேட்கறாங்க.''

''டாக்டர் சொன்னதுக்கு இன்னும் எட்டு நாள் இருக்கு.''

''நோவு இல்லையே?''

''இல்லீங்க.''

''காலு நீர் கோர்த்துட்டிருக்கா?''

''முந்தி இருந்தது. இப்ப இல்லை. என்ன சாப்பிட றீங்க?''

''வெறும் தண்ணி போதும்.''

அதைக் காதில் போட்டுக் கொள்ளாது யாரையோ, இந்தியில் ஏவினாள்.

''மூஞ்சி சோகை படிஞ்சிடுச்சு. வயிறு சரிஞ்சிருக்கு. சொன்னமாதிரி ஒரு வாரத்துல ஆயிடும். உங்களுக்கு எதுனா எங்க சாப்பாடு வேணுமா? செய்து தரேன்... சொல்லும்மா.'' புவனா ஆர்வமாய் பேசினாள்.

''வேணாங்க.''

''அப்பாகிட்ட பேசணும் பேசணும்னு முடியவே இல்லை. நிறைய வேலை. அப்பா எப்படி இருக்காங்க?''

''நல்லா இருக்காரு. இப்பக்கூட பேசினார்.''

''அடட...நான் கொஞ்சம் முந்தி வந்திருக்கணும்,''

''அதனால என்ன...இப்ப பேசலாம். ஏய்...'' மறு படி யாரையோ ஏவினாள்.

''புள்ளைதான் பொறக்கும், மூஞ்சில இத்தனை வாட் டம் இருக்கே...''

''என்ன சொல்றீங்க?''

''பாய் பேபிங்கறாங்களா?''

''எப்படி சொல்றீங்க?''

''முகம் வச்சுதாம்மா சொல்றேன்.''

''எனக்குப் பாய் பேபிதான் வேணும்.''

''நிச்சயம் பொறக்கும்''புவனா கை பிடித்துக் கொண் டாள்.

அவளுக்கு சந்தோஷம் தாங்கவில்லை போலும். ''இருங்க ஸ்வீட் கொண்டு வரேன்'' துள்ளி எழுந்து விரைந்தாள்.

''அடடா...என்னம்மா இப்படி வேகமா எழுந்துக் கற...நில்லு...யாரானா கொண்டு வரட்டும் இங்க. வா நீ...'' புவனா மெல்ல அதட்டினாள்.

பெண் தயங்கி புரிந்தும் புரியாமலும் திரும்பிற்று.

''இப்படி தடக்கு தடக்குன்னு எழுந்திருக்கக் கூடாது தாயி. எனக்கு ஸ்வீட் வேணாம். புள்ளை பொறந்தவுட்டு வந்து பார்க்கச் சொல்ல என் மடி நிறைய போட்டு அனுப்பு''

''டீ மட்டுமாவது குடிச்சுட்டுத்தான் போகணும்.''

''சரி.''

தண்ணீரும், தேனீரும் ட்ரேயில் வர, அவளே எடுத்துப் பரிமாறினாள்.

உள்ளே டெலிபோன் மணி அடிப்பது கேட்க டீபாயிலிருந்து கார்ட்லெஸ் போன் எடுத்தாள். பட்டன் தட்டி காதில் பொருத்திக் கொண்டாள். ''அப்பா'' என்று சிவப்பிரகாசத்திடம் சொன்னாள். மடமடவென்று இந்தியில் தந்தையிடம் பேசினாள்.

''அப்பா பேசணுமாம்''

சிவப்பிரகாசம் டெலிபோன் வாங்கிக் காதில் பொருத்திக் கொண்டான்.

''சேட். நான் சிவப்பிரகாசம். நல்லா இருக்கீங்களா...? பாப்பாவப் பார்க்க வந்தோம். ஆமா...எங்க வீட்லயும் வந்திருக்காங்க. இன்னிக்கு காலைல கூழ் ஊத்தினேன், மாரியாத்தா கோவில்ல நூறு பேருக்கு. அப்பா பாப்பா பத்தி பேச்சு வந்தது. போய் பார்த்துட்டு வரலாம்னு எங்க வீட்ல. ஆமா...புள்ளைதான் பொறக்கும்னு சொல்றா. அவங்கதான் இதெல்லாம் அனுபவத்துல சொல்லுவாங்க. நாளைக்கு கார்த்தால பாம்பே வரேன். இருப்பீங்க இல்ல...? வேலைய முடிச்சுட்டு வரேன். மார்னிங் ஃப்ளைட்ல வரேன்... வந்து பார்த்துட்டு அப்புறம் என் வேலைய பார்க்கட்டா? சரி. வேற ஒன்னும் இல்லை. நல்லா இருக்கேன். ஒரு பிரச்னையும் இல்லை சேட். உங்க புண்ணியம். கடவுள் புண்ணியம்' சரிங்க. பாப்பாகிட்ட பேசணுமா...இந்தாம்மா...அப்பா பேசணுமாம்.''

அந்தப் பெண் சிறிது நேரம் பேசிவிட்டு போனை டீபாயில் வைத்தது.

அபிராமியைப் பார்த்து சிரித்தது. பெயர் கேட்டது, குடும்ப விவரம் கேட்டது. ''கொஞ்சம் உள்ள வாங்க'' என்று புவனாவை மட்டும் உள்ளே அழைத்துப் போயிற்று.

சிவப்பிரகாசம் கார்ட்லெஸ் எடுத்து கம்பெனிக்கு போன் செய்தார். தாழ்ந்த குரலில் 'கரி வந்து விட்டதா' என்று கேட்டார். கிளம்பி விட்டதாகத் தகவல் வந்தது என்றார்கள். கரி வந்த பிறகு வீட்டிற்கு போன் செய்யச் சொல்லிவிட்டு போனை வைத்தார்.

புவனா கதவு திறந்து வந்தாள். சிறிது நேரம் கழித்து அந்தப் பெண் வந்தது.

''அப்ப நான் கிளம்பறேன் பாப்பா...''

''வரட்டுமா சந்திரலேகா...?'' புவனா விடை பெற்றாள்.

''ஒரே ஒரு சின்ன பை அப்பாக்கிட்ட கொடுக்கறீங்களா...?'' சிவப்பிரகாசத்தைக் கேட்டாள்.

சிறிய லெதர் பேக் தோளில் மாட்டிக் கொள்வது. கொண்டு வந்து கொடுத்தாள்.

''என்னம்மா இதுல...? ஃப்ளேன்ல போறேன். கேட்பான். பிரிச்சுப் பார்ப்பான்''

''தஞ்சாவூர் சுபாரி, ஒரு ரிஜிஸ்டர் நோட்டு. எங்க வீட்டு கணக்கு.''

''அவ்வளவு தானே...வேற என்ன செய்யணும்?''

''ஒண்ணுமில்லை'' என்று தலையாட்டியது. புருஷனும் மனைவியும் வெளியே வர பெண்ணும் பின் தொடர்ந்தது.

''உங்க வாக்குப்படி பிள்ளை பொறந்தா இரண்டு கிலோ ஸ்வீட் உங்க வீட்டுக்கு அனுப்பறேன்'' என்றாள். அவள் கண்களில் பிள்ளைக்கான ஏக்கம் அப்பட்டமாய் தெரிந்தது.

''அனுப்பறது என்ன...நானே வந்து புள்ளையப் பார்த்துட்டு கேட்டு வாங்கிட்டுப் போறேன்.'' புவனா சிரித்தபடி சொன்னாள். அந்தப் பெண் கையசைத்து விடை கொடுத்தது.

வண்டியில் உட்கார்ந்ததும் வணக்கம் சொன்னார்கள். கிளம்பினார்கள்.

கதவு திறக்க, ரோடில் இறங்கினார்கள்.

''புவனா கொன்னுட்ட போ. நாளைக்கு சேட்டு, நேர வா, பேசலாம்னுட்டார். ரைட் ராயலா உள்ள போலாம். நாம வீட்லேர்ந்து போன் போட்டா பேசி யிருக்கவே முடியாது.''

''பேசச் சொன்ன மாதிரி பேசினேன். என்ன காரியம் ஆவணும் உங்களுக்கு?''

4

''பக்கெட் நாலு வாங்கணும். கரிக்கு ரொம்ப அல்லா டறேன். பாம்பேலர்ந்து பத்து லாரி லோடு கரி கேட் கணும்.''

''நீங்க கேட்டா கிடைக்காது?''

''இன்னி தேதிக்குத் தங்கமே வாங்கிடலாம். கரி கிடைக்கலை. மடக்கிப் போட்டு விலையேத்தறானுங்க.''

''அவரு என்ன...கரி வியாபாரமா?''

''சேட்டா? நல்லா கேட்ட போ...அவன் தாதா.''

''அப்படின்னா?''

''பாம்பேலே பெரிய ஆளு. அடிதடி, கள்ளக்கடத்தல் அண்டர்க்ரவுண்ட் பாலிடிக்ஸ் எல்லாமும் அவன்தான்.''

''ஐயோ...அவன் எதுக்கு உங்களுக்கு?''

''அவன் போன் போட்டு 'சிவப்பிரகாசம் நம்ம ஆளு கரி பத்து லோடு குடு'ன்னா பறந்துக்கிட்டு வரும்''

''இல்லேன்னா?''

''போய் தொங்கணும். கேட்கற விலை தரணும். அது தவிர, பக்கெட் இம்போர்ட்டட். பாம்பேல இருக்கற பெரிய கம்பெனி சொந்த உபயோகத்துக்கு வாங்கும். நான் கேட்டா தரமாட்டான். சேட்டு கேட்டா கிடைக்கும்.''

''உங்கக்கிட்ட அடிதடியெல்லாம் வராதே?''

''ச்சே...தங்கமான ஆளு. அவன் தொழில் வேற என்னை மாதிரி ஆள் போய் கேட்டா உதவி செய்வான்.''

''எதுக்கு செய்யணும்?''

''ஒரு நட்புதான். மெட்ராஸ்ல அவனுக்குத் தெரிஞ்ச ஆளு நாலுபேர் வேணுங்கற அந்தஸ்துதான்.''

''தப்பான ஆளா சொல்றீங்களே...''

''இன்னிக்கு கோடீஸ்வரன் அவன். நாமெல்லாம் அவ முன்னாடி தூசு. ஒண்ணுமேயில்லை. இந்தப் பொண்ணு கல்யாணத்துக்கு சுக்கா ரொட்டி சுட கரி கேட்டாங்க. சுக்கா ரொட்டி சுட என்னா கரி ஆவும். இரண்டு மூட்டை எடுத்திட்டு போடான்னு சும்மா கொடுத்தேன். கல்யாணத் துக்கு பதில் மரியாதையா பத்திரிகை வச்சான். போய் ஓரமா நின்னேன். ஊர்ப்பட்ட ஜனம். மாப்பிள்ளை அழைப்புக்கு ட்யூப்லைட்...அந்த லைட்டுக்காரப் பசங்க சண்டை போட்டுக்கிட்டு கலாட்டா மாதிரி பண்ணாங்க.

''சேட்டு கும்பல் மிரண்டு நின்னுச்சு. போய் அதட்டு போட்டு, நீ தூக்கினா தூக்கு. இல்லேன்னா என் ஆளை விட்டு தூக்கறேன்னு, கம்பெனி பசங்களை கார் அனுப்பி

வரச் சொல்லி இருபது ஆட்களும் நம்ப ஆளே தூக்கி னாங்க. அத்தினி பேருக்கும் இருபது ரூபா கொடுத்தேன் வந்து கைப்பிடிச்சுக்கிட்டான். நான் தரேன்...ஆளுக்கு நூறு ரூபா தரேன்னு அத்தினி பசங்களுக்கும் கொடுத்தான் உள்ள என்னைக் கூட்டிட்டுப்போய் மார்ல செண்ட் தடவி நிறைய கூட்டம் கொஞ்சம் பாத்துக்கன்னு சொன்னான்.

''அவங்க வீட்டுலேர்ந்து ஒரு பாட்ஜ் வாங்கிக் குத்திக் கிட்டு விடிய விடிய சத்திரத்து வாசல்ல நின்னேன். அன் னிக்கு புடிச்சுப் போச்சு சேட்டுக்கு என்னை...''

''நீங்களும் ஆள் பார்த்துதான் உதவி செஞ்சிங்க.''

''ஆமா.''

''பெரிய ஆளுதான்.''

''இல்லேன்னா இங்க வியாபாரம் பண்ண முடியாது புவனா. வியாபாரி நாலும் அனுசரிச்சுப் போறவன். நீ கூட சமயத்துக்கு எப்படி பேசின...''

''சரியா பேசினேனா?''

''தூள் கிளப்பிட்ட. எனக்கு பாம்பே வேலை சுளுவா முடியும். அதெப்படி அந்தப் பொண்ணுக்குப் புடிச்ச மாதிரி பேசின...?''

''அதெல்லாம் தெரியாதுங்க எனக்கு. நிஜமாவே ஒரு அனுமானத்துல சொன்னேன்.''

''நீ சொன்னது பலிச்சுடுச்சுன்னா சேட் சந்தோஷத் துல என்ன வேணா செய்வான்.''

''எனக்கு ஒண்ணும் வேணாம். உங்களுக்கு உதவியா இருந்தா சரி.''

சிவப்பிரகாசம் அவளைக் காதலுடன் பார்த்தான். அதில் ஆயிரம் அர்த்தங்கள் தெரிந்தன.

பிறரைப் பாராட்ட ஒருவனுக்குப் பெரிய மனது வேண்டும். அதிலும் மனைவியைப் பாராட்ட உண்மையி லேயே விசாலமான இதயம் வேண்டும்.

சிவப்பிரகாசம் மனசு விட்டுப் பாராட்டுகிற ஆள். மனைவி மட்டுமல்ல, யார் நல்லது செய்தாலும், எங்கு உண்மை கண்டாலும், எவரிடம் புத்திசாலித்தனம் தெரிந் தாலும் ''அடேங்கப்பா, வாழ்க வளமுடன்'' என்று வாய் விட்டு கூவுகிற ஆள். ஆனால் திட்டுவது இதே ரீதியில் வரும் என்பதும் உண்மை. இதைக் குறையாகவும் கொள் ளலாம். குணமாகவும் கொள்ளலாம். தனக்கென்று ஒரு காசுப் பெட்டி வைத்துக்கொள்ள வேண்டும் என்ப தும் சிவப்பிரகாசத்தின் ஆசை. எங்கோ யாரிடத்திலோ சின்ன வயசில் இடுப்பு உயரம் உள்ள இரும்புப் பணப் பெட்டி பார்த்திருப்பான் போலிருக்கிறது. வெண்கலத் தில் கைபோலவே ஒரு கைப்பிடி வைத்து வெளியே இரண்டு சாவி, உள்ளே இரண்டு சாவி உள்ள திண்டுக்கல் பெட்டி. கொஞ்சம் அழுக்குப் பச்சையாய் அசைக்க முடி யாத கனத்துடன், பத்து வருடம் முன்பு பெட்டி ஒன்று லாரி பார்சலில் வந்தது.

கூலி ஆளும் அழகிரியும் தலைப்பக்கம் பிடிக்க, சிவப் பிரகாசம் மட்டும் கால்பக்கம் பிடித்து தூக்கி உள்ளே வர 'என்ன அது' என்று வியப்போடு புவனா பார்த்துக் கொண்டிருந்தாள்.

வராண்டா ஏறி ஹால் கடந்து பூஜையறைக்குப் பெட்டி வந்தது. ''குபேர மூலைக்குப் போ...அந்த மூலை...'' பளு தாங்காமல் மூச்சிரைப்புடன் சிவப்பிர காசம் கத்தினான்.

''அங்கியா? குப்பையா இருக்கு நாயக்கரே'' கூலி யாள் கூவினான். பளு தாங்காத கோபமா... இல்லை வேலைக்காரன், வீடு குப்பை என்று சொல்லிவிட்டானே

என்கிற எரிச்சலா தெரியவில்லை. புவனாவைப் பார்த்து சீறினான்.

''துடப்பக்கட்டை மாதிரி நிக்கிறயே...போய் அந்த இடம் சுத்தம் பண்ணு. சொன்னாத்தான் செய்வீங்களா'' மூன்று ஆண்களும் தம்பிடித்து நிற்க புவனா ஓடினாள். பூந்துடப்பம் போட்டு அந்த மூலையை சரி செய்தாள். பெட்டி நகர, 'கொஞ்சம் இருங்க' என்றாள். மறுபடி ஓடி ஈரத்துணி போட்டு துடைத்து, சட்டென்று ஒரு இழை கோலம் போட்டாள். பெட்டி அதற்குள் அருகே வர, சுவரோடு நின்றாள்.

பெட்டி அருகே வந்து இறங்க, தடுமாறியது. அவள் நகர்ந்தால் வாட்டமாகும் அவர்கள் விலகினால்தான் அவளால் நகர முடியும்.

''ஏண்டி, உனக்கு அறிவு இருக்கா...பளு தூக்கிட்டு வரது தெரியலை?'' கிட்டத்தட்ட அழகிரி முதுகில் உரசிக் கொண்டு வெளியே வரவேண்டி இருந்தது.

இறக்கி வைத்து நிமிர, எல்லார் உள்ளங்கைகளும் சிவந்து தழும்பாகியிருந்தது. கூலி ஆள் கிளறிவிட்டான். ''இன்னும் ஒரு நிமிஷம் அப்படியே நின்றிருந்தா தடால்னு போட்டுருப்பேன். நூறு கிலோ வெயிட்டு எத்தினி நேரம் தூக்கறது?''

''அதெல்லாம் நான் விட்டுர மாட்டேன்'' அழகிரி சமாதானம் பேசினான். அவனுக்குத் தெரியும் இப்போது குத்தம் சொன்னால் புவனா மீதுதான் கூச்சல் விழும். ஆனால் அவன் சமாதானம் பேசியதும் தப்பாயிற்று.

''என்னத்த விடமாட்ட...ரெண்டு பக்கெட் தண்ணி சேர்ந்த மாதிரி தூக்கினதில்லை. நீ எத்தினி நேரம் தாங்குவ...வீட்ல இருக்கற பொட்டச்சிக்கு அறிவு வேணாம்...செருப்படி போட்டுக்கிட்டே இருந்தாதான் புத்தி வரும். கொஞ்சிக்கிட்டே இருந்தா மதமதப்பு வந்துடுத்து.''

''என்ன. ரொம்பப் பேசறீங்க... செருப்பால போட்ற தாமே... எதுக்கு...?'' புவனாவுக்கும் கோபம் வந்தது, தெரியாத ஆள் முன்பு புருஷன் கத்துவது ஆத்திரம் வந்தது.

''எழுந்து வந்தேன்னா ஒரே மிதி... இடுப்பெலும்பு உடைச்சிடுவேன். பூஜை ரூமாடி இது...? ஊதுவத்தி டப்பா ஊதுவத்திக் குச்சி... மயிரு குப்பை... கூலிக்காரன் வழிச்சிக்கிட்டு சிரிக்கிறான் வீட்டு லட்சணத்தை...''

''பொட்டி வருதுன்னு முன்னாடியே சொல்லிருந்தா சுத்தம் பண்ணி வச்சிருப்பேன்ல.''

''ஏன்... சொல்லி சொல்லிதான் வேலை வாங்கணுமா உங்களை...? பெருக்கு, சுத்தம் பண்ணுன்னு ஆம்பளை சொன்னாதான் செய்வீங்களா...? குடித்தனம் பண்ற பொம்பளையா... வளர்த்திருக்காங்க பாரு... சாப் பிடுன்னு சொல்லித்தான் கொட்டிக்கிறியா?''

குடித்தனம் பண்ற பொம்பளையா என்று கேட்டதும் கொட்டிக்கிறியே என்றதும் புவனாவுக்கு கோபம் வந்தது.

''காலைல பூஜை பண்ணிட்டு ஊதுவத்தி பாக்கெட் போட்டது. நீங்க... ஏன் ஒழுங்கா குப்பைக் கூடைல போட வேண்டியதுதானே ஒருத்திக்கு மூணு பொம்ப ளைங்க இருக்கிற இடத்துல முடிக் குப்பை விழத்தான் செய்யும். நின்ன இடத்துல துணி அவுத்துப் போட்டு மாத்திட்டு அப்படியே துணியைப் போட்டுட்டு போயிடு வீங்க... துண்ண இடத்துல கையைக் கழுவிட வேண்டியது. உங்க பின்னாடியே ஒரு ஆள் நிக்க வேண்டியிருக்கு. எத்தினி தடவைதான் சுத்தம் பண்றது?குப்பை போடறது நீங்க... திட்டறது என்னையா... எங்கம்மாவச் சொல்ல வந்துட்டீங்களா... திண்ணைல வரட்டி அடுக்கி வச்ச

வூடுதானே உங்களது...என்னமோ சுத்தம் பார்க்கறாரு பெரிசா...''

''எதிர்த்துப் பேசறியா நாயே...?'' சிவப்பிரகாசம் ஆத்திரத்துடன் எழ, பளிச்சென்று கண்களில் புவனாவுக்கு நீர் கட்டியது.

''அடி...ஆம்பளைன்னா அடிச்சுக் கொல்ல வேணாமா, அடி...''

''ச்சே...போ நாயக்கரே. நல்லதா ஒரு பொருள் வந்து இறங்கியிருக்கு. இப்பபோய் அம்மாவ அழ வச்சுக்கிட்டு... தம்பி வெளியே போடா. வாசல்ல நில்லு போ. நாயக்கரே ரெண்டு ரூபாகொடு அந்தக்கூலியாளுக்கு...டீ சாப்பிடுய்யா. பாவம் விரல் நிமிர்த்த முடியலை. தப்பா தூக்கிட்டு கத்தறான்.'' அழகிரி மெல்ல அதட்டி உட்கார வைத்தான்

இரண்டு நிமிஷம்தான். அழகிரி சொன்னதும் உள்ளே உறைத்துவிட்டது. நல்ல பொருள் வந்திருக்க இத்தனை கூச்சல் தவறு என்று தெரிந்து விட்டது.

''இந்தா அஞ்சு ரூபா கொடு. டீ சாப்பிட்டுப் போப்பா டிரைவரை வரச் சொல்லு. புவனா, டீ போடு...'

ஆட்கள் போனதும் காலண்டர் புரட்டி நேரம் பார்த்தான். சாதாரண பீரோ திறந்து பணக்கட்டுகள் எடுத்து வந்தான்.

''இருங்க சந்தனம், குங்குமம் வச்சுடறேனே...'' அழகிரியைக் கடைக்குத் துரத்தி சாமந்தி மாலை வாங்கி வரச் சொன்னாள். ஈரத்துணியால் பெட்டி மொத்தமும் துடைத்து சந்தனம் குங்குமம் இட்டாள் உள்ளே மஞ்சள் கிழங்கால் ஸ்வஸ்திக் சின்னம் கீறினாள். குத்துவிளக்கு ஏற்றினாள். தனது பீரோ திறந்து சிறிய வெங்கடாஜலபதி பிளாஸ்டிக் படம் எடுத்து வந்தாள்.

உள்ளே சாய்த்து வைத்தாள். அழகிரி மாலையுடன் வர, பெட்டி மீது அப்படியே சாத்தினாள். பாலில் தேன் கலந்து எடுத்து வந்தாள். பின் பக்கத்திலிருந்து இரண்டு துளசி பறித்து உள்ளே பெருமாள் காலடியில் போட்டாள். நைவேத்தியம் செய்தாள். மணி அடித்து கற்பூரம் காட்டினாள். தன் கைகள் கொள்ளும் மட்டும் நோட்டுக் கற்றைகள் எடுத்து உள்ளே வைத்தாள். விளக்கு பேசிற்று. சுடர் தெறித்தது.

புருஷனும் மனைவியும் விழுந்து வணங்கி கற்பூரம் கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். பாலும் தேனும் கலந்து பிரசாதம் பருகினார்கள்.

''அழகிரி தூக்கி வந்துதே அதுக்குத் தரவேணாமா?''

உள்ளே உள்ள கட்டிலிருந்து நூற்றியொரு ரூபாய் எடுத்து அழகிரியிடம் நீட்ட அவன் சந்தோஷமாய் வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டான். தன் மனைவியிடம் சொல்ல பின் பக்கம் ஓடினான்.

''எனக்கு...?''

''என்ன உனக்கு?''

''துடைச்சு கோலம் போட்டு பூஜை பண்ணினேன்... எனக்கு?''

''இது மொத்தமும் உனக்குத்தாண்டா, இந்தா பிடி.'' கைகளைப் பற்றி சாவிகளை அவள் வலக்கையில் அழுத்தினான். முகவாய் தூக்கி இதழில் முத்தமிட்டான்.

'ஒன்னும் வேணாம் போ' என்பதாய் அவள் வாங்கிக் கொண்டு திரும்ப கைப்பிடிப்பை அழுத்தினான்.

''அது அவ்வளவுதான் சும்மா கோச்சுக்கக் கூடாது.''

''நாலு பேர் நடுவுல கத்தலாமா?''

''பளு தூக்கினை கோபம். எதிர்பார்த்ததுக்கு முன்னயே பொட்டி டெலிவரி வந்துடுச்சேன்னு ஒரு பதட்டம்.''

''அதுக்குன்னு கன்னா பின்னான்னு பேசிடறதா... கோபத்துல கத்தறதுக்கு ஒரு அளவில்லையா?''

''தப்பு... தப்பு... தப்பு'' உள்ளே இருக்கிற பெருமாள் படத்துக்கு எதிரே கன்னத்தில தட்டிக் கொள்ள. அவள் தடுத்து நிறுத்தினாள்.

தொடர்ந்து நாலு நாள் அவன் வேட்டியும், ஜட்டியும், பேப்பரும், பேனாவும், கால் செருப்பும்போடப்பட்டிருந்த விதத்தைக் காட்டினாள்.

அவனுடைய ப்ரீஃப்கேஸில் ஏகப்பட்ட பேப்பருக்கு நடுவே பூக்குப்பைகளும். பிரசாதப் பொட்டலங்களும் ஒரு கவரில் நசுங்கின பால்கோவாவும் இருந்தன. நடு ஹாலில் பிரித்து வைத்தாள். ''முத்துலட்சுமி அழகிரி... இங்க வாங்க இரண்டுபேரும். இது இவரு பொட்டி. வந்து லட்சணத்தைப் பாரு.''

''ஏது பூ... எவளுக்கு வாங்கிப் போனது...?'

''ச்சீ... கோவில்ல போட்டாங்க மாலையா... அப்படியே பொட்டில வச்சேன்.''

''என்னிக்கு?''

''பத்து நாள் இருக்கும்.''

''இது என்ன பால்கோவா?''

''எவனோ சேட்டு கொடுத்தான். அவன் எதிர்க்க அப்படியே உள்ள போட முடியலை. சாப்பிடற மாதிரி கொஞ்சம் வாயில போட்டுட்டு உனக்கு பிடிக்குமேன்னு நைஸா பொட்டில வச்சேன். கொடுக்க மறந்து போச்சு.''

''எனக்குப் பிடிக்குமேன்னு... நீங்க... வாழ்ந்துட்டேன் போங்க.''

'ஏம்மா... உனக்குன்னு ஒன்னும் கொண்டார தில்லையா நான். எங்க வீட்ல சொத்து பிரிச்சப்ப என்

பங்கு அத்தினையும் உம் மடிலதான் கொண்டு வந்து கொட்டினேன். எங்க அண்ணாத்தை எங்கக் கொட்டினா ருன்னு சொல்லட்டுமா...''

''அடடா... ஆரம்பிச்சுட்டீங்களா...ரெண்டு பேரும் மாத்தி மாத்தி ஆளுக்கொரு நாள் சண்டை ஆரம்பிச்சிடு வீங்க. உங்க அண்ணாத்தை லட்சணத்தைப் பொண் டாட்டிக்கிட்ட பேசறியே.''

''ஊரு உலகத்துல ஆம்பளைங்க எப்படி இருக் காங்க... நான் எப்படி இருக்கேன்னு சொல்ல வேண் டாமா... கத்தறேன்...காட்டுமிராண்டிங்கறாளே.''

''பொம்பளைங்க மோசமா இருக்கறதும் உண்டு உலகத்துல. புருஷன் அந்தண்டை போனதும் இந்தண்டை ஆடற பொம்பளை இல்லையா...?''

''ஏன் இல்லை...இவரு வீட்லயேகூட தூரத்து சொந்தம்மா, அப்படி ஒரு கேஸ் உண்டு.'' புவனா நொடித்துக் கொண்டு பேசினாள்.

''பொட்டியக் குடுறி...'' சிவப்பிரகாசம் பிடுங்கி னான். ''ஏன்...உங்களை, உங்க சொந்தத்தைச் சொன்ன தும் நவதுவாரமும் எரியுதா?''

''வந்து பேசிக்கறேன் உன்னை...'' சிவப்பிரகாசம் வெளியே இளம்பினான்.

''எப்ப...ராத்திரிக்கா...?''

''அவ்வளவு கிண்டலாப் போச்சுடி'' புவனா சிரிப் புடன் வழியனுப்பினாள்.

மறந்து போயிருப்பான் என்று நினைத்தது தவறு. கட்டிலில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். டக்கென்று பாய்ந்து இடுப்பு மடிப்பைக் கடித்தபோது

வாய்விட்டுக் கத்தத் தோன்றியது இரவில் எப்படி கத்த முடியும்? அதுவும் படுக்கையறையிலிருந்து.

''கிண்டலாடி பண்ற...வா, இப்ப வசமா என்கிட்ட மாட்டிருக்கே...''

''ஐயோ வேணாம்பா...வுட்ருங்க. தப்பு. ஸாரி... கன்னா பின்னான்னு கிள்ளுவீங்க. ப்ளீஸ். நீங்க சொன்னதுக்கும் நான் கேலி பண்ணினதுக்கும் சரியாப் போச்சு...வுட்டுருப்பா...ஐயோ...ச்சீ குரங்கே...''

''குரங்கா நான்? இப்பதான் ஸாரி சொன்ன...திருப்பி குரங்குன்றியா...பிராண்டறேன் வா...''

காதல் மட்டும் காமமில்லை. சண்டை கூட காமம் தான். ஆழ்ந்து நேசிக்கிற ஆணும், பெண்ணும் இளமையில் பேசுவதும் சிரிப்பதும், சீண்டுவதும், சீறுவதும் பிணங்குவதும், பிணங்கலுக்குப் பிறகு கெஞ்சுவதும், காமம்தான். சிவப்பிரகாசம் பாராட்டியதிலும் காமம் இருந்தது.

காரில் சேட்டு வீட்டிலிருந்து திரும்ப, பாராட்டு காமமாய் வெளிப்பட்டது.

வயசுக்கு வந்தப் பெண் பின்னால் இருப்பதால் வாய் திறக்கவில்லை. கால் குறும்பு செய்தது. எந்த நேரம் பெண் எட்டிப் பார்க்குமோ என்று பயந்தாள். மறுபடி கால் வர...

''ச்சை...சரியான வெட்கம் கெட்டது...'' என்று அதட்டினாள்.

''யாரு?''

''ஸ்கூட்டரில் முன்னால் போறாளே... எப்படி ஒத்தையா போட்டுக்கிட்டு போறது பார்...ஜாக்கெட் கழுத்தும், புடவை போட்டுருக்கற அழகும்...எதுக்கு

புடவை... பேசாம பாவாடை ஜாக்கெட்டோட வரலாம்''

''உனக்கேன் கஷ்டமா இருக்கு? உன்னை மாதிரி கிழவியா போர்த்திக்கிட்டு வரதுக்கு... சின்ன வயசு... பண்ணிக்கறாங்க. உம் பொண்ணு ட்ரஸ் பாத்தியா, சட்டை பனியன்தான், பாவாடை தாவணி போடச் சொல்றதுதானே... ரோட்ல போற வரவங்களைப் பாத்து அலட்டிக்கிறியே.''

''ஸாரிப்பா, நம்மால அதெல்லாம் போட முடியாது சட்டை பேண்ட்டுதான் மரியாதை.'' பெண் பேசிற்று

''ஆமா மரியாதை பொண்ணு பார்க்க வரப்ப அரை நிக்கர் போட்டுக்க நாயக்கர் வீட்டுப் பொண்ணு நல்லா இருக்குதுன்னு மெச்சிக்குவாங்க.'' புவனா நொடித்தாள்.

''ஏன், வர்ற நாயக்கரு குடுமி வச்சிருப்பாரா... சாய வேட்டி கட்டிட்டு வருவாரா?'' பெண் எதிர்த்தாள்,

''அடிறா சக்கை. இதுக்கு பதில் சொல்லு.''

''குடுமி வச்சா என்ன தப்பு? எங்கப்பா சாகற வரைக்கும் குடுமிதான்.''

''அவருக்கு மாடு புடிக்கிற வேலை.''

''அடடா அதெல்லாம் தெரியுமா பாப்பா உனக்கு?'' சிவப்பிரகாசம் சீண்டினான்.

''உங்கப்பா கூட அஞ்சு வயசுவரைக்கும் குடுமிதான், வேண்டாம்னுடுவியா?''

''வேண்டாம்னு ஏன் சொல்றேன்? அவர் இஷ்டம் எப்படி வேணா இருக்கட்டும் அது யார்னு கேட்டா தெரியாதுன்னுடுவேன்.''

''தின்றதுக்கு வருவேல்ல... அப்ப நான் சொல்றேன் உன்னைத் தெரியாதுன்னு. பசங்க ரொம்ப கெட்டுப் போச்சு. ஐயர் பொண்ணுங்களைப் பார்த்து ட்ரஸ்

போட்டுக்குதுங்க. அடுத்த வருஷம் தாவணி போடலை சூடுதான்.''

''நத்திங் டூயிங். எனக்குப் புடிச்ச விதமா ட்ரஸ் பண்ணுவேன் எனக்குப் புடிச்சதைத்தான் சாப்பிடு வேன்...''

''கல்யாணமும் அப்படித்தான் இல்லையா'' சிவப் பிரகாசம் தூண்டினான்.

''யெஸ்''

''என்னடி யெஸ்ஸு. காலை முறிச்சு வீட்டுக்குள்ள கெடன்னு போட்டுருவேன். கொழுப்பா?''

''யெஸ்.''

''என்ன நீங்களும் கேட்டுட்டு இருக்கீங்க.''

''எனக்குத் தெரியாது. அம்மாவும் பொண்ணும் என்னவாவது பண்ணிக்கங்க.''

''நீங்க கேட்க மாட்டீங்காளா?''

''கேட்கலாமே.''

''கேளுங்களேன்.''

''பாப்பா, யாரைக் கட்டிக்குவ நீ?''

''ஜாதி முக்கியம் இல்லப்பா. எனக்கு புடிச்ச பையனா என்பேச்சு கேட்கறவனா, எனக்கு அடங்கி நடக்கறவனா, சொந்த பந்தம் அதிகம் இல்லாதவனா, நிறைய சம்பாதிக்கிறவனா...''

''நல்லா கனா காணுங்கடி.''

''கனாவே இல்லை இதுதான் முடிவு.'' பதினாலு வயசு தெளிவாய், திடமாய் பேசிற்று.

புவனா மனசு கலவரமாய் மாற. வீடு வரைக்கும் வாய். திறக்காது வந்தாள். இறங்கி உள்ளே போய் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

''என்னடா உட்கார்ந்துட்டா?'' புவனாவுக்கு அழுகை வந்தது. தலை நிமிர, கண்ணில் ஜலம் வழிந்தது.

''ச்சீ, இதுக்குப்போய் என்ன அழுகை?'' புருஷன் அணைத்துக்கொள்ள, கேவல் எழும்பிற்று.

5

''உன்கிட்ட இருக்கிற ஒரே ஒரு கெட்ட குணம் என்னா தெரியுமா? எல்லாம் உன் தலைலதான் ஓடறதா நினைச்சுக்கற, தோட்டத்துப் புல்லுலேர்ந்து பொண்ணு. புருஷன், வேலைக்காரன், வேலைக்காரி எல்லாம் உன் சொல்லுபடி பண்ணணும்னு ஆசைப்படறே. இது தப்பு புவனா.''

''இரண்டு நாள் தண்ணி திறக்காத வுட்டுறேன். புல்லு தானா முளைக்கும். காலைல ஆறு மணிக்கு எழுப் பாத வுட்டுறேன். பொண்ணு தானா எந்திரிக்கும்.''

''நாளைலேர்ந்து சீந்தப்போறதில்லை. பொண்ணு, புருஷன் புல்லு எதையும்.''

''இரண்டு நாள் காயும். மூணாநாள் மழை பெஞ் சுடும். இரண்டு தடவை லேட்டாஸ்கூல் போவும். மூணா நாள் தானா முழிப்பு வந்துடும். ஆறு மணியாச்சுன்னா அம்மா எழுப்பும்னுதான் தூங்குதே தவிர, நீ எழுப்பினா தான் எல்லாமே நடக்கும்னு நினைக்காதே புவனா.''

''நான் நினைக்கலை.''

''இந்த வீடு, இப்படி ஒரு ஃபேக்டரி, காரு, சுகம் சொத்து வரும்னு நான் நினைச்சதேயில்லை. நான் பத்தாவது ஃபெயில். பரீட்சை எழுதறேன், பரீட்சை எழுதறேன்னு நாலு வருஷம் ஊர் சுத்தினேன். எட்டணா சினிமா டிக்கெட்டுக்கு காசு தரமாட்டேனுட்டாங்க வீட்ல. சினிமா காசுக்குக் கரி தள்ளப் போனவன். எட்டணா காசுக்கு வாரிப்போட்டேன். அன்னிக்குத் தொட்ட கரி இன்னிவரைக்கும் ஒட்டிக்கிச்சு.''

''இப்பக்கூட மலைப்பா இருக்கும். மின்ட்லேர்ந்து மரக்கடைங்க வழியே பேஸின் பிரிட்ஜ் கார்ல போற போது இந்த வழிலதானே எட்டணா காசுக்கு தினம் போனோம்னு தோணும். வழில ஒரு இடம் பீடி சுத்தற கம்பெனி. பீடி சுத்தினாகூட காசுன்னாங்க அரை அவரு உட்கார முடியலை, புகையிலை நாத்தம் மூச்சு முட்டுச்சு, முதுகுவலி, தடதடன்னு வண்டி தள்ளிக்கிட்டுப் போற சுகம் இதுல இல்லைன்னு எழுந்துட்டேன்.''

''ஏன் பீடி சுத்தப்போனேன்...யாரு எழுப்பி மறுபடி கரி தள்ளச்சொன்னது? ஏன் கரி வண்டிக்குப் போனேன்? எப்படி அங்கேயே ஒட்டினேன்...இன்னி வரைக்கும் புரியலை. நான் வேலை செய்த இடத்துல இப்ப பஸ் ஸ்டாண்டு கட்டிட்டாங்க. அங்கதான் மேஸ்திரி ஆனது. மொத்த வேலையும் அங்கதான் புவனா கத்துக்கிட்டேன். எட்டணா காசுக்கு மாட்டேன்ன ஆத்தா தான் எட்டாயிரம் ரூபா குடு தங்கச்சி கல்யாணம் முடிச்சுடலாம்னுடுச்சு. பத்துரூபா கடன் வாங்கி, எட்டு அம்மா கிட்ட குடுத்துட்டு இரண்டு ரூபா... அதாவது ரெண்டாயிரம் ஆத்தோரமா இருக்கற கட்டாந்தரைய வாடகைக்கு எடுத்து தகரக் கூரை போட்டு, நானே

அடுப்பு மொழுகி, நானே கரி கடன் வாங்கி, நானே மண்ணுமெதிச்சு மோல்ட் பண்ணி, டி ஆங்கிள் ஊத்தினேன். ஆர்டர் கொடுத்தவன் கிட்டேயே முன் பணம் வாங்கி அவன் கம்பெனிக்காக நான் மோல்ட் ஊத்தி சப் காண்ட்ராக்ட் ஒரு ஆங்கிலுக்கு அவன் பதினெட்டு ரூபா வாங்கினா, எனக்கு அவன் சாமான் கொடுத்து, கரி கொடுத்து ஆறு ரூபா தருவான். வாங்கின கம்பெனில கண்டுக்கினாங்க, அவனைவிட நான் நல்லா செய்யறேன்னு. நேரா வந்து கேட்டாங்க, நீயே செய்யுன்னு நான் ஒத்துக்கலை. நேரா அவன்கிட்டயே போய் இப்படி சமாச்சாரம்னு சொன்னேன். உன் ஆர்டர் எங்கிட்ட வருது. நான் வேணாம்னுட்டேன்...வேற கைக்கு போயிடப் போவுது, ஜாக்கிரதைன்னேன்.''

''ஒரு செகண்ட் முழிச்சுப் பார்த்தான். எனக்கும் அந்த கம்பெனி ஆளுக்கும் பல தகராறு. எவன்கிட்டயோ போறதைவிட உன்கிட்ட போறது எனக்கு திருப்திதான். நீயே ஆர்டர் எடுத்து செய், பதினெட்டுக்கு ஒத்துக்காத, இருபது கேளுன்னான்.''

''ஏன்னு கேட்டேன்''

''பதினெட்டு ரூபா ஜாஸ்தின்னான். நீ இருபது கேட்டாதான் நான் சொல்றது உண்மைன்னு ஆவும். இருபதுக்கு குறையாதேன்னான். அப்படியே அடிச்சேன் கம்பெனிகாரன்கிட்ட. என் நல்ல காலம் ஒத்துக்கிட்டான். கிட்டத்தட்ட ஐட்டத்துக்கு பத்து ரூபாய் நின்னுச்சு. ஒட்டிக்கு ரெட்டியா விலை தரானேன்னு பார்த்துப் பார்த்து ஊத்தினேன். ஒரு விரிசல் ஒரு ஓட்டை இருக்காது, பாறாங்கல்லு மாதிரி இருக்கும். இரும்பு காஸ்டிங்ஸ், முதல்ல செய்த பட்டறை நொடிப்பா போச்சு. நான் எடுத்துக்கிட்டுப் போய் ஒரு பீஸுக்கு பத்து ரூபாய் நின்னுது. பாதி உங்களுக்கு இந்தாங்கன்னேன். அந்த ஆள் அழுதுட்டான். நாப்பதாயிரம்

கொடுத்தேன். அதையும் முழுங்கி திண்டாடிச்சு பட்டறை துட்டு புரட்ட முடியலை. டேபிள் சேர்லேர்ந்து எல்லாத்தையும் கொண்டார்ந்து என் கடைல போட்டுட்டு எதுனா ஒரு ரேட் போட்டு முடிஞ்சபோது குடுடான்னு போயிட்டான். அன்னிக்குப் புடிச்சுது, நம்ம பட்டறை, மெட்ராஸ்ல ஓடற பாதி வண்டிகளுக்கு நம் பட்டறை காஸ்டிங்தான். நான் கேட்டனா இத்தைக் குடு அத்தைக்குடுன்னு இல்லை. புவனா, அதுவா வந்தது.''

''ஆமா...அதுவா உக்காந்த இடத்துல வந்துதாக்கும். உழைக்கலையா நீங்க ராவும் பகலுமா, உழைச்சதுக்கான பலன்தான்.''

''உழைச்சா மட்டும் வராது புவனா, ஒரு சுழி வேணும், இன்னிக்கும் இரும்பு காய்ச்சி மோல்ட்ல ஊத்தறப்ப முருகான்னுதான் உள்ள குரல் வரும். குளிர்ந்து பிரிச்சு பாக்கறவரைக்கும் இது எப்படி வரும்னு தெரியாது. ஒழுங்கா வந்தா லாபம். வரலையா நஷ்டம் யாரையும் குத்தம் சொல்ல முடியாது. ஊத்தின வேகத்துல உள்ள ஒரு பபிள் நின்னு போச்சுன்னா போதும், முழங்கை உயரத்துக்கு ஊத்தினது குப்பையா போயிடும். நான் மனுஷாளை நம்பலை புவனா, தெய்வத்தை நம்பறேன்.''

''அதனால...?''

''உன் பொண்ணு கல்யாணம் உன்கிட்டயோ என் கிட்டயோ ஏன் அவகிட்டயோ இல்லை. அது விதி. கடவுள் கொடுக்கிற வரம். அது சிறிசு, இங்கிலீஷ் படிச்ச கொழுப்புல பேசுது. உலகம் தெரியலை. அதுக்குப் போய் நீ மூஞ்சி தூக்கற பாரு...அதான் வேடிக்கை.''

''ஒரு பொட்டைக் கழுதைக்கு அத்தினி திமிர் ஆவாதுங்க. எதோ நாம ரெண்டுபேரும் இருந்ததொட்டு

போச்சு. நாலுபேர் முன்னாடி பேசியிருந்தா எத்தினி அவமானம்?''

''என்ன அவமானம்? அதுக்கு என்னவோ கனா, சினிமா கனா, புஸ்தகம் கனா, உடனே. உன்னை மாதிரி உன் பொண்ணு, இருக்கணும்னு ஏன் நினைக்கற... உங்கம்மா மாதிரி இருக்கியா...நீ உங்கப்பாகூட கார் முன் சீட்ல உங்கம்மா உட்கார்ந்து போனத நீ பாத்திருக்கியா? பொட்டி சாவி, பீரோ சாவின்னு கொத்தா இடுப்புல சொருகிட்டிருந்தாளா, இல்லியே. உங்கப்பா கொடுத்தா புடவை இல்லைன்னா இல்லை. உங்கப்பா என்னா சம்பாதிக்கிறார் எத்தினி கைல சேர்த்து வச்சிருக்கார் எதுவும் தெரியாது. அது வேற காலம் இது வேற காலம். நீ உன் இஷ்டத்துக்குப் புடவை வாங்கலையா? நான் வாங்கிக் கொடுத்த புடவை கலர் பிடிக்கலைன்னு சொன்னதில்லையா? உன் பொண்ணு அவ இஷ்டத்துக்கு புள்ளை தேடறது தப்பா?''

''புடவையும் புருஷனும் ஒன்னா...?''

''அமையறதுல ஒன்னுதான்.''

''அப்ப மனுஷாள் முயற்சி ஒன்னுமேயில்லையா?''

''இல்லைன்றது என் அபிப்ராயம். இந்த முயற்சி உனக்கு விதிக்கறதுகூட தெய்வம்தான். அடியே, உன் கூடப் பொறந்தவங்க நாலு பேர். இதுல யாரு கொண்டையும் காசுமாலையுமா வலம் வர்றது. யாருக்கு சொந்த கார், எவக்கிட்ட அம்பாஸிடர் காரு இருக்கு. நீ பண்ற குடித்தனம்தான் உன்கூடப் பொறந்தவளும் பண்றா. ஏன் வரலை இத்தனையும்?''

''என் புருஷன் குடிக்கிறதில்லை. சீட்டு, ரேஸு போறதில்லை.''

''போகாதவன் பத்து ரூபாய்க்கு லாட்டரி அடிக்கறதை காட்டட்டுமா? போறவன் லட்ச லட்சமா பொழங்

கறத பார்க்கிறியா. இந்தக் காசு போன ஜென்மத்துப் புண்ணியம்.''

''நல்லது கெட்டது அச்சப்படறதே தப்பா?''

''படு, புலம்பாதே, இவளால அவமானம், இதனால நஷ்டம்னு விரலு நீட்டாத. பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல். கருமம்கற துக்கு நம்ம காரியம்னுவாங்க. எனக்கு போன ஜென்மத்து பாவ. புண்ணியம்னு தோணுது.''

''என்ன இன்னிக்கு தத்துவம் மழையாக் கொட்டுது.'

''நீ சின்ன விஷயத்துக்கு அழுதவுடன் பக்குன்னு ஆயிடுச்சு. அடடே இதுவரைக்கும் இவளுக்கு இதைச் சொல்லியே தரலையேன்னு பட்டுது. ஏன் புவனா...என் கம்பெனி பத்தி எதுனா உன்கிட்ட புலம்பியிருக்கேனா... எந்தப் பிரச்சினையாவது வீட்ல காட்டியிருக்கேனா? ஏன் காட்டறதில்லை? தேவையில்லை. உன்கிட்ட சொல்லி எதுவும் ஆகப்போறதில்லை.''

''அப்ப...நேரம் நல்லா இருந்தா எவனும் பெரிய ஆளாயிடலாம்ன்றீங்க.''

''துடப்பக்குச்சி நிக்கும். சத்தை சருகு சட்டம் பேசும். குப்பைக் காகிதம் கோடீஸ்வரன்னு ஆடும். அப்ப ஒன்னு தெரிஞ்சுக்கணும்மா...நல்ல நேரம் வர்றபோது உள்ள ஒரு நிமிஷம் பழச யோசிக்கணும். ஒவ்வொரு வருஷமும் கூழ் ஊத்தற போது ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வரும்.

''பன்னெண்டு மணிக்கு சாப்பிட்டுட்டு கரி வண்டி துடைச்சுட்டிருக்கேன். ரயில்வே கேட்டாண்ட கூழ் ஊத்தறாங்கன்னு பேசிக்கிட்டு போனாங்க. வண்டி விட்டுட்டு டிபன் பாக்ஸ் எடுத்துகிட்டு ஓடினேன். கூட்டம் கலைஞ்சு போச்சு. கூழ் இல்லைன்னுட்டாங்க.

'அடச்சே போ'ன்னு ஆயிடுச்சு. ஒரு ஆள் என்னான்னு கேட்டான்.

''நெருப்புல வேலை செஞ்சு உட்கார்ற இடமெல்லாம் கட்டி. கேவுரு கூழ் நல்லதாச்சேன்னு வந்தேன். எல்லாம் ஊத்தியாச்சாம்னு வருத்தமா சொன்னேன். அவன் பக்கத்துல சொம்பு திறந்து என் டிபன் பாக்ஸ் வழிய, வழிய ஊத்தினான். 'ஏங்க, உங்களுக்கு வேணாமா'ன்னேன். 'எனக்கு குளுமை ஆவாது ஒரு லோட்டா குடிச்சாலே ராவுக்கு தும்மல் ஆரம்பிச்சுடும். நீ குடி'ன்னு போயிட்டான், கூவம் ஆத்துல படகு ஓட்டறவன். அப்ப படகு போவும் நிறைய. இப்ப இல்லை. புதையல் கிடைச்ச மாதிரி ஆச்சு. ஆறு பேர் பங்கு போட்டு சாப்புட்டோம். அதுக்கப்புறம் கட்டியே வர்றதில்லை எனக்கு. எதுக்கு சொல்றேன்...உனக்குக் கிடைக்கணும் கறதுதான் உனக்குக் கிடைக்கும் அது பொறந்த அன்னிக்கே எழுதி வச்சாச்சு.''

''யப்பா...வாரியார் கணக்கா பேசறீங்க.''

''அத்தினி ஞானம் வந்துருமா...ஏதோ எனக்குத் தெரிஞ்சது, அழுவாத புவனா. எதுக்கும் கலங்கக் கூடாது கஷ்டமா...மனசுல கவலையா...உள்ள கைகூப்பி ஒரு நிமிஷம் பேசு நோவுதுப்பா...தாங்கலை.'கரையேத்தி விட்ரு சாமி'ன்னு ஒரு நிமிஷம் பேசு. அப்புறம் தலைய நிலுப்பிக்கினு மேற்கொண்டு என்னன்னு யோசி.''

''கதையா இருக்குதே...சேட்டு வீட்டுக்குப் போய் அவர் பொண்ணை குசலம் விசாரிக்கிற மாதிரி விசாரிச்சு, சும்மா இந்தப் பக்கம் வந்தோம்னு கதை வுட்டு, அவங்க போன்லயே அவங்கப்பாக்கூட பேசி...நீங்க வர்றதைச் சொல்லி...கில்லாடியா இத்தனை வேலை என்னையும் கூட்டிக்கிட்டு செஞ்சுட்டு உள்ள ஒரு நிமிஷம் பேசற தாமே...''

'அட, அறிவு கெட்டவளே...நீ போன நேரம் அவளுக்கு நெசமாவே வலி வந்திருந்தா உன்னை எவன் சீந்தியிருப்பான் அங்க. அவ போன் போட்ட நேரம் சேட் இருந்தாரு...இல்லேன்னா பேசியிருக்க முடியுமா...விட்டது கல்லு, விழுந்தது மாங்கா. மாங்கா விழுந்தா நான் அடிச்சேன்றது, கல்லு விழுந்தா கடவுள் செயல்னுவியா... இத்தினி காபந்தா போறோம். போற வேலை முடியும்னு என்ன நிச்சயம்? சேட்டு மறந்துபோய் வேற இடம் போயிட்டா...''

''வேணாம்பா...போய் நல்ல மாதிரி வாங்க.''

''அதான் கடவுள் விதி...எதுனா ஒருபேர் சொல்லு. அது மேல பாரத்தைப் போட்டு பதட்டமில்லாத போ. உள்ள நுழைஞ்சவுடன் கரி எங்கக் கிடைக்கும்னா பேச முடியும்? ஆயிரம் விஷயம் பேசிட்டு வரட்டுமான்னு எழுந்திருக்கச் சொல்ல, 'என்ன...வந்தே போறே என்ன விஷயம்'னு சேட்டு கேட்பாரு, அப்ப சொல்லணும்...கரி இல்லை, அல்லாடறேன்'னு. செய்தா செய்ததோட சரி... செய்யலையா...அதுவும் சரி.''

''என்னால முடியாதுப்பா உன்னை மாதிரி இருக்க.''

''சௌகரியம் பழகிட்ட. நீ கேட்டு நான் இல்லேன்னு சொன்னதில்லை. என்னடா கேட்கறமே, புருஷன் இதுக்கு என்ன கஷ்டப்படுவானோன்னு நீயும் நினைச்சதில்லை.''

''அப்படி கஷ்டப்படறாப்பல என்னப்பா கேட்டுட்டேன்?''

''தாயே, கஷ்டப்படணும்னு நீ கேட்டதில்லை. பெரியவ கல்யாணம் முடிஞ்ச சாயந்திரம் ஒரு ஆயிரம் ரூபாய்க்கு அல்லாடினம். ஞாபகம் இருக்கா...பொண்ணுக்கு மொய் எழுதின காசு இருக்குன்னு ஓடின. சம்பந்தி அம்மா அந்தக் காசெல்லாம் எங்களுதுதாங்

கிறா. வாசலுக்கு ஓடியாந்து அந்தம்மா தர மாட்டேங்கறாங்கன்னு சொல்றதுக்குள்ள கண்ல தண்ணி முட்டுது உனக்கு. இந்த சேட்டு கார்ல இருக்காரு. நான் கதவு சாத்தறேன். சட்டுன்னு நிமிர்ந்து நீ அழறதைப் பார்த்துட்டான். போ இதோ வரேன்னு உன்னை அனுப்பிட்டு கைகூப்பினேன். ஒரே ஒரு வார்த்தைதான் கேட்டாரு சேட்.

''அம்பதாயிரம் போதுமா?''

''ஆயிரம் ரூபாய்க்கு அல்லாடினம். அஞ்சு நிமிஷம் முன்னாடி அம்பதாயிரம் வேணுமான்னா சேட்டை நான் கும்புடுவேனா. தெய்வத்தைக் கும்பிடுவேனா... சேட்டு கிளம்பற நேரம் சரியாக வந்து வாசல்ல அழுத உன்னைக் கும்பிடுவேனா... ஆடிப்போச்சு உடம்பு. முன்னாடி உட்கார்ந்த ஆள் கிட்ட ஏதோ இந்தில சொல்லி இறங்குடான்னாரு. வண்டி கதவு தானே சாத்திக்கிட்டு போயிட்டாரு. ஒன்னும் புரியலை. பதினைஞ்சு நிமிஷத்துல அம்பதாயிரம் உங்ககிட்ட கொடுக்கச் சொல்லியிருக்காரு எங்கயும் போயிடாதீங்க. இங்கேயே இருங்கன்னு கார்லேர்ந்து இறங்கின ஆள் ஆட்டோ பிடிச்சு போனான். அந்த பதினைஞ்ச நிமிஷத்துக்குள்ள புருஷன் வேட்டில, சரிகை இல்லைன்னு கோச்சுக்கிட்டா எங்கக்கா. மாப்பிள்ளைக்கு ரயில் செலவு நாம தரணும்னு சத்தம் போட்டா. சம்பந்தி அம்மா, மறு வீடு போறதுக்கு கூட ரெண்டு கார் வேணும்னு ஆள் அனுப்பினாங்க சமையல் ஐயரு சக்கரை கடலை மாவு கேட்டாரு. லைட் ஆளு எட்டு டியூப் லைட் உடைஞ்சு போச்சுன்னான். ஆயிரம் ரூபா இல்ல கைல. எல்லாத்துக்கும் தலைய ஆட்டிக்கிட்டு மரம் மாதிரி நின்னேன். அம்பதாயிரம் ரூபா, கட்டுக்கட்டா நூறு ரூபா கட்டு பாங்க் ஸீல் போட்ட கட்டு, எவர்சில்வர் தூக்குல கொண்டாந்தான், சமையல் ஐயரு தூக்கு பார்த்துட்டு பாலான்னு கேட்டாரு.

''ஆமா வயித்துல ஊத்தின பாலுன்னு உள்ள வந்தேன்.''

அதிசயத்துடன் கட்டிலில் உட்கார்ந்திருந்த மனைவி தலையைக் கோதினான்.

''கணக்கா... கையெழுத்தா... சாட்சியா எதுவும் இல்லை. ஒரு வெறுப்புல பத்து சரிகை வேட்டி வாங்கிட்டு வரச்சொல்லி சமையல் ஐயர் வரைக்கும் கொடுத்தேன். நாலு கார் வரவழைச்சேன். ஒரு காருக்கு இரண்டு பேரா போனாங்க.''

''இன்னம் அந்தத் தூக்கு நம்மகிட்டதான் இருக்குது.''

''அப்புறம் அம்பது ரூபா கொடுத்தட்டீங்களா, திருப்பி.''

''இப்ப கேளுடி என் ராசாத்தி.'' வழித்து நெட்டி முறித்தான். ''ரெண்டு வருஷத்துல கொஞ்சம் கொஞ்சமா அடைச்சேன். இப்ப புள்ளைதாச்சியா இருக்கே இந்தப் பொண்ணுகிட்டதான் கொடுத்தேன். கடைசி தடவை கேட்டதும் எண்ணிப் பார்த்துட்டு இத்தோட முடிஞ்சு போச்சுன்னு பட்டுன்னு சொல்லுச்சு. அப்பதான் புரிஞ்சுது கணக்கு அது மனசுல இருக்கு நோட்டுல இல்லைன்னு. எப்படிம்மா கரெக்டா சொல்றேன்னு கேட்டேன், கூட ஒத்த ரூபா வாங்கிடக் கூடாதாம். அதனால எப்பவும் கணக்கு மனசுல இருக்குமாம்.''

''பார்த்தா சாதாரண பொம்பளை மாதிரிதான் இருக்கு. என்ன கெட்டி துட்டுல?''

''பயம், பக்தின்னு அதுக்குதான் பேர். இன்னொருத்தர் துட்டு நமக்கு வேணாங்கற பயம். நம்ம காசு நம்மகிட்ட தங்கணுமேங்கறது பக்தி. அவங்க அந்த அம்பது ரூபாயை தானமாகவும் தரலை. வட்டி

எங்கன்னும் கேட்கலை. என் காசு என்கிட்ட வரணும்னு இருந்தாங்க. அதான் மரியாதை.''

''பேசாத எனக்கும் எதுனா சொல்லிக் கொடுத்து உங்க கூட பார்ட்னரா சேர்த்துக்கங்க.''

''பார்ட்னரா... பிஸினஸ்லயா... வேணாம்டி கண்ணு படுக்கைல பார்ட்னரா இரு அது போதும் எனக்கு...'' புருஷன் தவழ்ந்து வந்து நெஞ்சில் முட்டினான்.

''ஏன்...என்னால ஆவாதா...''

''ஏன் ஆவாது? ஒரு நேரம் வந்தா நீயும் பட்டறைக்கு வந்துதான் ஆவணும்.''

''நாளைக்கு நான் பட்டறைக்கு போகட்டா...சும்மா ஒரு ரவுண்டு.''

''வேணாம் இப்ப நம்ம பட்டறைக்கு வா.'' சேலையைப் பிடித்து இழுத்தான்.

''ஒரு பெண்ணைக் கட்டிக் குடுத்தாச்சு. இன்னொன்னு கல்யாணத்தைப்பத்தி கனா காணுது. இவருக்கு இன்னும் ஆட்டம் கேட்குது...''

''நாளைக்கு பாம்பேல இருப்பேன். வாடா கண்ணு.''

புவனா அவன் இழுத்த இழுப்புக்கு வளைந்தாள்... என்னவோ அவளுக்கு சந்தோஷமாகவும் இருந்தது. கவலையாகவும் இருந்தது.

6

திடுக்கிட்டு கண் விழித்தபோது பதினோரு மணி. எப்போது தூங்கினோம்? எத்தனை மணி நேரமும் தூங்கினோம்?

''வா... வா'' என்று இந்த மனுஷன் இழுத்தபோது எங்கோ டி.வி. நியூஸ் முடிகிற சப்தம் கேட்டது. மணி பத்தா? ஒருமணி நேரத்துக்குள் ஒரு தூக்கம், அதில் கனவு வேறா...என்ன கனவு? மறந்துவிட்டது.

நெஞ்சு குறுக்கே போட்டிருந்த அவன் கையை மெல்ல விலக்கி தலையணை மேல் வைத்து விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். இடுப்பு வலித்தது. இருட்டில் கட்டிலில் தடவி ரவிக்கையை போட்டுக் கொண்டாள்.

''ஊருக்குப் போவதற்கு முன் ஒரு ஆட்டம். வந்த பிறகு ஒரு ஆட்டம். ஏனோ இந்த நாற்பது வயதுக்குப் பிறகு இந்த மனிதனுக்கு இப்படி பேராசையாய் பெண்டாட்டி தேவைப்படுகிறது. எம் மேல் ஆசையில் லையா என்று கொஞ்சுகிற புத்தி வந்துவிட்டது.

உள்ளே இத்தனைக் கவலைகளை வைத்துக் கொண்டு எப்படித்தான் இது தேவைப்படுகிறதோ தெரியவில்லை. ஒருவேளை கவலைகள் தாக்கி தூங்கமுடியாமல் போய் விடுமோ என்கிற கவலையில் இப்படித் தேடுகிறதா? மெல்ல மெல்ல எனக்கு மட்டும் இந்த ஆசை விட்டுப் போய்விட்டது ஏன்? வயசான குறையா? மனசு கவலையா இன்னும் ஒன்று கட்டிக் கொடுத்து நிமிர வேண்டுமே என்கிற பொறுப்பா?

சரி...புருஷன் என்றுதான் ஈடுபட முடிகிறதே தவிர பத்து வருடங்கள் முன்பிருந்த ஈடுபாடு அறவே இல்லை.

கல்யாணமான புதுசில் புருஷனைப் பார்த்து விட்டாலே ஒரு படபடப்பு வந்துவிடும். தனிக் குடித்தனம் போட்டு பகல் சோறுக்கு அவனை வரச் சொல்லி வற்புறுத்தி பன்னிரண்டே கால் மணிக்கு மோட்டார் சைக்கிளில் பசியோடு இறங்குகிறவனுக்குக் கலம் நிறைய சோறு போட்டு, குழம்பு ஊற்றி அவன்

அள்ளி அள்ளித் தின்கிறபோது கூட ஒரு வார்த்தை சொல்லி கொஞ்ச மாட்டானா என்று இருக்கும்.

மூத்தவள் பிறந்ததும் உடம்பில் ஒரு பூச்சு தடிமன் ஏறிக்கொண்டது. இந்த வீடு அஸ்திவாரம் போட்டு தினமும் வேலை நடப்பதை வந்து பார்த்து, இரவு பிளான் பிரித்து கட்டிலில் உட்கார்ந்து கொள்வார்கள். இதை இப்படி மாத்தலாமா? அது எவ்வளவு செலவு? இதுல எத்தினை மிச்சம்? காசு பார்க்காத இந்த வசதி வச்சுக்கிட்டா என்ன? அப்பா சொத்துப் பிரிச்சு காசாய் கொடு என்று கேட்டு வாங்கி ஒண்ணே முக்கால் லட்சம் செக் அவள் வாங்கிக் கொடுத்தாள்.

''உன் காசு புவனா இது.''

''நம்ம காசு வீட்ல போட்டுருங்க.''

வாசல் நுனியிலிருந்து கொல்லை விளிம்பு வரை மொசைக் போட்டு இழைத்தான்.

என் காசு என் ஜாக்கிரதைக்கு என்று ஒற்றைப் பைசாகூட எடுத்துக் கொள்ளாத மனைவியிடம் பல விதமாய் நன்றி பாராட்டினான். வளர்கிறோம் என்கிற நம்பிக்கையும், புருஷன் காட்டின அன்பும், கொடுத்த சுதந்திரமும் வெட்கமும் அழித்தன. ஒரு குழந்தை பெற்று சுகமான உடம்பு புருஷனின் அணைப்பில் வித்தை காட்டிற்று.

காமம் மனசு பொறுத்த விஷயம். காசு நடமாட்ட மும், கணவனின் ஆதரவும், கனவுகள் கூடி வருகிற நம்பிக்கையும், மனசுக்குள் குதியலை வரவழைக்க உடம்பு தானாய் வெளிப்படுத்திற்று.

இரண்டாவது பிள்ளைப் பேறுக்கு இன்னும் இணக்க மாய் இருந்தான். எது போட்டாலும் சாப்பிட்டான்.

என்ன வேணும், என்ன வேணும் என்று கேட்டு உதவிகள் செய்தான்.

பள்ளிக்குப் போகிற குழந்தையும், படுத்துகிற இரண்டாவதும் ஏற்பட்டபோது வேலைகளின் அழுத்தத்தால் தூங்கினால் போதும் என்று நேர்ந்துவிட்டது.

அந்த நேரம்தான் ஆட்டம் குறைந்து பண்டிகை மாதிரி...கிருத்திகை அமாவாசை மாதிரி எப்போதாவது ஒரு முறை என்று ஒரு நியதி இல்லாத ஒரு நியதி தந்தது. இன்னமும் குண்டானது அந்தத் தூக்கம் கொடுத்த சுகத்தில்தான்.

அவனும் காசுக்கு அலைந்து, தன் யோக்கியதையை விட அதிக வேலை ஒப்புக்கொண்டு அயர்ந்து களைத்து வீடு திரும்பி தூங்கக் கற்றுக்கொண்டான்.

ஆனால் மறுபடி இப்போது ஒரு வருடமாய் ஆட்டம் அதிகமாகிவிட்டது. வராது போனால் முகம் தூக்குவதும். சிடுசிடுத்துச் சண்டையிடுவதும், வெளியே சுள்ளென்று விழுவதும்...

''எதுக்குப்பா இப்படி சுள்ளு புள்ளுன்னு விழற?''

''ஏன், நீ மட்டும் ஒழுங்கா?''

''என்னா...என்ன செய்துட்டேன்?''

''தோள் தொட்டா...ச்சு போங்கன்னு தள்ளி விடறியே...எப்படி இருக்கும் எனக்கு?''

''எனக்கு முடியலை.''

''போ...ஒழி எங்கனா சனியனே''

''இதுக்கா இத்தினி கோவம்? உலுக்கி எழுப்பறது தானே?''

''ஆமா...நூறு தடவையா எழுப்புவான் ஒரு ஆம்பிளை, மானங்கெட்டு?''

''இதுல மானங்கெட்டுப் போறதுக்கு என்ன இருக்கு?''

''ஏன், நீயா வரக்கூடாதா?''

''சரி, வரேன் போறுமா?''

வந்து அருகே அமர்ந்த மறுநாள் ஏகமாய் கொஞ்சல்...கனிவு...உன்னை மாதிரி உண்டா என்கிற பாராட்டு.

'ஒவ்வொரு வயசுக்கு ஒவ்வொரு மூர்க்கம். உனக்கு இப்ப இப்படி சரி...ஆடு' என்று மனசுக்குள் பேசிக் கொண்டாள்.

கண்ணாடி முன் அமர்ந்து முகம் முழுவதும் கோல்ட் க்ரீம் தடவிக் கொண்டாள்.

''இதைப் போட்டுக்கிட்டு என்கிட்ட வராதே... புளிச்ச தயிறு வாசனை அடிக்குது எம்பேர்லியே...''

''இது உசத்தி க்ரீமப்பா.''

''இதெல்லாம் உனக்கு எதுக்கு?''

''ஏன்...வயசாவுதே...தோல் சுருக்கம் விழுந்துருதே... சொர சொரப்பா இல்லாம சாஃப்ட்டா இருக்கும் இது தடவினா.''

''அப்ப எனக்கும் கொஞ்சம் தடவு.''

மல்லாத்தி முகம் முழுவதும் மேல் நோக்கி க்ரீம் தடவ, ''இது போட்டுத்தான் ஒரு நிறமா ஆயிட்டியா? என்கிட்ட சொல்லியிருக்கப்படாது... தினமும் நான் போட்டுக்குவனே.''

மறுநாள் வேண்டாமென்று சொல்லி விட்டான். தூசு முகத்தில் ஒட்டிக்கொள்வதுபோல் பிரமையாய் இருக்கிறதாம்.

''இதெல்லாம் வீட்டோட இருக்கிறவங்களுக்குதான் லாயக்கு. எனக்கு வேணாம் இந்த மாதிரி. வேறு எதுனா வேணுமா சொல்லு? ஃபாரின் குட்ஸ் ஒரு இடத்துல கிடைக்கும். வாங்கிட்டு வரேன்''

பம்பாயில ஏதாவது கிடைக்குமா? வாங்கி வரச் சொல்லலாமா? ஏகமான அலங்கார சாமான்கள் கிடைக்குமாம். கேட்போமா? நேரம் இருக்குமா தேடி வாங்க?

எதுக்கு? இங்கு கிடைக்கறது போதும். போய் கரி வாங்கி வரட்டும். பட்டறை மூடாது ஒழுங்காய் வேலை நடக்கட்டும்.

ஐந்து மணிக்கு அலாரம் வைத்துவிட்டு அவனுக்கு அருகே வந்து படுத்துக் கொண்டாள்.

புவனாவைச் சேர்த்து மூன்று பெண்கள். அக்காவோ, தங்கையோ இத்தனை சுகப்படவில்லை. அக்காவின் புருஷன் அரசுப்பணியில் இருக்கிறான். ஏதோ இருநூறு லஞ்சம் வாங்கினான் என்று ஊர் விட்டு ஊர் மாற்றி, ஊர் மாற்றின இடத்தில் வேறு எவளோ தொடர்பு ஏற்பட்டு, அக்கா குழந்தைகளோடு அங்கே ஓடி, என்னை குடிசை வீட்டில் வைத்தாலும் பரவாயில்லை. உன்னை விட்டுப் போக மாட்டேன்' என்று கூவி சண்டையிட்டு, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு நாடகமாய், கேட்கிறபோது அயர்ச்சியும், கவலையும் மண்டும்.

தங்கை தேவலாம். ஆனால் வாழ்க்கைப்பட்ட இடம் பெரிய குடும்பம். எத்தனை கொண்டுவந்து கொட்டினாலும், போதாத குடும்பம். வீட்டோடு இரண்டு மாப்பிள்ளைகளும், நாலு மைத்துனர்களும், அவர்களின் மனைவிகளும், குழந்தைகளும் நாற்பது உருப்படி தேறும். மூன்று படி பொறி வாங்கினால்தான் ஆளுக்கு ஒரு கை வரும். எத்தனை 'ஓவர் டைம்' காசு வந்தாலும் காய்கறி வகைக்கே காணாது போகும்.

தனியே குடித்தனம் போடு என்று சொன்னதற்கு அவளைக் கொண்டு வந்து பிறந்த வீட்டில் விட்டு விட்டான். அவளும் ஒரு வருடம் இருந்து பார்த்து, அவன் அசையாது போகவே, விதியே என்று போய் குடித்தனம் நடத்துகிறாள்.

எப்பவாவது வருவார்கள். ரேழியில் ஊஞ்சலும், படுக்கையறையின் குளிரும், மேசையில் சாப்பாடும், அம் பாஸிடர் காரும் பெரிய அதிசயமாய் பார்ப்பார்கள்.

கார் நிறுத்திய இடத்தில் சேறாய் இருந்தது. 'கொஞ்சம் இரு புவனா' என்று அவள் கதவு திறந்ததும் சேறில் கல்போட்டு. கால் வைக்கச் சொல்லி கைலாகு கொடுத்து இறக்கிவிட்டது பற்றி வெகுநாள் பேசிற்று.

''மச்சினன் கல்யாணம். இரண்டு செயின் கொடேன். போட்டுட்டு போயிட்டு வந்து கொடுத்துடறேன்'' என்று அக்கா கேட்க, புவனா 'முடியாது' என்று மறுத்து விட்டாள்.

''என் வீட்டுக்காரர் திட்டுவாரு'' என்று சொல்லி விட்டாள்.

அவனுக்கு அழைப்பு வந்து அவன் திருமணம் போக ''நாங்க என்ன அப்படி வேண்டாத ஆளாவா போயிட்டோம்.'' என்று அக்கா தனியே அழ, ''நகை தானுங்களே? வாங்கிக்கலாமே'' என்று சிவப்பிரசாசம் சொல்லி விட்டு வர, மறுபடி வந்து நின்ற அக்காவை அடித்துத் துரத்தாத குறையாய் வெளியே அனுப்பினாள்.

''நகைக் கடனா...என்கிட்ட கேட்டே...இல்லேன்னுட்டேன் இல்ல. அப்புறம் அவர்கிட்ட எதுக்குப்போற? அவரைக் கைக்குள்ள போட்டுக்கிட்டு காரியம் சாதிச்சிக்கலாம்னு பாக்கறியா? அதெல்லாம் என்கிட்ட நடக்காது.''

முறிந்தே போயிற்று.

''இன்னிக்கு எட்டி உதைக்கிறே. இப்ப வந்த வாழ்வு தானடி வரும். உனக்கும் இறக்கம் வரும். இப்படியே இருந்துடுவோம்னு நினைக்காத. அன்னிக்கு நீ அக்காவை தேடிக்கிட்டு வரல...நான் ஒருத்தனுக்குப் பொண்டாட்டி இல்ல...'' என்று சொல்லி விட்டுப் போனாள்.

திடீர் என்று இது நினைவுக்கு வரும்போது வயிறு கலங்கும்.

புவனாவின் தங்கைக்கு அக்காவைத் துரத்தியதில் ரொம்ப சந்தோஷம்.

''நாங்களே அம்பதுக்கும் நூற்றுக்கும் அல்லாடிக்கிட்டிருக்கோம். அங்கே வந்து இரண்டுநாள் தங்கறேன்னா எத்தனை கஷ்டமா இருக்குது தெரியுமா? நாற்பது பேர் இருக்கற வீடு. யாராவது ஒருத்தர் எதுனா பேசிட்டா எனக்குத்தானே அவமானம். எல்லாரும் நல்ல மாதிரி. யாரும் ஒன்னும் சொல்ல மாட்டாங்கன்னு இவளா வந்து சாப்பாட்டுக்கு உட்கார்றா... சொல்லாத வரைக்கும் சேமம். சொல்லிட்டா...மத்தவங்க கஷ்டம் புரியவே மாட்டேன்னுது.''

மூன்று பெண்களுக்குப் பிறகு பிறந்த தம்பிக்கு சிவப்பிரகாசமே வேலை வாங்கிக் கொடுத்தான். பி. காம் படித்து முடித்ததும் மோட்டார் கம்பெனியில் கிளார்க்காக வேலை போட்டு இப்போது நிரந்தரமும் ஆகி விட்டது.

யார் சொல்லிக் கொடுத்தார்களோ... எப்போது சொல்லிக் கொடுத்தார்களோ...காசில் மகா கெட்டி. கொரட்டூரில் நிலம் வாங்கி, எங்கோ கடன் வாங்கி வாடகைக்கு விட்டிருக்கிறது. சிவப்பிரகாசம் மோட்டார் சைக்கிள் விற்கப்போவது அறிந்து வந்து குறைத்தடித்து

நாலாயிரம் ரூபாய் காசாய் கொடுத்துவிட்டு வண்டி எடுத்துப் போயிற்று.

ஒரு உதவி என்று கூப்பிட்டால் வருவான், நாலு இடம் போகச் சொன்னால் அலுக்காது போவான். காபிக்கு, பெட்ரோலுக்கு என்று கறாராய் காசு கேட்டு வாங்கிக் கொள்வான்.

'இப்படி எல்லாத்துக்கும் காசு கேட்டு வாங்கிக் கிறானே...இது என்னா உதவி?' புவனா ஆச்சரியப் படுவாள்.

'உபத்திரவம் இல்லையே அதுவரை பெரிசு' என்று நினைத்துக் கொள்வாள்.

இத்தனைக்கு நடுவே இங்கே பங்களாவும் வீடுமாய் நிற்கிறது இவள் மட்டும்தான். இதுவும் உறுதியான நினைப்பல்ல. பட்டறை பெரிசு பண்ணி லாபம் வந்து 'என்னுதில்லை' என்று நாலைந்து லட்சம் எங்கியாவது போட்டு வைக்க வேண்டும். எடுக்கவே கூடாது என்று குட்டி போட விடவேண்டும். சரிவும், ஏற்றமுமாய் இருக்கிற வியாபாரம் வெளியே கார் ஏறிப் போகையில் தெரியாது. உள்ளுக்குள் நடக்கிற சூதாட்டம் எவருக்கும் புரியாது. 'கடவுளே' என்று இந்தமுறை பம்பாய் சேட்டு மனசு வைத்து கரி அனுப்பி, ஆர்டர் வந்து, வந்த ஆர்டர்கள் சரிவர நிறைவேறி, அதற்குக் காசு வந்து ஒரு வருடம் தடதடவென்று தடங்கல் இல்லாது ஓடினால் கொஞ்சம் இளைப்பாறலாம்.

கொஞ்சம் கொஞ்சமாவது சேர்த்து ஐந்து வருடங்கள் பொறுத்து, இரண்டாவது பெண் கல்யாணம் நடத்தலாம்.

இந்த சனியன் எனக்குப் பிடிச்சவனைக் கட்டிக்கு வேன் என்று அதிகப் பிரசங்கித்தனம் பேசுகிறது. இவரும் புரியாமல் அதைத் தட்டிக் கொடுக்கிறார்,

விளையாட்டாய் பேசுகிற எதுவும் வினையாகும் வயசு இது என்று தெரியாமல் தூண்டுகிறார்.

நாளைக் காலைல சிவப்பிரகாசம் ஊருக்குப் போனதும் இதை இழுத்து வைத்து தலை பின்னி, கெட்டுப் போய் சந்தி சிரித்த நாலு பேர் கதை சொல்ல வேண்டும் இவளுக்கு. தாய், தகப்பன் பேச்சுக் கேட்காத அலைஞ்சது எல்லாம் எப்படி என்ன கதிக்குப் போச்சு என்று பிட்டு வைக்க வேண்டும். எதுனா கெட்ட கனா மனசுல இருந்தா உதறிடு புவனா... நல்லவளுக்கு நல்லவ. கெட்டவளுக்கு கெட்டவ. சிலும்பல் காட்டறதா தெரிஞ்சது வரிவரியா இழுத்துருவேன் என்று பயமுறுத்தி வைக்க வேண்டும்.

அதை மட்டும் குற்றம் சொல்லி புண்ணியமில்லை. ஊரே கெட்டுக் கிடக்கிறது. பள்ளிகூட யூனிஃபார்ம் என்று பதினான்கு வயசுக்கு கவுன் போட்டுப் போகிறது. கச்சலாக இருந்தால் பரவாயில்லை. திமிசுக் கட்டை யாட்டம் இருக்கிறது சும்மா ஒரு மாதிரிக்குக் கூட வீட்டில் பாவாடை தாவணி இல்லை, சூடிதார். மிடி, மேக்ஸி, பேண்ட்டு...அது இது வீட்டோட போட்டுக் கொள்ளப் பர வாயில்லை. இதுதான் வெளிய போகவும் என்றால்எத்தனை கோரம்? இறுக்கிப் பின்ன விடவே விடாது. நெத்திவிளங்கப் பொட்டு வைக்காது. கொசு மாதிரி ஒரு பொட்டு விழி நிறைய ஐலைனர்—யாரோ தோழியின் பிறந்த நாள் விழா வுக்குப் போய்விட்டு ஏகமான மேக்கப்புடன் வீட்டுக்கு வந்தபேது அடையாளமே தெரியவில்லை.

''என்னடி இது?'' என்று அதிசயித்தபோது, இடுப்பு வளைத்து, உடம்பு குலுங்கி இங்கிலீஷில் பேசி நடந்து காட்டிற்று '' ஏண்டி இதோடவா வெளில வந்த?''

''என்...வந்தா என்ன? மேக்கப் போட்டு வூட்டுக் குள்ள அடைஞ்சிருக்கணுமா? நாலு பேர் கண்ணுக்கு நல்லா இருக்கணும்னுதான் போட்டுக்கறது...''

''நீ படிக்கிற பொண்ணா தெரியலை. கூத்தாடற பொம்பளை மாதிரி எதுக்குடி இதெல்லாம்.''

''சரியான மஞ்சக் கிழங்கும்மா நீ. படிக்கிற பொண் ணுங்க இப்படித்தான் இருக்கும். படிக்கிற பொண் ணுன்னு இல்ல. இப்ப எல்லாரும் இந்த மாதிரி மேக்கப் போட்டுக்கறாங்க.'' தலையை சிலுப்பிக் கொண்டு அறைக்குள் போய்விட்டது. காபி கொண்டு போய் கதவு திறக்கையில் பொய் நகங்களை விரலில் ஒட்டிக்கொண்டு நூறு விதமாய் நிலைக் கண்ணாடி எதிரே நிற்கிற பெண் பார்த்து கவலை வந்தது.

வயசு என்று தள்ளவும் முடியலை. இப்படியே வளரட்டும் என்று கொள்ளவும் முடியவில்லை.

காலேஜ் படிப்பு முடித்து எவன் கையிலாவது பிடித்துக் கொடுக்கிறவரை வயிற்றுக் கலக்கல் குறையாது. ஐந்து வருடம்—நல்லபடியாய் ஐந்து வருடம் முடிந்து விட 'அப்பாடா' என்று புருஷனோடு ஊர் ஊராய் அலை யலாம் நீ உழைத்தது போதும் குறைத்துக்கொள் என்று சும்மா இருக்கலாம்.

ஆனால் இதுவரை ஜெயித்தது யாரால் என்று தெரிய வில்லை. 'நேரம் புவனா'. என்கிறானே புருஷன் அந்த நேரம்தான் காரணமா? புரியவில்லை.

பூர்வஜென்ம புண்ணியமா? கடவுள் அருளா? மிச்சமும் தாண்டுவமா?

புவனாவுக்குக் கண் செருகி தூக்கம் வந்தது. அலாரம் அடிக்க, திடுக்கிட்டு எழுந்தாள். அவன் புரண்டு படுத்தான்.

சட்டென்று கடிகாரம் நிறுத்திவிட்டு உடைகள் சரிசெய்து கொண்டாள்.

அவன் நெற்றி தடவி எழுப்பினாள்.

''யப்பா...பாம்பே போணுமே...எழுந்துரு. குளிச் சுட்டு கிளம்ப வேணாமா? ஏழு மணிக்கு ஏர்போர்ட்ல இருக்கணும்னிங்களே...''

''மணி என்ன?''

''அஞ்சு மணி.''

''ஒரு பத்து நிமிஷம் தூங்கறேன்.''

''டைம் ஆயிடும்பா.''

''இல்லை. கொஞ்சம் வுடு.''

புரண்டு இவளுக்காய் படுத்து இடுப்பு கட்டிக் கொண்டான்.

இழையலாம். தூங்கு தூங்கு என்று சுகப்படுத்தலாம்.

வெறியாகிவிடும். தொட்டுத்தடவ, மனசு கிளர்ந்து விடும். அப்புறம் பாம்பே போன மாதிரிதான்.

தடவிக்கொடுக்க, ஆசை வந்தது. அடக்கிக் கொண்டு பேசாது உட்கார்ந்திருந்தாள்.

ஐந்து நிமிடம் கழித்து மெல்ல உலுக்கினாள்.

அவன் மல்லாக்கப் புரண்டு சட்டென்று எழுந்து உட் கார்ந்து கொண்டான்.

அடுத்த அரைமணியில் ஏக அமர்க்களம் செய்தான்.

குளித்து பூஜை முடித்து உடுத்திக்கொண்டு டிபன் வேண்டாமென்று சொல்லி காபி மட்டும் குடித்து ஆட்டோ வுக்கு ஆள் அனுப்பினான். ஆறு நாற்பது. ஆட்டோ வரவில்லை.

''புவனா, வா வண்டில போயிடலாம்.'' காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

புவனாவுக்கு பக்கென்றது. ஏர்போர்ட்டிலிருந்து வண்டி அவள் ஓட்டி வரவேண்டும். கடவுளே, மாட்டே னென்றால் கத்துவான். புவனா குழப்பமாய் வண்டியில் உட்கார்ந்தாள். வண்டி பேயாய் பறந்தது.

7

''மஞ்சக்கோடு தாண்டி போறீங்களே...''

''இன்னிக்கு அவசரத்துக்கு அதெல்லாம் பார்த்தா முடியாது'' நீண்ட அவசர ஹாரனோடு கார்களையும், பஸ்களையும், லாரிகளையும், இரண்டு சக்கரங்களையும் கடந்தது. அவன் கையும் காலும் துரித கதியில் தாளம் தப்பாமல் இயங்கின. எப்போது கிளட்ச் அழுத்துகிறான், எப்போது கியர் மாற்றுகிறான், எப்போது ஆக்ஸிலேட் டர் மாற்றுகிறான் என்று கண்டே பிடிக்க முடியவில்லை.

புவனாவுக்கு கார் ஓட்ட சிவப்பிரகாசமே கற்றுத் தந்தான்.

''தெரிஞ்சுக்க புவனா...ஒரு அவசரப் போதுக்கு உதவும். இல்லைன்னா தலைவிதி. வீட்ல கார் இருக்கு துல்ல...கத்துக்க.'' பயிற்சி லைசன்ஸ் எடுத்து சிகப்பு 'எல்' போர்டு போட்டு இரண்டு நாட்கள் கடற்கரைச் சாலையில் ஓட்டக் கற்றுக் கொடுத்து, பிறகு பெரியார் சாலை வழியாக பூந்தமல்லி போய் நாலைந்து நாட்கள் ஓட்டினாள். பிறகு ஓட்ட வாய்ப்பு இல்லாது போயிற்று. கற்று இரண்டு மாதம் பிறகு ஒரு மாப்பிள்ளை அவள் வண்டி ஓட்டுவதைப் பார்க்க விரும்பி வற்புறுத்த,

வாசலுக்கு வந்து திரும்பியதும் மண் லாரி மீது முட்டினாள்.

''வெளியே வந்தவுடனே லாரி பார்த்தேல்ல... சட்டுன்னு பிரேக் போட வேண்டியதுதானே...? இறக்கி மெள்ள போய் டொங்குன்னு முட்டறியே.''

''ப்ரேக் போட்டேங்க.''

''ஏன், வண்டி நிக்கலையா?''

''தெரு இறக்கம் மாமா. பிரேக் போட்டு நிறுத்தினாங்க. லாரி கிட்ட வந்தவுடனே பயத்துல கால் எடுத்தாங்களா...நின்ன வண்டி சரிவுல நகர்ந்து முட்டிக்கிச்சு!''

லாரிக்கு சேதமில்லை. இடதுபக்க விளக்கும் ஸிக்னல் லைட்டும், பானட் மூடியும் அடிபட்டு விட்டன.

''நல்ல வேளை...லாரி. இந்த இடி சைக்கிள் ரிக்ஷால இடிச்சா?'' பெண் கேட்டாள்.

''மூஞ்சி பேந்துருக்கும். பத்தாயிரம் ரூபா நஷ்ட ஈடு வழக்கு நடக்கும்.''

''பத்தாயிரமா!'' புவனா நடுங்கினாள். பிறகு வண்டியே எடுக்கவில்லை.

''பத்தரைக்கு ஏர்போர்ட்டு. பதினோருமணிக்கு சேட் வீடு, பார்த்துட்டா நேரே ஹார்பர் போலாம். தாணா போய் கரி பார்க்கலாம். இரண்டு நாள் அசராத சுத்தணும், என்ன உம்முன்னு வர்ற?''

''சீக்கிரமா எழுந்து ஆட்டோ புடிச்சு போறதை விட்டுட்டு, என்னிய வண்டி எடுத்துக்கிட்டு வீட்டுக்கு போன்றீங்களே.''

''ஓட்டிப் பாரு. இல்லேன்னா வண்டிய ஏர்போர்ட்ல பூட்டிட்டு, ஆட்டோ புடிச்சு வந்துடு. கம்பெனிக்கு போன் பண்ணா இஞ்சினியர், ஃபோர்மன் யாராச்சும் எடுத்துக்கிட்டு வருவாங்க.''

''இதுக்குன்னா அவங்க ஏர்போர்ட் போவணும்?''

''வேற வழி? நீ இந்த பயம் பயப்படறே வண்டி ஓட்ட ஓட்டினாதான பயம் போவும். திரும்பச்செல்ல அவ்வளவு டிராஃபிக் இருக்காது. மொள்ள போ, வேற ஆள் இல்லை ஒரு லட்சரூபா வண்டி, நாமதான் எடுத்துக்கிட்டுப்போக ணும்னுகவலையோட வண்டிஎடு கிண்டிவரைக்கும் தடுமாறும் அப்புறம் என்னியமாதிரியே ஓட்டவந்துடும் நனையற வரைக்கும்தான் குளிரு. இறங்கி ஒருமுங்கு முங்கிட்டா உன் உடம்பு சூடே உன்னை மறுபடி மறுபடி குளிக்க வைக்கும்.

''அது வழியில்லைன்றப்ப. தேவையில்லாத சோதனைல இறங்கணுமா?''

''தேவையில்லாத யாரும் சோதனைல இறங்க மாட்டாங்க புவனா தேவைதான் சோதனை. சோதனைன்னு இறங்கிட்ட பிறகு ஐயோன்னு கூவாத எப்படியாவது ஜெயிக்கணும் பாரு.''

''இப்ப மாட்டிவுடற மாதிரில்ல வண்டிய வீட்டுக்குக் கொண்டு போடின்றீங்க.''

''போடி...எப்படின்னா செய், உனக்கு ஒரு காரியத்துலயும் துப்புக் கிடையாது.''

''ஏம்ப்பா...போகச் சொல்ல திட்டறீங்க?''

''பின்ன என்ன, லேட்டாச்சா, ஏர்போர்ட்டுக்கு நான் கொண்டு போய் விடறேன்னு தைரியமா நின்னா நல்லா இருக்காதா? வீட்ல வண்டி வச்சுக்கிட்டு ஆட்டோ தேடணுமா? உனக்கு போறலை புவனா.''

''சந்து வீட்ல, ஒண்டுக் குடித்தனத்துல தாய்பாஸ் ஆடிக்கிட்டு, மீன் குழம்புக்கு மசாலா அரைச்சுக்கிட்டு

இருந்ததை விட்டு மேலே வரணும்னு உனக்குத் தோணவே யில்லை.''

''போன் வந்து எத்தினி நாள் ஆச்சு...? ஒரு ஹலோ ஒழுங்கா சொல்றியா? 'அலோ ஓவ்...ஆருங்க பேசற து'ன்னு வேலைக்காரி மாதிரி பேசற. ஏன் உனக்கு போன் தேவையில்லைன்னு நினைக்கிற எனக்கு யார் போன் பண்றாங்கன்னு ஒதுங்கற. நம்ம கம்பெனிக்கு நீ பாட்னர். எதுனா தெரியுமா உனக்கு? இது தப்பு புவனா.''

''எனக்கு கெட்ட பழக்கம் இல்லை. கேவல புத்தி இல்லை. ஒடுது...இருந்திருந்தா...''

''அதுக்கேத்த மாதிரி நான் நின்னு வரவு செலவு செய்திருப்பேன். நீங்க செய்யறதாலதான் நான் செய் யலை.''

''அதானே? இப்ப கார் திருப்பி ஓட்டிட்டுப் போக ஆள் இல்லை. நான் பாம்பே போறேன், நீ வீட்டுக்குப் வண்டி எடுத்திட்டு போக வேண்டியதுதானே...? ஐயோன்னு ஏன் கூவற? ஆட்டோல வந்திருக்கலாம்னு ஏன் நினைக்கிறே?''

''சரி, வண்டி எடுத்துக்கிட்டு போறேன். போகச் சொல்ல திட்டாதீங்க.''

''நான் திட்டவேயில்லை கொஞ்சம் திசை மாறினா லும் ஐயோன்னு நெஞ்சுல கைவச்சு கூவறியே''

''ஆமா எடுத்து செய்தாலும் பாராட்டி பதக்கம் கொடுத்துருவீங்களா? இப்படி ஏண்டி செஞ்சே... அப்படி ஏண்டி செஞ்சே இவன் கூட என்னடி பேச்சு, அவன் கூட என்னடி பேச்சுன்னு...

''செருப்பாலே அடிப்பேன் நாயே... என்னிக்குடி சொல்லியிருக்கேன் அந்த மாதிரி?

''பேசினா சொல்வீங்க.''

''அப்படி அர்த்தம் எடுத்துக்காத, எனக்கும் தெரியும்னு நிக்கணும். புருஷன் என்ன செய்யறான்னு பார்க்கணும். நீ எழுதற கணக்கு நான் எழுத முடியாதா? கத்துக் கொடுன்னு கேட்கணும்.''

''இதெல்லாம் நாப்பது வயசுக்குவந்து வக்கணையா பேசறீங்க. என் பதினெட்டு வயசுல தட்டிக் கொடுத் திருந்தா நல்லா இருந்திருக்கும்.''

''நீ வரலை புவனா, யோசிச்சுப்பாரு. ஒரு தரம் கார் இடிச்சவுடனே எனக்கெதுக்கு சனியன்னு விட்டுட்டே.''

''சரி விடுங்களேன் நான் ஒன்னுத்துக்கும் புண்ணிய மில்லாதவ.''

''அப்படி சொல்லலை. நீ இல்லாதயா ஒரு பொண்ணு கட்டிக்கொடுத்து, வீடு எழுப்பி நிமிர்ந்து நின்னு...இன்னும் வரணும் புவனா. நான் இருக்கேன்னு தைரியமா முன்னால வரணும்.''

புவனா நகம் கடித்தாள்.

'வெறும் மனைவியாகத்தான் இருந்திருக்கிறோம். அவன் முதலாளியாகவும் இரு என்கிறான். முடியுமா இது? தேவைதானா இந்த வயதில்? இத்தனை நாள் இல்லாமல் இன்று என்ன இந்த கரிசனம்? இனிமேல் உன் அழகில் யாரும் மயங்கி வழியமாட்டார்கள். உனக்கு வயதாகிவிட்டது என்பதாலா? இன்னும் அதிகம் காசு பார்க்கிற ஆசையா? நானே அலையறேனே எல்லாத்துக்கும் என்கிற அலுப்பா? இதெல்லாம் விட்டு எங்கேயாவது புத்திசாலி பொம்பளை ஆட்சி பண்ணுகிற அட்டகாசம் பாத்துவிட்டு என் பொண்டாட்டியையும் இப்படி மாத்தணும் என்கிற ஆவேசமா?''

''என்ன பேச்சு காணாம்.''

''வண்டி கொண்டு போயிடறேன்.''

''குட், இது பேச்சு.''

''திடீர்னு எனக்கு எதுக்கு சோதனை வைக்கறீங் கன்னுதான் புரியலை.''

''ஒரு சோதனையும் இல்லை. எனக்கு வயசாவுது. நாப்பத்தி அஞ்சு. பட்டுன்னு ஒருநாள் நெஞ்சு அடைச்சு போயிட்ட ஐயோன்னு நின்னுடக்கூடாது பாரு.''

''ச்சீ. என்னா பேச்சு இது. நாப்பத்தி அஞ்சு ஒரு வயசா?''

'இல்லை. ஆனா என் வேலை. அடுப்பு புகைல இருக்கற வேலை. நெஞ்சு முழுக்க நிலக்கரிப் புகை. தூசு. முன்ன மாதிரி தெம்பு இல்லை. குறைவுதான். இப்பம் உன்னிய ட்ரெயின் பண்ண ஆரம்பிச்சா, அஞ்சு வருஷத்துல பக்கா முதலாளியா செய்துடலாமேன்னு இழுக்கறேன்.'

''கவலைப்படாத போங்க. இப்போதைக்கு காரை பத்திரமா கொண்டு போறேன்.''

''நடுவுல ஒரு தடவை பட்டறைக்குப்போய் பாரு.''

''சரி.''

''சேட்டு நம்பர் கம்பெனில இருக்கும். ஒரு எஸ்.டி.டி போடு. என்னை விசாரி.''

''எதுக்கு?''

''சும்மா இருந்தா பேசறேனே.''

''வேற...?''

''கரி லோடு எத்தினி கைல இருக்குன்னு பார்த்து வச்சுக்க, இன்டென்ட் போடு. கடன் கேளு.''

''அப்புறம்?''

''வண்டிய வாட்டர் வாஷ் பண்ணி க்ரீஸ் போடச் சொல்லு. வரத்துக்கு முன்னாடி போன் பண்றேன். வண்டி எடுத்துட்டு ஸ்டேஷனுக்கு வா.''

''எனக்கு ஒரு பயம்.''

''என்ன...?''

''எதுனா தப்பா பண்ணினா கத்துவீங்களே.''

''சரி. கத்தலை. சொல்றேன், இது இப்படி செய்யணும், அது அப்படி செய்யணும்னு. சரியா? உள்ள வா புலனா.''

வண்டியை ஏர்போட்டில் நிறுத்தி இறங்கினான். அவள் கதவு பூட்டி சாவி எடுத்துப் புருஷனைப் பின் தொடர்ந்தாள். ஏர்போர்ட் வாசலில் நின்று வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா என்று யோசித்தான்.

''ஒன்றுமில்லை. வரட்டுமா? ஜாக்கிரதையா போ. பயப்படாதே, நான் இருக்கேன்.''

அவன் கை நீட்டினான். அவள் தன் கை நீட்டி குலுக் கினாள். கொஞ்சம் வெட்கமாய் இருந்தது. யாரையோ வழியனுப்புவதுபோல் இருந்தது.

அவன் கதவு திறந்து கவுண்டர் நோக்கி போனான். வரிசையில் நின்று திரும்பி கையசைத்தான். அவளும் பதிலுக்குக் கையசைத்துவிட்டு வண்டி நோக்கி நடந் தாள்.

சாவி போட்டு கதவு திறந்தாள். டிரைவர் சீட்டில் உட்கார்ந்தாள். ஸ்டியரிங் தொட்டு கும்பிட்டாள். கிளட்ச் அழுத்தியபடி சாவி போட்டு ஸ்டார்ட் செய் தாள். ஸ்டியரிங் வலுவாய் பிடித்துக்கொண்டு திரும்ப வேண்டிய இடம் பார்த்தாள், கியர் மாற்றினாள். கிளட்ச்

மெல்ல தளரவிட்டு ஆக்ஸிலேட்டர் அழுத்தினாள். வண்டி நகர, ஸ்டியரிங் திருப்பினாள். செகண்ட் கியர் கிளட்ச் அழுத்தி மாற்றி, மறுபடி ஆக்ஸிலேட்டர் தொட்டாள். வண்டி பூவாய் ஓடி வெளி கேட்டுக்கு வந்தது: கிளட்ச் ப்ரேக் அழுத்தி டோக்கன் திருப்பிக் கொடுத்தாள். ஏர் போர்ட் விட்டு வெளியே வந்து இடதுபக்கம் திருப்பினாள். தார் சாலையில் இறங்கினாள். மூன்று நாலு என்று கியர் மாற்றினாள். முன்னால் போகும் பல்லவனைத் தொடர்ந்தாள்.

பரங்கிமலை நோக்கி வண்டி போயிற்று. ஸ்டியரிங் அசைத்து அதன் வீச்சு சோதித்துக் கொண்டாள். பல்லவன் பஸ் வேகம் குறைய, மெதுவாக ஆக்ஸிலேட்டரிலிருந்து கால் எடுத்து மூன்றாவது கியருக்கு மாற்றினாள். மறுபடி கொஞ்சம் வேகம் கொடுத்தாள். பல்லவன் ஒதுங்க, விலகி தாண்டினாள்.

பயம் ஒன்றுமில்லை. போய் விடலாம் என்று நினைத்தாள்.

கிண்டி நேரு சிலையைச் சுற்றிக்கொண்டு தொழிற் பேட்டை நோக்கிப் போனாள். பின்னால் லாரி அவசரப் படுத்தினான். இடது பக்கம் ஸ்கூட்டர் போயிற்று. ''இருடா சொய்ங்...சொய்ங்னு''

ஸ்கூட்டரை வேகமாய் முந்தி இடது பக்கம் விலக, லாரி தாண்டிப் போயிற்று. கிண்டி ஸ்டேஷன் எதிரே ஆட்கள் அலைவது தெரிந்தது. மறுபடி வேகம் குறைந்து கவனமாய் தாண்டினாள். ஸ்கூட்டர்காரன் வலமாய் கடந்தான்.

''திடீர்னு ஸ்பீடா வர...திடீர்னு மெள்ள போற. கத்துக்கறியா என்பதாய் பார்த்தான்.

பாலம் ஏறி இறங்குவது சுகமாய் இருந்தது. மஞ்சள் கோட்டுக்கு இரண்டடி விலகியே கடந்தாள். அகலமான ரோடு உற்சாகம் தந்தது. விரைவாக்கினாள்.

சைதாப்பேட்டை நோக்கிப் போனாள். பாலம் ஏறினாள். பட்டையான பாலம். தடக் தடக் என்று பத் தடிக்கு ஒரு முறை தூக்கிப் போட்டது. வலதுபுறம் திரும்ப, போலீஸ் கைகாட்டி பாதசாரிகளை அனுமதித் தது. மூன்றாவது கியரில் ப்ரேக் போட்டு அழுத்திக் கொண்டு நின்றாள். கையெடுக்க தளர விட்டாள். மூன்றாவது கியரில் இழுவை இல்லை. தடதடவென்று வண்டி கிளம்பியது. டீசல் வண்டி மாதிரி மெல்ல நகர்ந்தது. 'போ' என்று போலீஸ் அதட்ட, இரண்டா வது கியருக்கு மாற்றி இழுவைத்திறன் அதிகப்படுத்தி ஆக்ஸிலேட்டரில் கால் வைக்க சீறிக் கிளம்பிற்று.

சைதாப்பேட்டை முழுக்க ஜனங்கள் எல்லா திசையி லிருந்தும் சாலையைத் தாண்டினார்கள். சற்றே இடது ஒதுங்க, எல்லா கார்களும் கடந்தன.

மாம்பலம் ரோடுக்கு இடது பக்கமாய் திரும்பினாள். ரோடு குறுகலாயிற்று. எல்லா தெருக்களிலிருந்தும் வண்டி கள் அவசரமாய் பெரிய சாலையில் ஏறின.

முன்னால் ஒரு லாரி கிடைச்சா நல்லாயிருக்கும். பின் னாடியே பூமாதிரி போயிடலாம் என்று தோன்றியது.

மாம்பலம் ரவுண்டானாவில் டயர் உரசிற்று. திரும்பி நேராக மிகுந்த கவனம் செலுத்த வேண்டியிருந்தது. நல்லி கடை பக்கமிருந்து ஒரு லாரி வடக்கு உஸ்மான் ரோடில் திரும்ப, அதற்குக் காத்திருந்து பின்னாலேயே போனாள்.

ஆனால் லாரி ஓட்டுகிறவன் பைத்தியக்காரன் போலிருக்கிறது. முன்னால் போகிற பஸ்ஸை மஞ்சள் கோடு தாண்டி வலது தெரு முழுவதும் அடைத்து கடந் தான். பேய் மாதிரி வண்டி ஓட்டிக் கொண்டு போனான். அவன் வேகம் போக முடியாது. ஸ்டாப்பிங்கில்

நிற்கும் பஸ்ஸுக்குப் பின்னால் நிறுத்திக் கொண்டாள். இனி அது கிளம்பாமல் கிளம்ப முடியாது. பஸ் 'அடி போடி' என்பதுபோல அசையாது நின்றது. ஹாரன் அடித்தாள்.

பஸ் கிளம்பியது. தாண்டி விடலாம் என்று பாதி பஸ் தாண்டும் போது எந்த முன்னறிவிப்புமில்லாமல் வலது பக்கம் திரும்பியது, படேர் என்று மோதிவிடும் என்கிற பயத்தில் அழுத்தி ப்ரேக் போட்டாள். அரை அடி இடைவெளியில் திரும்பியது. இடது பக்கமாய் பின்னால் வந்த டெம்போ கடந்தது.

மகா பாவிங்க. மத்தவங்களை சாகடிக்கிறதுக்கே வண்டி ஓட்டறாங்க.

ஆனா நான் ஓட்டினதும் தப்பு. நாலு ரோடு வரப்ப எப்படி முந்தறது. பார்த்துப் போவணும்.

நுங்கம்பாக்கம் வழியாய் சேத்துப்பேட்டை பாலம் ஏறி ஈகா தியேட்டர் உள்ள சரிவில் நின்றபோது அசந்து மறந்து கால் எடுத்தாலும் வண்டி நகர்ந்து முன்னேறியது.

குறுகலான தெருக்களில் இரண்டாவது கியரிலேயே போய் வீட்டு வாசலுக்கு வந்தாள். ஹாரன் அழுத்தினாள்.

வேலைக்காரி ஓடி வந்து கதவு திறக்க, வேகம் அதிகப் படுத்தி மேடு ஏறி, வலப்புறம் திரும்பி போர்டிகோவில் வண்டி நிறுத்தினாள்.

''அம்மாவ். பாஸ்கரன் வரேன்னிருக்கான். வண்டிய முன்னாடியே எடுத்துடேன்.''

வண்டி இஞ்சினை அணைக்காது மெல்ல முன்னே செலுத்தினாள்.

''போதுமா?'' என்று பின்னே திரும்பி ப்ரேக்கிலிருந்து கால் எடுக்காது கேட்டாள்.

ஏதோ சொன்னது கேட்டது புரியவில்லை.

''என்ன?'' எட்டிப் பார்த்தான்.

உடம்பு திரும்பி எட்டிப் பார்த்ததில் ப்ரேக் ஓரம் அழுத்திய செருப்பு நகர்ந்து ஆக்ஸிலேட்டரில் சட்டென்று விழுந்தது. வண்டி எகிறி முன்னே ஓடிற்று.

'ஐயோ' என்று நேராகி ப்ரேக்கில் கால் வைப்பதற்குள் போர்டிகோவின் கோடியில் இருந்த துளசி மாடத்தில் நச்சென்று வண்டி முட்டிற்று. துளசி மாடம் நின்று அப்படியே எதிர்புறம் சரிந்தது.

அடியில் இருந்த லட்சோப லட்சம் எறும்புகள் நாலா பக்கமும் ஓடின.

''அடக்கடவுளே துளசி மாடத்தைக் கவுத்திட்டியே''

வேலைக்காரி கூவ, புவனாவின் மனசுக்குள் பயமும் வேதனையும் படர்ந்தன.

8

எல்லா மோல்டுக்கும் உருக்கின இரும்பைக் கொட்டி மிஞ்சின கடைசியை அடுப்புக்கு அருகேயே சாய்த்து விடுவதுபோல இந்திய ஜனங்களில் ஒரு பகுதியைக் கடவுள் பம்பாயில் கவிழ்த்து விட்டார் என்றுதான் தோன்றிற்று.

ஏர்போர்ட்டில் இறங்கி நெடுஞ்சாலையில் விரைந்து ஊருக்குள் நுழைய இரண்டு பக்க நடை பாதைகளிலும் அடைத்துக் கொண்டு ஜனங்கள் போவதைப் பார்க்கும்

போது வியப்பு மண்டுகிறது. இத்தனை ஜனங்களுக்கும் வேலை இருக்கிறது. சாலை குறுக்கே ஜனங்கள் கடக்க டாக்ஸியை நிறுத்தியபோது எதிரும் புதிருமாய் ஊர்வலம் போகிற மாதிரி ஜனக்கூட்டம் கடந்தது.

வெள்ளை பைஜாமாவும் முழுக்கை வெள்ளைச் சட்டையும் ஒரு தொப்பியும் மெல்லிய மீசையுமாய் நிறைய ஆண்கள் நடந்து போனார்கள். எல்லாத்துக்கும் இந்த பைஜாமா...ஆபீசுக்குப் போனாலும் சரி...சினிமாவுக்குப் போனாலும் சரி, வெள்ளையில் ஒரு நாடா பைஜாமா. 'என்ன ஜனங்கடா நீங்க' என்கிற அதிசயம் வந்தது.

தெரு ஓரம் சில பைஜாமாக்கள் உட்கார்ந்திருந்தன. உள்ளங்கையில் புகையிலைத் தூள் போட்டு சுண்ணாம்பு கலந்து அரக்கி அரக்கி, மடித்துத் தட்டி பொக்கென்று வாயில் போட்டுக் கொண்டன. இடது பக்கம் ஓடும் மின் வண்டியில் பெண்கள் கூட கதவு இல்லாத வாசலில் தொற்றிக் கொண்டு நின்றபடி பயணம் செய்தார்கள்.

சர்ச் கேட் அருகே மங்களூர்க்காரர்கள் நடத்தும் ஹோட்டல் இருக்கிறது. மார்டன் ஹிண்டு ஹோட்டல் என்று பெயர். பழைய கட்டிடம். இடது பக்கம் பெரிய மைதானம். தெரிந்த ஆளுக்கு மட்டும்தான் ஹோட்டலில் ரூம் தருவார்கள்.

சில சமயம் தனி ரூம் கிடைக்கும். சில சமயம் கட்டில்கள் மட்டும்தான். ஒரு ரூமில் நான்கு கட்டில்கள் போடப்பட்டிருக்கும். கட்டிலுக்கு இத்தனை என்று வாடகை. இரண்டு நாள் தங்கலுக்கு மூன்று நட்சத்திர ஹோட்டலில் உட்கார்ந்து இரண்டாயிரம் மூவாயிரம் செலவழிப்பதற்கு நானூறு ரூபாய்—உணவு உறைவிடம் சகலமும் அடங்கிவிடும். நல்ல தென்னிந்திய உணவு.

திருட்டு பயம் கிடையாது. உள்ளே சீட்டு ஆட, குடிக்க விடமாட்டார்கள். மீறி முயற்சித்தால் 'வெளியே போ' என்று பெட்டியை எடுத்து வாசலில் வைத்துவிடுவார்கள்.

வந்த வேலை முடிந்து ஒழுங்காய் இருந்து விட்டால் ராஜ மரியாதை. ஒரு பைசா, ஒரு ஜட்டி, ஒரு டவல் காணாமல் போகாது.

தென்னிந்தியாவில் வியாபாரிகள் அநேகமாய் பம்பாய் தங்குமிடம் மார்டன் ஹிண்டு ஹோட்டல், ரூம் கிடைக்குமா... இல்லை, கட்டில் தானா... 'பைய வச்சிட்டுப் போ... ராத்திரி கட்டில் தரேன்' என்று சொல்வானா... மனசு உழப்பலாய் இருந்தது, தங்குமிடம் சரியாய் அமைந்துவிட்டால் நாலு நாள் இருந்து சேட் பார்த்துவிட்டுப் போகலாம்.

இரண்டு பக்கமும் போகன்வில்லா பூத்துக் குலுங்கின. ஹோட்டலில் வாசலுக்குப் போய் இரண்டு மாடியேறி ரிசப்ஷனில் பெட்டியை வைத்தபோது வெள்ளை பனியனில் இருந்த மங்களூர்க்காரர் 'வாங்க' என்றார்.

''சேட் ரூம் போட நேத்தே சொல்லிட்டாரு. மேல கடைசி ரூம் இருபத்தியெட்டு.''

திக்கென்று சந்தோஷமும், நிம்மதியும் நெஞ்சில் மோதின. மோதின நேரத்திலேயே ஏன் என்று கேள்வி வந்தது.

ரூம் போடுகிற அளவு சேட் மரியாதை செய்ததும் இல்லை. கேட்டதும் கிடையாது. தட்டுப்பாடுக்குத் தயங்காது உதவுகிற குணம்தான் கைகட்டி நிற்க வைத்திருக்கிறதே தவிர நட்பு தோழமை அன்பு, பாசம் இதெல்லாம் எதிர்பார்க்க முடியாது. டீ கொடுப்பது. சாப்பிட்டு விட்டு போ என்பதோ அந்த ஆள் சந்தோஷமாக இருக்கிறான் என்று காட்டுமே தவிர, கரை கடந்த நேசம் என்று எடுத்துக் கொள்ள முடியாது.

அவர்கள் பனியாக்கள். காசுதான் பாஷை. பத்து பைசா ஏமாற்றினால் பெற்ற பிள்ளையைக் கூட 'ச்சீபோ' என்பார்கள். வட்டியோடு கடனைத் திருப்பி விட்டு நன்றி சொன்னால் 'நல்லா இருக்கியா' என்று கேட்பார்கள்.

சேட் முகத்தில் சிரிப்பு வராது. கோபம் பொங்காது. அன்பு மிளிராது. ஆத்திரம் கிடையாது. ஒரு முறை ஆறு லட்ச ரூபாய் கடனுக்கு மஞ்சள் கடுதாசி வந்தது. எதிரே இருந்த நாலு பேரிடம் காண்பித்துவிட்டு கசக்கிக் குப்பைத் தொட்டியில போட்டு மேற்கொண்டு பேச ஆரம்பித்தது இன்னமும் நினைவு இருக்கிறது.

''ஆள் அனுப்பி இருக்கறதை வாரிக்கிட்டு வரச் சொல்லிடேன். ஆறு லட்ச ரூபாயாச்சே.'' ஒரு நாடார் தாங்காமல் பேசினார்.

''வியாபாரத்துல நான் செத்துட்டேன். எனக்கு வக்கில்லைன்னு மஞ்சக்கடுதாசி குடுத்துருக்கான். செத்துப் போனவன் கட்டை விரலைக் கொண்ணாந்து நான் என்ன செய்ய...''

''ஒரு படபடப்பே இல்லையே உன்கிட்ட.''

''வியாபாரத்துல இது எனக்கும் வரும், உனக்கும் வரும்.''

''துட்டு ஒட்டுதல் இல்லாத பழகிட்டேன்றியா'' நாடார் துருவினார்.

''அப்படியில்லை நெருப்பொட்டியாரே, ஆறு ரூபா காணம்ன்றபோது அடுத்தபடி உனக்குக் கடன் கொடுக்கற போது இன்னும் கவனம் வரும்.''

''பார்த்தீரா, எவனோ பேமானி கடுதாசி விட்டதுக்கு எனக்கு இல்லைன்ன போற...''

''மாட்டேன். எது வச்சு துட்டு கேக்கற... எத்தினி... எப்படி திருப்புவே... என்னிக்குன்னு கூட நாலு கேப்பேன்.''

''பன்னெண்டு டன் நெருப்புப் பொட்டிப்பா... வாசல்ல நிக்குது. சும்மாவா கேட்டேன்.''

''வித்துடு எனக்கு... ஏன் அடமானம் வெக்கற.''

''இல்ல சேட்டு... மார்க்கெட்ல இது நிறைய ரொம்பி போச்சுது. போவாது, சரக்கு எடுக்கமாட்டேன் னுட்டான்... அதான்.''

''அது என் கவலை'' பெட்டி பதினைந்து பைசா கணக்கு போட்டு காசு கொடுத்து நாடார் போனதும் போன் எடுத்து அகமதாபாத் பேசி, பொட்டி இருபது பைசா... அதே வண்டி கிளம்பி விட்டது.

''சரி... அகமதாபாத்ல விக்கலை.'' சிவப்பிரகாசம் வியக்க, ஆந்திராவில விப்பேன்... டெல்லில விப்பேன். சண்டிகார் அனுப்புவேன்.''

நெட் வொர்க் சுய ஜாதி ஆட்களிடம் ஏதோ விற்று ஏதோ வாங்கி பணத்தை பண்டமாக்கி, பண்டத்தை பணமாக்கி திண்டும், டெலிபோனும் மூளையும்தான் முதல். ஏழு டெலிபோன் இருக்கிற வீடு பம்பாயில் அது மட்டும்தான் இருக்கும்.

அறைக்குப் போய் முகத்தை அலம்பிக்கொண்டு திருநீறு இட்டு வேறு சட்டை வேட்டி உடுத்தி அவர் பெண் கொடுத்த ரிஜிலிடர்களை கையில் எடுத்துக் கொண்டு ரிசப்சனுக்கு மறுபடி சிவப்பிரகாசம் வர ஓல்லியாய் ஒரு வடக்கத்தி ஆள் எழுந்து நின்றான்.

''சேட் கூட்டிவரச் சொன்னார்'' என்றான்,

''எதுக்குப்பா...''

''தெரியாது.''

வாசலில் ஃபியட் கார் நின்றிருந்தது. கதவு திறக்க, சிவப்பிரகாசம் ஏறி உட்கார்ந்தான். வண்டி கொலாபா நோக்கி ஓடிற்று.

வெள்ளை வெளேர் என்று வீடு. தெரு ஓட்டின வாசற்படி. ஹாலுக்குள் நுழைந்து மாடியேற இன்னொரு ஹால்.

சேட் பனியனும் வேட்டியுமாய் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்க. அருகே போய் மெத்தையில் உட்கார்ந்து சிவப்பிரகாசம் வணக்கம் சொன்னான்.

''அரை மணி கழித்துப் பேசுகிறேன்.'' டெலிபோனில் பேச்சை துண்டித்து விட்டு சிவப்பிரகாசம் நோக்கி கை நீட்டினான்.

''ரிஜிஸ்டர் கொண்டாந்துட்டீங்களா?''

''ஆமாங்க. பொண்ணு கொடுத்து விட்டுருச்சு...''

''தப்பு சிவப்பிரகாசம் இதெல்லாம் உன்கிட்ட கொடுக்கக் கூடாது. ஆளா இல்லை... வழில மடக்கி கேட்டிருந்தா உனக்கில்ல கஷ்டம் வரும்.''

''ஏங்க... இரண்டாவது புஸ்தகமா:''

''நம்ம கிட்ட ஏது முதல் புஸ்தகம்? எல்லாம் இரண்டாவது மூணாவது நாலாவதுதான். அப்படி எதுனா தப்பாயிட்டா நான்தான் எடுத்தாரச் சொன்னேன்றதுக்கு என் பேர்ல ஹோட்டல் ரூம் போட்டேன். இது என் வேலைன்னு தெரியட்டும்ன்றதுக்கு. டீ சாப்பிடறியா.''

''சாப்பிடறேன் சேட்டு.''

''சாப்பிட்டு சட்டுனு போயிடு.''

''ஏன்...''

''நிலைமை சரியில்லை. கவர்மென்ட் நாலு மூலையும் ஓட்டை போட்டு ஆள் தேடுது இன்னும் நாலு வருஷத்துக்கு எலக்ஷன் இல்லை. அதனால சட்டம் போடறாங்க''

''என்னிய என்னா செய்ய முடியும்? நான் அன்னக் காவடி.''

''அப்படியில்லை. வர்றவன், போறவனையெல்லாம் கேக்கறாங்க. அதான்...''

''எனக்குக் காரியம் ஆவணும்னு வந்தேன்.''

''என்ன... கரியா?''

''நிறைய வேணும் சேட்டு.''

''எத்தினி''

''பத்துப் பதினைந்து டன்.''

''ராத்திரி ஏத்திடலாம். டீ சாப்பிட்டு போ.''

''ஹார்பர்ல பக்கெட்டு நாலைஞ்சு க்ளியர் ஆகலை''

''நம்ம ஜெ கிட்ட போ. இந்தா கார்ட் கொடு. பின்னால் ஒரு சிகப்புப் பென்சில் கோடு கிழித்து கொடுத்தான்.

''பாப்பாவே பார்த்துட்டு வந்தேன், நல்லா இருக்கு. எங்க வீட்ல கை வைத்தியம் எல்லாம் பாப்பாவுக்கு சொல்லிக் கொடுத்துட்டு வந்தாங்க.''

''அவ புருஷன்தான் ஒரே குழப்படி பண்றான். பாதி விலைக்கு வருதுன்னு எல்லாத்தியும் வாங்கிப் போட்டுட்டு விக்க முடியாம திண்டாடறான்.''

''என்ன சேட்டு...''

''எல்லாம்தான். விக்க முடிஞ்சத வாங்கணும்... விபரம் புரியாத...டீ சாப்பிட்டியா...''

டீ குடித்து விட்டு எழுந்திருக்க, சேட் சந்தோஷி மாதா உருவம் பொதித்த தங்க டாலர் பிளாஸ்டிக் டப்பாவில் வைத்து நீட்டினான். ''வீட்ல அவர்களுக்குக் கொடு. குழந்தை பொறந்ததும் போய் பார்க்கச் சொல்லு''

''ரொம்ப சந்தோஷங்க.''

''எப்படி போற...''

''ப்ளேன்ல வந்தேன். லாரி லோடாயிருச்சுன்னா ட்ரெயின்ல போவேன்.''

''ஆயிடும்.''

''ரொம்ப நன்றி சேட்டு. எனக்குக் கண்கண்ட தெய்வம் மாதிரி...''

''இல்ல நாம வியாபாரிங்க. நாம ஒருத்தருக் கொருத்தர் அனுசரிச்சுப் போவணும். கரிக்கு எப்ப துட்டு தருவ...?

''டிராப்டு வச்சுருக்கேன் பத்து டன்னுக்கு.''

''கிடைக்கிறது வாங்கிக்க. போய் செக் அனுப்பு. நேர கரி பார்க்கத்தானே போற.''

''ஆமா சேட்டு.''

''சரி''

போன் ஒலிக்க, மறுபடி ஹிந்தியில் அதட்டல் ஆரம்பித்தது. அவ்வளவுதான். இங்கே வந்த வேலை முடிந்துவிட்டது. வெளியே வந்து டாக்ஸி பிடித்து தானாவுக்குப் போய், அங்குள்ள பெரிய காஸ்டிங் கம்பெனியில் உள்ளே நுழைய, பதினைந்து நிமிடத்தில் டிராப்ட் வாங்கிக் கொண்டு உபரியான தூளான கழிக்கப்பட்ட கரி என்று டெலிவரி செலான் கொடுத் தார். லாரி கம்பெனிக்கு போன் பண்ணி வண்டி

அனுப்பக் கேட்டார்கள். அரைமணியில் லாரி வந்தது. டிரைவரை விரைவாய் வரச்சொல்லி இருநூறு முன் பணம் கொடுத்துவிட்டு டாக்ஸியில் ஹார்பர் நோக்கிப்போனான். பச்சை கேட் எதிரே க்ளியரிங் ஏஜண்ட் போய் பேப்பர் காட்டியதும் ஒரே ஆளை ஹார்பருக்கு அனுப்பினார்கள். 'சாப்பிட்டு வா' என்றார்கள்.

ஹார்பர் எதிரே பரோட்டா பாயா சாப்பிட்டு, டீ குடித்து க்ளியரிங் ஏஜென்ஸி வாசலில் பல் குத்திக் கொண் டிருக்க, ஒரு டெம்போவில் நாலு இரும்பு பக்கெட்டுகளும் வெளியே வந்தன.

ஒரு மணி நேரத்தில் ஏதோ லாரிக் கடையில் இறங்கி ரசீது கொடுத்தார்கள். எல்லா செலவுக்கும் செக் எழுதித் தர, 'சேட் போன் பண்ண வேண்டியதில்லை. நீங்களே நேர வாருங்கள் சகலமும் முடித்துத் தருகிறேன்'' என்றார்கள்.

மாலை ஐந்தே முக்காலுக்கு சகலமும் முடிந்து விட்டது.

சேட் ஏதேனும் ஒரு சந்தோஷத்தில் செய்து விட் டானா...இல்லை. தானாய் அமைந்ததா...அறைக்குப் போய் குளித்து ஒரு சினிமா பார்க்கலாம். காலைல போய் டிரெயின் டிக்கெட் கிடைக்குமான்னு முயற்சி பண்ண லாம். ஐம்பது, அறுபது கொடுத்தால் டிக்கெட் தாதரில் கிடைக்கும். ஆள் தெரியும்.

அறைக்குப் போய் குளித்துவிட்டு மைதானம் பார்த்துக் கொண்டே தலை துவட்ட, போன் என்று சொன்னார்கள்.

''மெட்ராஸ் காலா?''

''தெரியலை உங்க பேர் கேட்டாங்க.''

''ஹலோ, சிவப்பிரகாசம்.''

''சாயந்திரம் வண்டில டிக்கெட் இருக்கு. போறியா சிவப்பிரகாசம்.'' சேட் குரல் கேட்டது.

''போறேங்க...''

''எதுனா வேலை பாக்கி இருக்கா?''

''இல்லிங்க எல்லாம் முடிஞ்சிருச்சு. நீங்க போன் போட்டு சொன்னீங்களாம்.''

''நம்ம ஆள் ஒருத்தன் டிக்கெட் போட்டான். இப்ப போகலை. நீ போறதானா...''

''கிளம்பிடறேங்க.''

''வீட்டுக்கு எதுனா வாங்கணுமா?''

''எல்லாம்தான் மெட்ராஸ்லயே கிடைக்குதே''

''அப்ப தாதருக்கு வந்துடு. ராத்திரி பத்து மணிக்கு வண்டி'' போன் துண்டிக்கப்பட்டது. வெறும் கையோடு வீட்டுக்கு போக வேண்டாம் என்று மடமடவென்று தெருவுக்கு இறங்கி வண்டி பிடித்து விசேஷமான பால்கோவா வாங்கி பெண்ணுக்குக் காது வளையம் கை வளையல்கள் வாங்கி ஹோட்டலுக்கு வந்து சாப்பிட்டு விட்டு காசு செட்டில் பண்ணி ஒன்பது மணிக்கு ஸ்டேஷனில் காத்திருந்தான்.

ஒன்பதே முக்கால் வரைக்கும் யாரும் வரவில்லை. ஒன்பது நாற்பத்தியேழுக்கு ஃபியட் கார் ஓட்டி வந்தவன் தடதடவென்று வந்து தோள் தொட்டு முதல் வகுப்புக்குக் கூட்டிப் போய் சீட் தேடி உட்கார வைத்தான். டிக்கெட்டில் கோவிந்தசாமி வயது முப்பது என்று இருந்தது.

''யோவ்...இது ப்ராப்ளம் வரும்யா.''

''இல்லீங்க நான் சொல்லிட்டேன். எதுனா கேட்டா ஃபைன் கட்டிருங்க.'' ஒரு கவர் நீட்டினார். ஆயிரம் ரூபாய்கள் இருந்தன.

''எதுக்கு இத்தினி கஷ்டப்படறாரு சேட்டு?''

''இங்க இருக்கற புஸ்தகம் ஒரு கட்டு சேட்டு பொண்ணுக்கிட்ட போகணும்.''

''தணக்கா?''

''ஆமாங்க.''

''அப்படி என் பொட்டிக்கிட்ட வை.''

மெல்லிய மரப்பெட்டி மீது சுற்றி, சணல் சுற்றி ஒரடிக்கு ஒரடி காலடியில் வைக்கப்பட்டது.

''யார் கிட்ட கொடுக்கணும்?''

''வீட்ல வந்து வாங்கிக்கிடுவாங்க சேட் மக மருமகன் யாராச்சும்...''

''மக வந்தா தரேன். மருமகனைப் பார்த்ததில்லை. அடையாளம் தெரியாது.''

''சொல்லிடறேன்.''

வண்டி கிளம்ப அவன் கீழே குதித்தான். ஏனோ, முகத்தில் ஒரு கலவரம் தெரிந்தது.

வியாபாரிகள் இரண்டாவது கணக்கு மூன்றாவது கணக்கு நோட்டு வைத்திருப்பது சகஜம். வருமானவரி ஏமாற்றத் தனித்தனி லெட்ஜர்கள் இருக்கும். மாட்டினா கேஸ் போட்டு இழுத்தடிக்கலாமே தவிர இத்தனை பதட்டம் எதற்கு தெரியவில்லை. ஒருவேளை பெரிய கணக்கோ என்னவோ. இரண்டு கோடி மூன்று கோடிக்கு கணக்கு இருந்தால் கவலை வரத்தானே செய்யும்.

தூக்கமும் சாப்பாடுமாய் பயணம் போயிற்று. சென்ட்ரலில் இறங்க, அவன் பெட்டியில் யாரையோ யாரோ தேடினார்கள்.

சிவப்பிரகாசம் வீட்டுக்குள் சந்தோஷமாய் நுழைந்தான்.

9

விடிகாலை நேரத்தில் பம்பாய் ரயில் சென்ட்ரலை முட்டிய போது அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். பாப்பா அவனை இரண்டு முறை உலுக்கி எழுப்பி தோற்றுப்போய் மூன்றாம் முறையாக குடிதண்ணீரில் விரல்களை ஈரப் செய்து அவன் முகத்தைத் தொட்டாள்.

''சுப்ரஹோ...'' எழுந்து பாம்பாய் சீறினான்.

அவன் சீறலில் பாப்பாவுக்கு நாடி உறைந்து போயிற்று. வயிற்றுப் பிள்ளை துள்ளி அடங்கிற்று. இவன் பனியாவே இல்லை என்கிற வெறுப்பு வந்தது. வார்த்தை தவறுகிறவன் பனியா இல்லை. நேரம் தவறுகிறவன் மனிதன் இல்லை, என்று அப்பா அடிக்கடி சொல்வார். தன் புருஷன் மனிதனாகவும் இல்லாதது அவளுக்குப் பெரும் குறையாய் இருந்தது. அப்பா மாதிரி ஒரு சிங்கத்தை பதினெட்டு வயசு வரை கண்கூடாகப் பார்த்து விட்டு இவனோடு குடித்தனம் பண்ணுவது நரித்தனமாய் பட்டது.

அப்பா படித்து படித்துச் சொன்னார். ஸ்டேஷனுக்கு அவனை அனுப்பு. பெட்டியை வாங்கி உடனே மறைத்து விடு என்று. அவளிடம் நாலு முறை போன் போட்டு சொன்னார். அவளை நம்பாமல் அவனிடமும் நேரடியாய் பேசினார்.

''மாமா, ஏன் அவர் மூலமாய் அனுப்பினீர்கள்...?'' ரொம்ப கொட்டிக்காரத்தனமாய் கேட்பதாய் நினைத்துக் கேட்டான். அப்பா பதில் சொல்லாது போனை வைத்து விட்டார் போலிருக்கிறது. முகம் சிறுத்துப் போயிற்று. பேவகூப்ஃ என்று கத்தினான்.

''யாரைச் சொல்கிறீர்கள்?'' என்று உடனே அதட்டினாள்.

''என்னை...என்னைச் சொல்கிறேன், போதுமா?''

அவனுக்கு உண்மை சொல்லும் தைரியம் இல்லை.

''திறமை இல்லாதவனும், தைரியம் இல்லாதவனும் சன்னா வியாபாரம் செய்யக்கூட லாயக்கில்லாதவன். சுண்டல் விற்கக் கூட தைரியம் வேண்டும்.''

''எப்படியப்பா...சுண்டல் வியாபாரத்தில் தைரியம் எதற்கு?''

ஒரு பேட்டை ரௌடி சுண்டல் தின்றுவிட்டு காசு தரவில்லை என்றால் இடிந்து விடக்கூடாது. இன்னொரு பொட்டலம் சன்னா கொடுத்துவிட்டு அடுத்த பேட்டை ரௌடியிடம் நீயாய் ஒரு பொட்டலம் சுண்டல் கொடுத்துவிட்டு நமஸ்கரிக்க வேண்டும். காசு மறுக்க வேண்டும், காரணம் கேட்டால் பேட்டை தாதாவிடம் வாங்க மாட்டேன் என்று மண்டியிட வேண்டும். நாலணாவுக்குக் கணக்குப் பார்க்கிறவன் இல்லை... இந்தா ஒரு ரூபாய் என்று அவன் தர, பயமுறுத்து கிறவனை இகழ்ந்து, காசு கொடுத்தவனைப் புகழ வேண்டும். பயமுறுத்திய ரௌடியால் பலருக்குக் கஷ்டம் என்று புலம்பவேண்டும். வெட்டும், குத்தும் தானாய் நடக்கும். யாரால் துவங்கப்பட்டது என்று தெரியாமலே நிகழும்.''

''ஆங்...இது கதை.''

''இல்லை மகளே... ஒரு குல்ஃபி ஐஸ்காரன் இது போலவே பம்பாயை கலக்கிக் கொண்டிருந்தான். போலீஸுக்கு ரௌடி இருப்பிடம் தகவல் சொல்வான். ரௌடிக்கு போலீஸ் வருகை சொல்வான்.''

''கடைசியாய் என்ன ஆனான்?''

''ஒரு பெரிய சண்டையில் நாலு லட்ச ரூபாய் கரென்ஸி பெட்டி எடுத்து குல்ஃபி வண்டியில் வைத்து தள்ளிக் கொண்டே பாகிஸ்தான் போய்விட்டான் சுகமாய் இருப்பதாய் கேள்வி.''

''லக்.''

''இல்லை, மகளே. தைரியம், கத்தியை புன்சிரிப் போடு சந்திக்கும் தைரியம், கொஞ்சம் திறமை.''

''என்ன திறமை?''

''பம்பாயில் பாதி கார் நம்பர் மனப்பாடம் அவனுக்கு. கிட்டதட்ட எல்லா கெட்ட பெண்கள் பெயரும் தெரியும்.''

''கிட்டதட்ட திருடன்.''

''இல்லை மகளே வியாபாரி.''

''நாலு லட்ச ரூபாய் திருடினது திருட்டில்லையா?''

ஆறு பிணங்களுக்கு நடுவே, சுட்டுக்கொண்டு செத்த மனிதர்களுக்கு நடுவே பெட்டி இருந்தது. எடுத்துக் கொண்டு போய்விட்டான். நடுத்தெருவில் ஒரு தங்க மோதிரம் கிடந்தால் என்ன செய்வாய்?''

''எடுத்து உண்டியலில் போட்டுவிடுவேன்.''

''அப்படியா...இதுவும் திருட்டுதானே...?''

''பிறகு என்ன செய்ய வேண்டும்.''

தாண்டிப் போய்விட வேண்டும்.

''மனசு மோதிரத்திலேயே அல்லவா இருக்கும்?''

''அதை அறுக்கவும் தைரியம் வேண்டும். உனதல்லாத பொருள் உனக்கு வேண்டாம். உன் பொருளை விட்டுக் கொடுக்கவும் வேண்டாம்.''

''என் மோதிரம் தொலைந்து போனால்...?''

''தேடி முயற்சி செய். கிட்டாதாயின்...''

''வெட்டன மற...'' மகள் முடித்தாள். ''எனக் கென்னவோ இதற்குத்தான் தைரியம் அதிகம் வேண்டும் என்று தோன்றுகிறது. நமது பொருள் நம் கைவிட்டுப் போக, அதை முற்றிலும் மறந்து நமது காரியத்தில் ஈடுபடு வது எத்தனை சிரமம்?''

''வியாபாரிக்கு இதுவும் நேரும் மகளே.''

''உண்மை.''

''அதனால்தான் சொல்கிறேன். பனியா தைரியமுள் ளவன், எதற்கும் கலங்காதவன். எத்தனை அடி விழுந் தாலும் எழுந்து மறுபடி நிற்பவன், நாளை விடியும் என்கிற நம்பிக்கை உள்ளவன்.''

அப்பேர்ப்பட்ட அப்பாவிடம் ஏன் சிவப்பிரகாசம் மூலம் பெட்டி அனுப்பினீர்கள் என்று கேட்டால் என்ன பதில் சொல்வார்? அனுப்பி, அவன் கிளம்பின பிறகு இது என்ன கேள்வி. என்ன பிரயோசனம். இந்தக் கேள்வி எத்தனை முட்டாள்தனம். கேள்வி மட்டும் கேட்கத் தெரிகிறது. காரியம் செய்யத் துப்பில்லை. பெட்டியை ஸ்டேஷனில் வாங்கி வராமல் இப்படி படுத்து கால் பரப்பி தூங்குகிறது. வியாபாரத்தில் நேரம் முக்கியம்.

பங்கு மார்க்கெட்டில் இவனால் பெருத்த நஷ்டம். சினிமா படத்துக்கு முதலீடு என்று ஆரம்பித்து போன காசு வரவேயில்லை. வக்கீல் நோட்டீஸுக்குதான் காசு செலவாகிறது. துணிக்கடை போடு என்று மவுண்ட் ரோடில் அப்பா இடம் கொடுத்தார். வேலைக்கு வந்த மதராஸிப் பெண்களோடு வம்பு செய்து கெட்ட பெயர்... அவமானம். நஷ்ட ஈடு. இரவு வீடியோவில் ஒரு மணிவரை கெட்ட படங்கள் பார்த்து விட்டு வெய்யில் சுள்ளென்று உறைக்கிற வரை தூக்கம்.

அப்பாவுக்கு இவனைப் பிடிக்கவேயில்லை.

''மகளே, கடையை இனி நீ கவனித்துக்கொள். பங்கு மார்க்கெட் பற்றி சொல்லித் தருகிறேன், கற்றுக்கொள். டயர் கம்பெனி பங்கு வாங்கு. கார் கம்பெனி விற்றுவிடு. விஷவாயு கம்பெனி விலை குறைந்துவிட்டது. பரவாயில்லை. விற்காதே. மறுபடி ஏறும். அலுமினியம் வாங்கு. எவர் சில்வர் விற்றுவிடு. இந்தத் துணிகம்பெனி பாதி விற்று அந்தத் துணி கம்பெனி வாங்கு. சண்டிகார் கம்பெனி எதையும் கேட்காதே. அரசு நிலைமை சரியில்லை. உத்திரபிரதேசம் மத்திய பிரதேசம் எந்தக் கம்பெனி வந்தாலும் வாங்கு. தினமும் பேப்பர் படி.'' போனில் ஆறுதல் சொன்னார்.

அப்பாவிடம் நெடுநேரம் போனில் பேசிக்கொண்டிருந்ததற்காக பளீரென்று ஒரு முறை அடித்தான். வலியில் சுருண்டு கண் சொருகி கீழே விழுந்தாள். பாப்பா பாப்பா என்று கூப்பிடுகிற வேலைக்காரர்கள் கொதித்துக் கோபப்பட்டு அவள் உறவினர் வீட்டுக்குப் போய் அப்பாவுக்கு போன் போட்டு சொல்லி விட்டார்கள். அவளுக்குக் சொல்லாமல் பம்பாய்க்குத் தெரிந்துவிட்டது.

அப்பா வரவில்லை. ஆள் அனுப்பினார். ஒல்லியாய் உயரமாய் குறுந்தாடியும், கட்டம் போட்ட சட்டையும், ஜீன்ஸ் பேண்ட்டுமாய் ஒரு முப்பது வயசு ஆள் வந்தான். பம்பாய் ஹிந்தியில் அவளை நலம் கேட்டான். அவனோடு பேச வேண்டும் என்றான். தூக்கம் கலைந்து வந்தவனை சோபாவில் உட்கார வைத்து மெல்ல சிரித்தான்.

''இன்னொரு முறை நீ உன் மனைவியை அடித்ததாகத் தெரிந்தால் உன் வலது கை நாலு விரலையும் வெட்டிவிடும்படி சேட் சொல்லியிருக்கிறார். இதுவே முதல். கடைசி எச்சரிக்கை. நாம் பேசின விஷயம் எங்கேயாவது தெரிவிக்கப்பட்டால் தண்டனை இன்னும் கடுமையாகும். நான் வருகிறேன் சலாம்.''

போய் விட்டான்.

பிறகு அவன் அடிக்கவில்லை. கோபப்பட்டான். வீடு அதிரும்படி கூச்சல் போட்டான். ''நீ போன் செய்ய வில்லை என்றால் வேறு யார் செய்தது. வேலைக்கார நாய்களா...?''

யாரும் பதில் பேசவில்லை.

அப்பா இரவு பேசினார்.

''பிடிக்கவில்லையெனில் பம்பாய் வந்துவிடம்மா,''

''இல்லையப்பா.''

''ஏன்?''

''நான் கருவுற்றிருக்கிறேன்.''

''ஹே...பகவான்'' அப்பா போனை துண்டித்து விட்டார்.

அவளுக்கு பம்பாய் போவது பிடிக்கவில்லை. அவனிடம் சகலமும் ஒப்படைத்துவிட்டுப் போகவும் அவளுக்கு மனசில்லை. அது தவிர பம்பாயிலும் சூழ் நிலை சரியில்லை என்று அப்பா சொன்னார். வியாபாரப் போட்டிகள் மிக அதிகம். அரசாங்க இடையூறு தொடர்கிறது. ரகசிய வியாபாரம் செயலற்று இருக்கிறது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கும். உன் அத்தையை அனுப்புகிறேன் துணைக்கு. விதவை அத்தை நாலாம் மாதம் துணைக்கு வந்தாள். அதற்குப் பிறகு சிவப்பிரகாசமும் அவன் மனைவியும்தான் வந்து வாழ்த்து சொல்லி விட்டுப் போனார்கள். சிவப்பிரகாசத்துக்கு இத்தாலி சலவைக்கல் தரையும், லஸ்தர் விளக்கும் பெரும் மலைப்பாய் போய்விட்டது. அந்தப் பெண்மணி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னிடம் பேசினாள். கணக்கு ரிஜிஸ்டரை அவரிடம் கொடுத்தது தவறு என்று அப்பா திட்டினார். வேறு ஆள் மூலம் அனுப்பினால் புருஷனுக்குத் தெரிந்துவிடும். என்னிடம் காட்டாது

ஏன் அனுப்பினாய் என்று ரகளை வரும். ஷேர் மார்க் கெட்டிங் இத்தனை லாபமா கொடு நான் கவனிக்கிறேன் என்று அலையும் பிறகு அதுவும் கந்தரக்கோலம்.

இருபத்தியேழு விதவிதமான பெயர்களில் பங்கு பத்திரங்கள் வாங்கியிருக்கிறாள். பல்வேறு இடங்களில் பதுக்கியிருக்கிறாள். இந்த பங்கை இன்று மாலைக்குள் விற்று விடு என்று அப்பா போன் செய்வார். ஒரே நாளில் ஏழு லட்சம் கரென்ஸி புரோக்கர் மூலம் வந்தது. அந்தக் காசு ஷெட்டில் இருக்கிறது. பழைய ஆஸ்டின் காரில் ஸீட்டுக்கு அடியே உள்ள டூல் பாக்சில் வைத்துப் பூட்டி ஷெட்டும் உள் பக்கம் பூட்டி வைத்து விட்டாள்.

இப்படி பல விஷயங்கள் பல முனைகளில் இருக்கின்றன. இவன் கடைக்குப் போய் ஜர்தா பீடா போட்டுத்துப்பி மாடுவந்ததா பாப்பாத்தியம்மா என்று வீடு திரும்புகிறான். போன தீபாவளி சேல்ஸையே சொல்லிக் கொண்டிருக்கிறான். குயவன்கூட தீபாவளியில் சிறக்க முடியும். நாலாயிரம் அகல் விளக்கு விற்க முடியும். துணி விற்கக் கேட்பானேன்.

கடைக்கு வரும் குழந்தைகள் ஆட, வீடியோ கேம் வாங்கிப் போட்டு இவன் ஆடிக் கொண்டிருக்கிறானாம், சொல்கிறார்கள்.

அப்பா போன் பண்ணி சிவப்பிரகாசம் பொட்டி கொண்டு வருகிறார் என்றபோது என்ன கொண்டு வருகிறார் என்று கேட்கவில்லை அவர் ஏன் கொண்டு வருகிறார் என்று கேட்டான்.

அரைமணி பொறுத்து விழித்துக் கொண்டாற்போல என்ன வருகிறது என்றான். அப்பா சொல்லவில்லை என்று பதில் சொன்னாள். அப்பா சொல்லவில்லை என்பது உண்மைதான். அது மிக முக்கியமான பொருளாய் இருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிந்தது.

நாலு முறை போன் செய்தது, அதன் முக்கியத்துவம் உணர வைத்தது.

அப்பா பெட்டி, மூட்டை, எதுவும் சொல்லாமல் சாமான் என்றார். கடைசி தடவை இவளிடம் பெட்டி அகல நீளம் சொன்னார். இவன் தூங்கி வழிகிறான். தான் போகலாமா. நல்லதா. இந்த வயிறை தூக்கிக் கொண்டு எப்படி போவது, முடியுமா... வேறு யாரை அனுப்புவது?

வண்டி இந்நேரம் வந்திருக்கும். சிவப்பிரகாசம் ஸ்டேஷனில் காத்திருப்பாரா? தவித்தாள். காரை தயார் செய்து வை என்று கட்டளையிட்டாள். மறுபடி எழுப்பலாமா என்று யோசித்தாள்.

போன் அடித்தது.

அப்பாவா... துள்ளி எழுந்து எடுத்தான்.

''வணக்கம் பாப்பா... சிவப்பிரகாசம் பேசறேன். இப்பத்தான் வீட்டுக்கு வந்தேன். அப்பா பெட்டி கொடுத்தாரு. கொண்டாரட்டா?''

''வணக்கங்க. நான் வரேன்.''

''நீங்க எதுக்கும்மா. நான் வரேன்.''

''அவரு அனுப்பட்டா. எழுந்திருக்கலை.''

''மாப்பிள்ளையா? நான் கல்யாணத்தப்போ பார்த்தது. மனசுல முகம் நிக்கலை. உங்களதுல பையன் மூஞ்சி சரியா காட்ட மாட்டீங்ள்ல...?''

''சரி, நான் வரேன்.

''எதுக்கு பாப்பா சிரமம்?''

''நானும் அவரும் வரோம். உங்க வீடு பார்க்கணும்.'' மரியாதைக்காக பொய் சொன்னாள்.

''வா... நல்லா வா.''

அவனை உலுக்கி எழுப்பினாள். சோம்பல் முறித்தவனைக் கண்டு பல் கடித்தாள். ''பெட்டி வந்து விட்டது. அப்பா உடனே வாங்கும்படி சொல்கிறார்.''

''எங்கே இருக்கிறது?''

''சிவப்பிரகாசம் வீட்டில்.''

பல்கூட தேய்க்கவில்லை. பீடா போட்டுக் கொண்டான். பின் பக்கம் போய்விட்டு கால் ஓரம் ஈரமான பைஜாமாவுடன் வந்தான். கார் எடுத்தான். அவள் ஏறிக்கொண்டாள்.

அதே தெருவில் நின்றிருந்த வேறு கார் பின் தொடர்ந்தது.

நுங்கம்பாக்கம் ரோடு வழியாக எக்மோர் பாலம் ஏறினான். கார் தொடர்ந்தது.

ஈகா தியேட்டர் தாண்டி பூந்தமல்லி ரோடில் நுழைந்து புரசைவாக்கம் போனார்கள். சிவப்பிரகாசம் இருக்கும் தெரு எது என்று ரிக்ஷாக்காரனிடம் விசாரித்தார்கள். நகர்ந்தார்கள். பின்னால் வந்த கார் ரிக்ஷாக்காரன் அருகே நின்று ஏதோ கேட்டது. அவள் யதேச்சையாய் திரும்பிப் பார்த்தாள். ஒரு கை நீண்டு ரிக்ஷாக்காரன் சட்டையை உலுக்கியது. பயந்தாள். வலது பக்கம் திரும்பினார்கள்.

மறுபடி கார் தெரிந்தது. சிவப்பிரகாசம் வீட்டு நம்பர் தேடியபடி மெல்ல ஓட்ட, அந்தக் காரும் நிதானமாயிற்று.

''வேண்டாம்? வீட்டுக்குப் போகலாம்.''

''என்ன?''

''வீட்டுக்குப் போகலாம்.''

''ஏன்?''

''பின்னால் கார் வருகிறது. நேரே போங்கள்.''

அவன் திரும்பிப் பார்த்துவிட்டு சடேரென்று வேகம் எடுத்தான். வலது பக்கம் ஓடித்து பூந்தமல்லி ரோடு பிடித்தான். பேய் மாதிரி ஓட்டினான்.

''ஏதாவது தப்பு விஷயமா?''

''இருக்கலாம்.''

''சனியனே...என்னிடம் ஏன் சொல்லவில்லை. கொழுப்புடி உனக்கு.'' ஹிந்தியில் திட்டினான்.

அவளுக்கு விட்டு விட்டு வரவும் மனசில்லை. எக்மோரில் நிறுத்தச் சொன்னாள். நீ எங்கியாவது போ. பிற்பகலுக்கு மேல் போன் செய். நான் தனியே வீட்டுக்குப் போகிறேன். இறங்கி டாக்ஸி பிடித்தாள். பெரிய அம்பாஸிடர் டாக்ஸி புரசைவாக்கம் என்றாள்.

''டாக்டர் வீட்டுக்காம்மா?''

''ஆமாம்ப்பா.''

டாக்ஸிக்காரன் கிழவன். பெரிய குங்குமப் பொட்டும் சந்தனக்கீற்றும் கழுத்தில் துளசி மாலையும் அணிந்திருந்தான். நிதானமாய் ஓட்டினான்.

''வண்டி கொஞ்சம் குலுங்கும். அதான் மொள்ள போறேன்'' என்றான்.

சிவப்பிரகாசம் வீடு இருக்கும் தெருவில் நாலைந்து கார்கள் நின்றிருந்தன. கடந்து போகும்போது வாசலில் சஃபாரி சூட்டில் பதினைந்து பேர் நின்றிருந்தார்கள்.

அவள் உறைந்து போனாள். மயக்கம் வந்தது. நெஞ்சு அடைத்தது. அப்பா அப்பா என்று உள்ளே கதறிற்று. உடனே சீக்கிரம் வீட்டுக்குப் போகச் சொன்னாள். இடுப்பு வலிக்கிறது என்றாள்.

டாக்ஸி கொஞ்சம் வேகமாக வீடு நோக்கிப் போயிற்று.

அப்பாவின் ஆள் குறுந்தாடிக்காரன் வாசலில் நின்றிருந்தான். கதவு திறந்தான்.

''பெஹன்ஜி, தப்பு நடந்துவிட்டது. நீங்கள் தயவு செய்து இனி வெளியே வராதீர்கள்.''

அவள் வராண்டாவில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இடுப்பு வலித்தது. இழுத்து, இழுத்து திருகிற்று. உள்ளே புரளற வேதனை தூக்கிற்று. தொடையில் சில்லென்று ஈரம் பட்டது.

'அம்மா' என்று பயத்தில் கத்தினாள்.

வீட்டுப் பெண்கள் ஓடிவந்தார்கள். அப்படியே உள்ளே அள்ளிக்கொண்டு போனார்கள். அரைமணி நேரத்தில் சுகப்பிரசவம் ஆயிற்று.

அங்கே சிவப்பிரகாசம் ''சாமி சத்தியமா இது என்னுது இல்லீங்க...என் சிநேகிதருது'' என்று கத்திக் கொண்டிருந்தான்.

''சிநேகிதர் பேரு என்னா?'' கேட்டார்கள்.

பேசாதிருந்தான்.

மெல்ல ப்ளேடால் துணி கீறி, பெட்டியை சுத்தியால் நெம்பித் திறந்தார்கள். உள்ளே பட்டுத்துணி பை இருந்தது. எடுத்தார்கள். கவிழ்த்தார்கள். தனித் தனி பிளாஸ்டிக் பையில் முத்திரை போட்டு பிஸ்கட், பிஸ்கட் டாய் தங்கக் கட்டிகள் கொட்டின.

''உங்க சிநேகிதர் பேரு நாங்க சொல்லட்டா?'' கேட்டார்கள்.

சிவப்பிரகாசம் பேசாதிருந்தான்.

அவள் வீட்டில் போன் ஒலித்தது. குறுந்தாடிக்காரன் எடுத்தான். விஷயம் கேட்டு சரியென்று துண்டித்தான். போன் சுழற்றினான்.

''தாதாஜி...ஆணி அடித்து விட்டார்கள்.''

''மாப்பிள்ளையா?''

''இல்லை. காரியர்.''

''பெயர் சொன்னாரா?''

''தெரியாது. ஆனால் அவர்களுக்கும் உங்கள் பெயர் தெரிந்திருக்கிறது. இது வலை.''

''ஹே...பகவான்.''

''தாதாஜி?''

''என்ன?''

''இன்று காலை ஏழு பத்துக்கு உங்களுக்கு பேரன் பிறந்திருக்கிறான். தாயும் சேயும் நலம்.''

போன் துண்டிக்கப்பட்டது.

புவனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. போலீஸ் காரர்கள் இப்படி இருப்பார்களா என்று ஆச்சரியமாய் இருந்தது. இந்த மாதிரி உடை அணிந்த ஆட்களை ஒரு இந்தி சினிமாவில் பார்த்திருக்கிறாள். இப்போதுதான் நேரில் இத்தனை அண்மையில் சஃபாரி அணிந்த இந்த மாதிரி ஆட்களைப் பார்க்கிறாள்.

உள்ளே வந்து சிவப்பிரகாசம் கைப் பெட்டியையும் அந்த துணியிலே சுற்றின பெட்டியையும் சோபாவில் வைத்துவிட்டு சட்டை கழற்றினபோதுதான் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

''அட, என்ன வந்துட்டீங்க?''

''வேலை முடிஞ்சு போச்சுடா.''

''ப்ளேன்லயா?''

''டிரெய்ன்தான். நேத்துக் காலைல ஏறினேன். ஹீட்டர் போட்டுரு புவனா. பட்டறைக்குப் பேசினியா? கரி ஸ்டாக் கேட்டியா?''

''இரண்டு டெம்போ லோடு அடிச்சாங்களாம். துட்டு கேட்டாங்க. செக் கொடுத்தேன், சின்ன ஐட்டமா ஊத்த றாங்களாம். உங்ககிட்டேர்ந்து போன் வந்துதான்னு கேட்டாங்க...அதான்.''

''அப்புறம் வேற என்ன செய்தி நாட்டுல...''

''இந்தக் கோடல ஒரு பள்ளிக்கூடம் அதுல ஒரு புள்ளைய வச்சு பூட்டிக்கினு போயிட்டாங்க. அது கத்தி அழுதுருக்கு. பேய் சேஷ்டைன்னு காவல்காரன் பயந்து ஜனத்தைக் கூட்டியிருக்கான். போலீஸ் வந்து திறந்தது. புள்ளை கண் சொருகிப்போய் கிடந்துதாம், காவல்கார னுக்கு தரும அடி, முந்தா நாள் ஒரு மணிக்கு ஒரே கலாட்டா.''

''அடப்பாவமே...ஒள்ளும் தப்பாயிடலையே.''

''ஆவலை''

''பொண்ணரசி எங்க?''

''பின்னால உக்காந்து படிக்குது.''

''என் பொட்டில ஒரு கவர் இருக்கும் பார்.''

அவள் திறந்து கொடுக்க, கவர் எடுத்துப்போய் படிக்கிற பெண் மடியில் தொப்பென்று போட்டு விட்டு, ''படி படி'' என்று பாத்ரூமுக்குள் போய் கதவு சாத்திக் கொண்டான்.

அவர்கள் கதவு திறந்து உள்ளே வந்தார்கள். மூன்று பேர் வராண்டாவில் ஏறினார்கள்.

''யாருங்க?''—புவனாதான் வெளியே வந்தாள்.

''சிவப்பிரகாசம் வந்துட்டாரா?''

''வந்துட்டாரு. உக்காருங்க. யாரு, தெரியலையே?''

''இல்லீங்களா, உள்ள?''

''பாத்ரூம் போயிருக்காரு. உட்காருங்க. என்ன சொல்லட்டும்?''

''பாம்பே பார்ட்டின்னு சொல்லுங்க.''

இரண்டு பேர் தமிழர் முகங்களாய்த் தெரிய, ஒரு ஆள் வட இந்தியனாய் காணப்பட்டான்.

''பேரு சொன்னீங்கன்னா உள்ள போய் சொல்லி கூட்டிட்டு வரேன். பாம்பே பார்ட்டின்னா தெரியுமோ என்னவோ?''

''வரட்டும், நாங்க வெயிட் பண்றோம்.''

உட்கார்ந்து கொண்டார்கள். மறுபடி கதவு திறந்து தோட்டத்திற்குள் இன்னும் நான்கு பேர் நுழைந்தார்கள். புவனா நின்று பார்த்தாள்.

''எங்களோட வந்திருக்காங்க.''

''பாத்ரூம் போயிருக்காராம். வருவாரு, அங்கேயே இருங்க.''

தோட்டத்தில் நின்றார்கள். என்னவோ வித்தியாச மாய் பட்டது.

புவனா கதவு தட்டினாள். ''யாரோ பாம்பே பார்ட்டியாம். ஆள் வந்திருக்குது.''

''வரேன்.'' பிளஷ் சத்தம் கேட்டது. உள்ளே ஓடிப் போய் வேறு சட்டை எடுத்து கதவருகே வைத்தாள். வராண்டாவிலிருந்து அவர்கள் எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

அவள் வெளியே வந்து முகம் துடைக்க துண்டு போட்டாள். அவள் நகர முயற்சித்தபோது அவன்

முந்தானையிலேயே முகம் துடைத்தான். சட்டை அணிந்து கொண்டான்.

ஹால் கடந்து வராண்டாவுக்குப் போனான்.

''வணக்கம். யாருங்க?''

''சிவப்பிரகாசம்கறது...''

''நான்தான்...''

பேசாமலிருந்தார்கள்.

''பாம்பேலேருந்து வரீங்களா?''

''ஆமாங்க. இப்பத்தான் இறங்கினேன். நீங்க...?''

''சென்டரல் பீரோ...''

''ஐயா...''

''மத்திய புலனாய்வுத்துறை,''

''புரியலீங்களே.''

''பாம்பேல என்ன வாங்கினீங்க?''

''கரி...நிலக்கரி காஸ்டிங் ஊத்தற பக்கெட் நாலு. ஏங்க... இன்கம்டாக்ஸ் ஆளுங்களா? துட்டு கட்டிட்டேனே, ஒத்துக்கிட்டாங்களே...''

''டாக்ஸ் இல்ல சார். இது வேற.''

''புரியலீங்க.''

''வேற என்ன வாங்கினீங்க பாம்பேல?''

''லேடீஸ் அலங்கார சாமானுங்கதான்.''

மெல்ல சிரித்தார்கள்.

''பொட்டி எடுத்தாந்தீங்களா... அது என்ன?'' சோபாவிலிருந்ததை சுட்டிக் காட்டினார்கள்.

''அது என் சிநேகிதருது. இங்கே ஆள் வரும். கொடுத்துருன்னாரு.''

''அதப் பார்க்கணும்.''

''பாருங்க.''

திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''இது உங்க பொட்டியா?'' வேவு பார்த்தார்கள்.

''சாமி சத்தியமா, என் சிநேகிதருதுதானுங்க.''

''சிநேகிதர் பேர் என்னா?''

சிவப்பிரகாசம் உள்ளே பயம் உணர்ந்தான், புவனா விழித்தாள்.

''உங்க வீட்டை சோதனை போடப் போறோம். உள்ள இருக்கற யாரும் வெளியே போகக்கூடாது.''

உள்ளே வந்து பொட்டி எடுத்தார்கள். உலுக்கிப் பார்த்தார்கள். சுற்றிப்புரட்டி ஆராய்ந்தார்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மெல்ல பிளேட்டினால் கீறி மேல் துணி கிழித்து சுத்தியல் கேட்டு நெம்பி திறந்து உள்ளே இருக்கிற பட்டுப் பை எடுத்து தலை கீழாய் கொட்டினார்கள். தனித் தனி பிளாஸ்டிக் கவரில் முத்திரையிட்ட பிஸ்கெட்டுகள்... தங்கக் கட்டிகள்.

சிவப்பிரகாசம் உறைந்து போனான்.

புவனா விழித்தாள்.

''இது யாருது?''

சிவப்பிரகாசம் பேசாதிருந்தான்.

''உங்க சிநேகிதர் யாரு... நாங்க சொல்லட்டா?''

மௌனமாய் தலை குனிந்தான்.

உள்ளே ஒரு வெள்ளை அம்பாஸிடர் கார் நுழைந்து வந்தது. வாசலை அடைத்துக் கொண்டு நின்றது. மேலும் ஆட்கள் இறங்கி வந்தார்கள்.

''வாட் ஹாப்பெண்ட்?''

தரையைக் காட்டினார்கள்.

''எத்தனை... எண்ணுங்க.''

''நூத்தி நாப்பத்தி ஏழு.''

''அவருக்குத் தெரியலை.''

''விசாரிங்க...''

தனியே கூடிப் பேசினார்கள்.

புருஷனிடம் பேச முற்பட்ட புவனாவைத் தடுத்து நிறுத்தினார்கள். பின் பக்கமிருந்து பெண் ஓடி வந்தாள்.

''உன் பேரு என்னம்மா?''

பெண் மிரண்டு தாய்க்குப் பின்னால் ஒண்டிக் கொண்டது.

''இதான் இரண்டாவது பொண்ண... வெரிகுட்... எந்த ஸ்டாண்டர்ட் படிக்கிறாள்.''

''நீ உள்ளே போடி.'' புவனா அவளைப் படுக்கை அறைக்குத் தள்ளினாள்.

கூடிப் பேசிய அதிகாரிகள் நெருங்கி வந்து ''சிவப்பிரகாசம், ஒரு தப்பு பண்ணிட்டீங்க... இது நீங்க தொட்டிருக்கக்கூடாது. பார்த்தீங்களா... பொட்டில என்ன இருக்குன்னு உங்கக்கிட்ட இது கொடுத்த ஆள் சொன்னாரா, இது பத்தி?''

''இல்லிங்க.''

''இப்ப என்ன செய்யறது? உட்காருங்க. ரொம்ப பயந்து போயிருக்கீங்க. உட்காருங்கம்மா, பரவா யில்லை. உட்காருங்க.''

''உங்க சிநேகிதரு நாலு நாளா இதை கைல வச்சுக் கிட்டு அலைமோதினாரு. ப்ளேன் டிக்கெட், கப்பல் டிக்கெட் எல்லாம் வாங்கிக் கடைசில உங்கக் கைல தள்ளி விட்டாரு, நீங்க மாட்டினீங்க அநியாயமா.''

''சார், எனக்கும் இதுக்கும்...''

''ஒரு சம்பந்தமும் இல்லை. தெரியும். வேற வழி சோதனை போடணும்.''

''ஒரு நிமிஷம் சார்... நான் என் வக்கீல் கிட்ட கலந்து பேசி...

''முருகா... உங்களுக்குப் புரியவில்லை, நாங்க என்ன லோக்கல் போலீஸா, வக்கீல் வைச்சுப் பேச? ஒரு ஆள் உள்ள வுடமாட்டோம். இது என்ன சாராயக் கேஸா... அடி தடியா வக்கீல் வைக்க? எங்க இடமே வேற... மத்திய புலனாய்வுத் துறை, சென்ட்ரல் கவர்மெண்ட் தங்கக் கட்டுப்பாடுன்னா தெரியுமா...? உங்க வீட்ல இத்தினி பேருக்கு இத்தினி தங்கம்தான் இருக்கணும் சட்டம் இருக்கு தெரியுமா? இது எங்கேர்ந்து வந்ததுன்னு கேட்டா நீங்க பதில் சொல்லணும், சொல்ல முடியுமா?''

சிவப்பிரகாசம் பேசாதிருந்தான்.

''எங்க வேலைய ஆரம்பிக்கிறோம். அமைதியா கோவாப்பரேட் பண்ணுங்க... பிளீஸ் ஸ்டார்ட்.''

நாலு பேர் தவிர, மீதி ஆட்கள் வீட்டில் சகல பீரோக் களையும் திறந்தார்கள். இரும்புப் பெட்டி சாவி கேட் டார்கள்.

புவனா அவனைப் பார்த்தாள்.

''கொடு'' என்றான்.

புவனா சாவி போட்டு சகல பீரோக்களும் திறந் தாள். சகலமும் கீழே வாரி இறைத்தார்கள். சமைய லறை பீரோ கூட திறந்தார்கள். உப்பு ஜாடி, புளிப்

பானை, அரிசி டிரம், எல்லாம் கொட்டிக் கவிழ்த்தார்கள், ஒரு தலையணை கிழிக்கப்பட்டது. தண்ணீர் தொட்டி... மேல் தொட்டி ஆராய்ந்தார்கள். வாசலில் நின்ற காரைத் தட்டிக் கொட்டித் தேடினார்கள். தோட்டம் சுற்றினார்கள்.

''ஏன் துளசிச் செடி நகர்ந்திருக்கு?''

''நான் இடிச்சுட்டேங்க முந்தா நாள் கார்ல''

''அப்படியா? நான் அதை செக் பண்ணணும் மன்னிச்சுக்கங்க.''

மறுபடி துளசி மாடம் சாய்த்தார்கள். உலுக்கினார்கள்.

''ரிமூவ் இட்'' யாரோ குரல் கொடுக்க, ஒரு வினாடி தயங்கிய அந்த ஆள் துளசிச் செடியை வேரோடு பிடுங்கி மாடம் கவிழ்த்து மண் கொட்டினார்.

''ஐயோ!'' என்று புவனா கத்தினான்.

நிமிர்ந்து மறுபடி, ''ஸாரி'' என்றாள்.

அரை மணியில் வீடு கலவரம் நடந்த இடம்போல் இருந்தது.

''சிவப்பிரகாசம், நாற்பத்தியேழு சவரன் நகை நாலாயிரத்து எண்பது ரூபா இரும்புப் பொட்டில இருக்கு, கணக்குத் தர முடியுமா இதுக்கு?''

''சம்பாதிச்சதுங்க.'' கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சது.

''சரி வுட்டுர்றேன் இது என்ன?'' தரை நோக்கி காட்டினார்கள்.

''எனக்குத் தெரியாதுங்க.''

''யாரைப் பார்த்தீங்க? எங்க வாங்கினீங்க? என்ன சொல்லிக் குடுத்தாங்க? எல்லாம் எழுதித் தர முடியுமா?''

''அப்ப விட்டுருவீங்களா?''

''உறுதி சொல்ல முடியாது சிவப்பிரகாசம். 'ஆமா இது என்னுது. நான்தான் ஏமாத்தி இவருக்கிட்ட கொடுத்தேன்னு சம்பந்தப்பட்டவர் ஒத்துக்கிட்டா, ஒருவேளை உங்களை கோர்ட்ல விட்டுரலாம்.''

''கோர்ட்டா?''

''கேஸ் நடக்கணுமில்ல?''

''நான் என் வக்கீல்கிட்ட பேசணும்.''

''முடியாது.''

''ஏங்க, எனக்கு ரைட் இல்லையா?''

''இல்லை. கையும், களவுமா பிடிச்சிருக்கேன். இதுல யாரும் உங்களைக் காப்பாத்த முடியாது. எங்க டிமார்ட்மெண்ட் மனசு வச்சா ஒழிஞ்சு போன்னு விட்டுரலாம். உங்க நடவடிக்கையைப் பொறுத்து இருக்கு.''

சிலப்பிரகாசம் யோசித்தான்.

''எழுதித் தரிங்களா?''

''மாட்டேன்.''

''ஏன்?''

''சம்பந்தப்பட்டவர் என் சினேகிதர்.''

''சிநேகிதனா? பாஸ்டர்ட் அந்த சேட்டு. பேமானி, அஞ்சு வருஷம் புள்ளி வச்சு அலையறோம் தெரியுமா? விவரம் தெரியாத நீங்க அசிங்கப்பட்டீங்க. சிவப்பிரகாசம், இன்னும் உங்களுக்கு நிலைமை புரியலை. ஒன்னு செய்யுங்க, போய் பத்து நிமிஷம் படுத்து தூங்குங்க. தனியா உட்கார்ந்து யோசனை பண்ணுங்க கதவு தாப்பா போடக்கூடாது. திறந்து வையுங்கம்மா. படபடன்னு ஆயிடுச்சு எல்லாருக்கும்...இப்பவும் கவலைப்

படறதுக்கு ஒன்னுமில்லை. சகலமும் சொல்லிட்டா தப்பிச்சுக்கலாம்.''

''செய்யலேன்னா?''

''கம்பி எண்ணணும் சார். காப்பிபோஸானா தெரியுமா? தெரியலைன்னா இப்ப தெரிஞ்சுக்குவீங்க. நட்கர்னீ சார், வாட் டு டு?''

பேசிக் கொண்டார்கள். வாசலில் நின்றிருந்த ஆள் உள்ளே வந்தான்.

''சேட் ஆள் ஒருத்தன் தெருக்கோடில நிக்கறான். ரத்தன் பாய்னு நினைக்கிறேன்.?''

''பின்பக்கமா அடுத்த தெரு போய் மடக்குங்க. ராம்சிங், மேனன் இரண்டு பேரும் போங்க. விக்டர். நீ கார்ல ஏறி ஸ்டார்ட் பண்ணு. இந்தப் பக்கம் வந்தா வண்டிய குறுக்க குறுக்க விட்டு மடக்கு. ரத்தன் பாய் டேஞ்ஜரான ஆள், ரிவால்வர் ஈஸி பண்ணிக்க''

சஃபாரி சட்டைக்குள் கை விட்டு இடது தோள் ஒட்டி வைத்திருந்த உள்ளங்கை அகல பிஸ்டலை எடுத்து உதறி சரி செய்து கொண்டார்கள். சுவர் ஏறி பின் வீட்டில் குதித்தார்கள். தோட்டத்து சுவர் ஒட்டி இரண்டு பேர் போனார்கள்.

''என்னங்க இது?'' புவனா அலறினாள்.

''ஷ்...நோ டாக்கிங்.''

காத்திருந்தார்கள்.

திடீரென்று மோட்டார் பைக் தெருவில் வேகமாய் சீறலெடுத்தது. சப்தம் நெருங்கியது. அம்பாஸிடர் கார் உறுமி நகர்ந்து தெருவை அடைத்தது. மோட்டார் சைக்கிள் வளைந்து நடைபாதையில் ஏறி எகிறி குதித்து இறங்கி அம்பாஸிடரைக் கடந்து, ஒரு குறுந்தாடிக்காரன் நொடிப் பொழுதில் தெருவைக் கடந்தான்.

தோட்டத்தில் மண்டியிட்டு அவனுக்குக் காத்திருந்தவர்கள் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

''மாதர்சோத் இனிமே முடியாது, தெரிஞ்சு போச்சு பாம்பே பிடி'' உள்ளே நிறுத்தப்பட்ட அம்பாஸிடரில் வயர்லஸ் இருந்தது. பேசினார்கள். வீட்டு டெலிபோன் எண் கேட்டு யாருக்கோ தகவல் சொன்னார்கள்.

எல்லோரும் அலுத்துக் களைத்து ஹாலில் வந்து உட்கார்ந்தார்கள்.

''என்ன சிவப்பிரகாசம், காபி சாப்பிடலையா...டீ வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?''

''புவனா காபி போடு, எல்லோருக்கும்.''

''பால் இருக்குமா? அரை டம்ளர் கொடுங்க.''

''நட்கர்னி, பாம்பேல பிடிச்சிருப்பாங்களாய்யா?''

''இவனுங்க சொறிஞ்சுக்கிட்டுப் போய் தேடறதுக்குள்ள சேட்டு ஊரை விட்டே போயிருப்பான். எனக்கென்னமோ தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற மோன்னு தோணுது. இந்த ஆள் பேசக்கூட மாட்டேன்றான்.''

புவனா காபியுடன் வெளியே வந்தாள். சின்னச் சின்ன கோப்பைகளை டிரேயில் அடுக்கி எல்லோரிடமும் நீட்டினாள். எங்கேயோ தவறு இங்கே வந்து சிக்கியிருக்கிறது என்றுதான் பட்டது, சேட்டுக்குத் தெரிந்தால் காப்பாற்றி விடுவார் என்று தோன்றியது. காலி கோப்பைகளை வாங்கி உள்ளே போனாள்.

போன் ஒலிக்க தாவிப்போய் எடுத்தார்கள்.

''போலோஜி...ஐயாம் வரதாச்சாரி ஹியர்...''

'ஹாங் ஹாங்' என்று கேட்டுக் கொண்டிருந்தான். போனைக் கீழே வைத்தான்.

''சேட் வீடு பூட்டியிருக்கிறதாம். யாரும் இல்லையாம்.''

''க்ளோஸ்...சேப்டர் குளோஸ் சிவப்பிரகாசம் சேப்டர் குளோஸ். ரத்தன் பாய் ஓடிட்டான். சேட் காணம். இப்ப என்ன செய்யறது?''

''அவரு மகளைக் கேட்கலாமுங்களே...'' புவனா யோசனை சொன்னாள்.

''என்னது...''

''சேட்டு மகள் பாப்பா...அது வீட்டுக்குக்கூட நம்ம போயிட்டு வந்தமே.''

''எப்போ?''

''இவரு ஊருக்குப் போற முத நாள்.''

''புவனா சும்மா இரு.''

''சிவப்பிரகாசம் குறுக்கே பேசாதீங்க. நீங்க சொல்லுங்கம்மா.''

''அவங்க வீட்டுக்கு புள்ளை தாச்சிப் பொண்ணு ஆச்சேன்னு போய் பார்த்துட்டு பழம் கொடுத்துட்டு வந்தோம். அங்கிருந்தபடி இவரு சேட்கிட்ட போன்ல பேசினாரு.''

''என்னன்னு?''

''கரி வேணும். பாம்பே வரேன்னு.''

''ஏன் பாம்பேக்குப் போகணும்?''

''இங்கக் கிடைக்கலையே. பட்டறை சிரமப்படுதே... நாலு லோடு புடிச்சுக்கிட்டு வரேன்னுதான் பாம்பே போனது...சேட்டு வான்னாரு. இவரு உடனே மறுநாள் காலை கிளம்பிட்டாரு, சேட்டு பொண்ணு ரிஜிஸ்டர் குடுத்துச்சுங்க.''

''ரிஜிஸ்டரா...என்ன ரிஜிஸ்டர்?''

''தெரியலையே.''

''என்ன அது?''

''தெரியாதுங்க. இரண்டு கணக்கு புஸ்தகம் கொடுத்து அப்பாட்ட கொடுத்துருங்கன்னுது, கொண்டு போய் கொடுத்தேன், அவரு கொடுத்தது இங்க கொண்ணாந்தேன்.''

''பட்டா...ஏ மாத்திட்டான் தன்னோட ஆளு அனுப்பினா தெரிஞ்சுடும்னு உங்களைக் கூப்பிட்டு தலைல கட்டிட்டான்.''

''இந்த மாதிரி அடிக்கடி எதுனா கொண்டு போவீங்களா?''

''இல்லீங்க. இதான் முத தடவை.''

''இதுல தங்கம் இருக்கிறது தெரியாதா?''

''தெரியாதுங்க.''

''எழுதிக் கொடுக்கிறீங்களா?''

''வக்கீல்கிட்டப் பேசணுங்க''

''முடியாது.''

''ஏங்க...எனக்கு ரைட் இல்லையா?''

''இல்லை.''

''இது அடாவடித்தனம். யாரை ஏமாத்தறீங்க? நான் போன் பேசப் போறேன்.''

''சிவப்பிரகாசம் உட்காருங்க.''

''அட போய்யா...வீட்ல நுழைஞ்சு துவம்சம் பண்ற... உன்னைக் கேட்பார் இல்லைன்னு நினைச்சியா?''

''உட்கார்றா மரியாதையா''

''யாரைப் பார்த்து டாங்கற.''

''மரியாதை கெட்டுடும். போலீஸ்காரன்னா பெரிய புடுங்கின்னு நினைப்பா...?'' எழுந்து நின்றான்.

நட்வர்னி எழுந்தார். பளீரென்று சிவப்பிரகாசத்தை அடித்தார். நெஞ்சில் கை வைத்து சோபாவில் தள்ளினார்.

''டேய், அடிக்காத...என்னை அடிக்காத.''

பொத்து பொத்தென்று குத்தும் அடியும், முகம் முழுவதும் விழுந்தது.

புவனா அலறினாள். இடையே புகுந்து புருஷனை இறுக்கினாள். நட்கர்னியை மற்றவர்கள் விலக்கினார்கள். பெண் வாசற்படியில் உறைந்து நின்றது.

''உடுங்க சார்...பைத்தியக்காரன் புரியாத உளர்றான்.''

வாசற்கதவு திறந்தது, மாப்பிள்ளையும் முதல் பெண்ணும் உள்ளே ஓடி வந்தார்கள்.

''அப்பா?'' என்று கதறி வந்த பெண்ணைத் தடுத்து அதிகாரிகள் நிறுத்தினார்கள், மாப்பிள்ளையைப் பார்க்க புவனாவுக்கு வெட்கமாய் இருந்தது.

11

லாரிச் சக்கரம் சுழன்று தார் சாலையில் வண்டி தரையோடு தேய்ந்து வடுவாய் கோடு இழுந்தாற்போல ஆயிற்று.

''வாங்க போவோம்'' என்று சிவப்பிரகாசத்தைக் கூட்டிக் கொண்டு வெளியே போன போது புவனா ஓடிப் போய் தமிழ் தெரிந்த அதிகாரி காலில் விழுந்தாள்.

''ஏதோ தெரியாத பண்ணிட்டாருய்யா, மன்னிச் சிருங்க. இதுவரைக்கும் ஒரு ஈ எறும்புக்குக் கூட கெடுதல் பண்ணினதில்லை. பெரிய மனசு பண்ணி விட்டுருங்க.

அந்த மனிதருக்குக் கஷ்டமாகிவிட்டது? அடராமா... ''இதென்ன வாசல்ல வந்து... எழுந்திரம்மா. எதுக்கு என் கால்ல விழணும்... நான் ஒரு அதிகாரி என் கடமையை செய்யறேன். இப்படியெல்லாம் மறிக்கக் கூடாது நட்கர்னி... கொஞ்சம் இரு. உள்ள வாம்மா வாங்க சிவப்பிரகாசம்.''

மறுபடியும் ஹாலுக்குக் கூட்டி வந்தார். ''இது உங்க புருஷன் செய்த தப்பில்லை. யார் இதுக்குக் காரணம்னு அவருக்குத் தெரியும். அவர் வெளிய கொண்டாந் துடுவார்னு நினைக்கறாரு. சிவப்பிரகாசம், இது நடக்காது. யார் கால்லயும் நீங்க விழவேண்டாம். அந்த சேட்டு சோமறிய வந்து சரண்டர் ஆகச் சொல்லுங்க. ஆக மாட்டான். நூறு கேஸ் இருக்கு. அவன் மேல இந்த நேரம் அவன் நம்ம நாட்லயே இருக்கமாட்டான்றது என் கணிப்பு.''

''எப்படி விடுவீங்க ஐயா?'' புவனா கேட்டாள். அவர் சிரித்தார்.

''கஷ்டம்மா மனசு திடப்படுத்திக்கணும். காஃபே போஸாவுல ஒரு வருஷம், அப்புறம் கேஸ் நடந்து... இரண்டு மூன்று வருஷம். ஸாரி இவரு ஜாதகம் சரியில்லை. ஒண்ணு செய்யுங்கோ ஹேப்பியஸ் கார்பஸ்னு ஒரு மனு தரலாம் நாங்க சரியா பதில் சொன்னா அது தள்ளுபடியாகும். உங்க முகம் பார்க்கற போது எனக்கும் வேதனையாதான் இருக்கு. இவர்—என்னுதில்லை இது. இன்னார் இங்கே இதுக்கு. கொடுத்ததுன்னு எழுதனா தண்டனை குறையும். வெளியே இப்போதைக்கு வர முடியாது.''

''கடவுளே...'' புவனா முகத்தில் அடித்துக் கொண்டாள்.

''சிவப்பிரகாசம் உங்களுக்குப் புரியுதா... போய் சமாதானப்படுத்திட்டு வாங்க. எனக்கு பாவமா இருக்கு.''

ஹால் விட்டு நீங்கினார். ஹால் கதவு சாத்திக் கொண்டார்.

''புவனா'' சிவப்பிரகாசம் தேம்பினான்.

''என்னங்க இது... என்னங்க இது... கால் தடுக்கி வேல் கம்புல விழுந்தா மாதிரி. ஏங்க இப்படி ஆச்சு.''

''தெரியலை புவனா. சேட்டு ஏன் இப்படி செஞ்சுட்டாருன்னு புரியலை. பயப்படாத... இந்நேரம் அந்தாளுக்குத் தெரிஞ்சிக்கும். சும்மா இருக்க மாட்டாரு. எதுனா செய்து இதை ஒண்ணுமில்லாத ஆக்கிடுவாரு. எனக்கு நம்பிக்கை இருக்கு. நிச்சயமா சரி பண்ணிடுவாரு. நீ தைரியமா இரு. மாப்பிள்ளை, கொஞ்சம் வீட்டைப் பார்த்துக்கணும். அழாதடா... அழாத... அப்பா வந்துடுவேன்.'' இரண்டாவது பெண் அருகே வந்து ஒட்டிக் கொள்ள கண்ணீரைத் துடைத்தான்.

மாப்பிள்ளைக்கு விஷயம் புரிந்து மண்டைக்குள் ஏறுவதற்குள் சிவப்பிரகாசம் காரில் ஏறி உட்கார்ந்து விட்டான். கையசைத்தான். கார் பின்னோக்கிப் போயிற்று.

''ஐயா அவரு சாப்பிடலீங்களே... என்னங்க. சாப்பிடாம போறீங்களே...'' புவனா காருடன் ஓடினாள். மூத்தப் பெண் ஓடிப்போய் பிடித்துக் கொள்ள தோட்டத்து கம்பிக் கதவு பிடித்து சரிந்து உட்கார்ந்து விட்டாள்.

''யாரும்மா...என்னாது...என்ன விஷயம்'' விசாரித்தார்கள். அழகிரி ஓடி வந்து ஆட்களைத் துரத்தினான். கதவு சாத்தினான். வேலைக்காரி முத்துலட்சுமி கைத்தாங்கலாய் வராண்டாவில் புவனாவை வாங்கிக் கொண்டாள்.

''ஒண்ணுமில்லையம்மா. போலீஸ் விசாரிக்கறதுக்குக் கூட்டிட்டு போறதுதான். அப்புறம் வுடறதுதான். மிஞ்சிப் போனா ஒரு நாள் வச்சிருப்பாங்க.''

''என்னை வுடு முத்துலட்சுமி?'' புவனா பின் பக்கம் போய் கை கால் அலம்பிக் கொண்டாள். குறைந்தபட்சம் மூன்று வருட சிறை தண்டனை என்று சொன்னது நெஞ்சுள் நெருப்பு கொட்டியது போல இருந்தது. உள்ளே வந்து குத்து விளக்கு ஏற்றினாள். பீரோ திறந்து தாலிச் சரடு எடுத்தாள். சாமி படங்களுக்குக் கீழே உள்ளே இழுப்பறையில் மஞ்சள் கிழங்கு தேடினாள். நூலைச் சீராக்கி நடுவே மஞ்சளை முடிந்தாள். வெங்கடாஜலபதி பாதம் வைத்து நமஸ்கரித்தாள். எடுத்து மஞ்சள் கோர்த்த தாலிச் சரடு கழுத்தில் போட்டு முடிந்து கொண்டாள். மெல்ல தங்கச் சரடைக் கழற்றினாள். தலை பூவில் சிக்கியது முன்பக்கமாகக் கழற்றி பூவிலிருந்து சரடு பிரித்து எடுத்து மஞ்சள் துணியில் முடிந்தாள்.

''பூட்டிக்கொண்ட அத்தனை தங்கமும் உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன். இந்த சோதனையைத் தாண்டி வர எனக்கு பலம் தா. என் புருஷனுக்கு வரம் தா கோவிந்தா...கோவிந்தா'' என்று அழுதாள்.

வீடு வாயடைத்துக் கிடந்தது.

புவனா அங்கேயே படுத்துக் கொண்டாள். மாப்பிள்ளை லாயருக்கு போன் செய்தான். காஃபே போஸாவா...ஒன்னும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

புவனா கண்கள் மூடிக்கிடந்தாள். உள்ளே கோடு கோடாய் ஒளிக் கம்பிகள் தோன்றின. கம்பிகளுக்கு அப்பால் சிவப்பிரகாசம் உலவுவது தெரிந்தது. வெறும் வெள்ளை பனியனும், வெள்ளைக் கால் சட்டையுமாய் நிற்பது தோன்றிற்று.

போன் மணி அடிக்க, தலை தூக்கினாள். ''அம்மா, அப்பா பேசறாங்க.'' இரண்டாவது பெண் தாட்சாயினி குரல் கேட்க, எழுந்து உட்கார்ந்தாள். தலை முடிந்து கொண்டாள்.

''புவனா பேசறேங்க. எப்படி இருக்கீங்க. சாப்பிடலையே...ஏதாவது கொடுத்தாங்களா?''

''புவனா ஒண்ணும் பயப்படாத. விசாரிச்சிட்டிருக்காங்க. ஹோட்டல் சாப்பாடு வேணாம்னுட்டேன். ஏதாவது சாப்பாடு கொஞ்சம் எடுத்தா.''

''வரேங்க. விட்டுருவாங்களா?''

''தெரியலை. நேர வா. பேசலாம். எதுனா போன் வந்துதா?''

''இல்லீங்க, மாப்பிள்ளை வக்கீலுக்கு போன் பண்ணிக் கேட்டாரு. அந்த சட்டம் என்னவோ காஃபின்னு சொன்னாங்களே அதுன்னா ஒண்ணும் பண்ண முடியாதாம்.என்ன மாதிரி சிக்கல் பாருங்க. உதவி பண்ணப் போய் மீள முடியாம...சேட்டு ஒண்ணும் போனே பண்ணலியே?''

''தெரியலை, சாஸ்திரி பவன் தெரியுமில்ல...ஆட்டோ வச்சுக்கிட்டு வா...நுங்கம்பாக்கம் ஒரு தடவை வந்தப்ப... அதான் வந்துது.எத்தனாவது ப்ளோருங்க...'' யாரிடமோ விசாரித்தான். ''பத்தாவது. வந்து லிஃப்ட்ல ஏறி வா... கேட்டா சொல்வாங்க. பயப்படாத வா பேசணும்.''

போன் துண்டிக்கப்பட்டது.

சமையலறைக்குப் போகும்போது மறுபடி ஒலித்தது.

''ஹலோ'' என்று எடுத்து குரல் கொடுக்க, எதிர் முனையில் மௌனம். நின்று மறுபடி குரல் கொடுக்க, யாரோ இந்தியில் வேறு எவரிடமோ ஏதோ பேசிவிட்டு துண்டிப்பது தெரிந்தது.

''யாரும்மா.''

''தெரியலைடி. நீ போன் கிட்டயே நில்லு'' அடுப்பங் கரைக்குப்போய் மறுபடி கேஸ் பற்ற வைத்தாள். இதை இன்று காலை ஏற்றியபோது எத்தனை சந்தோஷமாய் நிம்மதியாய் இருந்தது. ஒன்னரை மணி நேரத்தில் எப்படி இந்த சந்தோஷம் தலைகீழாய் மாறியது. ரசத்துக்கு தக்காளி நறுக்க, மறுபடி கண்ணீர் நீர் கோர்த்தது.

ரத்தன்சிங் தாடி எடுத்து விடலாமா என்று நினைத்தான். அவன் முகவாய் சிறியது. அதை மறைக்கத்தான் குறுந்தாடி வைத்திருந்தான். எடுத்துவிட்டு தமிழர்கள் மாதிரி, வேட்டியும், அரைக்கைச் சட்டையும் போட்டுக் கொள்ளலாம். மோட்டார் சைக்கிளுக்கு பதிலாக பாப்பா பெயரில் ஓடும் ஆட்டோவை எடுத்துக் கொள்ளலாம்.

எடுத்து என்ன செய்ய? எப்படி சிவப்பிரகாசத்தோடு தொடர்பு கொள்ள? புரியவில்லை. அந்த சிவப்பிரகாசம் பயந்துபோய் சகலமும் எழுதிக்கொடுத்தால், அசைக்க முடியாத கேஸ் சேட்மீது விழுந்துவிடும். சிவப்பிரகாசமா யார் தெரியாதே என்று சேட் சொல்லும்படி நேரும். சேட் யாரையும் அருகே சேர்க்காது தள்ளி வைப்பதற்கு முதல் காரணம், எந்த இடத்திலும் யாரும் அவரைத் தெரியும் என்று சொல்லக் கூடாது என்பதால்தான். மிகவும் பிடித்தவனை நம்பிக்கையானவனைக் கூட சேட் நாலு வார்த்தைகளில் பேசிமுடித்து விடுவது இதனால் தான்.

இது இவ்வளவு வேதனை என்று வெளியுலகுக்குத் தெரிய நியாயமில்லை. இந்தியா முழுக்க அவருக்கு ஆட்கள் உண்டு. எவரும் நண்பர்கள் இல்லை. யாரோடும் உட்கார்ந்து பேசிச் சிரிப்பது இல்லை.

அவர் பேசிச் சிரிப்பது பாப்பாவோடு மட்டும்தான். அதுவும் எப்போதாவதுதான். அவருக்கு ரத்தன் சிங்கை பிடித்த காரணமே அவன் யாரோடும் பேச மாட்டான் என்பதால்தான். பம்பாயில் லாரி ஸ்டிரைக் வந்தபோது நாலு லாரி டிரைவர்களை ரத்தன் தலையில் தட்ட, ஒரு டிரைவர் அங்கேயே குப்புற விழுந்து செத்துப்போனான். செத்தவன் உடம்பு சூடு அடங்குவதற்கு முன்னால் அனுப்பி விட்டார். ஒரு வாரமாய் ரத்தன்சிங் சென்னையில் இருந்தான் என்று நிரூபித்தார். நிரூபிக்க பணம் தண்ணீராய் செலவு செய்தார்.

போ ஜெயிலுக்கு என்று தெரிவித்துவிடலாம். ஏன் சாகும்படி அடித்தாய் என்று அவனையே கேள்வி கேட்கலாம். கேட்கவில்லை. கேட்கமாட்டார்.

''ரத்தன், நீ ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை'' என்று ஒரு முறை கேட்டார்.

போலீஸ் கை விலங்கை ஒரே மூச்சில் உடைத்து விடலாம், சேட்ஜி பெண்கள் கண்ணீரால் கட்ட, உடைக்க முடியாது. எனக்கு விலங்கு போட்டுக்கொள்ள விருப்பமில்லை.''

''மதராஸ் பிடித்துப்போய் விட்டுதா உனக்கு?''

''எனக்கு வேண்டியது சிறிது நீரும் உணவும். நான் ஒட்டகம் சேட்ஜி. என்னால் எங்கும் உயிர் வாழ முடியும்.''

ரத்தன்சிங் நாய் போல உள்ள ஆள். எஜமான் மட்டும்தான் உலகம். அவன் கட்டளைதான் வேதம்.

ரத்தன் சிங்கை துளைத்து விட்டுத்தான் சேட்ஜியைத் தொடர முடியும். மீறி சேட் அடிபட்டால் ரத்தன் சிங்கிடமிருந்து காப்பாற்றிக் கொள்வது கடினம்.

சிவப்பிரகாசம் சொல்லி விடுவானோ என்கிற பயம் அவனுள் இருந்தது. அவன் பேசுகிறான் எனத் தெரிந்தால் பேசும் இடத்தில் தீர்த்துவிடலாம்.

ஆனால் அவனை எப்படி தொடர்புகொள்வதென்று தெரியவில்லை. ஒரு நகைக் கடையில் உட்கார்ந்து போன் செய்தபோது சிவப்பிரகாசம் மனைவி போன் எடுத்தாள். 'ஹலோ ஹலோ' என்றாள். வேறு குரல் கேட்கவில்லை. அந்த ஆட்கள் இருப்பின் அவர்கள்தான் போன் எடுப்பார்கள். போய் பார்க்கலாமா...

எழுந்தான். சலூன் நோக்கிப் போனான். தாடி சிதைந்து, முடி குறைத்தான். மவுண்ட் ரோட் சந்தில் உள்ள தன் லாட்ஜுக்குப் போய் வேட்டியும் அரைக்கை சட்டையும் உடுத்திக் கொண்டான். ஆட்டோ பிடித்து சிவப்பிரகாசம் வீட்டுக்குப் போனான். எதிர் பக்கம் நின்று நோட்டமிட்டான். தெரு சாதாரணமாக இருந்தது. யாரும் கவனிக்கவில்லை.

தோட்டக் கதவு திறந்து ஒரு இளைஞன் வெளியே வர அவனைப் பின் தொடர்ந்தான்.

''எங்க ஐயாவ போலீஸ் தள்ளிக்கிட்டு போயிட்டுதா தெள்ளிப்பட்டேன்.'' அந்த இளைஞன் முகத்தில் கலவரம் தெரிந்தது.

''பயப்படாதீங்க தம்பி. நான் சிவப்பிரகாசம் ஐயாவுக்கு வேண்டப்பட்டவங்க, அவரோட புரோக்கரு.''

''என்ன புரோக்கரு?''

''எல்லாம்தான். வாங்கறது விக்கறது.''

''தங்கமா?''

''அதுவும் கூடத்தான். மாசத்துக்கு நாப்பது ஐம்பது பிஸ்கட் கொண்டாருவாரே. இந்தத் தடவ மாட்டிட்டார் போல.''

''உம் பேர் என்ன?''

''முகமத் பாட்சா.''

''எங்க இருக்கற ஆள் நீ?''

''நான் தாம்பரம். ஆனா, இங்கதான் சுத்திக்கிட்டு இருப்பேன். வக்கீல் வெச்சா வெளியே எடுத்துடலாம் தம்பி. இதுக்குன்னு வக்கீல் உண்டு.''

''எடுக்க முடியாதாமே?''

''தங்கம் கடத்தினா அப்படி சொல்றாங்க. ஆனா செய்யலாம்.''

''யாரு வக்கீலு?''

''அதான் தேடிப் போறீங்களா?''

''ஆமா.''

''இருங்க.''

பிஸ்கெட் கடையிலிருந்து யாருக்கோ போன் செய்தான். ஹிந்தியில் பேசினான்.

கூட வந்தவனுக்கு அட்சரம் புரியவில்லை.

''நீங்க யாருன்னு கேட்கறாரு வக்கீல்.''

''நான் அவர் மாப்பிள்ளை. பேரு சரவணகுமார்.''

''எங்க வேலை செய்யறீங்க?''

''கம்பெனில. நான் பேசறேன் கொண்டா.''

''வேணாம் சார். நேர பேசுவோம் வாங்க.''

''ஒழுங்கா இரும்புப்பட்டறை கவனிக்கிறத விட்டுட்டு இப்படி குறுக்கு வழியில சம்பாதிச்சு...பார் இப்ப குடும்பமே நாறிப்போச்சு.'' மாப்பிள்ளை சலித்துக் கொள்ள, ரத்தன்சிங் சிரித்தான்.

''இரும்புப் பட்டறைனால என்ன வந்துரும் சொல்லுங்க?''

''அது சரி. எனக்கு அப்பவே டவுட். என்னடா இப்படி அரண்மனை மாதிரி வீடு வச்சிருக்காரே...இவருக்கு எப்படி முடிஞ்சுதுன்னு இப்பல்ல தெரியுது.''

''யாருக்கு சம்பாதிக்கறாரு. குழந்தைகளுக்கோசரம் தானே...''

''அதெல்லாம் இல்லை. பைசா தரமாட்டான் எங்க மாமனாரு. மனசு வராது, எடுத்துடலாமா வெளிய?''

''பார்க்கலாம், ஜார்ஜ் டவுன் போவணும்...ஆட்டோவில போயிடலாம்.''

''பஸ்''

''நேரம் ஆவுமே.''

''ஆட்டோவுக்குத் துட்டு எடுத்தாரலியே...''

''நான் தரேன் வாங்க. எனக்கு நெறைய செய்திருக்காரு சிவப்பிரகாசம்.''

ஆட்டோவில் போகும்போது சில விபரங்களும் கேட்கப்பட்டன. சிவப்பிரகாசம் பேசவில்லை என்பது யூகமாய் புரிந்தது. சாஸ்திரிபவனுக்கு சாப்பாடு போகும் என்று தெரிந்தது. அதற்குள் மறுபடி வீடு போக வேண்டும். நான் சாப்பாடு எடுத்துப் போகிறேன் என்று சொல்ல வேண்டும்.

வக்கீல் அன்வர் பாஷா சேட்ஜியின் ஆள். ரத்தன் சிங்கை புரிந்து கொள்ள சிரமப்பட்டார். தெரிந்து உட்காரச் சொன்னார்.

''யார் பணம் தருவார்கள்'' என்று ரத்தனை கேட்டார்.

''சும்மா நூறுரூபாய் பேருக்கு இங்க வாங்கிக்க மீதம் சேட் காசு.'' ஹிந்தியில் சொல்ல சரியென்றார். இரண்டு நாட்கள் பொறுத்து ஹேப்பியஸ் கார்பஸ் மனு போடலாம்'' என்றார், புவனேஸ்வரியை கூட்டிவரச் சொன்னார்.

நூற்றியோரு ரூபாய் ரத்தன்சிங் தர, மாப்பிள்ளை மௌனமாய் உட்கார்ந்திருந்தான். வீடு வந்தார்கள்.

டிபன் பாக்ஸ் தயாராகியிருந்தது.

மாப்பிள்ளை ஹாலுக்குப் போய் தன் வக்கீலை பார்த்து பேசினதாக சொல்ல, வீடு நன்றியுடன் கேட்டுக் கொண்டிருந்தது. மாப்பிள்ளையை தெய்வம் என்று எல்லோரும் நினைக்க, ரத்தன்சிங் தன்னை புரோக்கர் என்று அறிமுகம் செய்து கொண்டான்.

''என்ன, புரோக்கரா...நான் பார்த்ததில்லையே கரி புரோக்கரா?''

''ஆமாங்க. நான் பட்டறைலதான் இருப்பேன். இங்கே வரமாட்டேன், விஷயம் சொன்னதால் வந்தேன்.''

''கரி லோடு அனுப்பணுமே, போனா கேட்பாரே...''

''அனுப்பிடலாங்க. போன் பேசட்டுங்களா.''

கரி எங்கு கிடைக்கும்—யோசித்தான். சேட்ஜியின் சொத்துகளை நிர்வாகம் செய்பவனிடம் பேசினான். ''டூ லாரி விலை நான்கு விலையானாலும் உடனே பட்டறைக்கு அனுப்பு. பேர் என்னாங்க?''

''எப்படிப்பா பேரே தெரியாத புரோக்கர்?''

''இல்லீங்க நான் ஐயா பேர் சொல்வேன் போய்டும். இப்ப யாரு காண்டாக்ட் பண்றது தெரியலையே.''

ஃபோர்மேன் பேர் சொன்னாள். கம்பெனி பேர் சொன்னாள். டெலிபோன் நெம்பர் கொடுத்தாள்.

''ஐயாவ பார்க்க நானும் வரேணம்மா.'' டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டான். காரில் மாப்பிள்ளையும் புவனேஸ்வரியும் உட்கார வண்டி ஓட்டினான்.

''யாரும் கேட்டா என்னுடைய ட்ரைவர்ன்னு சொல்லிடுங்க'' என்றான்.

சாஸ்திரி பவன் வாசலில் கார் வந்தது. ரத்தன் சிங் உள்ளே பயம் உணர்ந்தான். இது புலிக் குகை போய் மீண்டு வருவோமா, இல்லை சிக்கிவிடுவோமா?

இதைவிட சிக்கல் வாழ்க்கையைப் பார்த்தாயிற்று. இதையும் பார்ப்போம். பத்தாவது மாடியில் லிப்ட் நிற்க, ஒரு அலுவலக வாசலில் சிவப்பிரகாசம் ஒரு ஆளுடன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

புவனா டிபன் கேரியருடன் போக ரத்தன் சிங் நடந்து ஆண்கள் என்ற பெயர் பலகை போட்ட இடத்திற்குள் நுழைந்து விட்டான். எங்கு சாப்பிட்டாலும் இங்குதான் கையலம்ப வரவேண்டும். வரட்டும் காத்திருந்தான்.

பதினைந்து நிமிடம் கழித்து சிவம்பிரகாசம் கையலம்ப வந்தபோது இழுத்து அவனைக் கக்கூஸுக்குள் நிறுத்தினான். கத்த முயற்சித்தவனை வாய் பொத்தினான்.

''என் பெயர் ரத்தன் சிங். பயப்படாதே.''

12

ஆனால் சொரேரென்ற பயம் உடனே வந்தது. திமிறி ஓடத்தான் தோன்றியது. வாயைப் பொத்திய கையின் அகலமும் அதன் சொரசொரப்பும் விரல் அசைவில் உள்ள காய்ப்புத் தடங்களும், வாய் பொத்திய வன் முகத்தில் இருந்த வடுவும் அவன் கண்ணில் மின்னிய கருமையும் பதற்றம் கொடுத்தன.

சிவப்பிரகாசம் திமிறினான். அவன் அவனை அழுத்தி நிறுத்தினான்.

''சாலா மதராஸி. உன்னை ஒரே அடியில் பிணமாய் சாய்க்க முடியும். உன் மனைவி முகத்திற்காகப் பார்க்கிறேன்.'' ஹிந்தியில் கர்ஜித்தான்.

''நான் சேட்ஜியின் ஆள். பாப்பா என்னை இங்கு அனுப்பியது. இந்த அதிகாரிகளுக்குப் பயப்படாதே. உன்னை இரண்டு நாட்களில் வெளியே கொண்டு வருவது சேட்ஜியின் பொறுப்பு'' இப்போது ஆங்கிலத்தில் பேசினான்.

''நல்லா இருக்குடா கதை. பொண்ணுக்கிட்ட பார்ஸல் கொடுன்னு என்னை ரயிலேத்தி அனுப்பிட்டு... இதாடா பார்ஸல்? உங்களுக்கு என்னாடா கெடுதல் செஞ்சேன்? என்னைய சீரழிச்சுட்டீங்களே பாவிகளா'' சிவப்பிரகாசம் கத்தினான்.

''ச்சச்சு...''

''என்னா ச்சு... நான் கேட்டேனாடா—குந்துமணி தங்கம் கேட்டேனாடா. ஊர்ல பெரிய மனுஷங்களாச்சேன்னு உதவி கேட்டா, உங்க கோல்மால்

வேலைக்கு என்னை பலி போட்டுட்டீங்களே... எந்தப் பாவமும் அறியாத பொம்பளை இந்த இடத்துக்கு சோறு எடுத்துக்கிட்டு வந்து... தேவைதானா...?''

''தப்பு நடந்து போச்சு.'' அவனும் தமிழில் பேசினான்.

''ஆமாண்டா. உங்க சகவாசம் என்னிக்கு வச்சுக்கிட்டேனோ அன்னிக்கே தப்பு நடந்து போச்சு.''

''சொல்லிட்டியா சேட்டுதுன்னு?''

''நான் சொல்றது என்ன—உங்க சரித்திரமே அவன் சொல்றான்.''

''எதுனா கையெழுத்து போட்டியா?''

''போடச் சொல்லி மிரட்டறான்.''

''போடு. கோர்ட்ல பார்த்துக்கலாம். பயப்படாத.''

''என்ன கோர்ட்டு... வக்கீலுக்கு போன் பண்ண வுடமாட்டேங்கறான்.''

''நீ ஏன் பண்றே? நான் பண்றேன். வக்கீல் வர வழைக்கிறேன். உனக்கு வாதாட ஏற்பாடு பண்றேன். அமைதியா இரு. சேட்டு உன்னை அம்போன்னு வுட்டுருவாரா... அவரு மாதிரி ஒரு நல்ல ஆள் உன் ஜென்மத்துல பார்த்திருக்க மாட்ட...''

பாப்பாவுக்குத் தெரியுமா?

''தெரியும்.''

''எப்படி?''

''உனக்கேன் அத பத்தி... மறுபடி சொல்றேன். எம்பேரு ரத்தன் சிங் உம் பொண்டாட்டிக்கிட்ட எம்பேர் சொல்லு. நான் அது மூலமா நியூஸ் அனுப்பறேன். இப்பக்கூட உன் வண்டில டிரைவரா நான்தான் வந்தேன்.''

''என்ன நியூஸ் அனுப்பப் போற?''

''சேட் என்ன செய்யப் போறார், எதுனா சொல்லி அனுப்பறேன். மொத்தமும் எடுத்துக்கிட்டாங்களா?''

''ஏன்... நான் பாதி வூட்ல மறைச்சு வச்சுட்டேன்னு பார்க்கறியா... அது உம் புத்தி''

''லேட்டாச்சு... போ... வெளிய போ.''

கேக்கூஸ் திறந்து அவன் வெளியே வரவும் ஒரு அதிகாரி தேடி வாசலுக்கு வரவும் சரியாய் இருந்தது.

''என்னங்க?''

''காணுமேன்னு பார்த்தேன். முடிச்சுட்டீங்களா... வாங்க போவோம்.''

''குளிக்கலீங்க. கசகசங்குது.''

''குளிக்கலாம் ஏற்பாடு பண்றோம்.'' மெல்ல புஜம் பிடித்துத் தன் அறைக்குள் இழுத்துப் போனார்.

''நான் ஒரு வார்த்தை எங்க வொய்ஃப்கிட்ட சொல்லிட்டு வந்துடறேன்யா.''

''என்ன வார்த்தை?''

''எதுக்கும் பயப்படாத கடவுள் இருக்கார். அவ்வளவுதான்.''

''சரி.''

கதவு திறந்து வெளியே வந்தான். ஹால் முழுவதும் மேஜை நாற்காலிகளில் அலுவலக ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஹால் கோடியில் மரத்தடுப்பு போட்டு ஒரு மேஜை இரண்டு மர பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன.

உள்ளே புவனா டிபன்பாக்ஸ் அடுக்கி பையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

''மாப்பிள்ளை எங்க புவனா?''

''சிகரெட்டுக்காக வாசலுக்குப் போயிருப்பார். என்னங்க விஷயம்?'' புருஷன் முகம் கொஞ்சம் தெளிந்திருந்த தாய் அவளுக்குப் பட்டது.

''அந்த டிரைவர் பேரு ரத்தன்சிங். எங்கிட்ட தனியா பேசினான், சேட்டு எப்படியும் என்னை வெளிய எடுத்துரு வாராம், பாப்பாவுக்குத் தெரியுமாம். அப்பப்ப உன்கிட்ட நியூஸ் சொல்றேன்னான். நீ பயப்படாத பேசு.''

''ஏதோ கரி புரோக்கர்னான்...''

''அதெல்லாம் இல்லை அவன்கிட்ட சொல்லு...பாப்பாவ நேர பார்த்துப் பேசணும்னு. போய் பேசு.''

''ராத்திரிக்கு சாப்பாடு?''

''இங்க தர்றத சாப்புட்டுக்கறேன். போன் பண்றேன். போன்ல இது பேச வேணாம். நேர என்னைப் பார்க்க வரப்பச் சொல்லு, பயப்படாத. ஒண்ணும் ஆவாது.''

''என்னவோ உடம்பே சேத்துல அழுந்தின மாதிரி ஆயிடுச்சுங்க.''

''ஒண்ணுமில்ல. போய் நிம்மதியா படு, புத்தி தெளிஞ்சுடும்.''

புவனா ஒரு பொட்டலம் வெற்றிலைப் பாக்கு எடுத்து கொடுத்தாள். ''போடறீங்களா? கொண்டாந்தேன்.''

''வேணாம்? சரி, கொடு. பாதி நேரம் சும்மாதான் உட்கார்த்திருக்கேன். பசங்கக்கிட்ட சொல்லு... ஒண்ணுமில்லைன்னு. மாப்பிள்ளைகிட்ட ரொம்ப எதிர்பார்க்காத.''

''அவருதான் வக்கீல்கிட்ட பேசி எல்லாம்...''

''அவரு இல்லை. இந்த ஆள் செய்துருக்கான். சேட்டு சொல்லியிருப்பாரு. மாப்பிள்ளைக்கிட்ட அதிகம் பேச வேணாம். சேட்டு ஆள் தப்பு பண்ண மாட்டான். பயப்படாத''

ஆபீஸ் வாசல்வரை கூட வந்தான். ''வரேங்க.', என்று புறங்கையைத் தொட்ட புவனாவின் விரல்களைத் தொட்டான். உள்ளே வலித்தது. இவளை இப்படி ஒரு நிலையில் வைத்து விட்டோமே என்கிற துக்கம் பொங்கியது. அவள் லிப்ட் வருகைக்காக பட்டன் அழுத்தி விட்டு நிற்க, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். லிப்ட் திறக்க, அவள் உள்ளே போகையில் ரத்தன் சிங் சட்டென்று எங்கிருந்தோ வந்து உள்ளே புகுந்தான். கதவு மூடுமுன் நெஞ்சில் கை வைத்து நானிருக்கிறேன் என்ப தாய் கையை காண்பித்தான்.

லிப்டில் ஆட்கள் இருந்தார்கள். ரத்தன் சிங் பேச வில்லை. வெளியே வந்ததும் 'பை கொடுங்கம்மா' என்று வாங்கிக் கொண்டான்.

''ஐயா சொன்னாருங்களா?''

''சொன்னாரு நீங்க சேட் ஆளுன்னு.''

''வாங்க. மாப்பிள்ளையை வூட்டுக்கு அனுப்பிருங்க அம்மா.''

''ஏன்?''

''அவரு சிவப்பிரகாசத்தை மட்டமா பேசறாரு. ரகசியம் வச்சுக்க மாட்டாரு. நான் டிரைவரா இருக்கேன் உங்களுக்கு. என்னை நம்பலாம். உங்க சகோதரனா நம்பலாம்''

''பாப்பாவப் பார்க்கணுமே''

''உடனே பார்க்கறது நல்லதில்லை.''

''மாப்பிள்ளையைக் காணமே. சிகரெட் பிடிக்கப் போனாரு.''

''வரட்டும்.'' கார் அருகே காத்திருந்தார்கள்.

''வக்கீல் பார்த்துட்டீங்களா?''

''பார்த்தேன். நூறு ரூபா நான் அட்வான்ஸ் நான் தந்திருக்கேன். ஒரு பைசா நீங்க தர வேணாம். மொள்ள மாப்பிள்ளையை ஒதுக்கிட்டு சிவப்பிரகாசமே காசு தரேன் னிருக்காருன்னு சொல்லிருங்க.''

''நான் தர வேணாமா?''

''வேணாம்மா.''

''சேட்டு எங்க?''

''தெரியாதும்மா. எப்படியும் என்னிய கான்டாக்ட் பண்ணுவாரு. சிவப்பிரகாசம் மாட்டிக்கிட்டதுல சேட்டுக்கு வருத்தம்.''

''அப்ப ஏன் இதைச் செய்யணும்?''

''தெரியலை. ஏதோ தப்பு நடந்துருக்கு. யாருக்கோ கொடுக்கறத உங்க வூட்டுக்கார்கிட்ட கொடுத்துட்டார்.''

''இதுக்கு பயப்பட வேண்டியதில்லையா? வக்கீலு முடியவே முடியாதுன்னார்.''

''முடியாதுதான். இது ரொம்ப சுலபம்னு. நான் சொல்லலை. ஆனா சேட் வுட்ற மாட்டாருன்னு நான் நம்பறேன்' இந்நேரம் பல வேலைங்க நடந்துக் கிட்டிருக்கும், ஆள் பலம் இல்லை...தனியா கஷ்டப் படறோமேன்னு நினைக்காதீங்க.''

''அப்ப இது கஷ்டம்தான்?''

''ஆமா தாயே.''

''தண்டனை உண்டு.''

''இல்லம்மா, கொஞ்சம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். சேட் கிடைக்கிற வரைக்கும் இவங்கள்ளாம் கொஞ்சம் ஆடுவாங்க.''

''சேட் சரண்டர் ஆனா என்ன?''

சிரித்தான். ''சேட் கிட்ட இவங்க சரண்டர் ஆயிடுவாங்கம்மா...பாருங்களேன்.''

''எப்படி?''

''எல்லாம் நம்மக்கிட்ட வாங்கித் தின்னவங்கதான்,''.

''அப்ப ஏன்...?''

''அம்மா, பொறுப்ப வுட்ருங்க.''

மாப்பிள்ளை வேகமாய் வந்தான்.

''எங்க போயிட்டீங்க?'' புவனா சற்று அலுப்புடன் கேட்டாள்.

''இங்க எனக்குத் தெரிஞ்ச ஆபீஸர் ஒருத்தர் இருக்காரு. அவருக்கிட்ட விவரம் சொல்லி உதவி கேட்டேன்.''

''யாரு? என்ன ஆபீஸ்?''

''வெடிமருந்து கண்ட்ரோலர்.''

''ஏங்க. அவருக்கும் இதுக்கும் என்னங்க சம்பந்தம்?'' ரத்தன் சிங் கேட்டான். அவன் முகத்தில் கோபம் தெரிந்தது.

''ஒரே பில்டிங் ஒருத்தருக்கொருத்தர் தெரிஞ்சிருக்குமே.''

''என்ன சொன்னாரு.''

''அதிகம் தெரியாது. கேட்டுப் பார்க்கறேன்னார்.''

''எல்லார் கிட்டயும் போய் சொல்லாதீங்க'' ரத்தன் சிங் சிரித்தபடி கூறினான்.

''ஏன்?...'' மாப்பிள்ளைக்குக் கோபம் வந்தது.

''நாமதான் வக்கீல் வச்சிருக்கோமே.''

''வக்கீல் வச்சா முடிஞ்சிருமா... ஹேப்பியஸ் காபஸுக்கு இருபதாயிரம் கேட்பாராம் வக்கீல். எங்க போறது இருவதாயிரத்துக்கு?''

''உங்க மாமனார் வக்கீல் வச்சே நடத்த சொல்லிருக்காரு?''

''துட்டு?''

''கஷ்ட நேரத்துக்கு செலவு பண்ணத்தான் சம்பாதிச்சு வச்சுருக்கோம்.''

''இருபதாயிரம் சின்ன காசா?''

''நேரம்னா செலவு பண்ணத்தான் வேணும்.''

''நான் வக்கீல்கிட்ட பேசினது சொன்னீங்களா?''

''நான் சொன்னேங்க. வக்கீல் பேர் சொன்னதும் நம்பிக்கையாயிட்டாரு. மாப்பிள்ளையக் கூட்டிட்டு போனேன். நூறு ரூபா அட்வான்ஸ் கொடுத்தேன்னு சொன்னேன். இன்னிக்கு நேத்திக்கா பழக்கம் உங்க மாமனாரோட'' ரத்தன் சிங் காரை வீடு நோக்கித் திருப்பினான்.

மாப்பிள்ளை தொலை தூரம் வெறித்தான். தன்னைவிட ஒரு கரி புரோக்கர் பெரியவனாவது பிடிக்க வில்லை.

''அப்ப காசு ரெடி பண்ணுங்க அத்தை. நான் ரூபா கொடுத்துட்டு வந்துடறேன், வக்கீல்கிட்ட.''

''இப்ப ஒண்ணும் தரவேண்டாம். நான் கொடுத்த நூறு போதும்.''

''என்ன சும்மா நான் கொடுத்தேன். நான் கொடுத்தேன்கற, என்கிட்ட இல்லை. உன்கிட்ட

இருந்தது. கொடுத்த. அத்தை ஒரு நூறு ரூபா இவன் கிட்ட தந்துருங்க.''

புவனா பேசாது வெளியே பார்த்தபடி வந்தாள்.

''கோச்சுக்கக் கூடாதுங்க. உங்க காசுலதான் நடத்தறம். நீங்க இருக்கற தைரியத்துலதான் எல்லாம் நடக்குது. என்ன மேற்கொண்டு செய்யணும்கறத சிவப்பிரகாசம் ஐயாவக் கேட்டு செய்யணுமில்லையா?''

''அவர என்ன கேட்கறது?''

''ஏன்...'' புவனா சிறினாள்.

''ஏனா? ராத்திரி வண்டில இழுத்துட்டுப் போய் ஜெயிலில் போட்டுறப் போறாங்க. கம்பி எண்ணப் போறாரு...''

''நிறுத்துங்க. அனாவசியமா அவரைத் தப்பா பேசாதீங்க.'' கத்தினாள்.

''நான் என்ன பேசிட்டேன்னு கத்தறீங்க, உள்ளது தான் சொல்றேன்''

''என்னத உள்ளத சொல்றீங்க...ஊர் பூரா போய் பேசிட்டு வரீங்க...''

''என்ன பேசினேன். நம்மாலான உதவி செய்ய லாமேன்னு அவர்கிட்ட போய் விவரம் கேட்கப் போனேன். ஏன் இவ்வளவு கடுப்பா பேசறீங்க?''

''அவங்க வேதனை அவங்களுக்கு...'' ரத்தன் சிங் பதில் சொன்னான்.

''யோவ், நீ சும்மா இருய்யா...பெரிய மயிரு மாதிரி பேச வந்துட்டான்...''

ரத்தன்சிங் பல் கடித்தான். ஒரு அறை தாங்குவானா இந்த மதராஸி. எல்லாம் நேரம். இவனைத் தூக்கி வெளியே போட்டால்தான் மேற்கொண்டு காரியங்கள்

திட்டமிட முடியும். செய்ய முடியும். இல்லையெனில் இவனே போய் எல்லா இடத்திலும் சொல்லி நாற அடித்து இன்னும் சிக்கலாக்கி விடுவான்.

''சரிங்க.'' ரத்தன்சிங் சாதாரணமாய் சொல்லிவிட்டு வண்டி ஓட்டுவதில் கவனமாய் இருந்தான்.

வண்டி வீட்டுக்கு உள்ளே நுழைந்தது.

ரத்தன்சிங் இறங்கி புவனாவுக்கு கார் கதவு திறந் தான்.

மாப்பிள்ளையும், புவனாவும் உள்ளே போக, மேற் கொண்டு புவனாவிடம் எப்படி தனியே பேசுவது என்று யோசித்தான்.

உள்ளே அவர்கள் நுழைந்ததும் டெலிபோன் மணி அடித்தது. புவனா அருகில் போனான்.

''ஹலோ புவனா பேசறேன்.''

''ரத்தன் சிங் இருக்கானா?''

''யாரு?''

''ரத்தன் சிங்.''

''நீங்க யாரு?''

''அவரு சொந்தக்காரர் கூப்புடுங்க.''

''எங்க அவரு?'' திரும்பிக் கேட்டாள்.

''எவரு?'' மாப்பிள்ளை வாசலில் நின்று பதிலுக்குக் கேட்டான்.

''நம்மகூட வந்தாரே.''

''எதுக்கு?''

''போன் வந்துருக்கு.''

''வந்து ரெண்டு மணிநேரம் ஆவலை. அதுக்குள்ள ஒரு போன்...இல்லேன்னு சொல்லிருங்க'' அருகில் வந்து போன் பிடுங்கிக் கீழே வைத்தான்.

எதிர்முனையில் சேட் கவலையானார்.

13

இதுதான் கெட்ட நேரம். அங்கே ரத்தன்சிங் ஒட்டிக் கொண்டு விட்டான் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள, அவர் கவலைகளில் பாதி பறந்திருக்கும். புவனாவின் கவலைகளில் முக்கால்வாசி தீர்ந்திருக்கும். திட்டமிடுதலும் அதன் விளைவாய் சில வெற்றிகளும் உடனடியாய் கிடைத்திருக்கும்.

இந்த வேதனைக்கு சம்பந்தமே இல்லாதவர் உள்ளே புகுந்து இடைஞ்சல் செய்ய, உதவிக்கு வந்த ஒரு கரம் தேவையற்று துண்டிக்கப்பட்டது. நடு ஆற்றுச் சூழலில் தத்தளித்து முள் செடியை அணைத்துக் கொண்டு கதறுகிறவருக்கு கயிறு வீச, கயிறை பாம்பென்று மீன் கடித்தது. முள்செடி கட்டிக்கொண்டு கதறுகிறவர்கள் மேலும் கவலையானார்கள். இன்னும் வேதனைப்பட்டார்கள்.

மீன் எந்தத் தெளிவுமின்றி அலைந்து கொண்டிருந்தது.

''ஏங்க இப்படி டக்குன்னு போனை கீழ வச்சுட்டீங்க. யாருன்னு கேட்டிருக்கலாமில்லை...'' புவனா மாப்பிள்ளையைக் கேட்டாள்.

''கண்டவன் கண்டவனுக்கு போன் பண்ண இது இடமா? நம்ம வூட்டுப் பொம்பளை பேசணுமா...முதல்ல

ரத்தன் சிங் வேணும்னுவான். அப்புறம் நீங்க யாருன்னுவான்...தேவையா இது?''

படிப்பு மட்டும் ஒரு ஆளை பெரிதுபடுத்துவதில்லை. அவன் வளர்ந்த விதம்தான் அவன் குணங்களை உருவாக்குகிறது. வெளிப்பார்வைக்கு நாகரீகமாய் உடுத்தி வலம் வந்தாலும், உள் மன விகாரங்கள் சோதனைக் காலங்களில் வெளிப்பட்டு விடுகிறது.

மாப்பிள்ளை வீடு, பெண்களை அடக்கி வைக்கிற இடம், வயசுக்கு வந்த பெண்கள் வாசற்படியில்கூட நிற்கக்கூடாத இடம். பெண் சிரிச்சா போச்சு...புகையிலை விரிச்சா போச்சு என்கிற பழமொழி வேதமான இடம். உயிருள்ள பெண்ணும் செத்துப் போன தாவரமும் ஒன்று என்கிற மடமை நிரம்பிய இடம். வீட்டுப் பொம்பளைய காவல் காக்கிறது. ஆம்பளை வேலை என்கிற அதிகாரம் எப்போது கொடி கட்டிப் பறக்கும். ஊரை அதட்ட முடியாத அரிப்பை வீட்டுப் பெண்களிடம் காட்டி அவர்களை மிரட்டி தீர்த்துக் கொள்ளும் ஆண்கள் நிரம்பிய இடம்.

''என்னாடா, உங்க மாமியாரு கொண்டை போட்டு பூ வச்சிருக்கா...? என்ன விசேஷம் இன்னிக்கு?''

''ஒரு விசேஷமும் இல்லை. தினம் அப்படித்தான் வச்சுக்குது.'' மகன் பதில் சொல்வான்.

''அது பின்பாரம் யம்மா. கொண்டை போடாட்டி தலை நிக்காதாம்.'' வீட்டுப் பெண் சொல்லும்.

''அவன் மாமனாரு இருக்கானே சிவப்பிரகாசம்... அவன் ஒரு நாட்டு ஷோக்காளி. அத்தரு, சிலுக்கு சட்டை மல்லு வேட்டி இல்லாம வெளிய வரமாட்டான். சேட்டு பசங்க சகவாசம், ஜர்தா, பீடா, வெள்ளை செருப்புன்னு நடக்கறான். ஆம்பளை ஷோக்குப் பண்ணும் போது பொம்பளையும் ஷோக்காத்தான் இருக்கணும்.

கொண்டை போட்டு, பூ வச்சிகின்னு... அப்பதான் ஜோடியா சரியா இருக்கும்'' வீட்டின் பெரியவர் கேலி செய்வார்.

''ஐயே, நல்லா பேசறபோ. வெளிய வாசல்ல போற ஆம்பளை வெள்ளையா உடுத்திக்கிட்டு போவணும். துட்டுக் கொழுப்பு. அத்தரு பூசறான். வூட்டுக்குள்ள மீன் அரியற பொம்பளைக்கு என்ன வேண்டிக்கிடக்கு. கால உதைச்சு உதைச்சு மத்தியான நேரத்துல ஊஞ்சலாடு வாளாமே இவன் மாமியார், நடு ஹால்ல.''

''இருக்குது...ஆடறா.''

''ஆடட்டும். எத்தினி நாள் ஆடறாங்க பார்க் கலாம்.''

உலகம் இவ்விதம்தான். இல்லாதவனையும் பழிக் கும். எதும் இருக்கிறவர்களையும் பழிக்கும். படிக்காத வனை பாழ் என்றும். படித்தவனைத் திமிர் என்றும் இடித்துரைக்கும். அழகற்றவனை கேலி செய்யும் அழகுள் ளவனை அசிங்கம் பேசும். வலுவற்றவனை முடியாதவ னென்றும் வலுவுள்ளவனைப் பொறுக்கி என்றும் புறம் கூறும்.

இந்த தேசத்து ஜனங்கள் பேசிப் பேசிக் கெட்டுப் போனவர்கள். பிறர் வாழ்க்கையில் மூக்கு நுழைத்து முகர்ந்து தன் நாற்றம் மறக்கிறவர்கள். இந்த ஜனங்கள் —உழைக்கிற இடத்தில் பேசினார்கள். கவலையை மறக் கப் பேசினார்கள். சுள் குடித்துவிட்டுப் பேசினார்கள். கண் செருகி தூங்கும்போது பேசினார்கள்.

நிறைய பேசி நிறைய பழமொழிகள் கண்டுபிடித்து நிறைய நீதிக்கதைகள் சொல்லி, நிறைய பேருக்கு நிறைய பேர் போதித்து நிஜம் மறந்து போனார்கள்.

இரைச்சல் வாழ்க்கையாயிற்று. அமைதி துன்பமா யிற்று. இந்த இரைச்சல் அவர்களை சிதறி அடித்தது.

முனைப்புடன் செய்யும் வேலைகளில் முழுமையாக ஈடுபட முடியாமல் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது.

ஃபோனை பிடுங்கி வைத்த மாப்பிள்ளை அத்தோடு நின்றிருக்கலாம், பேசினான். தனக்குத்தானே பேசினான்.

''யாரோட பழகறது, எவ்வளவு பழகறதுன்னு ஒரு வரைமுறை வேணாம்? கரி புரோக்கராம். மாமா பையன் மாதிரி இருக்கான். இவனோட என்ன சங்காத்தம். துட்டு தூக்கி எறிஞ்சா கரி. இதுல நடுவுல புரோக்கர் எதுக்கு வூடா, நிலமா, தங்க நகையா புரோக்கர் வச்சு தேடறதுக்கு.''

''உங்களுக்குத் தெரியாது, சும்மா இருங்க'' புவனா அதட்டினாள்.

''உங்களுக்குத் தெரியுமா அவனை. உங்க வூட்டுக்கு வர போக இருந்தவனா... முதல்ல தெரியாதுன்னீங் களே...''

''நான் சொன்னது அது இல்லை. கரி, தங்கம் மாதிரி, கிடைக்காது.''

''எங்க வூட்டுப் பக்கம் ஒரு நாடாரு மூட்டை மூட்டையா அடுக்கி வச்சிருக்காரு. எங்க வூட்ல வெந்நீர் போடறதுக்கு வாங்கறதுதான்.''

''அந்தக் கரியில்லை, இது நிலக்கரி.''

''அப்படியா...என்ன பிரமாதம்... லீக்கோன்னு வாங்க...அதானே?''

இந்த முட்டாளோடு பேசுவதில் புண்ணியம் இல்லை என்று புவனா வாய் மூடியிருந்தாள். டிபன் பாக்ஸ் எடுத்து தேய்க்கப்போட்டு, சிவப்பிரகாசம் பெட்டி இறந்து துணி களைத் துவைக்கப் போட்டாள்.

''டக்குன்னு யாரையும் வீட்டுக்குள்ள வுட்றாதீங்க. அது நல்லதில்லை. காலம் கெட்டுக் கிடக்கு''

புவனாவுக்கு சுரீரென்று கோபம் வந்தது.

''என்னா செய்துட முடியும் என்னை...'' புவனா சீறினாள்.

''யார் வேணா எது வேணா செய்துடலாம்'' மாப்பிள்ளை பதில் பேசினான்.

இது பேச்சு தந்த புரட்டல். பேசுவது வழுக்கி வார்த்தைக்கு வேறு அர்த்தம் தரும். சொல் இடையே வந்து அர்த்தம் அனர்த்தமான நேரம்.

என்ன வேண்டுமானாலும் கெடுதல் செய்யலாம் என்கிற தொனியில் எல்லாம் செய்யலாம் என்கிற பதம்... உன்னை கெடுக்க முடியும் என்கிற அர்த்தமாய் போயிற்று. அவமானம் கொடுத்தது.

''வெட்டி எறிஞ்சிடுவேன்?''

''யாரை?''

''கெட்ட எண்ணத்தோட உள்ள நுழையற கம்மனாட்டிய.''

''செய்துட்ட பிறகுதான் வெட்டறது. அப்புறம் வெட்டி என்னா...ஒட்டி என்னா...முன்னாடியே காப்பாத்திக்கிறது நல்லது.

இதுவும் பேச்சால் வந்த ஆங்காரம். ஆங்காரம் கொடுத்த பேச்சு.''

''இத்தினி நாள் யார் காப்பாத்தினாங்களோ, அவங்களே இப்பவும் காப்பாத்துவாங்க. மத்தவங்களைத் தொங்கிக்கிட்டு இல்லை யாரும்.''

''அதாவது உன்னிய நம்பி இல்லை...வெளிய போடான்றிங்க.'' அவன் கேலியாய்ப் பேசினான்.

ஆமாம் என்று சொல்லத் தோன்றியது புவனாவுக்கு. பெண்ணைக் கொடுத்து விட்டோமே என்று பேசாது இருந்தாள்.

''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க அத்தே. இந்த நேரமாச்சும் நீங்க கொஞ்சம் அடக்கமா இருக்கறது நல்லது.''

ஓசை கேட்ட பாம்பு மாதிரி புவனா சீற்றத்துடன் பல் கடித்தாள். அவன் கவனித்துக் கொண்டான். சந்தோஷப்பட்டான்.

''ஏற்கனவே உங்க வூடு பத்தி கேலியா பேசறாங்க. இப்ப இன்னும் கேலியா போவும். சிவப்பிரகாசம் திருட்டுக் கேஸ்ல மாட்டிக்கிட்டு உள்ள போயிட்டாருன்னு சொல்லும். எங்க வூட்டுக்கும் அது தலைகுனிவுதானே... நாங்க எத்தினி பேருகிட்ட பதில் சொல்ல வேண்டியிருக்கு. நீங்க கொஞ்சம் யோசிக்கணும்...''

''அப்புறம்...?''

''அப்புறம் என்னா? நீங்க வெளிய வாசல்ல அதிகம் போறது நல்லதில்லை.''

''ஏன்?''

''புருஷன் ஜெயிலுக்குப் போயிட்டான். பொண்டாட்டி ஊர் சுத்துதுன்னு பேசுவாங்க.''

''பேசட்டும், என்ன வேணா பேசட்டும். ரெண்டு நாள்ல அவர் வெளிய வந்துருவாரு.''

''வந்துட்டா பரவாயில்லை. உள்ள இருடான்னு ஒரு வருஷம் போட்டுட்டா?''

அந்தப் பேச்சின் அநாகரிகம், மரியாதைக் குறைவு புவனாவை எரித்தது.

''போட்டுட்டா நாங்க தூக்குல தொங்கிடணுமா? அப்ப எல்லாருக்கும் திருப்தியாயிடுமா? என் உயிரைக் கொடுத்தாவது அவரை வெளிய கொண்டு வருவேன். யார் கைல கால்ல விழுந்தாவது மீட்டுட்டு வருவேன். ஆளில்லாத பொம்பளைதானேன்னு நினைக்கிறீங்களா... அவருக்கு வேண்டப்பட்ட ஆள் பட்டாளமே இருக்கு.''

''இந்த கரி புரோக்கர நம்பி பேசறீங்களா?''

''உங்களுக்கு அவர் கரி புரோக்கர்னுதான் தெரியும். அவரு செல்வாக்கு என்ன ஏதுன்னு தெரியாது. சும்மா மரியாதைக் குறைவா பேசாதீங்க.''

''என்னா, இப்ப மரியாதை குறைஞ்சு போச்சு? கேள்விப்பட்டவுடனே உதவிக்கு ஓடி வந்தேன். வக்கீல் போய் பார்த்தேன்.''

''பார்த்தவரைக்கும் சரி. இனிமே போய் வக்கீலைப் பார்க்க வேணாம். அவரே வருவாரு. இங்க நான் பார்த்துக்கறேன்.''

''அதான் இத்தினி நேரம் சொன்னேன். ஆம்பளை யில்லாத வூட்ல எல்லாரும் வரப்போக இருந்தா தப்பா பேச்சு வரும்னு.''

''யப்பா... நான் நாப்பது வயசுக்கிழவி. என்னைய யாரும் ஏதும் செய்துடமாட்டாங்க. செய்யற மாதிரி மனுஷன்களும் இங்க வரமாட்டாங்க. நீங்க அதிகம் கவலைப்பட வேணாம்.''

''நீங்க மட்டுமா... விட்ல வயசுப் பொண்ணு இருக்கே.''

''அது பள்ளிக்கூடம் போற குழந்தை.''

''அப்ப நீங்க கவலைப்பட மாட்டீங்க?''

''கவலைப்பட்டு என்ன ஆகப்போவுது? ஆக வேண்டிய காரியம் பாக்கறதுதான் முக்கியம்.''

''எங்க வூட்ல சொன்னது சரியாப் போச்சு.'' அவன் அலட்சியமாய் உட்கார்ந்தான்.

''என்ன சொன்னாங்க.''

அவன் பேசாதிருந்தான்.

''சொல்லுங்க. என்ன சொன்னாங்க.'' அதட்டினாள்.

''நெஞ்சுரப்பு கொண்ட பொம்பளைன்னாங்க கல்யாணத்தப்பவே''

''ஆமா...நெஞ்சுரப்பு கொண்ட பொம்பளைதான் நான். மாடு செத்துப்போனா ஒரு ஒப்பாரி...மஞ்சக் காமாலைக்கு ஒரு ஒப்பாரி வச்சு ஊரைக் கூட்டறது என்கிட்ட கிடையாது. இடியே விழுந்தாலும் கவலைப் பட மாட்டேன். கலங்காதேன்னுதான் எனக்கு கத்துக் கொடுத்துருக்காங்க''

மாடு செத்துப் போனதற்கும். மஞ்சள் காமாலைக்கும் ஒப்பாரி வைத்தது அவன் வீடுதான். பேச்சு குத்த அவன் நிமிர்ந்தான். உள்ளே கோபத்தில் குமுறினான்...

''சரி...நான் உங்க பொண்ணைக் கூட்டிட்டு போறேன். எம் பொண்டாட்டிய இங்க விட்டு வச்சா அவளையும் மாத்திடுவீங்க.''

''என்ன மாத்தறது...?''

''உங்களை மாதிரி நெஞ்சுரப்பு வந்துரும் அவளுக்கும். நம்மகிட்ட அதெல்லாம் நடக்காது. உதைதான். பல்லு முகறையெல்லாம் எகிறிடும்.''

''அது சரி...உங்க உரப்பு எல்லாம் பொம்பளைக் கிட்டதான் செல்லுபடியாகும். காரியத்துக்கு ஆவுமா... ஆனா ஊன்னா பொம்பளைய அடிக்கிற குடும்பம்.''

''என் குடும்பம் பத்தி பேசாதீங்க''

''என்னைப் பத்தி நீங்க பேசலாம். உங்க வீடு பத்தி நான் பேசக்கூடாதா?'' பேச்சு...பேச்சுதான். மனிதர்களை மனிதர்கள் சரியாய் புரிந்துகொள்ள உதவுகிறது. அதே பேச்சுதான் தவறாகவும் புரிந்துகொள்ள காரணமாகிறது.

14

அந்த ஹேப்பியஸ் கார்பஸ் மனு படுதோல்வி அடைந்தது.

யாரைக் கைது செய்திருக்கிறாய். எதற்காக...ஏன்... இன்னும் காவலில் வைப்பாயா? கைது செய்த ஆளைக் கொண்டு வந்து எங்கள் எதிரே நிறுத்து.

மனு செய்த மறுநாள் தங்கக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் சிவப்பிரகாசத்தை, அவரிடம் கைப்பற்றிய தங்கத்தை அவர் தன் வீட்டில் இது இருந்தது என்று எழுதிக் கொடுக்க ஒப்புதல் கடிதத்துடன் கோர்ட்டில் நிறுத்தினார்கள்.

அறுபது கோடி மக்கள் கொண்ட இந்த ஜனநாயக நாட்டில் பொருளாதார வேரை அசைக்கத் துணிந்து அறுக்க முற்பட்ட சிவப்பிரகாசம் ரகசிய விசாரணையில் இருக்கிறார். இவரை வெளியே விடுவது இவர் சார்ந்த குழுவை தங்கக் கடத்தல்காரர்களைத் தப்பிக்க வைக்க உதவியாகும். மேலும் சிவப்பிரகாசம் என்கிற சந்தேகத்திற்குரிய நபர் தலைமறைவாகலாம்.

இந்த தேசத்தின் பாதுகாப்பு முன்னிட்டு குற்றம் சாட்டப்பட்ட சிவப்பிரகாசத்தை இன்றிலிருந்து ஒரு வருட காலம் சிறையில் வைக்க உத்தரவிட வேண்டுகிறோம். சரியாய் ஒரு வருடம் முடியுமுன் மறுபடி சிவப்பிரகாசம் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்படுவார். அப்போது நீதி விசாரணைக்கோ அல்லது இவரின் விடுதலைக்கோ நாங்கள் தயாராய் இருப்போம்.

பெட்டிக்குள் இருந்த தங்க பிஸ்கட்டுகளை கோர்ட் பார்த்ததும் சிவப்பிரகாசத்தை ஒரே ஒரு கேள்வி கேட்டது.

''இவை உம்மிடம் இருந்ததா? உங்களிடமிருந்துதான் இவற்றை கைப்பற்றினார்களா?''

''ஆம்...''

கோர்ட் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் ஒரு வருடம் சிறையில் இருக்க உத்தரவிட்டது.

சிவப்பிரகாசத்தைக் கொண்டு வரும்போது வெறுமே வந்தவர்கள் கோர்ட் உத்தரவு கேட்டதும் விலங்கு பூட்டினார்கள்.

புவனாவுக்கு கோர்ட் நடவடிக்கை எதுவும் புரியவில்லை. சினிமாவில் நீட்டி முழக்கி பெண்களும், ஆண்களும் செந்தமிழில் பேசுவது பார்த்திருக்கிறாள். வியந்திருக்கிறாள். கைதட்டி ரசித்திருக்கிறாள். ஆகவே கனம் நீதிபதி அவர்களே என்று சரேரென்று திரும்பி நீள வசனம் பேசும் ஆட்கள் யாரும் நிஜக்கோர்ட்டில் இல்லை.

வக்கீல்கள் தாழ்ந்த குரலில் இரண்டொரு வார்த்தை பேசினார்கள். பேப்பர்களை பரிமாறிக் கொண்டார்கள். ரத்தன் சிங் ஏற்பாடு செய்த வக்கீலும், அரசு வக்கீலும் கை குலுக்கிக் கொண்டார்கள். சிரித்து ஜோக் அடித்தார்கள்.

தங்க பிஸ்கட் காட்டிய நேரம் கொஞ்சம் கோர்ட் பரபரப்பாயிற்று. காட்டிய மறுகணம் உடனே பெட்டியில் போடப்பட்டு துப்பாக்கி போலீசுடன் பெட்டி வெளியே போயிற்று.

இரண்டு நீதிபதிகளும் சிறிது நேரம் பேசிய பிறகு தீர்ப்பு சொல்லப்பட்டது. ஆங்கிலத்திலும் அரசு வக்கீல் பார்த்துச் சொன்னார்கள் போலீஸ்காரனுக்குக் கூட நீதிபதி தீர்ப்பு புரியவில்லை போலும்.

மாட்டு என்று புலனாய்வுத் துறை அதிகாரி சொன்னதும் விலங்கு வர, சிவப்பிரகாசம் கொஞ்சம் திமிறினான்.

''விலங்கு வேணாங்க. இப்படியெல்லாம் வேணாங்க' நீங்க எங்க கூப்பிட்டாலும் வரேங்க ஐயா. விலங்கு போடாதீங்கய்யா. நான் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு விலங்கு போடாதீங்கய்யா...''

''சிவப்பிரகாசம், இது ஒரு முறை. வண்டிக்குப் போனதும் எடுத்துறச் சொல்றேன். ப்ளீஸ் கத்தாதீங்க.'' அதிகாரி சொல்ல அமைதியானான். ஆனால் முகத்தில் கடுமை இருந்தது.

குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தமிழில் சொல்லி விடுங்கள் என்று நீதிபதிகள் குமாஸ்தாவிடம் சொல்ல, அடுத்தகேஸுக்கு ஆள் ஏற்றினார்கள். சிவப்பிரகாசத்தை கீழே இறக்கினார்கள்.

கோர்ட் வராண்டாவில் குமாஸ்தா சிவப்பிரகாசத்தை அருகே வரச் சொன்னான்.

''உங்களைத் தடுப்புக் காவல் சட்டப்படி ஒரு வருடம் சிறையில் வைக்க தீர்ப்பாயிருக்கிறது.''

''ஒரு வருடம் முடிந்த பிறகு உங்கள்மீது வழக்குத் தொடரப்படவேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும். வழக்கு தொடராத பட்சத்தில் ஒரு வருடத்

திற்கு மேல் ஒருநாள் கூட நீங்கள் சிறையில் இருக்க வேண்டியதில்லை. சிறையில் நீங்கள் சாதாரண உடையில் இருக்கலாம். கடிதப் போக்குவரத்து, பொழுதுபோக்கு இவற்றிற்கு உங்களுக்கு அனுமதி உண்டு. உங்களுக்குத் தரப்பட்டது தண்டனை அல்ல, அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள். அவ்வளவே.''

''ஒரு வருஷமா...?'' சிவப்பிரகாசம் கிட்டத்தட்ட மயங்கிய குரலில் கேட்டான்.

''ஐயோ பாவம். இந்தாள் தப்பானவனா தெரியலையே'' குமாஸ்தா பதில் சொல்ல, இழுத்துக் கொண்டு போனார்கள்.

புவனா கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டு வராண்டாவில் ஓடினாள். படியருகே நின்று புடவைத் தலைப்பால் வாய் புதைத்தாள்.

''புவனா...புவனா...ஒரு வருஷம் ஜெயில் புவனா... ஐயோ கடவுளே...நான் யாருக்கும் எந்தத் தப்பும் பண்ணலையே.''

உடைந்து நொறுங்கி அழுதான். படியில் இறங்க முடியாமல் போலீஸ்காரர் கையில் துவண்டான்.

''யோவ், விலங்கு எடுத்துருய்யா'' அதிகாரிகள் கட்டளையிட, விலங்கு எடுக்கப்பட்டது. சுற்றி நின்று கொண்டார்கள்.

''ஒரு அஞ்சு நிமிஷம் சமாதானம் பண்ணிக்கங்க அஞ்சு நிமிஷம்தான் டைம்.''

புவனாவுக்கு உள்ளே சகலமும் உடைந்து நொறுங்கி பளிச்சென்று ஒரு கடுமை எழுந்தது. முகம் முழுக்க இருண்டது. கூவக் கூட சக்தியில்லாது போயிற்று. புலப்பிப் படியில் சரிந்த புருஷன் யாரோ அந்நியன்போல ஒரு கணம் தோன்றினான்.

இப்படி ஒரு விதி இருக்கிறதா...இவனை உயிரோடு பிரிந்து, இவனற்று ஒரு வாழ்க்கை இருக்கிறதா...அசோக வனத்து சீதையாய் எனக்கொரு நேரம் இருக்கிறதா?

எந்தக் குற்றமும் செய்யாமல் இவர் சிறையில் வாட நான் வீட்டிலிருந்து என்ன செய்வது? எப்படி போராடுவது? இவர் எந்தத் தப்பும் செய்யவில்லை என்று யாரிடம் போய் சொல்வது அரசு என்பது யார்? முதலமைச்சரா... பிரதம மந்திரியா...போலீஸ் உயர் அதிகாரிகளா கோர்ட்டில் விடுதலை செய்து விடுவார்கள் என்று நம்பியிருக்க கோர்ட்டே ஒரு வருட காவல் என்று வைக்கிறதே.

முகம் பொத்தி அழும் புருஷன் அருகே போய் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''ஐயா அழுவாதீங்க'' மெல்ல பேசினாள். அவன் தலையை வருடிக் கொடுத்தாள்.

''யாரோ கண் பட்டாப்பல ஆயிடுச்சு புவனா. ஏதோ சாபம் போல வந்துருச்சு.''

''அழுவாதிங்கப்பா. மனசறிஞ்சு நாம எந்தத் தப்பும் பண்ணலை யார் காசும் எடுக்கலை. நமக்குக் கெடுதல் வராது. வந்தாலும் நம்மை அழிக்காது. இதுவும் நல்லதுக்குத்தான்னு நினைச்சி போயிட்டு வாங்க.''

''புவனா, நீ என்ன சொல்ற?''

''உங்களை வெளிய கொண்டார்ரதுக்கு எத்தனை உண்டோ அத்தினியும் செய்றேன். இத்த உலகத்துல சேட் எங்க இருந்தாலும் போய் பார்த்து ஒரு வார்த்தை கேட்கப்போறேன். நம்ம சொத்து மொத்தமும் அழிஞ் சாலும் சரி...உங்களை வெளிய கொண்டார்ரேன். அப்பா...அழக்கூடாது. அழவே கூடாது. நான் அழுவ றேனா பாருங்க.''

''யாரோ தலைக்கு மேல நின்னு விளையாடறாங்க. என்னையும் உங்களையும் பிரிச்சுப் போட்டுரலாம்னு சிரிக்கறாங்க. சிரிக்க முடியாது. அழுது ஏம்ப்பா உடம்பு கெடுத்துக்கறீங்க வாரி வாரி கூழ் ஊத்தினமில்ல. அந்த ஆத்தாகிட்ட போய் கேட்கமாட்டேனா ஏண்டி இப்படி செஞ்சேன்னு நீங்களும் கேளுங்க. இது நியாயமான்னு கேளுங்க. நம்ம நல்லதுக்குத்தான் நடந்துருக்குன்னு நினைச்சுக்குங்க. பயப்படாதீங்க.''

''புவனா, பட்டறை...''

''அது நான் ஓட்டறேன் பட்டறை, வீடு, தோட்டம் எல்லாம் பத்திரமா இருக்கும். நீங்க வர்ற வரைக்கும் நான் பார்த்துக்கறேன்?''

தோளில் கை கொடுத்துத் தூக்கினார்கள். படியிறங்கினார்கள். சிறிய கூட்டம் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தது, கூட்டம் பிளந்து ஜீப்பு அருகே அவனைக் கொண்டு வந்தார்கள்.

''வர வாரம் வரேன். கடவுள் மேல பாரத்தப் போட்டுட்டு அக்கடான்னு இருங்க புவனா இருக்கா சமாளிச்சுக்குவாள்னு தைரியமா போங்க. உடம்பைக் கெடுத்துக்கிட்டு மனசையும் தளர விட்டிருக்காதீங்க. சரியா சாப்பிடுங்க. இன்னும் நூறு மடங்கு பெரிசா வருவோம் பயப்படாதீங்க.''

''போகலாமா?'' அதிகாரி கேட்க அவன் ஜீப்பில் ஏறி உட்கார்ந்தான்.

அவன் முழங்காலில் ஒரு கையும் அவன் இடது தோளில் ஒரு கையும் ஆதரவாய் புவனா வைத்தபடி இருந்தாள்.

அவன் இலக்கின்றி வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

''அம்மா...நகர்ந்துக்குங்க, வண்டி கிளம்பணும்.''

அவள் நகராது இருந்தாள்.

''புவனா...''

''என்னப்பா...''

''நீயும் பயப்படாத இரு புவனா. இதுவும் நல்லதுக் குத்தான் ஒருத்தனும் ஒரு மயிரும் புடுங்கிட முடியாது. நான் தப்பு செய்யல புவனா. மறந்துகூட யாருக்கும் துரோகம் செய்யலை. நமக்குக் கெடுதல் வராது.''

''வராதுப்பா.''

''தைரியமா இரு புவனா.''

''இருக்கேன். நம்மள அழ அடிக்கணும்னுதான இப்படி அலைக்கழிக்குது. அழக்கூடாதப்பா. நம்ப ரெண்டு பேரும் அழக்கூடாது.''

''ஆமா புவனா.''

''அம்மா நகருங்க.''

''நீ ஓட்டுப்ப.''

வண்டி பளிச்சென்று கிளம்பியது.

புவனா நாலடி வண்டி கூடவே வேகமாய் நடந்தாள். தார் தரையில் மண் தடம் பதித்து, வண்டி புகை கக்கி முன்னே ஓடியது.

புவனா கையசைத்தாள்.

அவனும் கை வீசினான்.

வெள்ளைப் பெயிண்ட் அடித்த கதவுகள் கடந்து வண்டி இடது பக்கம் திரும்பியது. மறைந்தது.

புவனா தள்ளாடினாள்.

தலை சுற்றியது.

காலடி எடுத்து வைக்க, உடம்பு வலுவிழந்தது. கால்கள் நடுங்க தரையில் சாய்ந்தாள்.

''என் ஐயா...என் ஐயா...'' வாய்விட்டு கதறினாள். உள்ளங்கையால் தலையில் அடித்து வானம் பார்த்தாள்.

உதடு கோணி குரல் எழுப்பி ஒரு பெண் அபலையாய் தரையில் விழுந்து அழுதது பல பேர் வயிற்றில் சொரேர் என்று தாக்கியது.

காரில் ஏறின அதிகாரி கலங்கிப்போய் அவளைப் பார்த்தான். தனது குழந்தைகளை ஏனோ நினைத்துக் கொண்டான்.

தொலைவில் டீக்கடையில் இருந்த ரத்தன்சிங் பார்த்தான். அவன் அம்மா அழுகை அவனுக்கு நினைவு வந்தது.

கருப்புக் கண்ணாடி ஏற்றப்பட்ட காரில் சேட் உட்கார்ந்திருந்தார். அவருக்கு அவர் மனைவி நினைவுக்கு வந்தாள்.

ஒரு உத்தமிப் பெண்ணை இம்சை செய்ய இயற்கை தீற்றம் கொள்ளும். அவள் அழுகை ஓலம் எல்லா திக்கும் பரவி பாதகம் செய்பவரை அழித்து ஒழிக்கும் என்று தர்ம சாஸ்திரம் சொல்கிறது.

புவனாவின் அழுகை எல்லாத் திசையும் பரவியது. அவள் எழுந்து நின்றபோது பல பேர் வாழ்க்கை திசை மாறியது.

புவனா கண்களைத் துடைத்துக் கொண்டாள். அந்த அதிகாரி மெல்ல கார் ஓட்டி வேறு பாதை வழியில் போனான். ரத்தனசிங் மெல்ல அவளை நெருங்கினான்.

''அம்மா...என்ன...?''

''ச்சீ போடா, பேமானி...'' அடிபட்ட பாம்பாய் சீறினாள்.

ரத்தன்சிங் பின் வாங்கினான்.

புவனா நடந்து தன் காருக்குப் போய் வண்டி ஏறினாள். தானே சாவி போட்டு கார் இஞ்சினை உயிர்ப்பித்தாள். கிளட்ச் அழுத்தி தரை விட்டு வண்டியை நகர்த்தினாள்.

அருகே வந்த ரத்தன் சிங்கிடம் சேட் பேசினார்.

''பாப்பாவக் கூட்டிட்டு வா. இவங்க வீட்டுக்குப் போகணும் உடனே அழைச்சுக்கிட்டு வா.''

15

விளக்கு போடக்கூட மனசு இல்லை. இருக்கட்டும் இருட்டாகவே என்று தோன்றியது. வெளிச்சம் போட்டு என்ன ஆகப்போகிறது என்கிற அலுப்பு வந்தது.

ஒரு வார்த்தை கூட சொல்லாமல் பெரிய பெண் புருஷனுடன் போய்விட்டாள். அவளே கோபித்துக் கொண்டு போனாளா புருஷன் கோபத்துக்கு புறப்பட்டுப் போனாளா தெரியவில்லை.

இரண்டாவது பெண் உள்ளே நுழைந்து செய்தி கேட்டு ஓவென்று கட்டிக்கொண்டு அழுதது, வாய்விட்டு கதறியது. 'நான் எப்படிம்மா ஸ்கூல் போவேன்' என்று விசும்பிற்று. மெல்ல பெண்ணை விட்டுவிட்டு புவனா உள்ளே போனாள். மூத்த பெண்ணுக்கும் இதுதான் கவலையாகி விட்டிருக்க வேண்டும். இது அவமானமில்லை. புருஷன் வீட்டில் போய் எப்படி தலைநிமிர்ந்து நடப்பேன் என்று நடுங்கியிருக்க வேண்டும். தன் கவலையும் அதுதானே...அதனால்தான் விளக்குப் போடாமல் உட்கார்ந்திருக்கிறோமோ...

''பளிச்சென்று லைட்டு எரியுதே. அந்த ஊட்டு ஆளுதான் போலீஸ் பிடிச்சிட்டு போயிட்டாங்க. கட்டி கட்டியா தங்கம் ஒளிச்சு வச்சிருந்தாராம்.''

''எங்க வச்சிருந்தார்?''

''பூமில பொதைச்சு. அதற்கு மேல துளசிமாடம் கட்டியிருந்தாங்களாம். இடுச்சு பார்த்து எடுத்துக்கிட்டு ஆளையும் புடிச்சுக்கிட்டு போயிட்டாங்களாம்.'.

''த்தோ பாரேன் கிரகத்தை.' ஊர் பேசும், அது அவமானம் என்றுதான் தரையில் உட்கார்ந்து விட்டம் பார்த்து இருளோ என்று இருக்கிறோமோ... அவன் வேதனைக்காக வருத்தப்படவில்லை. எட்டு மணிக்கு வெள்ளித் தட்டில் சோறு சாப்பிட உட்கார்ந்து விடுவானே அதுபற்றி கவலை இல்லை. தன் அவமானம் முக்கியம். அவனால் தனக்கு அவமானம் நடந்துவிட்டது என்ற என்னமோ?''

இல்லை.

எழுந்தாள். பளிச்சென்று ஹால் விளக்கு போட்டாள். வராண்டா குமிழை அழுத்தினாள், முகம் கழுவிக்கொண்டு சுவாமி அறைக்குப் போய் விளக்கேற்றினாள். திரி தூண்டி விட்டாள்.

குனிந்து வணங்கினாள். நிமிர்ந்து படங்களைப் பார்த்தாள்.

''இனி உங்க இஷ்டம் அடிக்கணும்னு நினைச்சு அடிக்க ஆரம்பிச்சிட்டீங்க. சந்தோஷம் பசங்க அடி தாங்குமா வலி தாங்குமா... அடிச்சாச்சு. ஆனா ஒண்ணு என் புருஷனுக்கு தைரியம் கொடுங்க. அந்த ஆள் அழக்கூடாது. மனசறிஞ்சி யாருக்கும் எந்தக் கெடுதலும் நான் செய்யலை. இது புண்ணியம்னா அவருக்குக் கஷ்டம் தராதிங்க.''

''மத்தபடி ஊரு கூடி துப்புதே... பின்னால் பேசுதே...அது எனக்கு பெரிசில்லை. வீடும், தோட்டமும், காரும் பெரிசில்லை. இதோ போட்டிருக்கேனே நகை...அத்தினியும் கழட்டி உன் உண்டியல்ல போடறேன். தாலிக்கொடி உள்பட உன் காலடியில் வைக்கிறேன். என் புருஷனை சேதப்படுத்தாம என் கிட்ட கொண்டாந்து கொடு. திரும்பவும் அந்தாள் கிட்டே இந்த வீட்டு வாசப்படி ஏறணும். அது வரை எனக்கு உப்பில்லாத சோறுதான். படுக்கை தரையோடதான். இது சத்தியம்.

''அடிச்சு புடிச்சு ஒரு வருஷம்தானே. அதுக்கு மேல முடியாதில்லையா... தாங்கறேன். மலைக்கு போக மாலை போட்டவங்க மாதிரி நிக்கறேன்.

''அப்புறம் உன் இஷ்டம்.''

படங்களோடு பேசிவிட்டு அருகே இருந்த இரும்புப் பெட்டி திறந்தாள். கிட்டத்தட்ட காலியாய் இருந்தது. பூட்டி விட்டு இடம் தாண்டி தன் பீரோ திறந்தாள். பர்ஸில் பெட்டியில் இருக்கிற காசு திரட்டினாள். பாங்க் பாஸ் புத்தகம் எடுத்து கையிருப்பு பார்த்தாள். பதினாலாயிரம் இருந்தது. இரண்டு மூன்று மாதம் ஓட்டலாம்.

பட்டறையை என்ன செய்வது அந்தக் கணக்கில் என்ன காசு இருக்கும்...யார் தரவேண்டும் யாருக்குத் தரும்படி இருக்கும்...அந்த பாஸ் புக்கை பட்டறைக்குப் போனதும் பார்க்க வேண்டும்.

யாரும் வரவேயில்லையே தெரிந்து வரவில்லையா, தெரியாது வரவில்லையா...போன் போட்டு பார்க்கலாமா...யாரேனும் இந்நேரம் இருப்பார்களா...காவல் காரனாவது போன் எடுப்பானில்லையா...

வேறென்ன வசதிகள்? திருவான்மியூரில் கொஞ்சம் நிலம் இருக்கிறது. விற்றுவிடலாமா? நகைகளை அடகு வைத்து பிறகு மீட்டுக் கொள்ளலாமா?

பட்டறையை என்ன செய்வது? நடத்துவதா...நிறுத்தி விடுவதா... யார் வைத்து நடத்துவது... இஞ்சினியர் பற்றி இவரு நல்லவிதமா சொன்னதில்லை. என்ன செய்வது... யாரைக் கேட்பது?

நாளைக் காலை சேட்டை பிடித்துவிட்டால் ஒரு வாரத்தில் விடுதலை செய்து விடுவார்கள்.

அழகிரியும் முத்துலட்சுமியும் மெய்ல பின்வாசல் வழியே உள்ளே வந்தார்கள். ''என்னம்மா இப்படி ஆயிப்போச்சு'' என்றார்கள்.

''என்ன முத்து?''

''ஐயாவை ஜெயில்ல போட்டாங்களாமே?''

''ஆமா முத்து'' சொல்ல கஷ்டமாய் இருந்தது. 'இல்லையே' என்று ஏதாவது பொய் சொல்ல துடித்தது. கூடாது. பொய் சொல்லி அந்த பொய்க்கு மறுபடி அவமானப்படக் கூடாது. இந்த அவமானத்தோடு போகட்டும். யார் கேட்டாலும் 'ஆமாம்' என்று சொல்லலாம். முடிந்தவரை அதிகமாக யாரிடமும் பேசாமல் இருக்கவேண்டும். பேசலேன்னு கேட்டால் சொல்ல வேண்டியதுதான். எதுவேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்.

''ஏம்மா... தங்கம் கிடைச்சுதா? நம்ம வூட்லேர்ந்தா எடுத்தாங்க?''

''ஆமா முத்து''

''ஐயாவுதா?''

''இல்லை. அவர் சிநேகிதர்கிட்டேர்ந்து என்னவோ பார்சல்னு யார்கிட்டயோ கொடுக்கணும்னு, விவரம் தெரியாத வாங்கிட்டு வந்து இப்படி ஆயிப்போச்சு.''

''யாரு அந்தாளு?''

''சேட்டு'' முத்துலட்சுமி அவள் அருகே வந்து உட்கார்ந்தாள்.

''இவரை மாட்டிவுட்டு அந்த பேமானி ஓடிட்டானா?''

''ம்ம்.''

''வக்கீலு வச்சு கேஸ் ஆட முடியாதம்மா?''

''முடியாது, இது வேற கேஸ்.''

''அப்ப எத்தினி தண்டனை... அதெல்லாம் சொல்ல மாட்டாங்களா?''

''ஒரு வருஷம். அந்த சேட் கிடைச்சு ஒத்துக்கிட்டா அடுத்த வாரமே வந்துடலாம்.''

''பாவி. எங்க பூட்டான்?''

''தெரியலையே.''

''ஏம்மா, ஐயா தப்பு ஏதும் பண்ணலையே...?''

''இல்லை முத்து... அது என்னன்னு கூட தெரியலை இவருக்கு தெரியாததாலதான் நடுக்கூடத்துல கொண்டாந்து வச்சாரு.''

''இங்கித்து சேட்டுதானாம்மா அவன். இங்க ஏகப்பட்ட கேஸ் இருக்காம் அவன் மேல. அதான் பாம்பே பூட்டான். பாம்பேல பெரிய தாதாவாமே அந்தாளு... லேசுல கிடைக்கமாட்டானாமே''—அழகிரி பேசினான்.

''யார் சொன்னது?''

''தெரு முழுக்க இதுதான் பேச்சு .என்னாலேயே தலை காட்ட முடியலை. பேஜாரா போச்சும்மா. எல்லாரும் பார்த்ததும் எங்கிட்ட இதான் விசாரிக்கறாங்க.''

''அதாம்மா இதுகூட சொல்லிடுச்சு அம்மாவ வுட்டு எங்கியும் போகாத...வெளிய போறவர வேலையெல்லாம் நான் பாத்துக்கறேன்னுடுச்சு. நீ விளக்கு கூட போட்டுக்காம இருக்கறதப் பார்த்தேனா பக்குன்னு ஆயிடுச்சு. எதுனா செஞ்சுக்கப் போறியோன்னு திக்கு திக்குன்னு இந்தக் கோடில உட்கார்ந்து கண் கொட்டாத உன்னியே பார்த்துக்கிட்டிருந்தேன். மொண்டு மொண்டு கூழ் ஊத்தின மகராசிக்கு இப்படி ஆயிடுச்சேன்னு ஒரே அழுகை போம்மா, கடவுளே நல்லபடியா முடியணும்னு நினைச்சேன். எழுந்து விளக்கு போட்டே. நல்ல சகுனம்னு நினைச்சுக்கிட்டேன் ஏதோ கெட்ட நேரம்... கொஞ்ச நேரம் ஆட்டி வைக்குது. ஆட்டு... போன்னு சும்மா வுட்டுடு. நாலு தலைமுடியோட போயிடும்.''

உறவா, நட்பா, கடனா, எதுவுமில்லை வேலைக்காரி இத்தனை இதமாய் பேசுவதற்கு என்ன காரணம். இத்தனை நேரமும் தன்னையே கவனித்துக் கொண்டு தனக்கு இதம் சொல்லும் இந்த மனுஷியிடம் எத்தனை நன்றிக் கடன் எனக்கு.

''முத்துலட்சுமி...''

''சொல்லுமா.''

''நீ வேலைக்கு இருப்பேல்ல?''

''ஏன் கேட்கற...?

''உனக்கு அவமானம் ஒண்ணும் இல்லையே...''

''அட போம்மா நீ ஒண்ணு. அவமானமா...கூட்டிக் கொடுத்தோமோ...கொள்ளை அடிச்சோமா...அடுத்தவன் வயத்துல அடிச்சோமா... வெகுளியாட்டம் பொட்டி

கொண்டாந்து நடுவூட்டுல வச்சாரு...உன்னுதான்னு கேட்டா என்னம்மா சொல்லுவாங்க... ஆமான்னதும் இழுத்துக்கிட்டு பூட்டான். எங்க நாட்டுபுறத்துல ஒருத்தரோட மாடு காணாத போச்சு. பஞ்சாயத்துக்கு வந்து புகார் கொடுத்தாரு எங்கெங்கயோ தேடினாங்க. கடைசில ஒருத்தர் வீட்டுத் தோட்டத்துல கட்டியிருந்தது. பஞ்சாயத்துல அந்தாளைக் கூப்புட்டு விசாரிச்சாங்க யாரூட்டு மாடுன்னு. எனக்கென்னா தெரியும்... தோட்டத்துல பூந்து நாசம் பண்ணினதுக்கு சேதாரம் வேணும்னான். பஞ்சாயத்து ஒத்துக்கலியே. மாடு திருடினதா நூறு ரூபா அபராதம் போட்டாங்க.''

''திருடியிருந்தா வாசல்ல கட்டியிருப்பேனாய்யா'ன்னு கேட்டான்.

''உன் மாடு இல்லேன்னா வுடவேண்டியதுதான்... ஏன் உன்னது மாதிரி கட்டிவச்சேன்னு அபராதம் இதுவும் நேரம்கறது.''

''அழகிரி நீ என்ன சொல்ற?''

''இது என் வீடும்மா... நீ போடான்னாதான் போவேன். மத்தபடி அழகிரி, அழகிரி பொண்டாட்டி எதுக்கும் அஞ்சினவங்க இல்ல.''

''நாளைக்கு பட்டறைக்குப் போகணுமே...''

''நானும் வரேன். அதுக்கு கரி வாங்கப் போய்தானே ஐயா மாட்டிக்கிட்டாரு. எனக்கு அந்த பட்டறையே பிடிக்கலைம்மா. வித்துட்டு வேற எதுனா செய்யலாம்மா.''

''அவரக்கேட்காத எதுவும் செய்யமுடியாது அழகிரி. போய் பார்த்து யாரையாவது நடத்தச் சொல்லலாம்''

''அங்க யாரும்மா...எல்லாம் டகல்பாஜி ஆளுங்க...''

''போய்ப் பார்க்கலாமே...''

வாசல் கதவு தட்டும் ஓசை கேட்டது.

''யாருப்பா...?''

''யாரோ லேடீஸ் வராங்க.''

''பக்கத்து வீடா. அதான் கேட்டுட்டே இருந்துச்சு'' முத்துலட்சுமி எழுந்தாள்.

''யாருங்க...?''

''புவனா இருக்காங்களா?''

''நீங்க யாரு?''

''பாப்பான்னு சொல்லுங்க,'' குரல் கேட்டது சேட்டு பெண். துள்ளி எழுந்தாள். முத்துலட்சுமி விலக அந்தப் பெண் மெல்ல நடந்து உள்ளே வந்தாள்.

உடம்பு வாடியிருந்தது. முகத்தில் சோகை படர்ந்திருந்தது.

குழந்தை பெற்றுவிட்டாளா, எப்போது...உள்ளே கேள்வி எழுந்தது. சேட் அனுப்பினாரா? எதற்கு...பயம் வந்தது.

''என்ன...?''

''நான் உட்காரட்டுமா?''

புவனா பேசாதிருந்தாள்.

அவள் நடந்துபோய் சோபாவில் உட்கார்ந்திருத்தாள்

''நீங்க உட்காரவியா?''

''சொல்லுங்க?''

''அப்பா வந்திருக்காங்க.''

''எங்க?''

''வெளிய கார்ல இருக்காரு'' பளிச்சென்று போனுக்குக் கண் தாவிற்று.

''பதட்டப்படாதீங்க. அப்பா உங்களோட பேசணும்னாரு.''

உள்ளே, எண்ணங்கள் தாறுமாறாக ஓடின. அந்த ஆள் இங்கே வரப்போகிறானா? என் புருஷனை ஜெயிலுக்கு அனுப்பியவன் இங்கே வரப்போகிறானா? அழகிரி...அழகிரி... போலீஸ் வரவழை... ஓடு அழகிரி...

நிமிர்ந்து பரபரப்புடன் அழகிரியைப் பார்த்தாள். அழகிரி சுவரோரம் ஒதுங்கிக்கொண்டான், புரிந்து கொண்டானா தெரியவில்லை.

''என்ன விஷயம்?''

''கோவமா உங்களுக்கு''

''இருக்காதா... தலைல கல்லு தூக்கி போட்டுட்டு நிதானமா வந்து தப்பு நடந்து போச்சுன்றீங்களே...''

''ப்ளீஸ், மெல்ல பேசுங்க.''

''எப்படி...எப்படி மெல்ல பேசறது, கைல விலங்கு போட்டு கூட்டிட்டு போனதுக்கப்புறமும் எப்படி பேசாம இருக்கறது...?''

புவனா பிளறினாள்.

எதிர்வீடுகளில் ஆட்கள். வாசலில் வந்து நின்றார்கள்.

16

தன்னை மீறி தான் ஒரு பதட்டம் கொள்வதை புவனா உணர்ந்தாள், அந்த பதட்டத்தில் அவஸ்தைப் படுகிற போதே இதற்கு முன் இம்மாதிரி தனக்கு

நிகழ்ந்ததே இல்லை என்பதும் தெரிந்தாள். சண்டையே போடாமல் வளர்ந்துவிடவில்லை, சொந்த தமக்கையோடும், மாமனார் வீட்டோடும் இதற்கு முன் கத்தி சண்டை போட்டிருக்கிறாள். சமீபமாய் மாப்பிள்ளையோடும் சீறினாள். அதையெல்லாம் திட்டமிட்டவை. சண்டை போட்டே ஆக வேண்டும் என்று மனசுக்குள் தீர்மானம் செய்தவை, தீர்மானித்து போடுகிற சண்டையில் தெளிவு இருக்கும். தந்திரம் வேலை செய்யும். மடக்கி சரிக்க புத்தி படபடக்குமே தவிர உடம்பு ஆடிப் போகாது. பாப்பாவை பார்த்தவுடன் சேட்டு வாசலில் இருக்கிறான் என்று தெரிந்தவுடன், உடம்பு ஆடிப் போயிற்று. ஆவேசம் வந்தது. ஆத்திரத்தில் புத்தி சூடானது. புத்தி சூடானதில் யோசிப்பு நிதானம் போயிற்று. அவளையும் மீறி குரல் உரக்க எழுந்தது.

''ஒருவாரமாய் எதிர்வீட்டில் ஏக ரகளை: இப்போது மறுபடியும் ஏதோ குரல் கேட்கிறதே என்றவுடன் சுற்றுப்புற ஜனங்களுக்கு ஆவல் பீறிட்டது. ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனின் வேதனையைப் போல சுவாரசியமான விஷயம் எதுமில்லை. நல்ல வேளை இந்த வேதனை எனக்கு வரவில்லை என்கிற சந்தோஷம். இப்படி வந்தால் என்ன செய்வேன் என்கிற கற்பனையும். கவலையுமே பிறர் வேதனையை கவனிக்கச் செய்யும் ஆதாரங்கள். சினிமாவும், நாடகமும், கதையும். காவியமும் இதற்குத் தீனிபோடும், உத்தி சினிமா நிழல், நாடகம். பொய், கதை கற்பனை உண்மையாகவே ஒரு வேதனைக்குரல் கேட்கிறபோது இந்த தலைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு ஊர்ஜனம் உண்மைக் கதையை ரசிக்க வந்துவிடுகிறது.

அண்டை எதிர்வீடுகளில் ஆட்கள் அதிகமாக, சேட் கவலையானார். கார் இருட்டுக்குள் உட்கார்ந்திருந்த போதும் பாப்பாவை பத்திரமாக கூட்டிக் கொண்டு போகவேண்டும் என்று பரபரத்தார், பச்சை உடம்புக்

காரியை பயமுறுத்தி விடுவார்களோ என்று பதட்டப் பட்டார். ஹார்ன் அடித்தால் கார் மீது ஜனங்கள் கவனம் திரும்பும் கிட்டே வந்து 'யார்' என்று பார்த் தாலும் பார்க்கும். தன்னை 'யார்' என்று பார்க்காமல் இருப்பது நல்லது.

சட்டென்று கீழே இறங்கினார். தோட்டக்கதவு திறந் தார். நடந்து வராண்டாவில் ஏறி 'பாப்பா?'' என்று கூப்பிட்டார்.

பாப்பா திரும்பினாள்.

''அப்பா வந்துட்டாங்க'' என்றாள். எழுந்து நின் றாள். வாசலில் நிற்கிற வடஇந்திய உடம்பைப் பார்க்கிற போது புவனாவிற்கு உடம்பெல்லாம் நடுங்கியது. இவன் தானா! இவனால்தானா? என் புருஷனை. கோர்ட் வாசலில் கைவிலங்கு போட்டுக் கதறக்கதற இழுத்துச் சென்றது இந்த பாவியால்தானா? நெஞ்சுக் கூட்டுக்குள் ரத்தம் கொதித்தது. கோபத்தில் மூச்சுத் திணறியது. நந்தவனத்து மான்கள் போல நானும் என் புருஷனும் உரசி உரசி இந்த வீட்டிற்குள் சுற்றிக் கொண்டிருந் தோமே...ஒரே வீச்சில் கலைத்துவிட்டாயே...

உனக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம்? உன் அட்டூழியத்திற்கு என் புருஷனை எதற்கு தேர்ந்தெடுத் தாய்? வெள்ளைச் சட்டையும், வேட்டியும், வெற்றிலை வாயும், சென்ட் மணமுமாய் இருந்தவனை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு இங்கு ஏன் வந்தாய்? உள்ளே ஆத்திரம் அவஸ்தைப்பட்டது.

'புவனா பெண். புருஷன்தான் உலகம்' என்று சந்தோஷமாய் ஏற்றுக் கொண்ட பெண், அந்த புருஷனும் அவளுக்கும் பிடித்ததுபோல் அமைந்துவிட, அதில் கர்வப்பட்டு அந்த கர்வத்தை சகலவிதமாகவும் வெளிப் படுத்திக்கொண்ட பெண். கையில் உள்ள பொம்மையை குழந்தை முத்தமிட்டுக் கொண்டிருக்க

வெடுக்கென்று பிடுங்கி எறிந்ததும் வீறிட்டு அலறுமே அந்த நிலையில் புவனா இருந்தாள். குழந்தைக்கு சபிக்கத் தோன்றாது. யார் பிடுங்கினார்களோ அவர்கள் காலையே கட்டிக் கொண்டு அழும். 'என் பொம்மையை கொடு' என்று கெஞ்சும். புவனாவின் வேதனையும் அப்படித்தான் செய்ய வைத்தது. இதுதான் சேட் என்று மனதில் தைத்த தும், ஓடிப்போய் அவன் காலில் விழுந்தாள்.

''எம் புருஷனை குடுத்திருங்கய்யா. எம் புருஷனை எங்கிட்ட குடுத்திருங்கய்யா. அவரு எந்த தப்பும் பண்ணாதவருன்னு எல்லாரும் நம்புறங்களேய்யா இந்த கூடத்துல கொட்டி திறக்கிற வரைக்கும் அதிலே இருந்தது என்னான்னு அவருக்குத் தெரியாதய்யா. ஒரு பாவமும் செய்யாதவரை ஜெயிலுக்கு அனுப்பிட்டீங்களே... உங்கள ரொம்ப நல்லவர்னு சொன்னவர வம்புல மாட்டி விட்டுட்டீங்களே! வக்கீல் வச்சு வாதாட முடியாதாமே... ஜாமீன் எடுக்க முடியாதாமே... நீங்க கிடைச்சாலொழிய அவர் தப்பிக்க முடியாதாமே... அவர எப்படியும் மீட்டுக் கொண்டாந்திருங்கய்யா. எல்லா செலவையும் நான் ஏத்துக்கிறேன். அவர் எப்படியும் வெளியில கொண்டாந் திடுங்கய்யா.''

சேட் கலங்கினார். அவளைத் தொட கைநீட்டி, பின் வாங்கினார். 'பாப்பா' என்றார். பாப்பா ஓடிப்போய் புவனாவை சிரமப்பட்டு தூக்கி சோபாவில் உட்கார வைத்தாள். அருகில் உட்கார்ந்து அணைத்துக் கொண் டாள்.

சேட் கள்ளக்கடத்தல்காரன் ஆனாலும் குடும்பஸ்தன், பனியா என்பவன் பணம் சம்பாதிக்க வேண்டும். எப்படி யாவது சம்பாதிக்க வேண்டும். ஒரு ரூபாய் போட்டு நாலு ரூபாய் சம்பாதிக்க வேண்டும். அப்படிச் சம்பாதிக்க எதுவும் செய்யலாம். கள்ளக் கடத்தல் ஒரு தொழில். சில

சமயம் ஒன்றுக்கு ஆறு லாபம் வரும். சில சமயம் ஒன்றுக்கு இரண்டு பங்கு நஷ்டம் வரும், சில சமயம் இப்படி விபரீதமும் ஏற்படும், இந்த சேட்டின் நெருங்கிய சொந்தக்காரன் ஜெயிலில் இருக்கிறான், இதே மாதிரி எசகுபிசகாய் மாட்டிக்கொண்டு ஏழு வருடம் தண்டனை அனுபவிக்கிறான். ஆனால் அவன் மாறவில்லை, அவன் மனைவியும் தலையில் அடித்துக்கொண்டு அழவில்லை. தண்டனையைக் கேட்டதும் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். கோர்ட் வாசலில் சேட்டின் கையைப் பிடித்துக் கொண்டான். சேட் பேசுவதற்கு முன் அவன் பேசினான்.

''பாபுஜி உங்கள்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என் குடும்பத்தை நீங்கள் கைவிட மாட்டீர்கள் என்று தெரியும். நன்னடத்தைக்காக தண்டனை குறையுமா? இந்தக் கேசில் என்று மட்டும் கேட்டுச் சொல்லுங்கள் போதும்'' என்று சொல்லிட்டு சாதாரணமாய் ஜெயிலுக்குள் சென்றுவிட்டான். அவன் மனைவி இன்று வரை பல் தேய்க்கிற வேப்பங்குச்சியோ, ரசகுல்லாவோ, பாவாடையோ சட்டையோ சுசு கொடுத்து வாங்குவதில்லை. எலலாம் சேட்டு வாங்கிக் கொடுத்ததுதான். அவளுடைய வீட்டிற்கு மொசைக் தரை போட்டு கலர் டி வி யும் கண்ணாடி ஜன்னலும் வைத்தது சேட் காசில் தான். பால்கோவா விற்கிற பையன் அவளைப் பார்த்து கண்ணடிக்க, சேட்டுக்கு ஒரு வார்த்தை அவள் சொல்லியனுப்பியதும் அவன் விலா எலும்பு முறிந்து போயிற்று.

பட்டப்பகலில் அடிப்பட்ட பால்காரப் பையனைப் பார்த்ததும் அந்தத் தெருவே அவளை மரியாதையாய் பெஹன்ஜி என்று அழைத்தது. ஆனால் இந்த தமிழச்சி சிக்கலான கேஸ் மானம் அவமானம் பார்க்கிற ஜாதி. மயிர் நீப்பின் உயிர் வாழா கவரிமான். இப்படி உள்ள கவரிமானால் என்ன லாபம் உலகிற்கு? சேட்டிற்கு கேள்வியானாலும் இந்தக் கேள்வியால் சிக்கல் தீராது.

இதையெல்லாம் இப்போது, யோசிப்பதைவிட பேசுவதே நல்லது. ''அம்மா நான் சொல்றது மூணு நிமிஷம் அமைதியா கேக்குறீங்களா? கேட்டா உங்களுக்கும் நல்லது. எனக்கும் நல்லது'' கொச்சைத் தமிழில் பேச துவங்கினார். புவனா அமைதியானாள்.

''அம்மா உங்க புருஷனை எம்பேர்ல கம்ப்ளெய்ன்ட் கொடுக்க சொல்லுங்க. அவருக்கு வேற பேருல என் கம்பெனி ஆள் போய் ஒரு டிராவல்ஸ் டிக்கெட் எடுத்தோம். அந்த டிராவல்ஸ் என் கம்பெனிக்கு பில் போட்டு நாங்க துட்டு கொடுத்தோம். இது ரசீது. அந்த டிக்கெட் பேர் கொண்டவர் என் கம்பெனியில் வேலை செய்கிறவர். இந்த கவர்ல நான் தனியா கடுதாசி எழுதி வச்சிருக்கேன். உங்க புருஷனுக்கும் இந்த பெட்டிக்கும் சம்பந்தமில்லை. என் ஆள் செய்த தவறுல உங்க புருஷன் மாட்டிக்கிட்டார்னு என் கைபட லெட்டர் எழுதியிருக்கேன். சிட்டியில பெரிய வக்கீல் நாளைக்கு உங்ககிட்ட வருவார். அவர் கிட்ட இந்த இரண்டு தகவலையும் சொல்லி மறுபடியும் ஹேப்பியர் கார்ப்பஸ் போடச் சொல்லுங்க. பதினைஞ்சு நாள்ல வெளிய வந்திடுவார். நான் உள்ள போனா உங்க புருஷன் வெளிய வருவார்ங்கிறது நிச்சயமில்லை. எனக்கு பத்து வருஷம். உங்க புருஷனுக்கும் அஞ்சு வருஷம் கிடைக்கலாம். நான் வெளிய இருந்தாத்தான் உங்க புருஷன் வீட்டுக்கு வர முடியும். இந்த முயற்சி தோற்றுப் போனா இன்னொரு முயற்சி பண்ண முடியும். எங்கள மீறி ஒரு தப்பு நடந்து போச்சு. உங்க வேதனைக்கு நான்தான் காரணம். எத்தினி லட்சம் கொட்டி கொடுத்தாலும் உங்க அழுகைக்கு என் காசு ஈடாகாது. எனக்குத் தெரியும். அம்மா நான் அஞ்சு லட்சம் தர்றேன். மனசு தைரியமாக்கிக்கிட்டு வக்கீலோட பேசுங்க. கரன்சியோ டிமாண்ட் டிராப்டோ, செக்கோ எப்படிவேணும்னாலும் தர்றேன்'' பனியா வேதனைக்கு விலை பேசினார்.

'அஞ்சு லட்சமா' புவனா வாய் பிளந்தாள். அவள் மனசுக்குள் நான்கைந்து நிலக்கரி லாரிகள் பட்டறை, வாசலில் நின்றன. தீ கொழுந்துவிட்டு எரிந்தது. இரும்பு உருகி வழிந்தது. நஷ்ட ஈடா...கேள்வி தோன்றிற்று. அஞ்சு லட்ச ரூபா கொடுத்துட்டா என் புருஷன் ஜெயில்ல கீரைச்சோறு சாப்பிடலாமா...கொள்ளைக்காரன், கொலை காரனோடு தரையில் படுத்துத் தூங்கலாமா...இந்த வீடு கோலம் போடாமல்...குத்து விளக்கு எரியாமல் பாழாய் கிடக்கலாமா...இதற்கு ஐந்து லட்ச ரூபாயா? ஊரை அடித்து உலையில் போட்ட காசை கொடுத்து என்னை யும் பாவியாக்கிறாயா...ஹேப்பியா கார்ம்பஸை தள்ளுபடி செய்து விட்டால்...என் புருஷன் சிறை வாசம் ஒருமைப் படுத்தி விட்டால்...உன்னிடம் மேற்கொண்டு பேசமுடி யுமா...அஞ்சு லட்சம் கொடுத்துட்டேனே ஏன் கத்த றேன்னு கேட்க மாட்டியா...எல்லாத்தையும் காசால அடிக்கப் பார்க்கிறாயா. அஞ்சு லட்சம் காசு புருஷனாக முடியுமா...அதன் மீது கால் போட்டு கட்டிக்கொண்டு தூங்க முடியுமா...இது மூக்கு உறிஞ்சி காரக்குழம்பு சாப்பி டுமா...புவனா என்று கட்டைக் குரலில் கூப்பிடுமா... ஒத்தையா உடுத்திக்கிட்டு வாடி என்று கெஞ்சுமா... நாகாத்தம்மன் கோவில் கூழ் ஊற்றுமா...உன்னிடம் உதவி கேட்டுத்தானே என் புருஷனுக்கு இந்த நிலை. உன் காசு நல்லக் காசாக இருந்தால் அவனுக்கு இந்த உபத் திரவம் வந்திருக்குமா...மறுபடியும் உன்னிடம் உதவி கேட் பதா...இன்னும் உபத்திரம் வரவா...இது ஒழுக்கக் கேடாய் முடியும் இது எங்களுக்கு பாடம். நெஞ்சில் பசுமையாய் பதிந்த பாடம். புருஷ சந்தோஷத்தைக் காசால் வாங்க முடியாதடா பாவி. அவன் கண் சிமிட்டலை. கள்ளச் சிரிப்பை, கனிவை, காதலை, காசால், எடை பேட முடியாதடா. உன் உறவு போதும், உன் உதவி போதும். உன் ஐந்து லட்சம் நான் துப்பிய எச்சிலுக்கு சமானம்.

நான் காலில் விழுந்தது காசுக்காக அல்ல, புருஷனை ஜெயிலுக்கு அனுப்பியதற்கு அஞ்சு லட்சம் இவளுக்குக் கூட அஞ்சு லட்சம் கொடுத்தா என்னன்னு உனக்குத் தோணும். காசு சம்பாதிக்கணும்னு கஷ்டப்பட்டவங்க தான் நாங்க. கள்ளக் கடத்தலோ, கள்ள உறவோ நினைச்சுப் பார்க்காத ஜாதி. உன் பொண்ணுகிட்ட பேசினது தப்பு. உன்கிட்ட அழுதது பாவம். நீ எழுந்து போனதும் வீடு அலம்பணும். மிஞ்சிமிஞ்சிப் போனா ஒரு வருஷம். என் புருஷன் வருவாரு. அதுவரை என் வீடு, என் மனசு, என் உடம்பு சுத்தமா இருக்கும். சேட் அஞ்சு லட்சம் குடுத்தார்னு எம் புருஷனுக்கு நான் சொல்றதுகூட அசிங்கம். எழுந்து போ.

எனக்கு உன்மீது கோபமில்லை. எழுந்து போ. விதியை மதியால் வெல்ல முயற்சிப்பதைவிட, விதியை இறைவன் விளையாட்டென்று எடுத்துக்கொள்வது உத்தமம். விவேகம். எழுந்துபோ.

புவனா பாப்பாவின் கைகளை உதறி எழுந்தாள். சமையலறைக்குப் போனாள்.

''அழகிரி. அவங்க ரெண்டு பேரையும் வெளிய அனுப்பிச்சுட்டு வாசல் பூட்டிடு. எங்களுக்கு தெரிஞ்ச வக்கீலோட நாங்க பேசிக்கறோம்னு சொல்லிடு. அவங்க ளுக்கு துட்டு செடியில காய்க்குதாம். காச்சு வெம்பின துட்டேல்லாம் நாங்க எடுத்துக்கமாட்டாம்னு சொல்லிடு. கஷ்டப்பட்டு சம்பாதிச்சுக்குவோம்னு சொல்லிடு.'' அழகிரி ஹாலுக்கு வந்து ஓரமாய் நின்று கொண்டான். புவனா பாத்ரூம் கதவை திறந்து கொண்டாள். உள்ளே போய் மூடினாள். தாழிட்டாள். ஆளில்லாத அந்த இடத் திலும் புடவைத் தலைப்பை வாயால் கவ்விக் கொண்டு ஜாக்கெட்டை அவிழ்த்தாள். சுவர் கூட தன்னைப் பார்த்துவிடாதபடிக்குபாவடையைநெஞ்சோடுசட்டென்று

உயர்த்திக்கொண்டாள். ஷவர் திறந்தாள். தலை பிரித்து விட்டாள். ஜில்லென்று குளிர்ந்த நீர் உடம்பை நனைத்தது. சூடு குறைந்தது. சூடான உலோகத்தில் குளிர்ந்த நீர் பட, இறுகும் என்பது உலோக இயல். புவனா இறுகினாள்.

17

உள்ளே போய் வெறும் சோறில் கொஞ்சம் மோர் விட்டு சாப்பிட்டாள் தலை ஈரம் முதுகு உறுத்தியது முடியின் ஈர நுனிகள் சில்லென்று அடிக்கடி தாக்கின. கையலம்பி புடவையில் துடைத்துக் கொண்டு புருஷன் அறைக்கு வந்தாள். பீரோ திறந்து நகைகளைப் பரப்பினாள். தடித்த நோட்டு எடுத்து பிள்ளையார் சுழி போட்டாள். எல்லா நகைகளின் பெயர் எழுதி குத்து மதிப்பாய் எடைபோட்டாள். காது தோடுகள் கழற்றி விட்டு வெறும் ஸ்டட் அணிந்து கொண்டாள்.

உடம்பில் இப்போது உள்ள ஒன்பது சவரன் தவிர, காது ஸ்டட், தாலிக்கொடி, ஸ்டட் வளையல்கள் இரண்டு தவிர, நாற்பத்தி மூன்று சவரன் நகைகள் இருந்தன.

ஒரு மாசத்துக்கு இரண்டு சவரன் நகை விற்றால்கூட பனிரெண்டு மாதம் கடந்துவிடலாம். வீடு, தோட்டம், நிலபுலன்கள் விற்றால் அவன் விடுதலை ஆனதும் எங்காவது போய் ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம். சோறு கவலையில்லை. சோறு இல்லாமல் சொத்து போகிற நிலையில்லை. ஆனால் மானப் பிரச்சனை, புருஷனுக்கு கேவலமான ஒரு இடம் திடைத் திருக்கிறதே அதுதான் பிரச்சனை.

ஆனால் காசு என்று ஏதோ கொஞ்சம் கையிலிருக் கிறதே. இது பெரிய பலம். ஒரு வக்கீலுக்கு தரவோ, கோர்ட்டுக்கு காசு கட்டவோ, போகவர பயணத்திற்கோ கையில் காசு இருப்பது மிகப்பெரிய சௌகர்யம்.

பனிரெண்டு ரெண்டு இருபத்திநாலு— மீதி பத் தொன்பது சவரன் நகைகள். இது வழக்காட போதும். நகைகளை மடியில் வைத்துக் கொண்டாள். இந்த மூக் குத்தி திருமணம் நிச்சயமானதும் செய்தது. வாங்கி போட்டே ஆகவேண்டும் என்று மாமியார் பிடிவாதம் செய்தாள். நெளி மோதிரம் அவர்கள் திருமணத்தின் போது போட்டது. கல்லட்டிகையும், பதக்கச் செயினும் முதல் குழந்தை பிறந்தபோது செய்தது. இத்தினி வயசுக்கு மேல ஒட்டியாணம் எதுக்கு புவனா? வேற எதுனா வாங்கிக்கோ. 'முடியாது ஒட்டியாணம் வேணும்' அடம்பிடித்து வாங்கிக்கொண்டாள். இது அழகுக்கு இல்லப்பா. பொண்ணு பெத்து வச்சுருக்கேன். இது கல்யாணத்துக்கு நிக்கிற போதுதான் முன்ன பின்ன குறைஞ்சதுன்னா டக்குன்னு கடைல வச்சுட்டு சமாளிக் கலாமில்லை. மத்த நகை போட்டு போட்டு உருமாறும் ஒட்டியாணம் எப்பனா போடலாம், நாலைந்து முறை போட்டதுதான். மற்றபடி பீரோவிலேயேதான் இருந்தது இந்த நகை.

இதோ நாளைக் காலையில் வீடு விட்டு நகரப் போகிறது. சகலமும் எங்கே போய் காசாகப் போகிறது, விற்றுவிடலாமா, அடமானம் வைக்கலாமா?

அடகு வைத்தால் எப்போது மீட்பது? அநியாய விலைதானே. நட்டமும் மீட்கும் போது வட்டி ஏறி முழுவிலைக்கும் மேலே கொடுத்து... அத்தனை முக்கியமா இந்த நகைகள்? இல்லை. நகைகள் முக்கிய மில்லை. புருஷன் முக்கியம், விற்று விடலாம். விற்று காசாக்கி கொஞ்சம் கொஞ்சமாய் செலவு செய்து...

எங்கடி நகையெல்லாம்? கேட்பானோ, யாரை கேட்டு வித்தே? கோபிப்பானோ...? இல்லை அது நொந்து உள்ளே மனசு ஒடிந்து கிடக்கிறது. நகையோ, வீடோ, பணமோ, நானோ, குழந்தைகளோ தெரியாது. மல்லாந்து தான் ஏமாந்தது மட்டும் நினைத்து, தன்னுள் புலம்பியபடி இருக்கிறது.

சரி, நகைகளை விற்றுவிடலாம். பட்டறை? ஒரு மாசத்துக்கு இரண்டு சவரன் நகை குடித்தனம் பண்ணப் போதும். பட்டறை நடத்த போதுமா? பட்டறையை மூடி விடலாமா? மூடினால் என்ன ஆகும்? நஷ்டம் வருமாயினும் இதற்கு காசு கொடு, அதற்கு காசு கொடு என்று கேட்பார்களா? பாங்கில் லோன் அடைக்க வேண்டியிருக்குமா? கடன் அடைக்காது போனால் பட்டறையை வங்கி சீல் வைக்குமா?

பட்டறை தொடர்ந்து நடத்தினால் யார் நடத்துவது எஞ்சினீயர்...

அந்த ஆளா?

ஏமாற்றுகிறான் என்று சொல்வாரே. அவனை நம்பி இறங்க முடியுமா? மேலும் நஷ்டம் வந்து விற்கவும் முடியாமல் நடத்தவும் முடியாமல்...

விடியல் வரை நடை போட்டு குழம்பிக் குழம்பி உட்கார்ந்திருந்தாள். நெற்றிப்பொட்டு தெறித்தது. எல்லாம அடக்கி உள்ளே வைத்துவிட்டு தரையில் படுத்தாள். தூங்கிப்போனாள்.

கனவில் பெரிய சுத்தியலால் யாரோ ஓங்கி அடிக்கி றார்கள். பட்டறை இரண்டாய் பிளக்கிறது. நெருப்பு குழைந்து வீட்டுக்குள் வருகிறது. இரும்புக் குழம்பு கெப்பாய் தழதழத்து கால் நுனியைத் தொடுகிறது. பயத்தில் அலறி, பாதத்தைச் சுற்றிக்கொள்கிறது. அட வலிக்கவேயில்லையே. நெருப்பு சுடாதா, வலிக்காதா, எரியாதா? 'உன்னை எரிக்காதும்மா.' முத்துலட்சுமி சொன்னாள். புவனாவை நோக்கி நெருப்பு வர, கூப்பிடு கிறாள். அது வெட்கமும் தருகிறது, சந்தோஷமாயும் இருக்கிறது.

'அம்மா எழுந்திருங்க' முத்துலட்சுமி எழுப்ப...திடுக் கிட்டு புவனா எழுந்திருந்தாள்.

''மணி என்னாடி?''

''ஆறேகால். ஐயாவப் பத்தி பேப்பர்ல வந்திருக்குது போட்டோ போட்டு.''

''என்ன?''

பேப்பரில் உள்பக்கம் இடது மூலையில் உள்ள படத் தில் ஆசாமி கைது. பனிரெண்டு லட்சம் ரூபாய் தங்கம் பிடிபட்டது.

மத்திய புலனாய்வுத்துறை வலை வைத்து பிடித்ததாக அதிகாரி கூறினார். எப்போது எடுத்த போட்டோவோ தெரியவில்லை. ஆனால் தெளிவாய் இதுதான் அவன் என்று புரியும்படி போட்டோ பதிவாகியிருக்கிறது.

புவனா துக்கித்தாள். இது மறுபடி தாக்கும். வழி யெல்லாம் நிற்கவைத்து வேதனை உண்டாக்கும் அரசாங்கமே இதை அறிவித்து தன்னைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. அதற்கு புவனாவின் புருஷன் குற்ற வாளி இல்லை என்று தெரிந்தாலும் பாராட்டிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது தவறாமல் தன்னைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

காலை வேலைகளை முடித்து விட்டு புவனா பட்டறைக்குப் போன் செய்தாள். மணி அடித்துக் கொண்டே இருந்தது. ஏழரை மணிக்கு பட்டறை திறந்துவிடும். ஏன் எடுக்காமல் இருக்கிறார்கள்? ஒரு

வேளை ஆபீஸ் பூட்டி இருக்கிறதா? இல்லை மொத்த பட்டறையும் திறக்கவேயில்லையா?

''அழகிரி பட்டறை வரைக்கும் போலாமா?''

அவன் தயாரானான். காப்பி கறை சொட்டருக்கு மேல் வேட்டி உடுத்திக் கொண்டான். சட்டையை நீவி விட்டுக் கொண்டான்.

தோட்டக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

இருபது வயசு பையன்கள் இரண்டு பேர் மெல்ல தோட்டக் கதவு தள்ளி உள்ளே நுழைந்தார்கள். தொலைவில் இருந்தபடியே 'நாயிருக்கா' என்று கேட்டார்கள்.

''யாரு? நாயில்லை வாங்க.'' அழகிரி குரல் கொடுக்க உள்ளே நுழைந்தார்கள்.

''நாங்க பட்டறையிலேர்ந்து வரோம்.''

''ஏம்பா பட்டறை திறக்கலே.''

''இல்லீங்க.''

''இரு'' உள்ளே ஓடினான். புவனாவோடு வந்தான்.

''வணக்கம்மா.''

''வாங்க தம்பி.''

''நாங்க பட்டறைலேர்ந்து வரோம். நேத்து ராத்திரி பூட்டி எஞ்சினீயரு சாவி கொடுத்து விட்டாரு.''

''ஏன் இன்னும் திறக்கல?''

''இல்லையம்மா. வேலை நடக்கலையே.''

''ஏன் வேலை நடக்கலை?''

''கரி இல்லீங்க. அப்புறம் என்ன வேலை செய்யறது? எது செய்ய வேணும்...எதுவும் தெரியலீங்க?''

''எஞ்சினீயருக்குத் தெரியாதா?''

''தெரியலைன்றார்.''

''எப்படிப்பா இது? உன் பேர் என்ன?''

''காளிதாஸ்.''

''அந்த தம்பி பேரு.''

''உஸேன்.''

''கரி இல்லைன்னா எனக்கு போன் பண்ணியிருக்கலாமே?''

''பண்ணினோம். யாரும் எடுக்கலையாம். அடுப்பு அணைச்சுட்டம்.''

''நேத்தி வேலை நடந்ததா?''

''இரண்டு நாளா நடக்கலைம்மா, சும்மா ஆட்டம் பாட்டம்தான்.''

''உங்களுக்கு துட்டு கொடுத்தார்களா?''

''பாம்பேலேர்ந்து ஒரு லோடு கரி வந்ததை அப்படியே வேற இடம் திரும்பி அனுப்பி துட்டு வாங்கி எங்களுக்கு செட்டில் பண்ணிட்டார்.''

''கரி வந்துடுச்சு இல்லை? அணைப்பானேன் அடுப்பை?''

''அடுப்பு அணைச்சபிறகு லோடு வந்துதும்மா.''

''என்னப்பா...எஞ்சினீயர் வரவேணாமா? உங்ககிட்ட சாவி குடுத்தா எப்படி?''

''அவரு நேத்து சாயந்திரம் பேப்பர் காட்டினாரு. இனி பட்டறை நடக்காது...அவ்வளவுதான்னுட்டாரு.''

''நேத்து சாயந்திரம் பேப்பர்ல என்னா?''

''ஐயா படம் போட்டு...கைது பண்ணிட்டாதா நியூஸ் வந்திருந்ததுங்க.''

''நேத்தி பேப்பர்லயா?''

''இன்று காலை பேப்பர்லியும்''

''எஞ்சினீயர் வீடு எங்கப்பா?''

''தெரியாதுங்களே.''

''சரி, என்கூட பட்டறைக்குவரீங்களா?''

''எங்களுக்கு வேற வேலை தேடணும். வேணாம்.''

''எங்கூட வாங்க. இன்னிக்கு கூலி நான் தரேன்.''

''பட்டறை நடத்தப் போறீங்களாம்மா?''

புவனா மௌனமாய் சிரித்தாள்.

''லேடீஸுக்கு கஷ்டம் பட்டறை நடத்தறது. பேஜார் வேலை''

''ஏம்பா?''

''நெருப்புல நிக்கணும். லேடீஸுக்கு சரிப்பட்டு வராது. கஷ்டம் தாங்கணுமே.''

ஏன் இந்த கஷ்டம்? தாங்கலையா...இதைவிட கஷ்டம் பெண்கள் அனுபவித்ததில்லையா...

''எங்ககூட பட்டறைக்கு வாங்க தம்பிகளா.''

காரில் ஏறிக்கொண்டு ஸ்டார்ட் செய்தாள். ஷெட்டிலிருந்து வெளியே எடுத்தாள். நிதானமாய் தெருவில் இறங்கினாள். ''நீங்க வண்டி ஓட்டுவீங்களா?''

''சுமாரா ஓட்டுவேன்.''

''ஆட்டோல போயிடலாம்மா?''

''ஏன் தம்பி?''

''எங்கனா இடிச்சுட்டீங்கன்னா'' காரில் வந்தவன் பேசினான்.

''இந்தா பத்து ரூபா...நீ ஆட்டோல வா.''

ஒருவன் மட்டும் காரில் ஏறிக்கொள்ள, கார் பட்டறை நோக்கி மெள்ள நகர்ந்தது. பட்டறை வரையில் சரியாய் ஓட்டிப் போய்விட்டால் சகல காரியமும் சரியாய் முடியும் என்று ஒரு சகுன நம்பிக்கை வந்தது. கார் வலது பக்கம் திரும்பியபோது எதிரில் லாரி, பஸ் இவற்றை புவனா ஓவர்டேக் செய்து போவதா நிற்பதா என்று தடுமாறினாள்.

18

நடைபாதையை விட்டு ஐந்தடி தள்ளி கிட்டத்தட்ட நடு ரோட்டில் பஸ் நின்று கொண்டிருந்தது. அந்த பஸ்ஸை ஒட்டியபடி நடைபாதையிலிருந்து பத்தடி தள்ளி கிட்டத்தட்ட முழுத்தெருவை அடைத்தபடி லாரி நின்றிருந்தது. பஸ்ஸைத் தாண்டிப் போக முடியாமலும் தாண்ட வேண்டிய அவசரத்தையும் லாரி பலவிதமாய் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. மீதியிருந்த பத்தடிகளில் சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும் எதிரும் புதிருமாய் போய் கொண்டிருந்தன. அந்த பத்தடி இடைவெளியில் தன் வண்டியைச் செலுத்தி லாரியையும், பஸ்ஸையும் ஓவர்டேக் செய்யமுடியுமா என்று புவனேஸ்வரி தவித்தாள். வேறு வழியே இல்லை என்று நினைத்து அந்த இடைவெளிக்குள் வண்டியை செலுத்தினால், இப்படித்தான் நடக்கும், இது விதி என்பது போல எதிரே ஒரு ஆட்டோ ரிக்ஷா வந்தது. தெருவில் மொத்த போக்கு வரத்தும் ஸ்தம்பித்தது. அந்த ஆட்டோக்காரன் முகத்தில் ஆங்காரம் இருந்தது. உலகத்தில் உள்ள எல்லோரையும் 'ஃபோ' என்று சொல்லுகின்ற படபடப்பு இருந்தது.

புவனேஸ்வரின் காரின் பம்ப்பருக்கு மிக அருகே, கிட்டத்தட்ட ஒரு ஜாண் இடைவெளியில் ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தினான். இறங்காது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். முன்னும், பின்னும் வாகனங்கள் கூடின. நாலாவித ஒலிகள் எழுப்பின.

தலையை எட்டி ''கொஞ்சம் பின்னால போப்பா ப்ளீஸ்...'' புவனேஸ்வரி கெஞ்சினாள்.

''ஏன்...ஏன் போகணும்...உங்கப்பன் வீட்டு ரோடா? நீ பாட்டுக்கு இஷ்டத்துக்கு வருவ, உனக்கு வழி விட்டு நாங்க ஓரம் போகணுமா? எதிர்த்தாப்போல மாடு மாதிரி வந்து நின்னுக்கிட்டு என்ன ஓரம் போக சொல்றியே...''

புவனேஸ்வரி திரும்பி பின்னால் போக முடியுமா என்று பார்த்தாள். அனிச்சையாய் ரிவர்ஸ் கியர் போட்டாள். இரண்டடி பின்னே நகர்த்தினாள். 'ஐயோ' என்று யாரோ சுத்தினார்கள். உதறிக் கொண்டிருந்த ஒரு மொபட்டில் காலூன்றி நிற்க வாட்டமில்லாத ஒரு குள்ளக் கிழவர் அவசரமாய் இரண்டடி பின்னே நகர்ந்தார்.

''இதுவே ஒரு எழவு எடுத்த ரோடு. நீ முன்னாலயும், பின்னாலயும் டான்ஸ் ஆடு. கொண்டைய முடிஞ்சிகிட்டு காரேறிட்டா போதுமா...அறிவு வேண்டாம்.''

''எதிர்க்க ஆட்டோ நிற்குதுங்க.''

''ஆட்டோ எதிர்க்க நிக்காத உன் தலைக்கு மேலயா போகும். எந்தப் பக்கம் வந்திருக்க நீ? வண்டியோட்ட தெரியுமா உனக்கு?''

''கொஞ்சம் பின்னால போப்பா...நான் ஓவர் டேக் பண்ணிடறேன். இந்தப் பக்கம் பஸ் நிக்குதில்லை.''

''பஸ் அந்த பக்கம்தான் நிக்கும். இந்த பஸ் இல்லேன்னா எந்த பஸ்ஸாவது நிக்கும். ஒரு பொம்பளைக்கு பொறுமை வேணாம்? அவ்ளோ பெரிய லாரி சைலண்ட்டா நிக்குது. நீ இடிச்சி பூந்துகிட்டு வர்றியே...'' ஆட்டோக்காரன் உரத்த குரலில் அதட்டினான்.

''என்னப்பா, என்ன தகராறு?'' யாரோ கேட்டார்கள்.

''ஏதோ கிழவி ஏடாகூடமா கார் கொண்டாந்து நிக்க வச்சிடுச்சி'' யாரோ பதில் சொன்னார்கள்.

புவனேஸ்வரிக்கு வியர்த்தது. முகம் சிவந்தது. பஸ் நிதானமாய் கிளம்பிற்று. அவள் இடது பக்கம் திருப்ப முயல லாரி முன்னேறி மறித்தது. லாரி போனதும் போகலாம் என்று தயங்க, பின்னே வந்த மற்ற வாகனங்கள் லாரியை ஓட்டி அவளுக்கு இடைவெளி விடாமல் நகர்ந்தன. எதிரேயிருந்த வாகனங்கள் காருக்கு இடது பக்கம் ஒதுங்கி அவளைத் தாண்டி போயின. ஆட்டோவும், புவனாவும், காரும் மட்டுமே எதிரும் புதிருமாய் நின்று கொண்டிருக்க, எல்லோரும் அதன் நிலையை வேடிக்கையாய் பார்த்தார்கள். சிலர் வாய் விட்டு சிரித்தார்கள். தப்பு புவனாவினுடையது என்று சொல்லாமேயே தெரிந்தது. மிகுந்த அவமானத்துடன் புவனேஸ்வரி பேசாமலேயே இருந்தாள். ஆட்டோக்காரன் வண்டியை வெறியோடு ஸ்டார்ட் பண்ணி ஏராளமான புகை விட்டு அவளின் இடதுபக்கம் கடந்தான்.

தெரு காலியான பிறகு புவனேஸ்வரி நிதானமாய் கிளம்பினாள், தலையில் யாரோ குப்பைக் கூடையை கவிழ்த்தது போல் உணர்ந்தாள். சின்ன அழுகை கண் விளிம்போரம் முட்டிக்கொண்டு நின்றது. உடம்பு முழுவதும் கண்ணாய், காரோட்டுவது தவிர வேறு வேலையே இல்லை என்கிற முனைப்பாய், வேறு எது சிந்தித்தாலும் விபத்தில் முடியும் என்கிற பதட்டமாய் வண்டியை ஓட்டிக்கொண்டு போனாள்.

பக்கத்தில் உள்ள அழகிரி இது வேண்டாத வேலை என்பதுபோல் உட்கார்ந்திருந்தான். வண்டி பட்டறை வாசலில் வந்து நின்றது. கதவு திறந்து இறங்குகிற போது கால்கள் நடுங்கின. இனி ஐந்து நிமிடத்திற்கு எந்த வேலையும் செய்ய முடியாது என்பதுபோல் ஒரு அயர்ச்சி வந்தது. பட்டறை பூட்டி வைத்த கோயில் போல அமைதியாக இருந்தது. நிதானமாய் ஒரு சுற்று சுற்றி வந்தாள். நடக்கும்போது சாம்பல் ஒரு அடி உயரம் பறந்தது. களிமண் மோல்டுகள் உடைந்து கிடந்தன. புடவையை தூக்கி முன்பக்கம் சொருகிக்கொண்டாள். அடுப்புக்கு அருகே போய் பார்த்தாள். அடுப்பில் தண்ணீர் ஊற்றி அணைத்திருந்தார்கள். தண்ணீர் கரும் சேறாய் கலங்கி நின்றது.

இது அயோக்கியத்தனம். தானாய் அணைந்த அடுப்பாக இருந்தால் சாம்பலை இழுத்துப் போட்டு விட்டு மறுபடி கரி போட்டு பற்றவைக்கலாம். தண்ணீர் ஊற்றி அணைத்த அடுப்பாய் இருந்ததால் மொத்த அடுப்பையும் சுத்தம் செய்ய வேண்டும். ஈரப்பதம் உலரும் வரை காத்திருக்க வேண்டும். ஈரச் சுவரில் அடுப்பெரியவிட்டால் அடுப்பு வெடிக்கும். சுவர் உதிரும். இந்த அடுப்பைப் பற்றித் தெரிந்த எவனும் இந்த மகாபாவம் செய்ய மாட்டான். இது நாச வேலை. கொலை பாதகம். இன்னும் வேறு என்னென்ன வேதனைகள் நடந்திருக்கிறதோ தெரியவில்லை.

தொழிற்சாலையைச் சுற்றி வரும்போது ஸ்டாக் வைக்கும் இடத்தில் பிராந்தி பாட்டிலும் அலுமனிய டம்ளர்களும் இருந்தன. ஏதோ வாங்கித் தின்றுபோட்ட மந்தார இலைக் குப்பைகள் கிடந்தன மேய்ப்பன் இல்லாத பசு போல பட்டறை படுத்துக்கிடந்தது. ஆபீஸ் ரூமில் மேஜை சுத்தமாக இருந்தது. மேஜையில் உள்ள எல்லாப் பொருட்களும் டிராயரில் திணிக்கப்பட்டிருந்தன. சாவி போட்டு பீரோவை திறந்தாள். டெலிவரி

செலான்கள் தரையில் விழுந்தன. காசு வைக்கிற பெட்டி காலியாக இருந்தது. ஆளில்லாத வயல்காட்டில் மாடுகள் இறங்கி அட்டகாசம் செய்தது போல் பட்டறை இருந்தது. அயர்ந்து போய் நாற்காலியில் உட்கார்ந்தாள். டெலிபோன் மணி அடித்தது. மெல்ல ரிசீவரை எடுத்து 'ஹலோ' என்று சொன்னாள்.

''சாரி, ராங் நம்பர்'' என்று போன் வைத்துவிட்டான். மறுபடியும் போன் மணி அடித்து 'ஹலோ' குரல் கொடுத்தாள்.

''பவுன்ட்ரியா?''

''ஆமாங்க.''

''யார் பேசறது?''

''புவனேஸ்வரிங்க.''

''புவனேஸ்வரின்னா?''

''இந்த பட்டறை ஓனரோட வொய்ப்ங்க. நீங்க யாரு?''

''நாங்க டிராக்டர் கம்பெனியிலிருந்து பேசறோம். காலையிருந்து போன் அடிச்சிட்டிருக்கு. யாரும் பேசலை. ஏன்?''

''இப்பதாங்க உள்ளே வந்தேன்.''

''அப்ப காலையில கம்பெனி திறக்கலையா?''

''இல்லீங்க.''

''மூடிட்டீங்களா?''

''இல்லீங்க.''

''எல்லாத்துக்கும் ஒரே பதில் சொல்றீங்களே...எங்க ஜாப் ஓர்க் எப்ப முடிக்க போறீங்க?''

''என்ன ஜாப் ஓர்க்குங்க?''

''என்ன ஜாப் ஓர்க்கா?'' மறுமுனையில் உள்ளவன் வேறு யாரோடோ பேசினான். சிரித்தான்.

''உங்க புருஷன் இல்லியா?''

''இல்லீங்க.''

''வெளிய போயிருக்காரா?''

''இல்லீங்க.''

''எல்லாத்துக்கும் இதே பதில்தானா? எங்கம்மா போயிருக்காரு... எப்ப வருவாரு?''

புவனேஸ்வரி பதில் சொல்ல தயங்கினாள்.

''பேப்பர்ல ஏதோ நியூஸ் வந்ததே... அது நிஜமா?''

''ஆமாங்க.''

''இப்ப ஜெயில்லதான் இருக்காரா?''

''ஆமாங்க.''

''அப்ப எங்க கதி என்ன? ஒரு மாசத்துக்கு நானூறு ஆக்ஸில் ஹௌசிங் தரணுமே. என்ன செய்யப் போறீங்க?''

''என்ஜீனியர் வரலைங்க. அவர் வந்த உடனே கேட்டு...''

''உங்க இன்ஜீனியரா...பிராடுப்பய. முந்தாநேத்து எங்கிட்ட உங்க புருஷன் ஃபாரின் போயிருக்கிறா சொன்னான். நீங்க ஜெயிலுக்கு போயிருக்கிறதா சொல்றீங்க. பேப்பர்ல நியூசெல்லாம் வந்ததாமே?''

''ஆமாங்க.''

''ஹிண்டுல வரலை. இதெல்லாம் ஹிண்டுல வராது. மேற்கொண்டு என்ன செய்யப் போறீங்க?''

புவனேஸ்வரி பேசாமல் இருந்தாள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள். போனில் பேசியவன் வேறு யாரோடோ கலந்து ஆலோசித்தான்.

''எதற்கும் ஒரு நடை எங்க கம்பெனிக்கு வாங்க. எங்க மேனேஜர் உங்களைப் பார்க்கணுங்கறாரு. அந்த இன்ஜீனியர கூட்டிகிட்டு வர முடியுமா?''

''என்ஜீனியர் வரலைங்க. நான் மட்டும் வந்தா போதாதுங்களா?''

''வாங்க, பேசுவோம். எங்க டிராக்டர் கம்பெனி எங்கிருக்கு தெரியுங்களா?'' விலாசம் தந்தான்.

ஆபீஸ் அறைவிட்டு வெளியே வரும்போது அந்த பையன்கள் வாசலில் நின்றிருந்தார்கள்.

''என்ஜீனியர் வீடு எங்கப்பா? அவசரமா அவர பார்த்தாகணுமே.''

''அவர் வெளியூர் போயிட்டதா கேள்விங்க.''

''டிராக்டர் கம்பெனி ஆக்ஸில் ஹௌசிங் நம்மகிட்ட ஏதாவது இருக்கா?''

''நூற்றி நாற்பது இருக்குங்க.''

''ஏம்பா, அனுப்பலை?''

''டெலிவரி வேன் இல்லை.''

''ஏம்பா வாடகைக்கு கிடைக்குமே?''

''நாலு ட்ரிப் வாடகை பாக்கி, வரமாட்டேனுட்டான்.''

''டிராக்டர் கம்பெனிக்கு மாசம் நானூறு தரணுமாமே...''

''நூறு போனவாரம் அனுப்பினோங்க. இந்தவாரம் நூறு அனுப்பணும். அனுப்பாத விட்டுட்டோம். அடுத்த வாரம் நூறு தரணும். அடுப்ப அணைச்சிட்டோமில்ல, அது தர முடியாது.''

''என் கூட டிராக்டர் கம்பெனிக்கு வர்றியாப்பா?''

''அவுங்க இங்கிலீசுல பேசுவாங்கம்மா, எனக்கு ஒன்னும் புரியாது.''

''நான் இருக்கேன்பா.''

''உங்களுக்கு இங்கிலீஸ் தெரியுமா?''

''கொஞ்சம் கொஞ்சம் தெரியும். எல்லாம் தமிழ் ஆளுங்கதானே... தமிழ்ல பேசுங்கன்னா பேச மாட்டாங்களா... காளிதாஸ். தயவுசெய்து என்கூட வாப்பா.'' காளிதாஸ் உசேனையும்கூட அழைத்தான்.

அழுக்கு சட்டையும், கிழிசல் பேண்ட்டுமாய் உள்ள அந்த பையன்களை கூட அழைத்தபடி அந்த கம்பெனியின் டிராக்டர் கம்பெனி ஆடம்பரமான வரவேற்பறையில் உட்கார்ந்தபோது அந்த அறையின் அழகிற்கு மூவருமே சம்பந்தமில்லாதவர்கள்போல் இருந்தது.

''நீங்கதான் புவனேஸ்வரி சிவப்பிரகாசமா? என் பேர் கணபதி.''

உயரமாய் கறுப்பாய் நெற்றியில் விபூதி பட்டையோடு ஒரு ஆள் எதிரே வந்தான்.

''என்ன பிரச்சனை சொல்லுங்க. காஃபி போசாவிலியா கைது பண்ணிட்டாங்க? வெளிய வரவே முடியாதேம்மா. அவர நம்பி பெரிய ஆர்டரெல்லாம் குடுத்திருக்கோமே. எங்க டிராக்டர் புரொடக்ஷன் நின்றிடும் போலிருக்கே. உள்ள வந்து எங்க ஜெனரல் மேனேஜரோட பேசுங்க இவங்க யாரு?'' நகர்ந்தவன் திரும்பிக் கேட்டான்.

''எங்க கம்பெனி ஓர்க்கருங்க. இவங்களுக்குத்தான் எல்லா டீட்டெய்ல்சும் தெரியும் என்னைவிட.''

''கஷ்டகாலம்.'' கணபதி தலையில் அடித்துக் கொண்டான்.

''நீங்களும் வாங்கப்பா என்கூட'' விஸ்தாரமான அறையின் ரத்தின கம்பளத்திற்கு நடுவே பெரிய மேஜை யிருந்தது. மேஜையின் அருகில் சுழல் நாற்காலியிருந்தது. உயரமாய் சிவந்த நிறமாய், வழுக்கை தலையாய், வெள்ளை மீசையாய், அமைதியான கண்களுமாய் உள்ள நபர் எழுந்து நின்று வரவேற்றார். உட்காரச் சொன்னார். அவரை ராவ் ஜெனரல் மேனேஜர் என்று அறிமுகப்படுத்தினார்கள்.

கணபதி விரைவான ஆங்கிலத்தில் பட்டறையின் நிலைபற்றி, சிவப்பிரகாசம் பற்றி பேச வலது பக்கம் காது சாய்த்து கேட்டுக் கொண்டார். புவனேஸ்வரியை உற்றுப் பார்த்தார். கள்ளக்கடத்தல் காஃபி போசா என்று தகவல் தரப்பட்டதும் விழி விரித்தார். அமைதியாய் மேசைக் கண்ணாடியில் முகம் பார்த்தபடி யோசித்தார். கூர் சீவின பென்சிலை விரலுக்கு நடுவே உருட்டிக் கொண்டிருந்தார்.

''வாட்ஸ் நெக்ஸ்ட்'' புவனேஸ்வரியைப் பார்த்து லேசாய் சிரித்தார்.

''நான் தமிழில் பேசட்டுங்களா?'' புவனேஸ்வரி தாழ்ந்த குரலில் விண்ணப்பித்தாள்.

''பேசுங்க. எனக்குத் தமிழ் புரியும்.''

சிவப்பிரகாசம் தேவையில்லாமல் சிக்கிய கதையை சொல்லத் துவங்கியதும் புவனேஸ்வரி கண்களில் நீர் பெருகியது.

ராவ் எந்த முக மாற்றமும் காட்டாமல் அவளையே கவனித்துக் கொண்டிருந்தார். கதை சொல்லி முடித்தது, ''வாட் இஸ் நெக்ஸ்ட்'' என்று மறுபடி கேட்டார்.

''இந்தப் பட்டறையை நானே நடத்தப் போறேங்க. எங்க இன்ஜீனியர் வரலைன்னாலும் வேற இன்ஜீனியர் போட்டு உங்க ஆர்டரை ஒழுங்கா சப்ளை பண்ணிடு

வேங்கை தனி மனுஷன் தோற்றுப் போயிடலாம். கம்பெனி தோற்றுப் போயிடக்கூடாது''

''இன்னிக்கு நூறு ஆக்ஸில் ஹவுசிங் எங்களுக்கு கொடுத்திருக்கணும்மா. வரலையே...''

''பட்டறையில நூற்றி சொச்சம் இருக்குங்க.''

''அது ரிஜெக்ட்டா இருக்கும்.''

''அப்படீன்னா?'' புவனேஸ்வரி கேட்டார். ராவும் கணபதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். காளிதாஸ் ரிஜெக்டெட் என்பதற்கு அவள் காதில் அர்த்தம் சொன்னான்.

''இல்லீங்க. அது அப்ரூவ்ட் காஸ்டிங். இன்னும் இரண்டு மணிநேரத்தில் உங்களுக்கு அனுப்பிச்சுட றேன்.'' முகத்தில் தோன்றிய அவமானத்தை மறைத்துக் கொண்ட புவனேஸ்வரி படபடப்பாய் பேசினாள்.

''முதலில் அதை வாங்கு'' ராவ் கணபதிக்கு கட்டளையிட மூவரும் வெளியேறினார்கள்.

மூவாயிரம் ரூபாய் பழைய பாக்கியை வைத்தா லொழிய டெலிவரி வேன் வராது என்று சொல்லி விட்டார்கள். நூற்றி ஐம்பது ரூபாய்க்கு இரட்டை மாட்டு வண்டி ஏற்பாடு செய்தாள். நாற்பது கிலோ எடையுள்ள ஆக்ஸில் ஹவுசிங் படிமத்தை காளிதாஸ், உசேன், அழகிரி துணையோடு ஏற்றினாள். டெலிவரி சலான் தமிழில் எழுதினாள். வண்டியை முன்னே அனுப்பி விட்டு டிராக்டர் கம்பெனி என்ன காசு தரவேண்டும் என்று ஆராய்ந்தாள். குறிப்பெடுத்துக் கொண்டாள். கார் எடுத்து டிராக்டர் கம்பெனிக்கு ஓட்டினாள். போகிற வழியில் சரக்கு ஏற்றின மாட்டுவண்டியை ஓவர்லோடு என்று போலீஸ் மடக்கி வைத்திருந்தது.

19

வண்டியை ஓரம் நிறுத்திவிட்டு இஞ்சினை அணைத் தாள். அருகே இருந்த பையனைப்போய் விசாரித்து வரச் சொன்னாள்.

''பீக் அவரில் மாட்டுவண்டி இப்படிப் போகக்கூடாது. ஏன் போனே...நில்லு'' மடக்கியிருந்தார்கள்.

பையன் மெல்ல போக்குவரத்து இன்ஸ்பெக்டரிடம் கம்பெனி பெயர் சொன்னான்.

''நீ யாருடா?'' அதட்டலாய் பதில் வந்தது.

''கம்பெனி ஆளுங்க. முதலாளியம்மா கார்ல இருக்காங்க.''

''அம்மாவா...இந்த வண்டில நாயக்கர் வருவாரு. அவர் இப்ப எங்க...? கம்பெனிய அம்மா நடத்தறாங் களா.''

''ஐய்யாவ ஜெயில்ல போட்டிருக்காங்க.''

''எதுக்கு...?''

''தங்கக்கட்டி வச்சிருந்தாருன்னு...''

''ஓ...அதுவா...அதான் இப்ப கம்பெனிய இந்தம்மா நடத்துதா?''

காருக்கு உள்ளே உட்கார்ந்த போதும் சகலமும் தெளிவாய் கேட்டது. மனசு பேதலிக்க வைத்தது.

''ஏன், கீழே இறங்கி வர மாட்டாங்களா...?''

''லேடீஸ்...கூச்சப்படறாங்க. வேணா வரச் சொல் றேன் சார்.''

அருகே காலடி சத்தம் கேட்டது.

''நாயக்கருக்கு சம்சாரமா நீங்க. நாயக்கரு நமக்கு தெரிஞ்சவருதான். இப்படி மாட்டு வண்டில அனுப்ப மாட்டாரே.''

''எனக்குத் தெரியாதுங்க. டெம்போ கிடைக்கலை. உடனே போகணும். இந்த தடவை மன்னிச்சுவுட்டுருங்க. மெல்ல மணிபர்ஸ் திறந்து நூறு ரூபாய் நோட்டு உருவினாள்.

அந்த இன்ஸ்பெக்டர் உற்றுப் பார்த்தார். வேணாம் இந்த தடவை வுடறேன். மறுபடி மாட்டுவண்டில சரக்கு பார்த்தேன்...நேர ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிடுவேன்.''

''நன்றிங்க. இத எடுத்துக்கங்க.'' நோட்டை இன்ஸ்பெக்டர் நின்ற கதவுக்கு அருகே தள்ளினாள்.

''வேணாம். லேடீஸ்னு இந்த தடவை வுடறேன் டேய் வண்டிய அனுப்புடா, காஃபி போஸாலியா மாட்டிக்கிட்டாரு.''

''ஆமாங்க''

''லோக்கல்ல ஏஜெண்டா? இல்லை, வெளியூர்ல டைரக்ட் காண்டாக்டா?''

''அதெல்லாமில்லீங்க. ஆள் தெரியாத என்னன்னு தெரியாது பார்ஸல் வாங்கிட்டாரு.''

''ஏம்மா கதை அளக்கற...கடத்தறவன் என்னிக்கு ஒத்துக்கிட்டிருக்கான். ஏதோ செய்யுங்க. வண்டிய வுடு வண்டிய வுடு.''

நெஞ்சு ரணமாய் வலித்தது இதைவிட சிவப்பிரகாசம் கொலையோ, கொள்ளையோ செய்திருக்கலாம் என்று தோன்றியது.

மாட்டு வண்டி மெல்ல கார் தாண்டியது. நூறுரூபாய் நோட்டை மறுபடி சுருட்டி மணி பர்ஸுக்குள் போட்டுக் கொண்டு வண்டியைக் கிளப்பினாள். தொழிற்சாலை கதவு அருகே காத்திருந்தாள்.

ஆடி அசைந்து வண்டி வர ஒருமணி நேரமாகியது. உள்ளே நீள தார் சாலைக்குள் நுழைந்து அந்த கம்பெனி கோடவுனை அடைய இன்னொரு கால்மணி பிடித்தது. வாசல் தொட்டதும் பெரிய சங்கு ஊதியது. நாலேகால் மணி. கோடவுனில் இனி சரக்கு இறக்க மாட்டார்கள்.

புவனா உள்ளே போனாள். தோளில் புடைவை போர்த்தி சுப்ரமணியன் மேஜைக்கு எதிரே போய் நின்றாள்.

''என்ன?''

''நூத்துப் பத்து ஆக்ஸில் ஹவுசிங் கொண்டு வந்திருக்கேன்.''

''இப்ப வர...மணி நாலேகால். வாங்கக் கூடாதும்மா, நாளைக்குக் கொண்டு வாங்க''

''இல்லைங்க. வண்டி வந்திருச்சு. வாசல்ல நிக்குது.''

''என்னமா இது...இருங்க கேட்கறேன்'' யாருடனோ டெலிபோனில் தொடர்பு கொண்டான்.

''கூடாதுங்கறாங்கம்மா. வாசல்ல இறக்கி வச்சிட்டு போங்க. நாளைக்கு சரக்கு நீங்களே ஆள் கூட்டிட்டு வந்து அடுக்கிட்டு போங்க.''

''கஷ்டங்க. எப்படியாவது உள்ள இறக்க ஏற்பாடு பண்ணுங்க.''

''கழுத்தறுக்கறீங்களே... இருங்க ஜி.எம். கிட்ட சொல்லிப் பார்க்கறேன்.''

''நான் வேணா பேசட்டுமா?''

''என்ன பேசப் போறீங்க?''

''லேட்டாயிடுச்சு...இந்த ஒரு தடவை மட்டும் பெரிய மனசு பண்ணி...''

''வேணாம்'' உள்ளே போனான். வெளியே வந்து யாருக்கோ ஓவர் டைம் தரச் சொன்னான். ''வழுக்கத் தலையா சங்கரன்னு ஒரு மலையாளி இருப்பாரு. அவர் கிட்ட பேசி லோடு இறக்கச் சொல்லுங்க. நீங்க பண்ண தப்புக்கு கம்பெனி ஓவர்டைம் தர வேண்டியிருக்கு போயிடப் போறாங்க. சீக்கிரம் போங்க.''

கிட்டதட்ட புவனா ஓடினாள். உள்ளே கம்பெனி ஆளும் டெலிவரி சலான் எடுத்து ஸ்டோருக்குப் போனார்கள்.

''யெஸ்...''

''ஆக்ஸில் ஹவுஸிங்.''

''அங்க இறக்கி வச்சுருங்க.'' இடம் கை நீட்டி காண்பித்தான்.

''ஆள் இல்லீங்களா?''

''எதுக்கு?''

''இறக்க.''

''விளையாடறீங்களா...என் ஒரு ஆளுக்கு ஓவர் டைம் தரவே அலட்றாங்க. இறக்கறதுக்கு ஆளுக்கு எங்க போறது...டெம்போல ஆள் இல்லையா?''

''மாட்டு வண்டிலதாங்க இருக்கு வண்டிக்காரன் கிழவன். பளு இறக்க மாட்டான்.''

''அப்ப வண்டி விட்டுட்டு போங்க. நாளைக் கார்த்தால இறக்கலாம்?''

''இல்லீங்க. வண்டி வாடகை அதிகமாயிடும்.''

''எனக்குத் தெரியாது.'' டெலிவரி சலான் திரும்பத் தரப்பட்டது.

புவனா விழித்தாள்

''கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க.''

''இறக்கியதை எண்ணி, வாங்கி கையெழுத்துப் போடறதுதான் என் வேலை. இறக்கற வேலை என்னுதில்லை. நான் ஸ்டோர் ஆள். கூலி இல்லை.''

''யாராவது கூலி ஏற்பாடு பண்ணுங்க. காசு கொடுத்துடறேன்.''

''அது நான் செய்யக் கூடாதுங்க. ரூல்ஸ்படி குத்தம்.''

''எனக்கு விவரம் தெரியாதுங்களே...''

''அப்ப ஏன் வந்தீங்க?''

புவனா மறுபடி விழித்தாள்.

''தலையெழுத்து கொண்டாங்கம்மா...'' பறித்துக் கொண்டான். ''யாருய்யா மாட்டு வண்டி. நீ இறக்க மாட்டியா...இது யாரு?''

''நம்ம கம்பெனி பையனுங்க.''

''வண்டிக்காரனை மேலேருந்து ஒவ்வொன்னா தள்ளச் சொல்லுங்க. இவனை ஒவ்வொன்னா உருட்டி உள்ள போடச் சொல்லுங்க.''

ஆக்ஸில் ஹவுஸிங் வண்டியிலிருந்து மண் மீது தள்ளப்பட்டு கம்பெனி பையன் உருட்டிக் கொண்டு உள்ளே போனான்.

''என்னிக்கு உருட்டி என்னிக்கு முடிக்கப்போற. எனக்கு ஒன் அவர்தான் ஓவர்டைம்'' சங்கரன் அதட்டினார்.

தள்ளுவது சுலபம். உருட்டி உள்ளே போய் நாற்பது கிலோ ஹவுஸிங்கை அடுக்குவது கஷ்டம். மெல்ல சேலை தலைப்பு இழுத்து புவனா சொருகிக் கொண்டாள். அந்தப் பையன் போலவே தானும் ஹவுஸிங்கை உருட்டி உள்ளே எடுத்துப் போனாள். இரண்டு ஹவுஸிங் தள்ளும் வரை பார்த்திருந்த சங்கரன் மூன்றாவது தள்ளும் போது தடுத்தார். தானே தள்ளிக்கொண்டு போனார். எல்லா ஹவுஸிங்கும் வண்டியிலிருந்து தள்ளி விட்டு கிழவனும் கீழே இறங்கி உருட்டினான். நாலுபேர் ஒவ்வொன்றாக உருட்டி எடுத்துப் போக வேலை வேகமாயிற்று.

புவனா கடைசி ஹவுஸிங் உருட்டும்போது ஜி.எம். சுப்ரமணியனுடனும் இன்னும் இரண்டு பேருடனும் ஸ்டோர் ரூமுள் நுழைந்தார்.

''என்ன இது, இந்த பெண்மணியை ஏன் உருட்ட வைக்கறீங்க?'' புடவை முழுவதும் மண்களும், அழுக்கும் ஹவுஸிங் மேல் பூசப்பட்ட ப்ரைமர் சிகப்பு சாயமும் கிடக்க, வியந்து பார்த்து புவனாவைக் கேட்டார்.

''அவங்கதான் தள்றேன்னாங்க சார்'' சங்கரனிடமிருந்து பதில் வந்தது.

''நோ...நோ...தவறு இது.''

''கூட ஒரு ஆளுக்கு ஓவர்டைம் போட்டால் என்ன? இன்னும் எத்தனை பாக்கி?''

''முடிந்து விட்டது சார்''

''ஹவுஸிங் தரம் எப்படி இருக்கிறது?''

''மேல் பார்வைக்கு தப்பு தெரியவில்லை. நாளை இன்ஸ்பெக்ஷன் போகும்.''

''அனுப்பிவிட்டு எனக்கு தகவல் சொல் மேடம். உங்கள் பெயர் என்ன?''

''புவனேஸ்வரி.''

''இப்படி வாங்க, அவங்களுக்கு ஒரு நாற்காலி கொடு, சங்கரன்.''

நாற்காலி போடப்பட்டு ஸீலிங்ஃபேன் முடுக்கி விடப்பட்டது.

''குடிக்க தண்ணீர் வேண்டுமா?''

''ஆமாம்.''

அவர் திரும்ப, புவனாவுக்கு தண்ணீர் தரப்பட்டது.

''வார்த்தையை நீங்கள் காப்பாற்றியது பற்றி மகிழ்ச்சி. இனி என்ன செய்வதாக உத்தேசம்?'' ஆங்கிலத்தில் கேள்வி வந்தது.

''நாளைலேர்ந்து புரொடக்ஷன் ஆரம்பிச்சிருவேன். எப்படியாவது பத்து நாள்ல நூறு ஹவுஸிங் தருவேன்.''

''நிலக்கரி பிரச்சினை?''

''கைல ஸ்டாக் இருக்கு. நாளைக்கு ஒரு லோடு எப்படியாவது வாங்கிடுவேன்.''

''உங்களை நம்பலாமா? இல்லை ஆர்டர்ஸ் வேறு யாருக்கும் மாற்றி விடலாமா? என் புரொடக்ஷன் திண்டாடக் கூடாது.''

''ஆகாதுங்க எப்படியும் பத்து நாள்ல நூறு ஆக்ஸில் ஹவுஸிங் தருவேன்.''

''இந்தப் பெண்மணிக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் சுப்ரமணி.''

''செய்யலாம் சார். சிவப்பிரகாசம் நல்ல மாதிரி தான்.''

''இவர்களின் பதட்டம் எனக்குப் பிடித்திருக்கிறது. ஒரு உண்மை இருக்கிறது. உழைப்பு தெரிகிறது.''

''ஒரு மாசம் பொறுத்து பார்ப்போம் சார். ஒருலேடி பவுண்ட்டரி கவனிக்கிறது கஷ்டம்.'' இழுத்தான்.

''இல்லை, சுப்ரமணி. இவர்களை உற்சாகப் படுத்தலாம். மேடம், உங்களுக்கு வேண்டிய உதவி கம்பெனி செய்யும், டெக்னிகல் உதவிகூட செய்யும். உண்மையான உழைப்பு முக்கியம்.''

''நிச்சயம் செய்யறேங்க.''

''சிவப்பிரகாசத்துக்கு ஏதாவது காசு பாக்கி தரணுமா?''

''நாலு மாச பில் நிக்குதுங்க.''

''என்ன சுப்ரமணி?''

''கொஞ்சம் ரிஜக்ஷன் இருக்கு சார்?''

''செட்டில் இட். கழித்து காசு அனுப்பு.''

''ஒரு வாரம் ஆகும் சார்.''

''முயற்சி செய்.''

''அப்ப நான் வரேங்க. நன்றி.''

அவர் எழுந்து கைகூப்பினார், அவள் வாசலுக்கு நடக்க, பின்னே அவர்கள் ஏதோ இரக்கமாய் பேசிக் கொண்டார்கள்.

புவனாவுக்கு அதுவும் வலித்தது.

பெண் என்று இவர்கள் காட்டும் சலுகையை ஏற்றுக் கொள்வதா, வேண்டாமா? கேள்வி வந்தது.

20

புருஷன் இரும்பு உருக்கி வார்ப்பாய் வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்தாகிவிட்டது.

இருப்பதைக் கொடுப்பதற்குள் நாலு பக்கம் அலைய நேர்ந்துவிட்டது. இனி பட்டறைக்கு ஓடி கரி இருப்பு பார்த்து மேலும் வாங்கி அடுப்பு மூட்டி உலை கொதிக்க வைத்து மண்ணில் அச்சு இறுக்கி குழம்பு கொதி வந்த வுடன் ஊற்ற வேண்டும் சம்பளக் காசுக்கு வழி பார்க்க வேண்டும். இன்ஜினியரோடு போய் பேசவேண்டும் 'ஏன் பாதியில் விட்டுப் போனாய்' என்று கேட்க வேண்டும் கேட்க முடியுமா? கேட்டால் என்ன சொல்வான்...கீறு வானா? இவரைப்பற்றி தூஷணையாய் பேசுவானா... அவன் வீடு போய் அவர் பற்றி கேவலமான பேச்சு கேட்க வேண்டுமா...

வேறு இஞ்சினியர் பார்க்க முடியாதா...இந்த இஞ்சினியருக்கு என்ன சம்பளம்...புது இஞ்சினியருக்கு எவ்வளவு தரவேண்டும்...

இவர்களிடமே கேட்கலாமா...'எனக்கு இஞ்சினியர் பாத்து கொடுங்க' என்று கேட்டுப் பார்க்கலாமா...

கூடாது. கழிவிரக்கமாய் போய்விடும் இஞ்சினியர் கொடுத்து, இரும்பு கொடுத்து...அப்புறம் நீங்க எதுக்கு? நாங்க எங்கனா பாத்துக்கறோம்...சுப்ரமணியம் சொல்லி விடுவாரோ...கழுத்தறுப்பு என்று கத்துவாரோ...அவர் கவலை அவருக்கு இந்த நேரம் உதவி கேட்பது தவறு. தெரியாத பேயைவிட தெரிந்த பிசாசுமேல்.

'இந்தப் பெண்மணிக்கு உதவி செய்வோம்' ஏன் நான் பெண்மணியாய் இருக்கிறதால்தான் உதவி செய்யப் போகிறாரா? 'ஐயோ பாவம் லேடி' என்பது தகுதியா...இதை ஏற்கலாமா...ஏன் என் மனசு இதற்கு இப்படி தயங்குகிறது...இது வழக்கம்தானே...ஆண்கள் பெண்களுக்கு இரங்குவது இயல்புதானே...நான் வயசுப் பெண்ணாய் இருந்தால் பயப்படலாம். கிழவி...பாதி கிழவி...எதற்கு பயப்பட வேண்டும்...என் அழகோ, கவர்ச்சியோ இவர்களை மயக்கவில்லை. உடன் பிறந்

தாற்போல, இல்லை...உறவினர்போல இல்லை... 'சின்ன வயசில் தன் அம்மா இப்படித்தானே கஷ்டப்பட்டாள்' என்கிற நினைப்பில்கூட அந்த ஜெனரல் மேனேஜர் உதவி செய்ய வந்திருக்கலாம். ஏற்றால் என்ன...

கார் ஓட்டிக் கொண்டே யோசிக்க ஏதோ ஒரு உணர்வு 'வேண்டவே வேண்டாம்' என்று தடுத்து.

'என்ன வேண்டாம்? ஏன் வேண்டாம் சொல்லு...' தனக்குத்தானே அலட்டிக் கொண்டாள். புருஷன் குரல் கேட்டது.

'தோத்துட்டேன்னு வச்சுக்க புவனா, என்ன சொல் வாங்க தெரியுமா...அப்பமே சொன்னேன்...பொம்பளை யால முடியாதுன்னு...பூ வேலையா, காகிதம் சுவத்துல ஒட்டறதா? இன்டீரியர் டெகரேஷனா...இது மோல்டிங் மாலபிள் காஸ்டிங் முடியுமா? இரும்புவேலை...அதுவும் உருக்கு வேலை... குப்புற விழுந்திருச்சுன்னா... பொம்பளைக்கு எது முடியுமோ அதான் செய்யணும். தானே திணறித் திணறி செஞ்ச வேலை உருக்கு வேலை சூதாட்டம் மாதிரி...உனக்கு எதுக்கு சூதும் வாதும். வித்துடு. எங்கனா பொட்டிக்கடை வைக்கலாம் பழைய இரும்பு வாங்கி வியாபாரம் செய்யலாம்'

மாற்றியும் பேசுவானா...

இந்த வேலையில் முழுமையாய் ஈடுபட, புருஷனை வெளியே எப்படி கொண்டு வருவது என்பது மறந்து போகுமா...

என்ன செய்ய...என்ன செய்ய...புவனா தவித்தாள். பாலம் ஏறி இடது பக்கம் திரும்பி வண்டி பட்டறை நோக்கிச் செலுத்தினாள். கூட வந்த பையனைப் பட்டறை வாசலில் இறக்கி விட்டாள்.

''நீங்க போங்க தம்பி, நான் மொத்தமும் சுத்திப் பார்த்துட்டு பூட்டிக்கொண்டு போறேன். இந்தாங்க ஐம்பது ரூபாய்'' நோட்டை எடுத்து நீட்டினாள்.

அவன் வெட்கப்பட்டான். முன்னேறி அவன் சட்டைப் பையில் சொருகினாள். பூட்டு திறந்து பட்டறைக்குள் போனாள்.

சம்பளப் பட்டியல் எங்காவது இருக்குமா என்று தேடினாள். தேடுகிற போது ஃபைல்களை அடுக்கி வைத்தாள். பீரோவை ஒழிக்கிறபோது ஒரு வருடத்துக்கு முந்திய சம்பளப் பட்டியல் கிடைத்தது. கரி வாங்கிய கணக்கு கிடைத்தது. கம்பெனி ஆடிட்டரின் விலாசம் கிடைத்தது. பீரோவின் அடித்தட்டைத் தேட, பழைய டெலிவரி சலான் ரசீதுகள் இருந்தன. வண்டி வாடகை கணக்கு இருந்தது. சகலமும் வெளியே எடுக்க, சில வண்ண அட்டை போட்ட புத்தகங்கள் இருந்தன. கையடக்கமாய் மங்கின பேப்பரில் ஏதோ மலிவு விலை நாவல் மாதிரி புத்தகங்கள் நாலு இருந்தன. 'இன்பம் எங்கே' மீண்டும் வா' என்று தலைப்பிடப்பட்டிருந்தன.

புத்தகம் எடுத்துப் புரட்டினாள். முதல் பாராவிலேயே அசிங்கம் தெரிந்தது. மஞ்சள் புத்தகங்கள் என்பது புரிந்து போயிற்று யாருடையது இது...ஏன் இங்கு இருக்கிறது...அந்த இஞ்சினியர் மனுஷன் வேலையா என்ன அசிங்கம் நாப்பத்தேழு வயசுக்கு இந்தப் புத்தகம் படிக்கிற ஆளை எப்படி நம்புவது? அந்த ஆளோடு எப்படிப் பேசுவது...

சரி, ஏதாவது படித்துவிட்டு போகட்டும். இந்த இடத்திலா இவை இருக்கவேண்டும்? அசிங்கம் பிடித்தவன். சொந்த வாழ்க்கையில் ஒழுக்கமில்லாதவன். பொது வாழ்க்கையில் எப்படி நேர்மையாய் இருக்க முடியும்...

என்ன செய்வது இதை...நாலு புத்தகங்களையும் ஓரம் வைத்தாள். எடுத்துக்கொள்ள வேண்டிய ரிஜிஸ்டர் களை, ஃபைல்களை ஒரு கட்டாய் கட்டினாள் இரவு உட்கார்ந்து ஒவ்வொரு டெலிவரி சலானாய் பார்க்க, எல்லா ரிஜிஸ்டரையும் புரட்ட, ஒரு அமைப்பு தெரியும்.

காலையில் இஞ்சினீயர் பார்த்து, பேசி, அவன் வராது போனால் வேறு ஆளை நியமித்து பட்டறை நடத்தலாம். நடத்திப் பார்க்கலாம். கம்பெனியில் எந்த உதவியும் கேட்காமல் தானே பட்டறை நடத்த முயற்சி செய்யலாம். அந்த மலிவு புத்தகங்களை என்ன செய்வது என்று தெரியவில்லை. அடுப்பு எரித்தால் தூக்கிப் போட்டு விடலாம். இங்கே எப்படி போட்டுவிட்டுப் போவது...ஒரு வேளை அந்த இஞ்சினீயர் வந்து தேடினால்...எங்கே என்று கேட்டால்...

சரி...'வேலைக்கு வரமாட்டேன்' என்று எகத்தாளமாய் பேசினால் 'உம்ம சொத்து இது' என்று அவர் வீட்டில், அவர் முன்னே தூக்கிப் போட்டுவிட்டு வந்து விடலாம். கொஞ்சம் முகம் கறுத்துப் போவதையும் கண்ணாரப் பார்க்கலாம்: ஒரு தினசரியில் அதைச் சுற்றிக் கட்டி பொட்டலமாகத் தனியே வைத்துக் கொண்டாள்.

இந்த ஆண்களின் மனசு விசித்திரமாக இருக்கிறது. நல்ல குடும்பம் படிப்பு. ஆனால் புத்தியைப் பார் எத்தனை கேவலம். பெண்களை அசிங்கப்படுத்துகிற புத்தகம் படிக்கிற அரிப்பு அப்போது வெளியே பேசுகிற ஆங்கிலம்... உபசரிப்பு எல்லாம் பொய். உள்ளுக்குள் மனசு முழுக்க குப்பை. ஏன் இது?எதனால் இந்த குறை...

கம்பெனி மறந்து ஆணின் இயல்பு பெரிய விஷயமாகி யோசிக்கத் துவங்கினாள். தலையை சிலுப்பிக் கொண்டு பட்டறையை இழுத்து மூடி பூட்டினாள்.

கார் ஏறி வீட்டுக்கு வந்தாள்.

''எங்கம்மா போயிட்ட'' உள்ளே நுழைந்ததும் முத்துலட்சுமி கேட்டாள்.

''என்ன முத்து??''

''அந்த சேட்டு போன் பண்ணாரு.''

''என்ன சொன்னே?''

''பட்டறைக்குப் போயிருக்காங்கன்னு சொன்னேம்மா.''

''என்னவாம்?''

''உன் கூட பேசணுமாம்.''

''அவர் எப்ப போன் பண்ணாலும் இல்லைன்னு சொல்லிடு.''

''ஏம்மா?''

''அந்தாள்தான் நம்ம ஐயாவை உள்ள போட்டது. எனக்கு உதவி பண்றேன்னு வரான். எதுக்கு அவன் உதவி? பட்டது போறாதா?''

''அது சரி.''

''வேற யாரும் வந்தாங்களா?''

''சுப்ரமணின்னு ஒருத்தர் வந்தாரு,''

''அது... டிராக்டர் கம்பெனி ஆளு?''

''ஆமாம்மா.''

''என்ன சொன்னே?''

''பட்டறைக்குப் போயிருக்காங்க. வர நாழியாவும் னேன்.''

''ஏதாவது சொன்னாரா?''

''போன் நம்பர் வாங்கிக்கிட்டாரு. நாளைக்கு பேசறேன்னாரு.''

''வேற ஒண்ணும் சொல்லலையா?''

''இல்லை. கொஞ்சம் நேரம் உட்கார்ந்து பார்த்தாரு. அப்புறம் போன் நம்பர் வாங்கிக்கிட்டு நாளைக்கு பேசறேன்னு போயிட்டாரு.''

''அவர் வீடு எங்க கேட்டியா?''

''கேக்கலையேம்மா?''

முத்துவுக்கு இது தெரிய நியாயமில்லை.

''சாப்பிட்டியாம்மா?''

''இல்லை முத்து.''

''உட்காரு போடறேன்.''

''மோர் சாதம் போதும்.''

மோர் சாதமும், குழம்பும் கலந்து வேகமாய் சாப்பிட்டாள். கை கழுவி, முகம் அலம்பி பொட்டு வைத்து உட்கார்ந்தாள். குளித்திருக்கலாம், கசகசப்பு போகவில்லை. இனிமேல் பட்டறைக்குப் போனால் வந்து குளிக்க வேண்டும். கை விரல் நகங்கள் எல்லாம் கரி சாம்பல் ஒட்டிக் கொள்கிறது.

புருஷன் அறையில் உட்கார்ந்து ஃபைல் ஒவ்வொன்றாய் புரட்டிப் பார்க்கிறபோது வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

முத்துலட்சுமி கதவு திறந்தாள். சுப்ரமணியம் வந்திருப்பதாகச் சொன்னாள்.

எழுந்து வெளியே வந்து அவனை வரவேற்க புடவைத் தலைப்பு போர்த்தி நிமிர்ந்தாள். ஹால் கடிகாரம் பார்த்தாள். மணி ஒன்பது இருபது.

''வாங்க ஐயா. ரொம்ப சந்தோஷம் நீங்க வந்தது.''

''அகாலத்துல வந்ததுக்கு மன்னிக்கணும், ஒரு பத்து நிமிஷம் முக்கியமானது பேசியே ஆகணும்.''

''தவறில்லைங்க. சொல்லுங்க.''

''என்ன செய்யப் போறீங்க?''

''ஐயா...''

''பட்டறையை என்ன செய்யப் போறீங்க?''

''நடத்தப் போறேன்''

''முடியுமா?''

''ஏங்க முடியாது?''

''நான் ஒரு திட்டத்தோடே வந்திருக்கேன்.''

''சொல்லுங்க.''

''பட்டறையை லீஸுக்கு விட்டுருங்க.''

''யார் கிட்ட?''

''என்கிட்ட...என் மனைவி பேர்ல.''

புவனாவுக்கு கோபம் வந்தது.

21

தடுக்கி விழுந்தபோது தூக்கி நிறுத்துவதற்குப் பெயர் கருணை. நீரில் தத்தளிக்க, மீட்டு கரை சேர்ப்பது வீரம். திசை தெரியாத ஊரில் குழந்தையைத் தூக்கி தோளில் போட்டு உரியவரிடம் சேர்ப்பது வாஞ்சை.

ஆனால் இப்படி ஒரு உதவி செய்தேனே எனக்கு காசு கொடு, நான் உன்னிடம் காட்டிய கருணைக்கு கூலி கொடு. காப்பாற்ற கஷ்டப்பட்டேனே இதில் லாப மென்ன...உதவி செய்தவன் கணக்குப் பார்க்க. உதவி பெற்றவர்க்கு ஏற்படும் உணர்விற்கு பெயர் அருவருப்பு.

மனித நரகலோ. மக்கிய உடலோ, அழுகிய தாவரமோ அருவருப்பில்லை. இவை சகித்துக் கொள்ளக் கூடியவை. உள்ளே பொங்கிய நன்றியை அழித்து உறுத்தலை வளர்த்து, 'ச்சீ' என்று ஒரு அருவருப்பை வளர்க்கும் வினோதம் மனிதர்களிடையே இருக்கத்தான் செய்கிறது.

உனக்குக் கால் தடுக்காதா, குளம் வழுக்காதா...உன் குழந்தை திசை தெரியாது, சிக்கிக்கொள்ள மாட்டானா... இதற்கு என்ன காசு தருவாய்...எப்படி பேரம் பேசுவாய்? கேட்ட ஆளை கேள்விக் கொக்கியால் மடக்கத் தோன்றும். மனித நேயம் தானாய் புரிய வேண்டும். மடக்கிச் சொன்னாலும் இவனுக்குப் புரியாது என்கிற அலுப்பு வரும்

புவனாவிற்கு அருவருப்பும் அருவருப்பைத் தொடர்ந்து அலுப்பும் வந்தது. அலுப்பு சீற்றம் கொடுத்தது. சுள்ளென்று சொல்லவேண்டும். அதே சமயம் நயம் குறையாது பேச வேண்டும் என்ற வேகம் உதித்தது.

''கயிற கட்டிகிட்டு தாலிக்கொடிய கூட வித்துடு வேங்க...பட்டறையை விக்கமாட்டேன்...வித்து சாப்பிடற துக்கு வீடு. தோட்டம், காரு...நகை நட்டு பித்தளை பாத்திரம்... மரசாமான்... எல்லாம் இருக்குங்க... பட்டறையை எதுக்கு விக்கணும்''

''நான் விக்க சொல்லையே... சுப்பிரமணியம் கன்னத்தில் அறைவாங்கிய அதிர்ச்சி மாதிரி பேசினான். உனக்கு அறிவு இருக்கா'' என்பதுபோல உற்றுப் பார்த்தான்.

''உடன் பிறந்தாளை கொஞ்சநாள் உங்ககிட்ட விட்டுப்புட்டு அப்புறம் நாங்க சேர்த்துக்க முடியுமா... நீங்க சோறு போட்டு நல்லா வச்சுக்குவீங்களா இருக்கும்... இருந்தாலும் மரியாதையா...''

நான் கொன்னாலும் கொல்லுவேன். இன்னொருத்தர் கொல்லவிடமாட்டேன்... அப்படித்தான்.''

''கொல்றதுக்கா பெத்துருக்கோம்... இத்தினி நாள் எங்க பட்டறை மினுக்கலையா... நாங்க சீராட்டி வளர்க்கலையா... இன்னிக்கு நேரம் சோறு இல்லாத தவிக்குது... எங்கனாலும் போயி எப்படியாவது பொழைச்சுக்கோன்னு தள்ளிட முடியுமா... சோத்துக்கு ஆத்தாள அடமானம் வெச்சதா கேள்வி உண்டா... பட்டறை எங்க ஆத்தா எங்க வீட்டு பொண்ணு... கஞ்சியோ கூழோ ஊத்தி காப்பாற்றுவோமே தவிர...'' கோபம் வார்த்தையாய் வராமல் அடக்கப்பட்டாலும் புவனாவின் கண்களுக்குள் வெளி வந்து விட்டது.

சுப்ரமணியன் மருண்டான். காரியவாதிக்கு பிறர் கோபம் தான் வெகுள காரணமாகாது. பேச்சில் அதிகம் இனிமை சேர்த்தான். புகழ்ச்சியாய் துவக்கினான்.

''அம்மா உங்க கோபம் ரொம்ப 'சரி... செய்யற தொழில் தாய் மாதிரிதான்... தெய்வத்துக்கு சமானம் தான்... இந்த பட்டறைக்கு நான் எத்தனை உதவி பண்ணியிருக்கேன்னு உங்களுக்குத் தெரியாது. உங்க வீட்டுக்காரர கேட்டுப்பாருங்க. கரி வரலை... இரண்டு நாள் டைம் கொடு. செஞ்சுடுவோம் பாரு நான் மூணு நாள் நாலு நாள் அட்ஜஸ்ட் பண்ணியிருக்கேன். ரிஜக்ஷன்னு சொன்னதை சரி பண்ணி நல்ல சரக்கா மாத்தி இருக்கேன். அவன் நல்ல மனுஷன். என் மேல் ரொம்ப நன்றி விஸ்வாசம். ஏதோ போறாத காலம் பாடா படுத்தறதுல இவ்ளோ பெரிய பட்டறை அழிஞ்சி போயிடக் கூடாதுன்னுதான் நான் இங்கே வந்தேன்...''

முகத்தில் கூடுதலாய் கனிவு சேர்த்துக் கொண்டான். நாக்கு எலும்பில்லாத அங்கம். எல்லா பக்கமும் சுழலக் கூடிய தசைக்கோளம், கூர்மையான பற்களுக்கு நடுவே

இருப்பினும் காயம் படாது தப்பித்துக் கொள்வதற்கு அதற்குத் தெரியும். காயம் பட்டாலும் துடிக்காது தொடர்ந்து தொழில் செய்யும் சுப்பிரமணியம் நாக்கு மாதிரியான ஆள். கெஞ்சினால் மிஞ்சுவதும் மிஞ்சினால் கெஞ்சுவதும் அவனுக்கு வாழ்க்கை கற்றுக் கொடுத்த பாடம்... காசு சம்பாதிக்கும் புத்தி. புவனாவிற்கு அருவருப்பு அதிகமாகியது நிமிடத்திற்கு நாலு மனம் உள்ளவனோடு பேசுவது கேவலமென்று பட்டது.

''மொத மொதல் வந்திருக்கீங்க. காப்பி சாப்டறீங்களா.'' மேற்கொண்டு பேச்சு தவிர்க்க, நகர்ந்து போவதே வழி என்று போனாள். சமையலறை கதவு இடுக்கு வழியே அவனைப் பார்த்தாள். எரிகின்ற வீட்டில் பிடுங்குவது லாபமென்று இவனுக்கு எப்படி தோன்றுகிறது... ஏன் மனிதர்கள் இப்படி அலைகிறார்கள்... இன்னொருவரின் வயிற்றெரிச்சல் தன்னை வாழ விடுமா? என்று யோசிக்க ஏன் மறுக்கிறார்கள். சுப்பிரமணியம் சுவர் பார்த்து முணுமுணுத்தபடி உட்கார்ந்திருந்தான். ஒரு கணம் அவனை நினைக்க பாவமாகக்கூட இருந்தது. போய் கேட்டவுடன் தூக்கி பட்டறையை கையில் கொடுத்து விடுவார்கள் என்று எண்ணிவிட்டான் போலிருக்கிறது. பொம்பளைக்கு என்ன தெரியும்? அவளுக்கு மாசம் ஐந்தோ பத்தோ கொடுத்துவிட்டு நாம நடத்துவோம் என்று திட்ட மிட்டான் போலிருக்கிறது. திக்கற்றவளுக்கு உதவி செய்தது போலும் ஆயிற்று. நாமும் நாலு காசு சம்பாதிக்க வசதியாகவும் போயிற்று. கணக்குப் போட்டிருப்பான் போலிருக்கிறது. விடை சரியாக வராத பிள்ளையைப் போல விழித்துக் கொண்டிருக்கிறான். இதுதான் சரியான விடை. சுப்பிரமணியம் பொம்பளை என்று மட்டமாக நினைப்பது தவறான கணக்கு. இத்தனை காலம் ஆண் வர்க்கம் போட்ட கணக்குதான். இரண்டில் இருந்து ஒன்று கழித்தால்

சைபர் வராது, ஒன்று வரும் மிச்சமாகும். அந்த ஒன்று எவர் துணையுமின்றி இயங்கும். ஒரு வேளை எனக்கு உதவி செய்திருந்தால் உன் பங்கு இவ்வளவு என்று எடுத்து வைக்க என் மனசு ஒப்பியிருக்கும். நீ கேட்காமலேயே பங்கு கிடைத்திருக்கும். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு, உன்னை மாதிரி இத்தனை படபடப்பாய் நான் இருக்கக் கூடாது, எங்கேயும் இருக்கக்கூடாது. உன்னோடு பேசியதில் எனக்குக் கிடைத்த பாடமிது.

நிதானமாய் காபி போட்டாள். பத்து நிமிடம் காக்க வைத்தாள். காபி கோப்பையை ட்ரேயில் வைத்து ஹாலுக்கு வந்தாள். அவன் குடிக்கிற வரையில் நின்றபடி காத்திருந்தாள். உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால் நான் நிற்கிற மரியாதையில் இவனுக்கு நெஞ்சு இரங்குகிறதா பார்ப்போம்.

''சாரி...நான் தப்பா ஏதாவது கேட்டிருந்தா மன்னிக்கணும்... ஏதோ ஒரு ஐடியா தோணித்து, உங்களுக்கு பிடிக்குமோன்னு வந்தேன். வர்றேன்'' கை கூப்பினான், வெளியேறினான்.

புவனா கவலையானாள். இது அடிப்பட்ட பாம்பு என்று மனதில் குறித்துக் கொண்டாள். இனி அந்தக் கம்பெனியில் ஏகப்பட்ட இடைஞ்சல்கள் வரும் என்று நினைத்துக் கொண்டாள். 'எப்படித் தடுப்பது' என்று யோசித்தாள். மறுபடியும் ஆபீஸ் பேப்பர்களை அலசத் துவங்கினாள். டெலிவரி செலான்களை அடுக்கினாள். பழைய பெண்டு செய்யப்பட்ட 120 பக்க நோட் ஒன்று இருந்தது. புரட்டிப் பார்க்க. மாதவாரியாய் கணக்குகள் பிரிக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு கம்பெனியில் பெயர் போடப்பட்டு, கம்பெனியில் உள்ளவர்கள் பெயர் குறிப்பிடப்பட்டு மாமூல் அனுப்பப்பட்டிருந்தது. ஒரு

ஆக்ஸில் ஹவுசிங்கிற்கு ஒரு ரூபாய் வீதம் மாதம் ஆயிரத்து இருநூறு ரூபாய் சுப்பிரமணியத்திற்கு வழங்கப்பட்டிருப் பது தெரிந்தது, சுப்பிரமணியனே அதிக தொகை பெற்ற வன் என்பது கணக்கில் தெரிந்தது. 'அடடே இதை முன் னால் பார்க்காமல் போய் விட்டேனே' என்று கவலைப் பட்டாள். 'கணக்குப் பார்த்து இந்த மாதம் காசு கொடுத் திருக்கலாமே என்று வருத்தப்பட்டாள். வாசலில் நிற் பானா என்று ஓடிப் பார்த்தாள். தெரு வெறிச்சோடி இருந்தது. இந்தப் பாம்பிற்கு பாலும் வார்க்கவில்லை. பலியாய் கேட்டதும் தரவில்லை, இது கொத்தும் நிச்சயம் கொத்தும் என்று கலவரமானாள். இரவெல்லாம் யோசித் தாள். பாம்பிற்கு பகை கீரி என்ற முடிவிற்கு வந்தாள்.

யோசிக்க யோசிக்க, எவருக்கும் தெளிவு ஏற்படாது. எதுபற்றியும் ஒருவர் யோசிக்க முடியும். ஆனால் தொடர்ந்து தீவிரமாய் யோசிக்க ஒரு நிர்பந்தம் வர வேண்டும். கால நிர்பந்தம் புவனாவை யோசிக்க வைத் தது. யோசிப்பில் தெளிவு ஏற்பட்டது. தெளிவு திட்டங் களை கொடுத்தது இரவு ஒரு மணிக்கு படுத்தவள் ஐந்து மணிக்கு கண் விழித்தாள். குளித்து பூஜை முடித்தாள். வெங்கடாஜலபதிக்கு போட்ட பூமாலையை எடுத்துக் காரில் வைத்துக் கொண்டாள். சுத்தமான உடையும் செந்தூரமுமாய் ஜெனரல் மேனேஜர் ராவ் வீடு நோக்கி கார் செலுத்தினாள் நாலு வீடு தள்ளி நிறுத்திவிட்டு, இறங்கி அவர் வீட்டு தோட்டக் கதவு திறந்தாள் குமிழ் அழுத்தாது வராந்தாவில் காத்திருந்தாள். வீடு விழித்து குழந்தைகள் பள்ளி கிளம்ப ஆயத்தமாவது ஓகைகள் மூலம் அவளுக்குப் புலப்படுத்தின, ''அடடே குழந்தைகளுக்கு ஒன்றும் வாங்கிட்டு வரலையே'' கவலை படர்ந்தது கதவு திறக்க, ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழந்தைகள் வெளியே வந்தனர். பதினைந்து வயது

பையன், எட்டு வயது பெண் வராந்தாவில் வந்து நின்றனர் ஜெனரல் மேனேஜரின் மனைவி போலிருக் கிறது. ஹவுஸ் கோட்டுடன் குழந்தைகளை அனுப்ப வெளியே வந்தாள். ''யார்'' என்று கேட்டாள். தன்னைப் பற்றி சொல்லுமுன் உள்ளே திரும்பி, ஆங்கிலத்தில் ஏதோ குரல் கொடுத்தாள். ஜெனரல் மேனேஜர் ராவுக்கு வீட்டிற்குள் ஏதேனும் செல்லப் பெயர் இருக்கலாம். அது மனைவி இட்ட பெயராகவும் இருக்கலாம். நாளிதழோடு வெளியே வந்தவர், இவளைப் பார்த்ததும், ''என்ன?'', என்று கேட்டார்.

''நேற்று ராத்திரி முழுக்க தூக்கம் இல்லீங்க. பட்டறை என்னால நடத்த முடியுமான்னு பயந்துகிட்டி ருந்தேன். நீங்க சொன்ன ரெண்டு வார்த்தை என்னால நடத்த முடியுமுன்னு தோணுச்சு...உங்களுக்கு நன்றி சொல்லக்கூட தோணல. காலையில பூஜை பண்றபோது உங்க நினைப்பு வந்தது. சாமிக்குப் போட்ட மாலை, உங்களுக்கு குடுக்கலாம்னு நினைச்சு எடுத்துக்கிட்டு வந் தேன் நீங்க நல்லாயிருக்கணும்னு சாமி கும்புட்டேன்.'' கடைசி வார்த்தை சொல்லும்போது கண்ணில் நீர் கோர்த்து கன்னம் இறங்கிற்று. ராயரின் மனைவி திகைத்தாள். குழந்தைகள் விழித்தன.

''ச்ச...ச்ச...எனக்கு எதற்கு மாலை...ஏன் இந்த அழுகை...உள்ளே வாருங்கள்.'' கதவுகளை விரியத் திறந்து உள்ளே அழைத்தார். ''என்ன?'' என்று விழி களால் கேட்ட மனைவிக்கு ஆங்கிலத்தில் விளக்கம் சொன் னார். மனைவிக்கும் செல்லப் பெயர் உண்டு போலிருக் கிறது. ஒருவேளை அது இவர் வைத்த பெயராக இருக்கலாம். செல்லப் பெயரில் விளித்துக் கொள்கிற அளவுக்கு சுதந்திரமும் அன்பும் உள்ள தம்பதிகளாக இருக்கலாம். மூன்று நிமிஷத்தில் முழு விவரமும் கேட்ட ராயரின் மனைவி, ''நீங்கள் இவரை உற்சாகப்படுத்த வேண்டும். பெண்களின் உயர்விற்கும் சொந்தமுறையில்

நாம் உற்சாகம் தரவேண்டும். உங்க பெயர் என்னம்மா?'' கேட்டாள்.

''புவனா...புவனேஸ்வரி.''

''எத்தனை குழந்தைகள்?''

''இரண்டு பெண்கள் மேடம். ஒருத்திக்கு திருமண மாகிவிட்டது. இன்னொரு பெண் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள்.''

''மாப்பிள்ளை...'' கேள்வி கேட்டாள்.

''அவரால் உதவியில்லை. என் புருஷன் செய்தது அவமானம் என்று என் பெண்ணை கொடுமைப் படுத்தா மல் இருக்கிறாரே, அதுவே போதும். அப்படி எதுவும் நடக்கக்கூடாது என்பதே என் பிரார்த்தனை. தினசரி பூஜை.'' ஆங்கிலமும், தமிழும் கலந்து தட்டுத் தடுமாறி பேசினாள். கலப்பான ஆங்கிலம் ராயரையோ...ராயர் மனைவியையோ உறுத்தவில்லை. மாறாய் அவள் நிலை மையின் கனம் உணர்ந்தார்கள். மௌனமாய் யோசித் தார்கள் ''இந்த மாலை'' புவனா எழுந்தாள். ராயர் அவசரமாய் மறுத்தார்.

''இது சாமி பிரசாதம்...உங்களுக்குத் தர எனக்கு கூச்சமாக இருக்கிறது. உங்கள் குழந்தைக்குத் தரு கிறேன். அவர்கள் நன்றாக இருக்க வேண்டும்'' எட்டு வயசுப் பெண்ணை அருகே அழைத்து மாலை போட்டாள். தலை உச்சியில் கை வைத்து 'நன்றாய இரு' என்று ஆசீர் வதித்தாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

தான் பெற்ற குழந்தைகளை பிறர் கொண்டாடுவது எவருக்கும் பிடித்த விஷயம். தனக்கு வரவேண்டிய மாலை தன் பிள்ளைக்கு விழுவது கண்கொள்ளாத காட்சி. ராயரும் அவர் மனைவியும் பூரித்தார்கள். மாலையும் கழுத்துமாய் நிற்கும் எட்டு வயதுப் பெண்ணைப் பார்த்து பரவசப்பட்டார்கள். வாய்விட்டு

சிரித்தார்கள். பெண் குழந்தை நாணிற்று. அதன் முகம் வழித்து படபடவென்று நெட்டி முறித்த புவனாவை வியப்புடன் பார்த்தது. இப்படியெல்லாம் அவள் அம்மா செய்வதேயில்லை. இந்த அம்மா ஏன் செய்கிறாள்... தன்னாலும் செய்ய முடியுமோ? ஆவலுற்றது. அதே போல புவனாவின் கன்னங்களை வழித்து, தன் தலையில் நெட்டி முறித்த குழந்தையின் செய்கைக்கு வீடு வாய்விட்டு சிரித்தது. அந்த விடியல் பொழுது சூழ்நிலையில் ஒரு இதம் பரவியது.

''நேரமாயிற்று கிளம்புங்கள்...'' குழந்தைகளை தாயார் துரிதப்படுத்த மாலை அவிழ்த்து அப்பாவிடம் கொடுத்துவிட்டு புவனாவிற்கு 'டாடா' சொல்லிவிட்டு ஓடிற்று.

''வேறு என்ன உதவி வேணும் சொல்லுங்கள்?'' ராயர் சூழ்நிலை இதத்தில் வியாபாரம் பேசத் துவங்கி னார்.

புவனா தன் பட்டறை சுத்தமாய் துடைக்கப்பட்டிருப் பதையும், தனது இன்ஜினியர் அடுப்பணைத்து போனது பற்றியும் சொன்னாள்.

கல்லூரிப் படிப்பு முடித்த இளைஞர்களை தான் ஊக்கு விக்க விரும்புவதாகவும் தன் குடும்பத்திலேயே அப்படி இளைஞர்கள் இருப்பதாகவும் தன் உறவுக்காரப் பையனை அவளிடம் அனுப்புவதாகவும் தானும் தன் வாழ்க்கையை இப்படி ஒரு பட்டறையில்தான் ஆரம்பித்ததாகவும் விளக்கினார். வீட்டு விலாசம் வாங்கிக் கொண்டார்.

''லீசுக்கு கேட்கிறார்கள் தரலாமா?'' என்று புவனா கேட்டபோது, ''கூடவே கூடாது'' என்றார். ''முற்றிலும் புதிய பட்டறையாக மாற்றுங்கள். இரண்டு மூன்று லட்சம் செலவாகும். தாங்க முடியுமா?'' என்று கேட்டார்

தோட்டம் விற்று ஆறு லட்ச ரூபாய் முதலீடு செய்ய முடியும் என்று புவனா சொன்னாள்.

''நான் காசு உதவி பண்ணமுடியாது. அது பிரச்சனையில்லையெனில் முழு தொழில் நுட்ப உதவியும் நான் செய்வேன். இது கம்பெனியின் கொள்கைகளுள் ஒன்று. கவலைப்படவேண்டாம்'' வராண்டாவிற்கு வர ராயரின் மனைவி அவள் மூக்குத்தியைப் பரிசோதித்தாள்.

''என்னிடம் வைரங்கள் மூன்று இருக்கின்றன. இது போல் மூக்குத்தி செய்ய உங்களுக்கு நம்பிக்கையான ஆள் தெரியுமா?''

''தெரியும். இந்த வராண்டாவிலேயே உட்கார்ந்து செய்து கொடுப்பார்கள் என்று அழைத்து வரட்டும்?'' இருவரும் மனம்விட்டுப் பேசினார்கள். வரும் வாரம் என்று நாள் குறித்துக் கொண்டார்கள். வெளியே இறங்கி தோட்டக்கதவு சாத்தியபோது உள்ளே இனம் புரியாத நம்பிக்கை பிறந்தது. அன்று பிற்பகல் அவள் வீட்டு தோட்டக் கதவு திறந்தது. மாநிறமாய் அடர்த்தியான தலைமுடியாய் கூரிய மூக்கும் பெரிய கண்களுமாய் ஓர் இளைஞன் கை கூப்பினான்.

''என் பெயர் முரளி. மெக்கானிக்கல் என்ஜினியரிங் பட்டதாரி. ஜெனரல் மேனேஜர் ராயர் அனுப்பினார். நான் அவருடைய தமக்கை பையன் விவரம் சொன்னான்.

மூன்றாவது நிமிடம் அவனோடு பட்டறைக்கு புவனா காரில் புறப்பட்டாள். பட்டறை வாசலில் சுப்பிரமணியன் ஒரு டெம்போவோடு காத்திருந்தான். நேற்று அனுப்பிய நூற்றி இருபது ஆக்ஸில் ஹவுசிங்கில் தொன்னூற்றிரண்டு ஆக்ஸில் ஹவுசிங்க்ஸ் குறைபாடு உள்ளவை என்று ரிஜெக்ட் செய்யப்பட்ட கார்டு அவனிடம் இருந்தது.

'பொம்பளைன்னு பார்த்து வசனம் பேசறியா...வா சாகடிக்கிறேன்' மனசுக்குள் கறுவினான். இவ்வுலகம் விசித்திரமானது. எப்போது யாருக்கு சாவு நேரும் என்று சொல்ல முடியாதது. இதுவே இவ்வுலகத்தின் சிறப்பு இயல்புகளில் ஒன்று.

காரில் இருந்து புவனா பட்டறை வாசலில் இறங்கியதும் சுப்பிரமணியன் கத்தத் தொடங்கினான். ஜெனரல் மேனேஜரின் மருமகன் முரளி என்பது அவனுக்குத் தெரியாயமில்லை. புவனா அவன் கூச்சலை மௌனமாக ஏற்றுக்கொண்டாள். முரளி ஆத்திர மடைந்தான். விதி சுப்பிரமணியனோடு விளையாடிற்று. புவனாவைப் பலப் படுத்திற்று.

22

பொறுமையாய் இருப்பதென்பது உள்ளுக்குள்ளே புழுங்குவதல்ல. வேதனைகளை புறம் தள்ளுவது இது இப்படித்தான், மேற்கொண்டு என்ன என்று இயங்குவது. சுப்ரமணியத்தின் செய்கைகளை புவனா புறம் தள்ளினாள். இப்படி மனிதர்கள் இருப்பார்கள் என்பதை ஏற்றுக்கொண்டாள். செயல்பட்டாள், அன்று அவன் தந்திரத்திற்கு வளைந்திருந்தாலோ, வேதனைப்பட்டு சிதறியிருந்தாலோ இன்று நிலைமை வேறாயிருந்திருக்கும். சுப்பிரமணியத்திற்கு சாதகமாய் போயிருக்கும்.

புழுங்காது, வேதனைகளை புறம் தள்ள மேற்கொண்டு செய்ய வேண்டியவைகள் கிரமமாய் மனசுள் தோன்றி திறம்பட செயலுக்கு அழைத்துச் செல்லும். செயலில் தெளிவு வர வெற்றி நிச்சயம்.

''என்னன்னு நினைச்சுக் கிட்டிருக்கீங்க எங்க கம்பெனியை?''

சுப்ரமணியன் மொத்த கம்பெனிக்கும் தானே உரிமையாளன் என்பது போல் பேசத் துவங்கினான். புவனா மௌனமாய் நிற்க, முரளி யார் இது என்று யோசிக்கத் துவங்கினான்.

நரிக்கு நாட்டாமை தர, கிடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம். நரி எத்தனையோ தேவலாம். கிடைக்கு இரண்டு ஆடுதான் கேட்டது. சுப்ரமணியன் கிடை மொத்தமும் கொடு என்றான். மிருகங்கள் தந்திர முள்ளவை. ஆனால் அவைகளின் தந்திரம் அன்றைய உயிர் வாழ்தலுக்கு மட்டுதான். பசிக்கு இரை தேடும் பொருட்டுதான். மனிதர்கள் சந்தோஷத்திற்காகவே கொல்பவர்கள். வெற்றி, தோல்வி என்று பாகம் பிரித்து தன் வெற்றியை விட, பிறர் தோல்வியை இனிப் பாய் கொண்டாடுபவர்கள். நேற்று இன்று நாளை என்கிற கால அறிவு உணர்வு மனிதன் எல்லா மிருகங் களையும்விட தந்திரமானவனாய் மாற்றியது மிகக் கொடூரமுள்ளவனாய் வளர வைத்தது பிறரை வதைத் தலை கலையாய் மாற்றி எக்களிக்க வைத்தது. பெண்ணை இம்சைப் படுத்தத் துவங்கியதும் இந்த இழிவு நிலை விஷயம்தான்.

புவனாவை மூலையில் முடக்கி மிரள வைத்து, சனி யன் எனக்கெதற்கு இந்த பிடுங்கல் என்று நோக வைத்து பட்டறையை பறித்துக் கொள்ளும் இன்னொரு தந்திரம் இந்த ரிஜெக்ஷன் நாடகம்:

டாலரன்ஸ் என்கிற வார்த்தைக்கு சரியான தமிழ் பதம் இல்லை. இரும்பு உருக்கு சாமான்கள் செய்கிற போது அளவு வித்தியாசங்கள் சற்று முன்பின்னாய் இருக்கும், ஒன்றரை அங்குல விட்டம் என்பது மேற் கொண்டு இடதோ, வலதோ ஒரு மில்லி மீட்டர்

போகலாம். வார்ப்பு அவ்வளவு பக்குவமாய் வராது. கிரைண்டிங் செய்து மாட்டிவிட முடியும்.

இது அதுமதிக்கப்பட்ட விஷயம். ஆக்ஸில் ஹவுசிங் சோதனை செய்யப்பட்டபோது இந்த டாலரன்ஸை சுப்பிரமணி நிராகரித்தான். மிகச் சரியான அளவு உள்ளதை எடுத்து மீதியை வண்டியில் ஏற்றினான். வாசலுக்கு வந்து கத்தினான்.

''ஆக்ஸில் ஹவுஸிங்கா இது...? வெறும் குப்பை தொன்னூறு பர்ஸன்ட் ரிஜக்ஷன். உங்கள நம்பி நாங்க எப்படி சப்ளை நடத்தறது? ராவ் கன்னா பின்னான்னு கத்தினார்.''

''என்னங்க திட்டறாரு?''

''ஆர்டர் கேன்சல் பண்ணச் சொல்றாரு.''

''எப்பங்க? என்கிட்ட...''

''என்கிட்ட சொன்னாரம்மா. நம்பலையா? வாங்க வந்து கேட்டு பாருங்க. ஒரு லேடின்னு கன்ஸிடரேஷன் கொடுத்தோம். இந்தக் குப்பையை வாங்க முடியாதுன்னு சொல்லிட்டார்.''

''என்ன தப்புங்க?''

''எல்லாத்தியும் ஒரு எம். எம் இரண்டு எம். எம். உதைக்குது''

''டாலரன்ஸ் உண்டுங்களே.''

''என்ன டாலரன்ஸ்? டெக்னிக்கலா என்ன தெரியும் உங்களுக்கு? கழுத்து அறுக்கறீங்களே.''

''கொஞ்சம் தெரியுங்க,''

''கொஞ்சம் தெரிஞ்சா போறாது, முழுவதும் தெரியணும்''

''சரி பண்ணிக் கொடுக்கறேங்க.''

''எப்ப சரி பண்ணி...எப்ப தரது? அது வரைக்கும் நாங்க வாய்ல விரல் வச்சுக்கிட்டு இருக்கணுமா? முட்டாள் தனமா பேசறீங்களே.''

ஒரு பெண்ணிடம் இந்த வார்த்தை சொல்வது அநாகரிகத்தின் உச்சம் என்று முரளிக்குப் பட்டது. அருகே வந்தான்.

''என்ன ப்ராப்ளம் ஐயா?''

''நத்திங்'' சுப்பிரமணியம் முகம் திருப்பிக் கொண்டான்.

''என்ன அளவு தவறு?''

''நீ யார்?''

''நான் முரளி, இந்த வார்ப்பு கம்பெனியில் இன்று புதியதாய் பொறுப்பு ஏற்க வந்திருக்கிறேன்.''

''என்னவென்று?''

''எல்லாம்தான். உதவி எஞ்சினியர் என்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''வார்ப்பு இரும்பு வேலை செய்திருக்கிறீர்களா?'' சுப்பிரமணியம் குரலில் அதட்டல் இருந்தது.

''இல்லை ஐயா.''

''தள்ளிப் போ. வார்ப்பு இரும்பு பிளாஸ்டிக் சாமான் அல்ல. பொம்மை விளையாட்டல்ல.''

''உண்மை.''

''இந்த பிரச்சனைக்கு நீங்களே ஒரு தீர்வு சொல்லுங்கள்'' முரளி கேட்டான்.

''ஆர்டர் கேன்சல் செய்யப்படும். எங்களுக்கு வரவேண்டிய இரும்புப் பாளங்கள் திருப்பி வாங்கப்படும். வேறு கம்பெனிக்கு ஆர்டர் போகும்.''

''வேறு நல்ல முடிவு சொல்லுங்கள். கோபப்படாதீர்கள்.''

''சொன்னேன் கேட்கவில்லையே.''

''என்ன? என்னிடம் சொல்லுங்கள்.''

சுப்ரமணியன் யோசித்தான். ஒருவேளை பட்டறை தனக்கு கிடைத்தால் இப்படி ஒரு இளைஞன் நிர்வாக உதவிக்குத் தேவை. இவனை நம் பக்கம் இழுத்தால் என்ன?

தனியே தோளில் கைபோட்டு முரளியை ஓரம் அழைத்துப் பேசினான்.

புவனா அந்த நாசூக்கு கண்டு வியந்தாள். மனிதர்கள் எப்படி முகம் மாற்றுகிறார்கள் என்று யோசித்தாள்.

இந்த கம்பெனியை நானே நடத்துகிறேன் என்று கேட்டேன்.

''இதுமாதிரி கம்பெனிக்கு நல்ல பெயர் இருக்கிறது திடுமென்று கவிழ்த்து விட்டது. நல்ல ஆர்டர் கையில் இருக்கிறது. நாற்பது சதவீத லாபம் வரும்''

''புரிகிறது.''

''நான் கம்பெனியில் இருக்க இந்த மாதிரி ரிஜெக்ஷன் பிரச்சனை வராது. உள்ளே இன்ஸ்பெக்ஷனை சமாளித்து ஒரு ரிஜக்ஷன் கூட இல்லாது அனுப்பிவிட முடியும்.''

''புரிகிறது.''

''ஐந்து சதவீதமோ, பத்து சதவீதமோ இவர்களுக்குத் தந்து விட்டு நானே நடத்த திட்டமிட்டு அனுமதி கேட்டேன். மறுக்கிறார்கள்.''

''புரிகிறது.''

''இந்த ரிஜக்ஷனை இவர்களால் சரிசெய்து தர முடியுமா? முடியவே முடியாது.''

முரளி யோசித்தான். முரளிக்கு எஞ்சினியரிங் படிப்பில், மாஸ் சைக்காலஜியும் ஒரு பாடம். முரளி வீடு முழுக்க எஞ்சினியர்கள், அதிகாரிகள். சக தொழிலாளியிடம் வேலை வாங்குவது பற்றி விவரமாய் அவன் குடும்பம் இரவு சாப்பாட்டின்போது விவாதிக்கும். பிரச்சனைகளை அலசும்.

இந்த மனிதனை நேரடியாய் மோதி சாய்க்கக் கூடாது என்கிற முடிவுக்கு முரளி வந்தான்.

''ரிஜக்ஷன் சரி செய்ய முடியாது என்று நீங்கள் நிரூபிக்க வேண்டி வருமே.''

''என்ன சொல்கிறாய்?''

''ஒரு வாய்ப்புக் கொடுத்தும் தவறவிட்டார்கள் என்று இவர்களே உணரும்படி செய்தால் உங்கள் வேலை எளிதாகும்.''

சுப்பிரமணி யோசித்தான். ஆர்டர் சேன்சல் செய்ய அது இன்னொரு வழி.

''ஒரு நாள் டயம் தரட்டுமா?''

''போதாது, இரண்டு நாள் முழுமையாய் தாருங்கள். செய்ய முடியுமா என்று பாருங்கள்.''

''நீ இவர்களுக்கு உதவப் போகிறாயா?''

''இப்போதுதான் இங்கே நுழைகிறேன். ஒன்றும் புரியவில்லை.''

''ஒன்று செய். இவைகள் சரி செய்யப் பட முடியாதவை என்று சொல்லிவிடு. பிறகு எனக்கு லீஸ் கிடைக்கும். நானே உனக்கு வேலை போட்டுத் தருகிறேன். ஆண்களுக்கு நடுவே அனுசரணை ஒரு

பிரச்சனை இல்லை. பெண்கள் அனுசரித்துப் போவது தான் கடினம்.''

''புரிகிறது''

''நல்ல சம்பளம் தருவேன். பயப்படாதே.''

''நன்றி.''

''பேராசைப்படாதீர்கள் என்று அந்தப் பெண் மணிக்கு சொல்லு.''

''முயற்சிக்கிறேன்.''

''மேடம்.'' சுப்பிரமணியன் திரும்பினான். ''இரண்டு நாளில் இவைகள் எங்கள் கம்பெனிக்கு வரவேண்டும். முற்றிலும் நல்லவிதமாய் வரவேண்டும். வராது போனால் விளைவுகள் மோசமாய் இருக்கும்.''

''எப்படியும் பட்டறை லீஸுக்குத் தருவதாய் இல்லை.''

சுப்பிரமணியன் கோபங் கொண்டான்.

''பொம்பளை புத்திய காமிக்கிறியே... தானும் வாழாம... அடுத்தவனையும் வாழ விடாம சாகடிக்கிறியே. உங்களுக்கெல்லாம் கள்ளக்கடத்தல்தான் சரி கம்பி எண்ணினாத்தான் புத்தி வரும்.''

வார்த்தைகளில் கடுமை இறைத்தான். புவனா வெளிறினாள்.

''வார்த்தையை அளந்து பேசு தம்பி.''

''ஏன், என்ன செய்வே?''

''ஒரு பொம்பளை நினைச்சா எது வேணும்னாலும் செய்ய முடியும். மரியாதையாய் நடந்துகொள்ளப் பழகு'' வெகுண்டு இரைந்தாள்.

''என்னடி திமிரா. ராவ்கிட்ட வந்து உடம்பகோணிக் கிட்டு அழுதா ஜெயிச்சுடலாம்னு பார்க்கறியா...உன் பொட்டச்சித்தனம் செல்லுபடியாகாது.''

''செருப்படி படுவீங்க. சுப்பிரமணியன்.''

''ஏய்...' சுப்பிரமணியன் கால் அகட்டி, கண் உருட்டி, இடுப்பில் கை வைத்து நின்றான்.

முரளி அவனை மெல்ல தள்ளி வாசலுக்கு அனுப்பினான்.

''என்ன பேசறா பாத்தியா அவ...பஜாரி மாதிரி. புடவை அவுத்து ஜெயிக்கலாம்னு பார்க்கறாளுங்க.''

''நோ, நோ. டோன்ட் டாக் லைக் திஸ்.''

''ஏன்யா?''

''உன் கம்பெனிக்கு கெட்ட பெயர். இது சரியில்லை.''

''அவ சரியா?''

''நான் பேசுகிறேன்.''

''பேசு. பேசி அந்த பொம்பளைய வீட்டுக்கு அனுப்பு. சுப்பிரமணியன் இல்லாத ஒரு துரும்பும் இங்க அசையாதுன்னு சொல்.'' மோட்டார் சைக்கிளில் ஏறி போக, வேனிலிருந்து ஆக்ஸில் ஹவுஸிங் கீழே இறங்கின.

புவனா ஆபீஸ் அறையில் நின்று சுவரில் சாய்ந்து கண் மூடினாள்.

முரளி உள்ளே நுழைந்தான்.

அவள் முகத்து வேதனையை தன்னுள் வாங்கினான். ஒரு மூத்த சகோதரி போல உள்ள இந்தப் பெண்ணை எவனோ இழிவாய் பேசியது வலித்தது.

''மேடம்.''

புவனா கண் திறந்தாள்.

முரளிக்கு என்ன ஆறுதல் சொல்வது என்று தெரியவில்லை. இம்மாதிரி ஒரு அனுபவம் அவனுக்கு ஏற்பட்டதில்லை. இது அநாகரிகத்தின் உச்சம். பேராசையின் விளைவு என்பது புரிந்தது. அந்த ஆள் மோசமானவன் என்பது கோபம் கொடுத்தது. ஆனால் இந்த பெண்மணியின் துக்கம் நீங்க வார்த்தைகள் கிடைக்கவில்லை.

தயங்கி அவளையே பார்த்தான்.

''வாங்க வொர்க் ஷாப் காட்டறேன். மூணு ஃபர்னஸ் இருக்குங்க. ஆறு பக்கெட் இருக்கு. மண்ணு மோல்ட் தான். அச்சு பதினாறு இருக்கு, கரி காசு கொடுத்துக் கொண்டாந்துடுவேன்.

''வல்ஃப் கிரைண்டர் நாலு. சாம்பரிங் மிஷின் நாலு.''

முகம் துடைத்து முரளியோடு பட்டறை வேலையில் மூழ்கினாள்.

''இப்ப உடனடி பிரச்சனை ரிஜெக்ஷன்ஸ்களை பார்ப்போம். வாங்க. காலிபர் இருக்கா... ஆக்ஸில் ஹவுஸிங் டிராயிங் இருக்கா...?''

தேடித் தந்தாள்.

முரளி அளவு எடுத்துப் பார்க்க, அநேகமாய் எல்லாம் சரியாக இருந்தது. ரெண்டு மூணு ஹவுஸிங்கில் அதிக இரும்பு இருக்க, அதை கிரைண்டரில் தேய்த்து சரி செய்தான். உதிரி உருக்கை வெட்டி எறிந்தான்.

''டெலிபோன் இருக்கா?''

ஜெனரல் மேனேஜர் ராவ்விடம் பேசினான். முழு விவரமும் விவரித்தான். கன்னடத்தில் பேசினான்.

மிகக் கேவலமாய் சுப்பிரமணியன் நடந்து கொண்டதைச் சொன்னான். சாது பெண்மணி மிரட்டியதால் அடங்கினான் என்று வலியுறுத்தினான்.

ரிஜக்ஷன் தேவையில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், தான் வரைபடம் வைத்து அளந்து பார்த்ததையும், லீஸுக்கு விடச் சொல்லி சுப்ரமணியன் வற்புறுத்தியதையும் விளக்கினான்.

''மாலை நான் வருகிறேன், அங்கேயே இரு'' கட்டளை வந்தது.

புவனா ஒரு ஆளாய் தொழிற்சாலையைச் சுத்தம் செய்யத் துவங்கினாள்.

முரளி லாப நஷ்டக் கணக்கு போட்டுப் பார்க்கத் துவங்கினான்.

ஒரு கார் வாசலில் நின்றது. பாப்பா சேட்டின் மகள் கீழே இறங்கினாள். புவனாவை விசாரித்தாள்.

23

சாம்பல் மூடிக்கிடந்த நெருப்பை அருகே குனிந்து வாயால் ஊதினால் வெப்பச் சாம்பலும், தீயின் தணலும் ஒருங்கே எழுந்து ஊதின உதடுகளைத் தாக்குமே அது போல பாப்பாவின் வருகை இருந்தது.

'சவுக்கியமா' என்று கொச்சைத் தமிழில் பாப்பா கேட்டதும், அடிவயிற்று நெருப்பு நெஞ்சைத் தாக்கிற்று.

'சௌக்கியமா' என்பது சாதாரண மரபு வார்த்தை. ஒரு இடைவெளிக்குப் பிறகு பார்க்கும்போது வரும் இயல்பான கேள்வி. ஆனால் இங்கே கோபம் கொப்பளிக்க வைத்தது.

புவனா யோசித்தாள். சற்று முன் சுப்பிரமணியத்திடம் சண்டையிட்டு உடம்பும் மனசும் நொய்மையாகி

இருந்தன. ஏன் தனக்கு இப்படி ஒரு கதி என்று ஒரு வேதனை உள்ளே நிரந்தரமாய் இருந்தது. மறுபடி சண்டையிட கத்திப் பேச அதிகம் சக்தி தேவைப்பட்டது. இருப்பதையும் செலவழிக்க, இங்கேயே சுருண்டு விழுந்து விடுவோம் என்று தோன்றியது.

சுருண்டு விழ முதல் நாளே, ஒரு எஞ்சினியர் வந்த சில மணி நேரத்துக்குள்ளேயே, ஒரு விடியல் ஏற்பட்ட உடனேயே மறுபடி குழப்ப மேகம் சூழும். இருட்டாகும். வேலை முடங்கும் என்பது தெரிந்தது.

'கத்தாதே புவனா, உன் வேலையைக் கவனி. அவளை அதட்டி அனுப்பு வெளியே' உள்ளே குரல் கேட்டது.

'உன் கோபத்தில் செலவழிந்து போவது நீதான். மௌனமாய் இரு புவனா' உள்ளே கட்டளை வந்தது.

கோபத்தில் ஆடுவது எத்தனை உணர்ச்சி விரயமோ அத்தனை விரயம் கோபத்தை அடக்குவதிலும் உண்டு. இன்னும் அதிகமாகவே சக்தி செலவழிதல் நடக்கும் என்பது தெரிந்தது.

'சவுக்கியமா' என்று கேட்டு பதிலுக்கு காத்திருக்கும் பாப்பாவை புவனா உற்றுப் பார்த்தாள். முரளி உள்ளே அறிப்பின் நீள உயரம், கரி கொள்ளளவு கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

''இல்லீங்க. ரொம்ப வேதனைல இருக்கேன். திசை தெரியாத தவிக்கிறேன். தலை கீழா கட்டித் தொங்கவிட்ட கொழி மாதிரி ஒரு (சிறகு கூட அசைக்க முடியாது கிடக்குமே அப்படி இருக்கேன். போதுங்களா?''

பேச்சு மென்மையாய் இருப்பினும் கோபம் கொழுக்கட்டையைப் பிளந்து நீற்கும் பூரணமாய் நின்றது.

பாப்பா வியாபாரியின் மகள். அவளுக்கு கோபம் சமாளிக்கும் வித்தை சிறிய வயதிலேயே கற்றுத்தரப் பட்டது. கோபமாய் பேசுபவர் பலஹீனர் என்று எடுத்துக்காட்டப்பட்டது. அவ்விதம் பேசி இயங்கு பவரை சமாளிக்க பல வழிகள் காட்டப்பட்டன. அதில் ஒன்று உடனடியாய் சரணடைதல். சரணடைதலை வெளிப்படுத்துவது எப்படி...

அமைதியாய் இருப்பது, 'ஆம்' என்று ஏற்பது. மன்னிப்பை முதலியே வெளிப்படுத்துவது. இவை களுக்கும் மசியவில்லை எனில், எதிரொளியைக் குலைக்க அழுதுவிடு. அழுவது ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

ஆனால் பாப்பா சாமர்த்தியம் உபயோகிக்கும் முன் சிந்தித்தாள். உன் எதிரே ஒரு குடும்பம் தன் தந்தை யால் சிதறடிக்கப்பட்டது. எந்த முகாந்திரமும் இன்றி இடக் காலால் நசுக்கப்பட்டது. ஏதோ சில உதவிகள் பெற பெருமைப்பட்டு ஓடி ஓடி உபசாரங்கள் செய்தவனை அவளும் உபயோகித்து, தேவையில்லாமல் தண்டனை பெற வைத்து அவன் தண்டனை சிறைவாசம். இவளுக்கோ கல்லுடைக்கிற செக்கு இழுக்கிற வேதனை.

'காசு காசு' என்கிற அலைச்சலில் பலரை இந்த குடும்பம் நாசம் செய்திருக்கிறது. காசு வந்துவிட்டது. மலர்ச்சி வரவில்லை. சலவைக்கல் வீடும், தொங்குவிளக்கு நிறைந்துவிட்டது. ஆனால் வெளிச்சம் மனதில் இல்லை.

குழந்தையை அவன் கொஞ்சவேயில்லை. மறுபடி ஃபேமிலி லைப் எப்போ டாக்டர் என்று கூசாமல் கேட்கிறான். டாக்டர் அவனை வெறித்துப் பார்த்து விட்டு 'மூன்று மாதம் போகட்டும்' என்றார்.

'ஏய், என்ன சப்தம் அங்கே?'' என்று இரவு குழந்தை அழுகிறபோது கத்துவான். தனியே உட்கார்ந்து ப்ளு பிலிம் போட்டு பார்ப்பான்.

சில இரவுகள் வருவதேயில்லை. எங்கே போய் அலை கிறானோ, ஸ்நேகமே இல்லாத புருஷன் சாபம் போல. நாலுபேருக்கு முன்பு புருஷனும், மனைவியுமாய் காரில் இறங்குகிற அலட்டல் தவிர, பளபளப்பு தவிர, உள்ளே சத்தே இல்லை சந்தோஷமே இல்லை.

எத்தனை நேரம் கரன்சியைப் பார்த்துக் கொண் டிருக்க முடியும்...எத்தனை நாள் பீரோவில் உள்ள நகை களை தடவிக் கொண்டிருக்க முடியும்...புருஷனுக்காக வந்து கதறினாயே, அவன் விடுதலைக்கு விரும்பினாயே, எனக்கு ஒரு வேதனை வந்தால் என் புருஷன் விட்டு விடு வானா...சனி ஒழிந்தது என்று உள்ளே தோன்றுமா... ஒழிந்தது என்று தோன்றவா கல்யாணம்? ஐந்து நாள் வைபவம்... ஊர் கூடி தேரிழுத்த திருவிழா...

புருஷனும், மனைவியுமாய் கோவிலில் அள்ளி அள்ளி கூழ் ஊற்றுவார்களாம். காய்கறி விற்பவன் சொன்னான். கைபட மாற்றி மாற்றி கரண்டி போட்டு கலக்கி இறக்குவார்களாம். எம் புருஷன் செய்வானா, செய்ய விடுவானா...

வேதனை முள் செடியால் தடவியது போல, மனதி லும், உடம்பிலும் படர்ந்தது. குடும்பம் குடும்பமாய் அழித்துவிட்டு என்ன செய்தால் சமாதானமாகும்... காசால் அடித்து எதைச் சாதிக்க முடியும்...எங்கே அன்பு விற்பனை கடை உண்டு...

உள்ளே மனசு கதறிற்று. பாப்பா அழுதாள்.

''எதுக்குங்க?'' புவனா கேள்விக்கு பதில் சொல்லாது அழுதாள்.

''நீங்க அழுது எனக்கு என்ன நிறையப் போவுது ஒன்றுமில்லை. எனக்கு வேலை நிறைய இருக்கு.''

பிடிகொடுக்காது புவனா பேசினாள்.

''பெஹன்ஜி'' உணர்ச்சி கொந்தளிப்பில் சொந்த பாஷை வெளியே வந்தது.

''நான் சந்தோஷமாக இல்லை. பெஹன்ஜி பல குடும்பங்களை நாங்கள் அழித்திருக்கிறோம். எங்கள் உயர்வுக்கு உபயோகப்படுத்தினோம். இருப்பினும் எங்கள் குடும்பத்தில் யாரும் சந்தோஷமாய் இல்லை. என் குழந்தையும் சந்தோஷமாக இருக்கப் போவதில்லை. எனக்குத் தெளிவாய் தெரிகிறது. பயம் வருகிறது. சரி பண்ண விவரம் தெரியாமல் தவிக்கிறேன். ஒரு தலை முறைக்கும் இப்படித்தான் வாழ்க்கையோ என்று பயப் படுகிறேன்?''

புவனா விழி உயர்த்தினாள்.

''ஒரே நிமிஷத்தில் சரி செய்யலாம். பாப்பா உன் அப்பாவை அழைத்து வா. போலீஸுக்கு சொல். என் புருஷன் வெளியே வருவான்.''

ஆனால் அப்பா எங்கே என்று பெண்ணுக்குத் தெரி யாது. தெரிந்தாலும் காட்டிக் கொடுக்க முடியாது. அப்பா மட்டுமில்லை, பெரிய குடும்பமே பிடிபடும். கும்பலில் உள்ள ஒரு ஆள் காட்டிக்கொடுப்பவரை கொன்று போட முன்வந்து விடுவான். அப்பாவைக் காட்டிக் கொடுப்பது தற்கொலை. அடியாட்களுக்கு அப்பா, மகள் என்கிற உறவு சுகம் தெரியாது. இரக்கம் தருமம் என்கிற நியதி கள் இல்லை.

''இல்லை பெஹன்ஜி. என்னால் முடியாது.''

'அப்போ போய் வா' என்பதாய் புவனா கை கூப்பினாள்.

''என் டிரைவர், காலி டெம்போ வரும். கொஞ்சம் வண்டி எடுக்கறீங்களா?'' கை தட்டி கார் விலக்கும்படி சொன்னாள்.

பாப்பாவை கவனிக்காமல் சலான் எழுதுவ தில் முனைந்தாள்.

''மேடம்'' என்று உள்ளேயிருந்து முரளி குரல் கொடுக்க, பாப்பா அங்கே நிற்பதை லட்சியமே செய்யாது உள்ளே போனாள்.

சலான்கள் பறந்தன. பாப்பா மறுபடி அடுக்கி மேஜை யில் வைத்து மேலே பேப்பர் வெயிட் வைத்தாள். வைக் கும்போது படித்தாள்.

'அட, இந்தக் கம்பெனியா...எப்போது வந்த ஆர்டர்? தேதி என்ன' மனதில் குறித்துக் கொண்டாள்.

இந்தக் கம்பெனியில் அப்பாவுக்கு ஷேர் உண்டே. தனக்கும் சில பங்குகள் கிடக்கின்றனவே. இதன் முத லாளி நம் குடும்பத்துக்கு பரிச்சயம்தானே...சுற்றி வளைத்து புவனாவிடம் வரலாமா? அப்போதும் மறுத் தால்...முயற்சி செய். கொஞ்சமாவது பாபம் கழுவு.

கார் அந்தக் கம்பெனி நோக்கிப் போயிற்று. இந்த கம்பெனியா...பெண் தீவிர யோசனையில் நகம் கடித் தாள்.

''கரி வேண்டும், புவனா மேடம்.''

''ஏற்பாடு செய்யலாம்.''

''கரி வாங்க நீங்கள் போகிறீர்களா, இல்லை...''

''நானே போகிறேன்.''

''கரி அடுக்க தனி ஷெட் போடலாமா?''

''செய்வோம்.''

''புகைப்போக்கி சுத்தம் செய்ய வேண்டும்.''

''சரி.''

''உடனடியாய் நிறைய இன்வெஸ்ட்மெண்ட் உண்டு மேடம்.''

''இரண்டு லட்சம் போதுமா?''

''போதும்.''

''நகையை அடமானம் வைத்து எடுத்து வருகிறேன்.''

''ஆட்களையும் வரச் சொல்லுங்கள்.''

புவனா நிலக்கரி விற்பவனிடம் போனாள். கையிலிருந்து காசு கொடுத்தாள். செக் ஆறு லோடுக்கு எழுதினாள். ஆட்களைத் தேடி வியாசர்பாடி பக்கம் கார் செலுத்தினாள். குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் அலைந்து தனித்தனியே பார்த்தாள். முன்தொகை தந்தாள்.

கம்பெனிக்கு போய் பூட்டிவிட்டு 'நகையை எடுத்து போய் எங்கே விற்கலாம்' என்று யோசித்தாள்.

பட்டறைக்குள்ளே போக, முதல் லோடு கரி வந்திறங்கியிருந்தது. வெள்ளை அம்பாசிடர் கார் வெளியே இருந்தது.

உள்ளே அடுப்புக்கருகே ஜெனரல் மேனேஜர் ராவும், முரளியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முரளி பேசுவதை ராவ் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவள் வர, திரும்பினார்.

''வணக்கம் ஐயா.''

''வணக்கம்.''

''முரளியை உங்களுக்கு வேலைக்கு வைக்க விருப்பமா?'' ஆங்கிலத்தில் கேள்வி வந்தது.

''ஆமாங்க. தம்பி ரொம்ப மரியாதை, பணிவு.''

''வேலையிலும் கெட்டிக்காரன். நிச்சயம் இந்த இடத்தை மேலுக்குக் கொண்டு வந்து விடுவான். எத்தனை லோட் நிலக்கரி வருகிறது?''

''ஆறு லோட் வருதுங்க'' ''லோடு ஆட்கள் எப்போது வருகிறார்கள்?''

''நாளைக்குக் காலைல ஏழுமணிக்கு வராங்க ஐயா.''

''பண முதலீட்டில் எதாவது சிரமம் உண்டா?''

''இல்லீங்க இப்போதைக்கு இல்லை.''

''இரண்டு லட்சம் போறாது அம்மணி. மேலும் தேவைப்படும்.''

''நிலம் வித்துடலாங்க.''

''செய்யுங்கள். ஆர்டர் பற்றி கவலைப்படாதீர்கள். மேலும் ஆர்டர்கள் நான் தருகிறேன். தினமும் பட்டறைக்கு நீங்கள் வந்தால் போதும்.''

''நிச்சயம் வருவேங்க.''

''சுப்ரமணியன் பேச்சை மறந்து விடுங்கள். அவரை நான் கண்டிக்கிறேன். இந்த பொறுப்பு வேறு ஆட்கள் பார்ப்பார்கள். தன்மையான ஆளை உங்கள் பட்டறையை தொடர்பு கொள்ள வைக்கிறேன். முரளி, காண்டாக்ட் கம்பெனி அண்ட் ஆஸ்க் ஒன் மிஸ்டர் ராமசாமி கம்ஹியர்.''

முரளி நகர்ந்தான். போன் செய்துவிட்டு வந்தான்.

''ராமசாமி யார், இஞ்சினியரா?''

''இல்லை பர்சேஸ் ஆள். நல்ல செல்வச் செழிப்புள்ள குடும்பம். ஒரு சம்பிரதாயத்துக்காக கம்பெனியில் வேலை செய்கிறவன். பேனா பென்சில் கூட உதவி எதிர் பார்க்காதவன், ஜென்டில் மேன். வரட்டும் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.''

ரிஜக்ஷன் பர்ஸெண்ட்டேஜ் ஆராய்ந்தார்கள். குறைக்கும் வழி தேடினார்கள். ஒரு குவளை உருக்கு ஒரு மோல்ட்டுக்கு என்று கணக்குப் போட்டார்கள். பெரிய குவளையில் அதிகம் மோல்ட் எடுக்க முதல் மோல்ட் சிரமப்படுகிறது. குறைகிறது. வேலை சீக்கிரம் முடிய மூன்று குவளை உருக்கு அதிகம். சிதறும் அல்லது அவசரமாய் ஊற்றும்படி வரும். வேலை நேரம் அதிகமானாலும் ஒரு குவளை மோல்ட் என்பது ரிஜக்ஷனே இல்லாது போகும்.

புவனாவுக்குப் புரிந்தது.

குவளைகளை மாற்ற கணக்குப் போட்டார்கள்.

அங்கிருந்தபடியே குவளைகளுக்கு ஆர்டர் தந்தார்கள்.

ராமசுவாமி முப்பது வயது இளைஞன். கொஞ்சம் ஒட்ட வெட்டிய முடியும், சரியான உடற்கட்டும், எப்போதும் மந்தகாசமான சிரிப்புமாய் உள்ளே வந்தான். ராவுக்கு வணக்கம் சொன்னான்.

''ராமசுவாமி, இனி உனக்கு ஆக்ஸில் ஹவுஸில் வாங்கும் வேலை. இந்த பட்டறையை நாம் பராமரிக்க வேண்டும். தினமும் காலையில் இங்கே வந்து விட்டு பிறகு கம்பெனிக்கு வந்தால் போதும். கம்பெனிக்கும் பட்டறைக்கும் இடையே மீடியேட்டர் நீ. சுப்பிரமணியனுக்கு போன் செய்து பேப்பர்கள் வாங்கிக்கொள். உடனே முழு மூச்சாய் இதில் ஈடுபடு. இது என் மைத்துனன். முரளி, இவர் புவனா. பட்டறை உரிமையாளர்'' ராமசாமி கை கூப்பினான்.

''கம்பெனி ஆர்டர் எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டான்.

ராமசாமியின் மனைவியிடம் பாப்பா போன் பேசினாள். எப்போது வருவார் கம்பெனியிலிருந்து

என்று கேட்டாள். கம்பெனி நெம்பர் வாங்கிக் கொண்டாள். கம்பெனிக்கு போன் செய்தாள்.

ராமசாமியின் அப்பா பங்காரு ஐயங்காரும் பாப்பாவின் அப்பாவும் நண்பர்கள்.

ராமசாமி மூலம் கம்பெனி உயர் அதிகாரியைப் பிடிக்க நினைத்தாள். கம்பெனிக்கு போன் செய்தாள். இங்கே இருக்கிறார் என்று சொன்னார்கள். டெலிபோன் நெம்பர் கொடுத்தார்கள்.

அங்கே டெலிபோன் போட புவனா எடுத்தாள்.

''ஹலோ' என்றாள்.

24

வாழ்க்கையில் துணை என்பது மிகுந்த உற்சாகமான விஷயம்தான். கல்லுக்கு அடியில் கடப்பாறை கொடுத்து உடம்பு திமிர, உயிர் சுருள நெம்புகையில் கூட ஒருவர் உதவிக்கு வருவது நலமான காரியம்தான். பற்றுப் பாத்திரம் பரப்பித் தேய்த்து விட்டு எழுந்திருக்கும் போது இடுப்பு விண்ணென்று பிடித்துக் கொள்ளும். இவைகளை அடுக்கி வைக்கவேண்டும். அவ்வளவு தானே... என்னும் போது மகிழ்ச்சி பொங்கும். ஒரே ஒரு மனிதர் உதவிக்கு வந்தாலும் மகிழ்ச்சியில் உலகத்தில் நல்லவர்கள் நிறைய பேர் இருப்பார்கள் என்கிற நிம்மதி பரவும். பாறைக்கு கை கொடுத்தவர் ஆணா, பெண்ணா, பாத்திரம் எடுத்து வைத்தவர் அசலா, உறவா என்று யோசிப்பது வீண் வேலை.

ஆனால் உதவிக்கு ஆள் வருவது தெரிந்ததும் ஏற்படும் மகிழ்ச்சியை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க

வேண்டும். 'மனப்பூர்வமாய் உதவிக்கு வந்தால் வா... இதைச் செய்' என்று நன்றியுடன் பேசவேண்டும். உதவிக்கு ஆள் வந்துவிட்டதே என்று ஓயாமல் நாலு பாத்திரம், நீ கழுவி வை, கவிழ்க்கிறேன் என்று தொடர வேண்டும். புரட்டிய பிறகு பாறைக்கு அடியே சுத்தம் செய்வது தொடர வேண்டும். உதவி சுகம், சுகத்தில் கண் சொருக சோம்பல் வளர்ந்து விடும். அடுத்த வேலைக்கு யார் உதவிக்கு வருவார்கள் என்று புத்தி தேடும். வராது போனால் புலம்பத் துவங்கும்.

''ஆர்டர் காப்பியா, இதோ இந்த பீரோவுல இருக்கு பாருங்க'' என்று சொல்லத் தோன்றியது. சட்டென்று புவனா சுதாரித்துக் கொண்டாள். பீரோ திறந்து தேடி எடுத்துக் கொடுத்தாள்.

''எவ்வளவு டெலிவரி பண்ணியிருக்கிங்க மேடம்?'' டெலிவரி சலான் போடப்படாமல் இருந்தது. லெட்ஜரில் எழுதப்படாமல் இருந்தது.

''அடடே கணக்கு தெரியாத போயிருக்கே'' ராமசாமி கவலைப்பட்டான்.

''இன்னிக்கு ராத்திரி எடுத்து வீட்டுக்குப் போய் எழுதி நாளைக்கு காலைல கொடுத்துடறேங்க.''

''அவசியம் இல்லை. ஆபீஸ்ல கண்டுபிடிச்சுருவேன். ஒரு பக்க கணக்கு மட்டும் நம்பிடக்கூடாதே. நம்ம கணக்குப் பிரகாரம்...''

''நாளைக் காலைல தந்துருவோம்...''

''வேணாம். இது நானே செய்யறேன். நீங்க என்ஜினியருக்கு உதவியா இருங்க'' டெலிவரி சலான் களை எண்ணத் துவங்கினான். விடுபட்ட எண்களைக் குறித்துக் கொண்டான்.

புவனா பட்டறைக்குப் போனாள். கரி வந்து இறங்குவதை கவனித்தாள். நாளைக் காலை ஆட்கள்

வந்துவிட்டால் வேகமாக வேலை துவங்கிவிடலாம். ராவ் நிதானமாய் வெளியே நடந்தார், மெல்லத் திரும்பினார்.

''மேடம்.''

''என்ன ஐயா?''

''நாளைக்கு அடுப்பு பற்ற வைத்து உருகுத் தளும் பியதும் நாலைந்து மோல்ட் நீங்கள் ஊற்றிப் பார்க்க வேண்டும். நான் கொடுரமாய் பேசுவதாக நினைக்க வேண்டாம். இது எவ்வளவு கடினமான வேலை என்று நேரிடையாய் நீங்கள் உணர வேண்டும். காசு மட்டும் போட்டு லாபம் பார்க்க பிற தொழில் இல்லை இது. தொழிலாளிகளை நம்பி இறங்கும் வேலை. இந்த வெப்பம் தூசு அவர்களை எப்படி பாதிக்கிறது என்பது முதலாளிக் குத் தெரிய வேண்டும்.''

புவனா விழித்தாள்.

''குறைந்தபட்சம் அருகே இருந்து பார்க்கவேண்டும்''

''செய்கிறேன் ஐயா.''

''முரளி ரிஜக்ஷனை சரி செய்து அனுப்பு. ராம சாமியைக் கூடவே அனுப்பி ஸ்டோர்ஸ் உடனே சோதனைக்கு ஏற்பாடு செய். சுப்ரமணியனிடம் நான் பேசிக்கொள்கிறேன். ராமசுவாமி பேப்பர் எப்படியிருக் கிறது?''

ராமசுவாமி சிரித்தான்.

''என்ன?''

''ஸோ. ஸோ''

''சரி செய்யலாமா முடியுமா?''

''முடியும். ஒரு வாரத்தில் சரியாக கணக்கு வைத்து விடமுடியும்.''

''இதையும் நீங்கள் கற்க வேண்டும் மிஸஸ் புவனா.''

''சரி ஐயா.''

காரில் ஏறியவர் நின்றார்.

''உங்களின் வேதனையான கால கட்டம் இது. மனம் தளர விடாதீர்கள். முழுமையாய் ஈடுபடுங்கள். நிச்சயம் ஜெயிக்கலாம். எவர் உதவியும் எதிலும் இன்றி நீங்கள் முழு தகுதி உள்ளவராய் வளரவேண்டும் என்பது என் எண்ணம். வாழ்த்துக்கள்.''

''நான் ஒரு குவளை தேநீர் கூட தரவில்லை.''

''வரும் மாதம் ஐநூறு ஹவுஸிங் உங்கள் பட்டறை தந்தால் விருந்து சாப்பிட்ட சுகம் எனக்கு.''

''அறுநூறு தருவேன் ஐயா.''

''தட்ஸ் த ஸ்பிரிட்'' வாழ்த்துக்கள் மறுபடியும் கார் கிளம்பி வெளியேறியது.

முரளி கைக்கு சோப்புப் போட்டு கழுவிக் கொண்டிருந்தான். கம்பெனியில் துவாலை கூட இல்லை. வாங்க வேண்டும்—புவனா மனசுக்குள் ஒரு பட்டியல் போட்டாள்.

புதிய காபி ஜக், பீங்கான் கோப்பைகள் எவர்சில்வர் டம்ளர்கள், தண்ணீர்ட்ரம், துவாலை, சோப்பு, துணி வேஸ்ட், மிதியடிகள் மோல்ட் ஊற்றுவோர்கள் அணியும் பாதுகாப்புக் கண்ணாடி, தோல் கையுறைகள்.

டெலிபோன் அடித்தது.

''ஹலோ...''

''ராமசுவாமி இருக்கிறாரா?''

''இருக்கிறார், நீங்கள் யார்?''

பாப்பாவுக்கு புவனாவின் குரல் தெரிந்துவிட்டது. புவனாவுக்குத் தெரியவில்லை.

''அவரு உறவு. கம்பெனியில் இங்கே நெம்பர் கொடுத்தார்கள்.''

''ஒரு நிமிடம்'' போன் கைமாறிற்று. அவன் ஹலோவுக்கு எதிர் குரல் கேட்டது.

''ராமசுவாமி, பாப்பா ஹியர்.''

''ஹலோ என்ன எப்படியிருக்கீங்க.''

உடனே ராமசுவாமியை வரச் சொன்னாள். பட்டறை பற்றி பேசவேண்டும் என்று குறிப்பிட்டாள்.

ராமசுவாமி சலான்களை தினத்தந்தியில் சுற்றிக் கொள்ள பட்டறைக் கதவு புவனாவால் பூட்டப்பட்டது.

''எல்லாம் சரி பண்ணிடலாம், கவலைப்படாதீங்க'' என்று புன்னகையோடு சொல்லிவிட்டுப் போன இளைஞனை நோக்கி கை கூப்புவது தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

கார் ஏறி வீட்டுக்குப் போய் பெட்டிகளைப் பிரிது உட்கார்ந்து, எதையெல்லாம் விற்கலாம் என்று கணக்குப் போட உடம்பில் அயர்ச்சி பரவியது.

''என்னங்க ரொம்ப நாளாச்சு பார்த்து'' ராமசுவாமி வணக்கம் சொல்லியபடி தன் வீட்டு வரவேற் பறைக்குள் நுழைந்தான்.

பாப்பா எழுந்திருக்கவில்லை.

''குளித்துவிட்டு வருகிறாயா இல்லை இப்படியே கிளம்பலாமா?''

''எங்கே?''

''பெரிய கதை ஒன்று சொல்லவேண்டும் ராம சுவாமி''

''ஒரு நிமிடம் குளித்துவிட்டு வந்துவிடுகிறேன் இங்கேயே பேசுவோம்.''

அப்பாவின் தொழிலிலிருந்து, தொழிலில் ஏற்பட்ட சிக்கல் விவரித்து தேவையில்லாமல் புவனாவின் புருஷன் மாட்டியதும் அப்பாவும், அவளும் உதவிக்குப் போக புவனா ஏற்க மறுத்ததும் சொன்னாள். தன் சொந்த வாழ்க்கையும் ஆகக்கூடாது என்று கவலைப்பாட்டாள். எப்படியாவது புவனாவுக்கு உதவ வேண்டும் என்று சொன்னாள். நீ ஏன் அங்கிருந்தாய் என்று விசாரித்தாள்.

''அது இருக்கட்டும், நீ ஏன் இப்படி சென்டிமென்டா பேசறே பாப்பா.''

''அந்த அம்மா அழுதது இன்னும் மனசுல இருக்கு ராமசுவாமி. தூக்கத்துல கூட நினைவுக்கு வருது.''

''இப்ப என்ன செய்யணும் நான்.''

''இரண்டு லட்ச ரூவா தரேன், உடனடியாய் எப்படியாவது அவங்களை வாங்கிடச் சொல்.''

''வேணாம். அது வாங்காது பாப்பா''

''ஏன்?''

''காசால அடிக்காதே யாரையும்.''

''இல்லை. ராமசுவாமி.''

''பணம் சண்டாளம் பாப்பா.''

''செலவழிக்காதே என்கிறாயா?''

''இல்லை. காசால் எல்லாவற்றையும் சரிசெய்து விடமுடியாது. நேரே போய் மன்னிப்புக் கேட்டு, அவள் புருஷன் விடுதலைக்கு உண்டானது செய்.''

''என்னால் இயலாத காரியம் அது. அப்பா மனசு வைக்க வேண்டும்.''

''உன் அப்பா எங்கே?''

''தெரியாது.''

''புவனாவைச் சந்தித்ததாக சொன்னாயே?''

''போலீஸிலிருந்து தப்பிக்க இடம் மாறிக்கொண்டே இருக்கிறார்.''

''அந்த அம்மாவின் புருஷனை விடுவிக்க வேறுவழியே இல்லையா''

''இல்லை. அப்பா சரெண்டர் ஆகி மொத்தமும் ஒத்துக் கொண்டு...நடக்காத காரியம். அப்பாவோடு இருபது, முப்பது பேர் ஜெயிலுக்குப் போக வேண்டியிருக்கும். அப்பா போலீஸில் சரணடைந்த மறுநாளே அவர் ஆட்களால் சுட்டுக் கொல்லப்படலாம். ஜெயிலுக்கு போக விரும்பாத அப்பாவின் ஆட்களே அவரைத் தீர்த்து விடலாம்.''

ராமசுவாமி மௌனமாய் இருந்தான்.

''சரி இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''புவனா என்னை அண்ட விடமாட்டாள், எனக்காக நீ அவளுக்கு உதவி செய்.''

''சலான் கொண்டு வந்திருக்கிறேன். அடுக்கி லெட்ஜர் போடுங்க.''

''அது இல்லை ராமசுவாமி பட்டறை நடத்த உதவி செய். ஏதாவது பேசி அவளுக்கு காசாய் பொருளாய்...''

''அவள் புருஷன் ஜெயிலிலேயே இருக்கட்டும் சௌகர்யமாய் என்கிறாயா?''

''எனக்கு வேறு வழி தெரியவில்லை.''

''பாப்பா, அந்தப் பெண்மணியோடு நான் அரை மணி நேரம்தான் பேசினேன். தெருவில் நடந்து போகும் சாதாரண பெண்மணி அவள். அடி விழுந்ததும் சட்டென்று உறுதியாகிவிட்டாள். வஞ்சம் தீர்ப்பதுமாதிரி போராட ஆரம்பித்து விட்டாள். அவள் போராட்டத்தின் ஒரு பகுதி புருஷன் நடத்திய பட்டறையை தான் நடத்துவது. எங்கள் ஜெனரல் மேனேஜர் ராவ் உதவி செய்கிறார். உதவி செய் என்று சிலருக்கு கட்டளையிட்டிருக்கிறார். நடுவே நீ எதற்கு. உன் காசு என்ன உபயோகம்?''

''பட்டறை மோசமான நிலையில் இருக்கிறதாமே?''

''மிக மோசம். மறுபடி முழு வேகத்தில் இயங்க சகல திட்டங்களும் போடப்பட்டிருக்கின்றன. நகையெல்லாம் விற்கப் போவதாக பேச்சு அடிபடுகிறது.''

''என்ன?''

''மறுபடி பட்டறை நடத்த வேண்டும்.''

''எங்கே நகை விற்கப் போகிறாள்.''

''ஏன்?''

''சொல்''

''தெரியாது பாப்பா.''

''சொல் ராமசுவாமி.''

''வேறு வேலையில்லையா. நீ தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறாய். அவள் புருஷனை வெளியே கொண்டு வா.''

''உனக்கு காஃபிபோலா என்றால் என்னவென்று தெரியாது ராமசுவாமி. அது நடக்காத விஷயம். ஒரு வருட சிறை நிச்சயம். நகைகளை எங்கே விற்கப் போகிறாள் என்று கேள்.''

''நான் கேட்டுக் கொள்கிறேன்.''

''இப்போது கேள்''

''மணி ஏழு. இப்போது போய் ஒரு பெண்ணிடம் போன் செய்து...''

''எனக்காக கேள்.''

''படுத்துகிறாய் பாப்பா.''

''ப்ளீஸ்''

தன் பர்ஸ் திறந்து புவனாவின் டெலிபோன் நெம்பர் பார்த்து சுழற்றி பாப்பா ராமசுவாமியிடம் தந்தாள். எதிர் பக்கம் புவனாவின் குரல் கேட்டது.

''நான் ராமசுவாமி பேசறேன். வணக்கம் மேடம் சலான்ல கொஞ்சம் சந்தேகம் இருக்கு. எப்போ வரலாம், உங்களைப் பார்க்க''

''நாளைக்கு வரலாங்களா? இப்போ நகைக் கடைக்கு போறேன்''

''பர்சேஸா, வெரிகுட்''

''இல்லைங்க, விற்கணும்.''

''அட, ஏன்?''

''நாளைக்கு கொஞ்சம் காசு வேணுங்களே''

''தெரிஞ்சவங்க கிட்ட விற்கறீங்களா.''

''இல்லீங்க; வழக்கமா வாங்கற கடை, எடுத்துக்கு வாங்களான்னு கேட்கணும்.''

''ராத்திரி வாங்கமாட்டாங்களே.''

''காலைல காசு கொடுன்னு நகை கொடுத்துட்டு வரணும்.''

''எனக்கு ஒரு இடம் தெரியுங்க அடமானமா வெச்சா கூட தங்கம் விலை தருவாங்க.''

''எனக்கு உதவி செய்தா நல்லா இருக்டிம். நா எங்க வரணும்?''

''நா வரேன்.''

தொலைபேசியைத் துண்டித்தான்.

'இப்ப என்ன செய்யணும பாப்பா' என்பதுபோல் பார்த்தான்.

''நகையை வாங்கி நீ வைத்துக்கொள். இரண்டு லட்சம் மூன்று லட்சம் எவ்வளவு கேட்கிறாளோ அவ்வன்வு கடன் கொடு.''

''ஸாரி, இதெல்லாம் என்னால் முடியாது.';

''ராமசுவாமி எனக்காக...''

''பாப்பா உன்னை உங்கப்பனை என் பத்து வயதி லிருந்து தெரியும் உன் நடவடிக்கைகள் பலது மோச மானவை ஆனால் இப்போ நீ செய்வது அயோக்கியத் தனம். உன் சமாதனத்துக்கு காசு வாரியிறைக்கிறாய். கொலை செய்துவிட்டு போலீசுக்கு தப்பி மறுபடி மாட்டாமல் இருக்கு அன்னதானம் செய்கிறாய்,''

''எனக்குத் தெரிந்தது செய்கிறேன் ராமசுவாமி.'

''அவளுக்கு இது தெரிந்துவிட்டால் என் முகம் அசிங்க மாகும்.''

''எனக்காக அசிங்கப்பாடு. ராமசுவாமி இருபது வருட நம் பழக்கத்திற்காக அசிங்கப்படு.''

ராமசுவாமி யோசித்தான். 'சரி' என்றான்.

25

பதினைந்து வருடங்களுக்கு முன்பு மொழுமொழு வென்று வாசலில் நின்றபடி ''கோன் ஹை'' என்று பாப்பா அதட்டிய நாளில் அவளை ராமசுவாமிக்கு பிடித்துவிட்டது.

''த்த, வழிய வுடு உங்க அப்பாகிட்ட பேசணும்'' என்று படியேறினான். இயல்போ, இல்லை வளர்ப்போ... ராமசுவாமிக்கு பெண், காமம் கலந்த விஷயமாய் படவே யில்லை. நூற்றுக்கு தொண்ணூறு பொண்ணுங்க தத்தி புண்ணாக்குகள் என்கிற கேலி மட்டும் உண்டு. வெறும் அலட்டல் என்கிற அபிப்ராயம் உண்டு.

அப்பா கொஞ்சம் காசு வாங்கியிருந்தார். வட்டி யுடன் சேட்டுக்கு திருப்பிக் கொடுக்க ராமசுவாமியை அனுப்பியிருந்தார். கோன் ஹைன்னு மடக்கினா இது கிட்ட என்ன சொல்றது? ஏன் சொல்லணும்?

''இந்தா, உங்க அப்பாவைக் கூப்பிடு. பங்காரு அய்யங்கார் அனுப்பியிருக்கார்ன்னு சொல்லு.''

தன் பதினைந்து வயது வளர்ச்சியை காய்கறிக் காரன் முதல் கடவுள் பூசாரிவரை வேகமாய் கண்ணால் உண்ணுவது மட்டுமே அனுபவப்பட்ட பாப்பா சாதாரண மாய் பார்க்கும் இளைஞனை வியந்தாள்.

ஹாலிலிருந்து அப்பாவிடம் டெலிபோனில் பேசினாள்.

''பங்காரு சாஹப் காசா. நான் கேட்கவேயில்லையே. சரி வாங்கிக் கொள். யார் வந்திருக்கிறது... மகனா, டூ கொடு.''

பர்தா குனிவுகளை சேட் மகளுக்குக் கற்றுத் தர வில்லை. தென்னிந்தியப் பெண்கள் பேசி சிரித்து தெருவில் நடக்கும்போது தன் மகள் மட்டும் முக்காடு போட்டு நிற்க வைக்க விரும்பவில்லை. வட இந்தியா போனால் கொஞ்சம் 'அடக்கமாக இரு' என்று மட்டும் எச்சரித்திருந்தார்.

''எத்தனை தர வேண்டும் அப்பா?''

''ஒரு லட்சம் மகளே,''

''வட்டி எவ்வளவு?''

''கொடுத்தால் வாங்கிக்கொள் இல்லையெனில் கேட்காதே. மறக்காமல் டூ கொடு.''

ஒரு லட்சத்திற்கு கூடவே இருந்தது. சரசரவென்று நோட்டுகளை எண்ணி தட்டி அடுக்கி இரண்டே விநாடியில் முறுக்கின ரப்பர் பேண்ட் போட்டவளை ராமசுவாமி வியப்புடன் பார்த்தான்.

'லுக் ஹியர், நூறு ரூபாய்க்கு ஒரு வருடத்திற்கு பனிரெண்டரை சதவிகிதம் எனில், ஒரு லட்சம் ரூபாய்க்கு?' பேப்பரும் பேனாவும் எடுத்து கணக்கு போட முயற்சிக்கையில் பாப்பா மனசுள் பெருக்கி விடை சொன்னாள். கல்லாமல் பாடம் படும். லட்ச ரூபாய் காசை மனசுள் பெருக்கி வகுக்கும் பெண்ணைக் கண்டு ராமசுவாமிக்கு அதிசயம் தோன்றியது. அடே என்கிற ஆச்சர்யம் பரவியது. சில பொண்ணுங்க கொஞ்சம் கெட்டிக்காரங்கதான்.

''நீ எங்க படிக்கிற?''

''சர்ச் பார்க்... நீ?''

''விவேகானந்தா.''

''பிஸினஸ் பண்றியா?''

''இல்லை, வேலை செய்யறேன் டி.வி.எஸ்.''

''ஏன்?''

''அப்பாவுக்கு என் திறமையில் நம்பிக்கை இல்லை. அது தவிர...''

''அது தவிர...''

''என்னால் கடுமையாய் நடந்து கொள்ள முடிய வில்லை. இரக்கப்பட்டு விடுகிறேன்.''

''எல்லா வியாபாரியும் கடுமையாய் இருக்க வேண்டியது அவசியமா? உதாரணத்துக்கு மந்தைவெளியில் நாலு கிரவுண்ட் நிலம் வாங்கி இரண்டு வருடம் பொறுத்து விற்றால்...''

பெண் காம ரூபியும் இல்லை. சகோதரி என்று பேசும் சட்டமும் இல்லை. உழைப்பிலும் உழைப்பால் வரும் உயர்விலும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு பெண் பிரகிருதி. நல்ல சிநேகிதி.

''நீ சொல்ற விலைக்கு விற்றால் சரி. விற்க முடிய வில்லையெனில் நஷ்டம் வரும்.''

''வராது. ராமசுவாமி, நல்ல லாபம் வேண்டுமெனில் கட்டிடம் கட்டியே விற்கலாம்.''

''அபிராமபுரத்தில் இரண்டரை கிரவுண்ட் நிலம் வருகிறது.''

''வாங்கு.''

அகம்பாவம் கொண்டவனுக்குத்தான் ஆளுமை ஆசை வரும். ஆளுமை ஆசைதான் பெண்ணை அழகுள்ளவள் என்று பார்க்கும். அது தவிர, ராமசுவாமிக்கு மூன்று சகோதரிகள். நல்ல சகோதரனாய் உள்ளவன் பெண்களைக் கேவலப்படுத்த மாட்டான்.

டி. வி. எஸ். வில் வேலை பார்த்துக் கொண்டே நிலம் வாங்கி நாலு போர்ஷன் வீடு கட்ட காரணம் பாப்பா. வேற வேலைக்கு மாறி இன்னுமொரு இடத்தில்

நிலம் வாங்கி, இன்னொரு பிளாட் கட்ட காரணம், பாப்பா. பாப்பா தனக்கொரு ஒரு பெரிய மாளிகை கட்டும்போது முழு உதவியும் தன் அனுபவத்தால் ராம சுவாமி செய்ய முடிந்தது.

பூமிக்கு அடியிலும் மேலுமாய் நாலு திசையும் பரவிய சேட்டின் வியாபாரங்கள் ராமசுவாமிக்குத் தெரியும். நமக்கென்ன என்று பேசாதிருந்தான். 'கடத்தல் தங்கம் வேண்டுமா' என்று கேட்டபோது, 'வேண்டாம், என்று மறுத்துவிட்டான். நேர்மையான அவசரத்துக்கு உதவி செய்தான்.

பாப்பாவின் திருமணத்தில் பத்திரிகை அச்சடிப்பும், தாம்பூல பையும் ரிசப்ஷன் கூத்தும் ராமசுவாமி ஏற்பாடு. அதற்குப் பிறகு மணமான பெண்ணோடு அதிகம் பேசுவது நல்லதல்ல என்று வருகை குறைத்துக் கொண்டான். கூப்பிட்டால் போகலாம் என்று பின் வாங்கினான். கார் கம்பெனிக்கு வேலை மாறினான்.

இன்று பாப்பா கூப்பிட்டாள். உதவி கேட்கிறாள். இதுதான் நடந்தது என்று உண்மை சொல்லி தன் வேதனை சொல்லி உதவி கேட்கிறாள். தன்னை முன்னுக்குத் தள்ளி பார்த்தா பெண் மாதிரி பின்னே நின்று தானம் செய்கிறாள். இது தேவையற்றது என்று தோன்றியது.

அந்த அம்மாள் மிஸஸ் புவனேஸ்வரி முகத்தில் இருந்த வேதனையை எதனால் தீர்க்க முடியும்...

வாசலில் கார் சப்தம் கேட்டது.

''ராமசுவாமின்னு ஒருத்தர்?'' விசாரிப்பு கேட்டது.

''இந்த வீடுதான் மேடம் வாங்க.'' அவன் வராந்தாவுக்கு வந்தான். புவனா முகம் மலர்ந்தாள். இவ்வளவு பெரிய வீடா? வியந்தாள்.

''பாப்பா, அவங்க வந்துட்டாங்க... நான் என்ன செய்யணும்?''

''நகை அடகு வைக்க வேண்டாம்; காசு கடன் கொடு.''

''வட்டி?''

''மினிமம் கேள்; பின்னால் வேண்டாமென்று சொல்லி விடுவோம்.''

''சரி...நீ உள்ளே போ.''

பாப்பா ராமசுவாமி அறைக்குள் போய் இத்தியன் எக்ஸ்பிரஸ் படிக்கத் துவங்கினாள்; காது உணர்வை கதவு விளிப்பில் வைத்துக் கொண்டாள்.

''அப்ப கடைக்கு இப்பவே போலாங்களா?'' புவனா படியேறியதும் கேட்டாள்.

''உள்ள வாங்க முதல்ல; நான்தான் வரேன்னேனே.''

''வீட்ல யாரும் இல்லீங்களா? எனக்கு பர்ச்சேஸ் வேற இருக்கு. அதனால நானே வந்தேன்.''

''அம்மா...'' தாயார் அறிமுகம் நடந்து காப்பி குவளையும் வந்தது.

''எவ்வளவு வேணும் மேடம்?''

''முதல்ல இரண்டு ரூபா வேணுங்க.''

''சரி...பிறகு?''

''இன்னொரு இரண்டு தேவைப்படும்.''

''செய்யலாம்.''

''என்ன வட்டிங்க?''

''அதிகமில்லை.''

''எங்க இருக்கு கடை?''

''இங்கதான்.''

''புரியலையே...''

''நான் கொஞ்சம் கடன் தரது வழக்கம்.''

''நகை பேர்லியா?''

''தெரியாதவங்களுக்கு நகை பேர்ல. தெரிஞ்சவங்களுக்கு நம்பிக்கை பேர்ல...''

''எனக்கு இரண்டு லட்சம் வேணுங்களே...''

''நாலு வேணுமானாலும் தரேன்.''

''பெரிய தொகை இல்லீங்களா?''

''இதைவிட பெரிசு தந்து வாங்கியிருக்கோம்.''

''என்ன வட்டிங்க?''

''உங்களுக்கு வட்டி என்ன? உங்களைப்பத்தி கேள்விப்பட்டேன். உங்க புருஷன் நல்லா பேசி பழகுவாரு. ஏதோ கெட்ட நேரம்.''

''எதுக்கும் நகையை வச்சுக்கிட்டு...''

''நகை எதுக்கு எனக்கு? உங்க பட்டறை மேல நம்பிக்கை இருக்கு. ஆர்டர் சரியா எக்சிக்யூட் பண்ணா ஒரு வருஷத்துல பணம் திரும்பிடலாம். பனிரெண்டு லட்சம் ஆர்டர் இருக்கே. இரண்டு லட்சம் கடன் தரது பெரிசில்லை. உங்க வேல்யூ தெரியாதவங்க நகைய பாதுகாப்புக்கு வாங்கணும்.''

''பட்டறை அடமானம் வைக்க சொல்றிங்களா?''

'ச்சேச்சே' அவன் மறுத்த வேகம் புவனாவுக்கு பிடித்திருந்தது. நிம்மதி தந்தது.

''வேலை ஒழுங்கா நடந்தா அது பொன் முட்டை வாத்து தங்க. முடங்கிச்சுன்னாதான் பெரிய நஷ்டம்.

அதான் ராயரே முன்னாடி நிற்கிறாரே, இனி என்ன கஷ்டம்? அந்த எஞ்சினீயர் முரளி ரொம்ப நல்லமாதிரி.''

''தெய்வம் போல் நினைக்கறேங்க. தனியா தவிச்ச பொம்பளைக்கு...''

''அது உங்க புருஷனுக்கு கிடைச்ச மரியாதை. எங்க கம்பெனி கஷ்டப்பட்ட நேரத்தில் அவரு அதிகம் தொந்தரவு பண்ணாத அமைதியா இருந்தாரு. இதுதான் முதல் காரணமா கம்பெனில பேசிக்கிட்டாங்க. உங்களுக்கு உதவி கூடாதுன்னு ஒருத்தரும் சொல்லலை. பெரிய விஷயங்க இது.''

''இப்ப அம்பது செக் அம்பது கேஷ் தரேன். காலை இரண்டு ரூபாய்க்கு பத்திரத்துல கையெழுத்துப் போட்டு மிச்சம் வாங்கிக்கங்க.''

''வட்டி?''

''மினிமம் வட்டி போதும் எனக்கு.''

''பன்னிரெண்டா பன்னிரெண்டரையா...?''

''ஐந்து.''

புவனா அதிர்ந்தாள்.

''போதுங்க. இதுவே தொழில் இல்லை. உபரி வருமானம்.''

''எனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தோணலை.''

''உங்க புருஷனுக்கு உதவி செய்ய நிறைய பேர் இருக்காங்க மேடம்.''

''அவரு மாட்டிக்கிட்ட விஷயம் கொஞ்சம் கஷ்டமானது. அதனால ஒரு பயம். நாம பேசினா நம்பளை பிடிப்பாங்களோன்னு. போய் பார்த்தீங்களா?''

''வர சனிக்கிழமை போணுங்க.''

''ஒரு நிமிஷம்...'' உள்ளே போனான். பாப்பா பையிலிருந்து ஐம்பதாயிரம் கொடுத்தாள். ஒரு செக் எழுதி ராமசுவாமியிடம் நீட்டினாள். பெயர் எழுதாது விட்டாள்.

''ஸெல்ப்னு போடு பாப்பா.''

''ஏன்''

''போடு'' அவள் எழுத காசோடு, காசோலையோடு வெளியே வந்தான்.

மேஜையில் வைத்தான்.

''நகையை கண்ணுலகூட பார்க்கலீங்களே?''

''பட்டறை தெரியுமே, எதுக்கு நகை? காசு எடுத்து கிட்டு போங்க''

''வட்டியும் கம்மி, அடமானமும் வேணாம்றீங்க.''

''அம்மா, உங்க கணக்கு வழக்கு மொத்தமும் என் கைல இருக்கு. உங்களுக்கு எப்ப பேமெண்ட் வரும்... எவ்வளவு வரும் என்பது எனக்குத்தான் முதல்ல தெரியும். நான் எதுக்கு அடமானம் கேட்கணும்?''

''அது வாஸ்தவம்.''

''அந்த தைரியத்துல கடன் தரேன். அறநூறு ஆக்ஸில் ஹவுசிங் செட் ஒழுங்கா நாம் தந்துட்டா போதும்.''

''தரலாம்.''

''நீங்கதான் ராப்பகலா கஷ்டப்படணும்.''

''நான் ரெடிங்க. ஒரு ஐடியால செய்யறேன். பட்டறை மேல அவருக்கு உயிரு. அவரு வெளிய வரபோது பட்டறை இன்னும் நல்லா இருக்கணும். நாம் அநியாயமா ஜெயிலுக்குப் போயிட்டோம். நாம வளர்த்த தொழில் நாசமாயிடுச்சினு துக்கப்படக்கூடாது. அவரு

மேல தப்பு புரூஃப் பண்ண முடியாதுங்க அரசாங்கத்தால. இது அவங்களுக்கும் தெரியும். அந்த கடன்காரன் சேட் கிடைக்கலை. இவரை உள்ள தள்ளிட்டாங்க. இந்த க்ஷணம் அந்த சேட்டு கிடைச்சா கூட வெளிய வந்துரு வாரு.''

ராமசுவாமி தலைகுனிந்து நின்றான், அவர் மனசு பாப்பாவின் முகம் மாறுவதை கண்காணித்தபடி இருந்தது.

''அப்படி ஒன்று நடக்காதா? தடார்னு காலைல ஆறு மணிக்கு புவனா விடுதலையாயிட்டேன்னு வரமாட்டா ரான்னு எப்பவும்... எப்பமும்...'' புவனா திணறினாள்.

''அப்படி நிக்கச்சொல்ல பட்டறையை பூட்டின மாதிரி காட்ட முடியுமா? இன்னும் நோவாதா? விடுதலை யான பிறகும் வேதனைன்னு வராதா? இன்னும் எங்களை யாவது போய் கெஞ்சி மன்னிப்புக் கேட்டு நிக்கணுமா?

''பட்டறை ஓடுது. அறநூறு ஆக்ஸில் ஹவுசிங் ஊத்தறாங்க. ரிஜக்ஷன் சுத்தம்மா இல்லைன்னு தெரிஞ்சா எல்லா துக்கமும் அவமானமும் மறைஞ்சு போய் ரொம்ப தேங்ஸ் புவன்னான்னு கைகுலுக்கி, சட்டை எடு, துண்டு எடு. காப்பி போடுன்னு பட்டறை ஓடினா போதும். மறுபடி பழைய ஆளா இருந்தா போதும்.'' புவனாவால் பேச முடியவில்லை. உதடுகள் துடித்தன. விரல்கள் நடுங்கின. கண்ணில் நீர்பெருகி புடைவையை நனைத்தது.

''ராமசுவாமி தவித்தான்.

''நாம செய்வோம் கவலையை விடுங்க.''

''ஒன்று புரியுதுங்க. அவரு நல்லவருன்னு புரியுது. உங்க கம்பெனில அவரு பேர் சொன்னா ரொம்ப இதமா பேசறாங்க. ஆனா எங்க எஞ்சினியரு ஏன் இப்படி எல்லாத்தையும் அணைச்சுட்டு போயிட்டார்னு தெரியலை.''

''அப்படியும் சில பேர் உண்டுங்க. அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு? அதை விடுங்க. நீங்க தினம் பட்ட றைக்கு வந்தா போதும். ஒரே மாசம் பேஸிக் புடிபட்டுடும். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா கொடி உயர்த்தலாம். இது ஸெல்ப் செக்.''

''இது யார் கையெழுத்துங்க?''

''என் ஹிஸ்டர்து. கொண்டாங்க. அதை நான் காலைல பட்டறைக்கு வரபோது மாத்தி காசு எடுத்து கிட்டு வரேன்.''

''சலான்ல சந்தேகம்னீங்களே, தம்பி.''

''சந்தேகம் இருக்கு. இப்ப வேணாம்.''

''ஏங்க?''

''உங்களை காலைல தொந்தரவு பண்றேன். இப்ப கொஞ்சம் எமோஷனலா ஆயிட்டீங்களே?''

'ப'ரவாயில்லை, சொல்லுங்க.''

''வேணாம் மேடம். தலை போற விஷயமில்லை. நான்தான் கம்பெனி. நான்தான் பட்டறை. சரி பண்ணி டலாம்.''

''காலைல பத்திரம் கொண்டாந்துருங்க.''

''சரி.''

''வரேன் தம்பி. அம்மாக்கிட்ட சொல்லுங்க.''

''செல்றேன். அம்மா...'' மெல்ல வயதான தாய் நடந்து வர, புவனா கைக்குவித்தான். காசுடன் வெளி யேறினாள்.

''யாருடா அது?''

''உனக்கு ஒன்றுமில்லையம்மா... வேற விஷயம்.''

''நல்ல பொம்மனாட்டியா தெரியறாளே...அதுனால கேட்டேன்.''

உள்ளே பாப்பா கண்மூடி உட்கார்ந்திருந்தாள்.

என்னை யாரும் இவ்விதம் சொல்வார்களா? 'பார்த்தா நல்ல பொம்மனாட்டியா தெரியுது' என்று சொல்வார் களா?

என் முகத்தில் வஞ்சனை இருக்கிறதோ, கபடம் உண்டோ. நீ பண்றது அயோக்கியத்தனம் பாப்பா. எதற்கும் கடிந்து பேசாத ராமசுவாமி கூட கடிந்து பேசு கிறான்.

'காசு கொடுத்தும் மனசில் நிம்மதி இல்லையே. புவனா அழுதபோது உள்ளே பயமும் கலவரமும் குழைந் தது. கடவுளே. இந்த ஜென்மத்தில் இந்தக் கடனை நான் அடைக்க முடியாதா? முகம் பொத்திக் கொண் டாள்.'

26

கார் ஹாரன் அடித்தது. கதவு திறந்து வைக்க மனசு ஒப்பவில்லை. புவனா வீட்டு வாசலில் காரைவிட்டு கீழிறங்கினாள். கம்பிக் கதவுகளை ஓசைப்படாமல் திறந்தாள். ஹெட்லைட் போடாமல் விசை கொடுத்து காரை கிளப்பி உள்ளே செலுத்தினாள். தோட்டத்தில் நிறுத்தி டிக்கி திறந்தாள். கையுறைகளும், இரும்பு பக்கெட் டும், ட்ரம்மும், உளியும் சுத்தியும் சாணைக் கல்லும் தானே எடுத்து வீட்டு வராண்டாவில் வைத்தாள்.

வீடு அசந்து தூங்கிக் கொண்டிருந்தது.

''என்னம்மா ஒன்பது மணிக்கு கடை சாத்தற நேரம் வறீங்க'' ஹார்ட்வேர் கடை ஆள் கேட்டான். களிமண் மோல்டிங் மெழுகு சின்னக் கொல்லுருவை நாளை அனுப்புவதாகச் சொன்னான். சாமான்களை எண்ணி கட்டும் போது நினைவு வந்தவனாய் ''சாப்பிட்டீங்களா'' என்று கேட்டான்.

வெண்ணெய் தடவிய ரொட்டியும், பாலும் எதிர் கடையிலிருந்து வரவழைத்தான்.

''யாரது பார்ட்டி இந்த நேரத்தில்?'' வேறு கடைக் காரன் நடந்தபடி கேட்க, சட்டென்று கோபப்பட்டான். உருதுமொழியில் உரக்கத் திட்டினான்.

''நான் சாதாரணமாய் கஸ்டமர் யாரென்று கேட்டேன். ஏன் கோபிக்கிறாய்?'' கேட்டவன் சமாதானப் படுத்தினான். புவனாவிடம் மன்னிப்புக் கேட்டான்.

''நாளை உன் அம்மாவோடு ஆட்டோவில் போக நான் கேட்கிறேன் இப்படி, என்ன பதில் சொல்வாய் என்று பார்க்கிறேன்.''

''விடு தம்பி, அவர்தான் தப்பா கேட்கவில்லை என்கிறாரே'' புவனா கோபம் தணிந்தாள்.

''அது தப்பு வார்த்தையில்லை. நாங்கள் கஸ்டமரை பார்ட்டி என்று கூப்பிடுவோம், தப்பு இல்லை. ஆனால் உலகில் ஆண் பெண் வித்தியாசம் உண்டல்லவா. கோபத்தில் கூட சில வார்த்தைகளை பெண்கள் முன்பு சொல்லக் கூடாதல்லவா...காலையிலிருந்து மூன்று லட்சத்து சொச்ச ரூபாய் வியாபாரம் நடந்து விட்டது. உங்கள் பதினேழாயிரம் ஒரு விஷயமில்லை. ஒன்பது மணிக்கு கார் போட்டு ஒரு பெண்மணி வந்திருக்கிறீர்கள் என்றுதான் பசியோடு உட்கார்ந்திருக்கிறேன்.''

''அடடா, உனக்கும் ரொட்டி சொல்லியிருக்கலாமே''

''வேண்டாம் உங்கள் தட்டிலிருந்து ஒரு துண்டு மட்டும் கொடுங்கள் போதும்.''

முப்பது வயது கடை முதலாளி, அந்த முஸ்லீம் இளைஞன் ஒரே துண்டு ரொட்டி மட்டும் சுருட்டி தின்று விட்டு தோல் கையுறைகளை எண்ணத் துவங்கினான்.

பெண்களை இந்த தேசம் அவமதிப்பதாய் சிலர் சொல்கிறார்கள். இல்லை அவமதிக்கவில்லை, அதிகம் மதிக்கிறது. ஒரு மதித்தலில் விலக்கி வைக்கிறது ஒரு பயத்தில் நகர்ந்து போகிறது. அந்நியப்படுகிறது. அந்த அந்நியத்தில்தான் விவகாரங்கள் வருகின்றன. புரிந்து கொள்ளல் மாறுபடுகிறது. பெண் சுமை இல்லை சலுகை தரப்பட வேண்டியவள் என்று மிரள்கிறது.

''அவர் பார்ட்டின்னது எனக்கு கோபம் தரவேயில்லை நீ ஏன் கத்தின?''

''அது அவமானமில்லை?''

''எனக்கு அவமானமா படலையே.''

''எனக்குப் புரியும்படி சொல்.''

''அந்த ஆள் என்னை என் வயசை கேலி செய்யற மாதிரி எனக்குப் பட்டது.''

புவனா வாய்விட்டு சிரித்தாள். முப்பது வயது இளைஞனின் மனப்போக்குக் கண்டு வியந்தாள். இது அந்நியப் பட்டதால் வந்த மிரட்சி. ஒரு லேடியோடு ஒன்பது மணிக்குக் கடையில் லைட் வெளிச்சத்தில் உட்கார்ந் திருப்பது கூட தவறு.

''உங்களுக்கு வேணுங்கறது எனக்கு போன் பண்ணி சொல்லுங்க மேடம். நானே ஆள்விட்டு அனுப்பறேன்.''

''நேர வந்தா உன் கூட ரேட் பார்க்கெய்ன் பண்ண லாம். நாலு மேக் பார்த்து ஒரு மேக் எடுக்கலாம்.''

''நாலும் அனுப்பறேன். பிடிச்சது எடுத்துக்கிட்டு வேணாம்கறத திருப்பிடுங்க.''

''வராதே கடைக்கு என்கிறாயா?''

''அப்படி இல்லீங்க.'' தயங்கினான். ''எதுக்கு உங்களுக்கு கஷ்டம்.''

''எனக்கு தேயானதை நான் தேடி எடுக்க முடியாததுதான் கஷ்டம் தம்பி.''

''சரி வாங்க.''

''இஷ்டமில்லாத சொல்றியா?''

''நீங்க ஒரு லேடின்னு...''

''நான் லேடியில்லை. அப்புறம்...''

மௌனமாக இருந்தான்.

''வேணா சட்டை பேண்ட் போட்கிடுட்டு வரேன் சரியா?''

சிரிப்பு வந்து விட்டது அவனுக்கு.

''வாங்க மேடம் தினம் வாங்க... என்ன வேணுமோ மார்க்கெட்ல நான் வாங்கித் தரேன் வாங்க. அது கீழே வையுங்க. உங்களால தூக்க முடியாது'' பண்டிலை எடுக்கும்போது தடுத்தான்.

''ஒரு தண்ணீர்த் தவலை கனம்தானே.''

''வாட்டமில்லாத பண்டல்.''

''வாட்டப்படுத்திக்கிட்டா போச்சு.'' காருக்கு பண்டல் சுமந்து வந்தாள். டிக்கி திறந்து உள்ளே போட்டாள்.

கார் திருப்பி நகரும்போது புவனா சாப்பிட்ட தட்டையும் குடித்த கோப்பையும் அவன் அகற்றிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

பாவம் பொம்பளை சாப்பிட்ட தட்டை எடுக்க வேண்டியிருக்கேன்னு நினைச்சுக்குவானோ... சிரிப்பு வந்தது. கொஞ்சம்கூட அயர்ச்சி இல்லாமல் வண்டி ஓட்ட முடிந்தது.

வீடு வந்து வராண்டாவில் சாமான்கள் இறக்கி அழைப்பு மணிக் குமிழ் அழுத்தும்போது கூட ஏன் எல்லோரையும் எழுப்பினோம் என்று தோன்றியது.

வேலைக்காரி கதவு திறக்க, இரண்டாவது பெண் கூடத்து சோபாவில் தூங்கிக் கொண்டிருந்தது. விடி விளக்கு மட்டும் ஹாலில் எரிந்து கொண்டிருக்க, சமைய லறைக் கதவுகள் விரியத் திறந்திருந்தன. வேலையாள் அழகிரி தூக்கக் கலக்கத்துடன் பின் பக்கத்திலிருந்து வந்தான்.

''என்னைக் கூப்பிடக் கூடாதாம்மா. நீ பாட்டுக்கு கனம் இறக்கிவைக்கிறியே, இடுப்பு பிடிச்சுக்கிச்சுன்னா.''

''சோறு போடட்டுமா?'' முத்துலட்சுமி கேட்டாள்.

பதில் சொல்லும்படியான கேள்விகளாகவே அவை தெரியவில்லை. கதவு சாத்திக் கொண்டு அவசரமாய்ப் புடவை மாற்றி வந்தாள். நாளைக்கு என்னென்ன எடுத்துப் போக வேண்டும் பட்டறைக்கு என்பவை நினைவில் இருந்தது. எல்லா கையுறைகளையும் எடுத்துப் போகக் கூடாது. கேட்க கேட்க தர வேண்டும். ஆறு விவல் கரி வாரிக்கொட்ட வாங்கியிருக்கிறது. இரண்டு விவல் போதும். வெட்டிரும்பு எத்தனை வேண்டியிருக்கும்?

வாசலுக்குப் போனாள். ''சாப்பிட ஏதும் வேணாமா?'' மறுபடி முத்துலட்சுமி கேட்க, கேள்வி காதில் கேட்டது. மனசில் தைக்கவில்லை. டூட்ரம் ரொம்ப பெரிதோ... நாப்பது டூ ஊற்றுகிற ட்ரம் போதுமோ? இது எத்தனை கப் டூ பிடிக்கும்.

''வரவர என்னவோ ஒரு அலட்சியம்'' முத்துலட்சுமி முணுமுணுப்பது கேட்டது.

''என்ன?''

''ஒன்னுமில்லை.''

''என்ன சொல்லு?''

''இப்படியே இருந்தா வூடு நல்லாருக்காது.''

''ஏன்?''

''கேட்டா கேட்ட கேள்விக்கு ஆமா இல்லைன்னு சொல்லேன்.''

''என்ன கேட்ட இப்போ?''

''அது சரி''

''ஏய் வுடுறி...அவங்களுக்கு ஆயிரம் வேலை,'' தன் மனைவி முத்துலட்சுமியை அதட்டினான் அழகிரி.

''அதுக்காக குழந்தைக்கு உடம்பு சரியில்லைன்றத கூட பார்க்கக் கூடாதா?''

''அம்மா பார்த்து கேட்கணும்னுதானே, அது ஹால்ல படுத்துக்கிட்டு இருக்குது.''

''அபிராமி...'' மெல்ல பெண்ணை புவனா அசைத்து எழுப்பினாள். 'அழகிரி அந்த பண்டில் பிரிச்சு அதுலேர்ந்து பத்து ஜோடி கிளவுஸ் தனியா கட்டு. அபிராமி எழுந்திரு.'' மனசு பாதியாகி ஒரு பகுதி வராண்டாவிலும், ஒரு பகுதி படுத்திருக்கிற பெண் மீதும் இருந்தது.

குழந்தை சோர்வோடு எழுந்திருந்தாள். ''எப்போ வந்தீங்கம்மா'' என்று கேட்டாள்.

''இப்பதான். என்ன செய்யுது, அபிராமி.''

''வயிறு நோவுதும்மா.'' பிற விஷயங்களை காதோடு சொன்னாள். பெண்ணுக்கே உண்டான வேதனை இது. மனசு வேதனை... உடம்பை பாதிக்கும் விளைவு.

''இப்ப டாக்டர்கிட்ட போலாம்மா.''

''இப்ப எந்த டாக்டர் இருப்பாங்க? மணி பதினொன்னேகால்.''

''காலைல போகலாம். போய் உன் ரூம்ல படு நாளைக்கு பள்ளிக்கூடம் போவேணாம்.''

''நேத்தும் போகலை. இன்னிக்கும் போகலை.'' முத்துலட்சுமி கவலையோடு பேசினாள்.

''நிறைய பாடம் நடந்துருக்குமே?''

''என்ன பண்றது... அதுக்கு நிக்க முடியலையே.''

''என்கிட்ட நேத்தே சொல்றதுக்கென்னா...''

''நீ ஓடிடுற எங்கியோ... அது யார்கிட்ட சொல்லும்.''

''எங்கியோ ஓடறேனா... பட்டறைக்குத்தானே போனேன். போன்ல சொல்லியிருக்கலாமில்ல...''

''நீ படற கஷ்டம் புரியுதும்மா... உன்னைய தொந்தரவு பண்ண யாருக்கும் பிடிக்கலை.''

''கொஞ்ச நாள். அப்புறம் சரியாயிடும்.''

''பட்டறைக்குன்னு போய்ட்டா வீட்டை கவனிக்க முடியாது. புள்ளைய யாராவது கவனிக்கணும். எம் பேச்சு கேட்கறதேயில்லை.''

''நீ வளர்த்த குழந்தைதானே... அதட்டி கேட்க வைக்கறது.''

''இங்லீஷ்ல திட்டுது. விடிய விடிய கதை புஸ்தகம் படிக்குது. சாப்பிடற போதும் புஸ்தகம்தான்.'' முத்துலட்சுமி குரலில் ஏகப்பட ஆதங்கம் இருந்தது.

''நானும் முத்துவும் கலந்து யோசனை பண்ணோம். வீடு பத்தி கவலை உனக்கு வேணாம். ஆனா புள்ளை கிட்ட பத்து நிமிஷம் பேசிட்டுப் போம்மா. அது ஏங்கிப் போச்சுன்னு நினைக்கிறேன்.''

''என்ன அபிராமி, என்ன வேணும் உனக்கு... அம்மா கொஞ்சம் பிஸியா இருக்கேன் குட்டி. சொல்லு, என்ன வேணும்?''

''நத்திங்''

''நாளைக் காலைல டாக்டர்கிட்ட போலாம். ஒரு நாள் ரெஸ்ட் எடுத்துகிட்டு பள்ளிக்கூடம் போய்டு. நைன்த் ஸ்டான்டர்ட் நிறைய படிக்கணுமே... பாடம் போயிருமே...''

''எனக்கு பள்ளிக்கூடம் பிடிக்கலை.''

''ஏன் அபிராமி?''

''பசங்க கேலி பண்றாங்கம்மா.''

''எதுக்குடா?''

''ஸ்மக்ளர்ன்றாங்கம்மா.''

புவனா இடிந்து போனாள்.

''யார் அது அப்பாவை தெரியாத புடிச்சு உள்ள வச்சுட்டாங்க.''

''நான் சொன்னேன், நம்பலை. ஒரு டீச்சர் செண்ட் கிடைக்குமா, இம்போர்டட் செண்ட்ன்னு கேட்டாங்க.''

''கேலியா?''

''இல்லை. அவங்க பசங்க சொல்றதை நெசமாவே நம்பி... அவங்களுக்கு அப்பா பத்தி தெரியலை. நான் சொன்னேன். ஐயோ பாவம். நீ போன்னுட்டாங்க டீச்சர்ஸ் என்னை காட்டி பேசிக்கறாங்கம்மா.''

''என்னையும் பேசறாங்க அபிராமி, இதையெல்லாம் கண்டுக்கக் கூடாது.''

''நான் பட்டறைக்கு வரட்டா?''

''எதுக்கும்மா...''

''அங்க வந்து உன்கூட வேலை செய்யறேன். எனக்கு பள்ளிக்கூடம் பிடிக்கலைம்மா.''

''நீ போய் உன் ரூம்ல படு. நாளைக்கு பார்த்துக்கலாம், சாப்பிட்டியா...''

''அரை வயிறு மோர் சாதம் சாப்ட்டுது.''

''அம்மாவுக்குக் கொடு.''

''வேணாம். நான் வெளிய சாப்பிட்டேன்.''

குழந்தை எழுந்து தரை தேய்த்து நடந்து தன் அறைக்குள் போனாள்.

புவனாவிற்கு வயிறு கலங்கியது. படிப்பு நிறுத்தி விட்டால் என்ன? இருக்கிறதை விற்று இதற்கு கல்யாணம் செய்துவிட்டால் போகிறது. அதுவும்தான் அப்பா எங்கே என்று கேட்பார்கள். ஸ்மக்ளரா என்று விசாரிப்பார்கள். எல்லாம் இம்போர்டட் சாமானாய் இருக்க வேண்டும் என்பார்கள். துக்கம் மெல்லியதாய், புடைவைக் குவியலாய் மேலே மேலே விழுந்து கொண்டிருந்தது.

''இது மத்தியானம் வந்தது.'' முத்துலட்சுமி மூன்று கவர் நீட்டினாள்.

கார் இன்ஷூரன்ஸ் நினைவுபடுத்திய கடிதம். யாரோ தொலைவு உறவுக் கல்யாணம், மூன்றாவது கவர், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புவனாவின் பெயர் பிரித்தாள்.

அது சிவப்பிரகாசம் கையெழுத்து. மூணு கடிதங்களையும் வாரிக்கொண்டு அறைக்கு ஓடினாள்.

முத்துலட்சுமி வியப்போடு பார்ப்பது பிடரியில் உறைத்தது.

''அன்பான மனைவி புவனாவுக்கு,

நலம், நலமறிய அவா. ஏன் இந்த வாரம் வரவில்லை? வக்கீலுக்கு அலைந்து கொண்டிருக்கிறாயா... உடம்புக்கு ஏதும் கஷ்டமா...வேறு ஏதாவது பிரச்சனையா? அதிகம் அலையாதே. இங்குள்ள என்னைப் போன்று காஃபி போலா கைதிகளோடு பேசினேன். ஒரு வருஷத்துக்கு விடுதலை என்பது இல்லை என்று சொல்லி விட்டார்கள். மற்ற கைதிகள் போல் நடத்தாமல் எங்களை தனியே வைத்து நல்ல முறையில் நடத்துகிறார்கள். வேலை எதுவும் தருவதில்லை. செய்கிறேன் என்றாலும் விடுவதில்லை. நீ வக்கீல் வீட்டுக்குப் போய் நிற்க வேண்டாம். இறைவன் திருவுள்ளப்படி நடப்பது நடக்கட்டும்.

செலவுக்கு என்ன செய்கிறாய்? மாப்பிள்ளை துணையாய் இருப்பார் என்று நினைக்கிறேன். காசுக்கு கஷ்டமாய் இருந்தால் பட்டறையை விற்றுவிடு. எட்டு ஒன்பது லட்சம் போகும். பத்து லட்சம் கேள். கரிகாரனுக்கு பாக்கி நிற்கிறது. கேட்டு கொடுத்து விடு. மூத்தவளை, அபிராமியை, மாப்பிள்ளையை கேட்டதாகச் சொல்.

நமக்கு இது வேதனையான வேளை. கடவுளை நினைத்தபடியே இரு.

அன்புடன்,

சிவப்பிரகாசம்.

புவனா கடிதம் படித்து விட்டு வேதனையோடு சிரித்தாள். நாளைக்கு சிறைக்குப் போக வேண்டும். அதிகாலை ஐந்துமணிக்கே போய்விட வேண்டும்.

அழகிரி கையுறைகள் பத்து எடுத்து தனியே கட்டி வைத்தான். எல்லாம் இடது கை உறைகள்.

27

புருஷன் கையெழுத்துப் பார்த்ததினாலா, கடிதத்தில் அவன் குரல் கேட்டதினாலா, காசுக்கு என்ன செய்கிறாய் என்று அக்கறைப்பட்ட அன்பா? உள்ளே ஏதோ ஒன்று பணிந்து உருகி, உள்ளமெல்லாம் நிறைந்து பொங்கி வழியத் துவங்கி விட்டது. மெள்ள அவன் தலையைக் கோதிவிட ஆசை வந்தது. கணுக்கால் சதையை அழுத்திப் பிடித்து முதுகைத் தடவி தூங்க வைத்த நினைவுகள் வந்தன.

இதோ இந்த அறையில் தளர்ந்த லுங்கியும் பரந்த மார்புமாய் அவன் வெற்றிலை போட்டு கொண்டிருப்பான். விட்டேத்தியாய் நிதானமாய் அப்புறம் வேற என்ன என்று எந்த விஷயத்தையும் முழுசாய் வாங்காமல் பேசிக் கொண்டிருப்பான்.

''எனக்குத் தெரிஞ்சு இது இரண்டு விஷயம்தான் உங்ககிட்ட பேசணும். பேசிட்டேன். நீங்க எதுனா சொல்லுங்களேன்.''

''நானு சம்மட்டி அடிக்கிறவன், கருமான். காலைல பட்டறைக்குள்ள நுழைஞ்சா சாயந்திரம் வெளிய வரேன்.''

''பட்டறை விஷயம்தான் சொல்லுங்களேன்.''

''அது எதுக்கு உனக்கு?''

''ஏன்?''

''சொன்னாக்கூட புரியாது. வேற ஒரு விஷயம் சொல்றேன் கேளு. பட்டறைக்கு எதிர்ப்பக்கம் கால்வாய் ஓரமா நிறைய குடிசைங்க. காலைல ஒரு பொம்பளை ஓடி பட்டறைக்குள்ள வந்து கரி ஷெட்டுப் பக்கமா உட்கார்ந்துக்குனா. பசங்க வந்து விஷயம் சொன்னாங்க. அவ புருஷன் பெரிய ரவுடியாம். ஒரு அடிதடி கேஸ்ல ஆறு மாசம் உள்ள போய்ட்டு வெளில இன்னிக்கு வந்துட்டானாம்.''

''ஐயோ, அதுக்கு இவ ஏன்?''

''அதான் கதை.''

''சோத்துக்கு என்ன செய்வா? புருஷன் ஜெயிலுக்குப் போய்ட்டான். பக்கத்து குடிசைக்காரனோட தங்கிட்டா.''

''அடிச்சிறுக்கி. கைகால் இல்லை. வீடு கூட்டி, மெழுகி வாழக்கூடாது.''

''எல்லாம் நல்லா இருக்கு. அந்த ஆள் கரிவண்டிலோடு கூலி எத்தினி நேரம் பட்டறைல இருப்பே புருஷன் தேடமாட்டானான்னு கேட்டேன். தேடறான்னுதான் வந்து ஒளிஞ்சுக்கிச்சாம்.''

''அப்புறம்?''

''யாரோ கைகாட்டி விட்டாங்க போல இருக்கு. நாலு ஆளோட புருஷன்காரன் வந்தான். பக்கத்து குடிசைக்காரனே ஒருவனைப் பார்த்து விஷயம் சொன்னானாம். அந்த பொம்பளை உள்ள இருந்தா அனுப்பிருங்கன்னு வந்தான். அடிக்காதப்பான்னேன். இதெல்லாம் செய்யமாட்டேங்க. பசிக்குது, சோறாக்கணும். அதுக்குத்தான் கூப்புடறேன்னான். சாயந்தரம்

பட்டறை பூட்டறபோது எதிர் பிளாட்பார்ம்ல இரண்டு ஆம்பளைங்களுக்கும் சோறு போட்டுகிட்டு இருக்குது. எதுனா ரகளை ஆச்சான்னு கேட்டேன். எங்க எடத்துல இதுக்கெல்லாம் ரகளை ஆகாதுன்னான்.''

''இப்ப எதுக்கு இந்தக் கதை எங்கிட்ட?''

''இல்லை, எவ்வளவோ பெரிய விஷயம்...எவ்வளவோ சாதாரணமா எடுத்துக்கிட்டாங்க.''

''வேற வழியில்லை.''

''கரெக்ட். வேற வழியில்லை. ஏன்னா அடுத்த வேளை இதைவிட பெரிய விஷயம். அதே பெரும்பாடா இருக்கிறபோது...''

''என்னா மலைச்சுப் போறிங்க இப்படி?''

''என் பட்டறைக்கும் அந்தக் குடிசைக்கும் பத்தடி தூரம். அவ வாழ்க்கை முறை வேற, என் வாழ்க்கை முறை வேற. என்ன விசித்திரம் இது.''

''இப்ப என்ன அதுக்கு?''

''நம்மதான் சின்ன விஷயத்துக்கும் நொந்து போறோம். இடதுகால் வலது கால்ன்னு பார்க்கறோம். பொட்டு கலைஞ்சுருச்சு, பூ உதிர்ந்ததுன்னு பயப்படறோம். அதுங்களைப் பார்.''

''பார்த்து என்ன செய்யறது? அவ தலையெழுத்து. அதென்னமோ ஊசிப்போன பண்டத்துலியே ஒரு ஆசை.'' முகவாயை மெல்ல இடித்தாள்.

''ஆறுமாசம் ஜெயில்ல இருந்துட்டு வந்த ஆள் இன்னிக்கு தூள் கிளப்புவான் இந்நேரம்.''

''சரியான கிறுக்கு புடிச்ச ஆளு.''

''சும்மா ஒரு ட்ராமா போடுவோமா?''

''என்ன ட்ராமா?''

''நீதான் அந்த பொம்பளையாம். நான் ஜெயிலுக்குப் போய்ட்டு வந்த ரௌடி. ராத்திரி குடிசைக்குள்ள சிம்னி விளக்கு எரியுது. அந்த ஆள் லேசா தண்ணி போட்டு ருக்கான். பொம்பளை மேல கைய வைச்சுட்டான்.''

''அடச்சீ. நீங்களும் உங்க ட்ராமாவும். அப்பால போய் படுங்க.''

அவன் படுக்கவில்லை. படுக்கவும் விடவில்லை. சமூகம் என்பது நாலு பேர், நாலு கோடி பேர். நாலு கோடி மக்களும் ஒரு தனி மனிதனை பாதிக்கிறார்கள். தனி மனிதன் நாலு கோடி மக்களையும் பார்க்கிறான். இது சிலந்தி வலை. குறுக்கும் நெடுக்கும் பின்னப்பட்ட வலை. ஒரு நுனியில் கொசு அமர்ந்தாலும் மொத்த வலையிலும் அதிர்வு தெரியும்.

அன்று அந்த சேரிப்பெண் புருஷனை பாதித்தாள். இன்று இந்தக்கடிதம் என்னை பாதிக்கிறது. இப்போது ட்ராமா போடச் சொன்னால் சரி என்று போட்டு விடு வாள்.

''மீனு குழம்பு வெச்சேனே, எப்படி இருந்துருச்சு...'' பேச்சு துவங்குவாள். துவங்க ஆசையாய் இருந்தது. கட்டிலில் உரசியபடி பேசிச் சிரிக்கும் ஏக்கம் வந்தது. காமம் வாட்டிற்று.

புவனா படுக்கையோடு அழுந்த பதிந்து கதவிடுக்கில் நசுங்கிய பல்லி போல படுத்திருந்தாள். முதற்கோழி கூவிற்று. மணி நாலேகால். எழுந்து அறைக் கதவு திறந்து ஷவரில் வீசும் தண்ணீரடியில் நின்றாள். விடியல் குளிரில் நீரின் குளுமையில் காமம் கரைந்து போயிற்று. பாவாடைக் கறை போல நீர் திட்டாய் அடிமனதில் உறைந்து போயிற்று. அது சட்டென்று தெரியாது. உற்று உற்றுப் பார்த்தால்தான் தெரியும்.

அவனைத் தவிர, புருஷனைத் தவிர இனி யார் உற்றுப் பார்க்கப் போகிறார்கள்...பார்த்தாலும் எனக்கு

என்னவாகும்... 'அட போடா' என்றுதான் தோன்றும். நாற்பது வயதில் புருஷன் இல்லாமல் இருப்பது கொடுமை சேற்றுக்குள் மிதிப்பட்ட கீரை மக்கி உரமாகுமே தவிர, இனி அது மலராது... வளராது.

ஐந்தரை மணிக்கு எல்லா பொருட்களையும் காரில் அடுக்கிவிட்டு முத்துலட்சுமி கொடுத்த காபியைக் குடித்தாள். ''அவ பள்ளிக்கூடம் போகலைன்னா வுட்டுறு. மனசு கஷ்டத்தோட எங்கேயும் போக வேணாம். நான் அவரைப் பார்த்துட்டு பட்டறை போறேன்.''

ஜெயில் வாசலில் காரை நிறுத்திவிட்டு விண்ணப்பம் எழுதிக் கொடுத்தாள். காத்திருந்தபடி கந்தரனுபூதி படித்தாள். உள்ளே கூப்பிட்டார்கள்.

இடது கை பக்கம் உள்ள பெரிய அறையில் உட்கார வைத்தார்கள்.

வேட்டியும் நீலச் சட்டையுமாய் சிவப்பிரகாசம் உள்ளே வந்தான். முகம் வாட்டமாயிருந்தது தவிர, வேறு மாறுதல் இல்லை. முகம் சவரம் செய்யப்பட்டு சுத்தமாய் இருந்தது.

''எதுனா புஸ்தகம் கொண்டாந்திருக்கியா புவனா. எழுத மறந்துட்டேன்.''

புவனா பெரியபுராணமும், தேவாரமும், திருப் புகழும், சித்தர் பாடல்களும் அடங்கிய புத்தகக்கட்டைக் கொடுத்தாள்.

''நீங்க எப்பவோ வாங்கினது.''

''இதான்... இதான் நினைச்சுகிட்டு இருந்தேன். சும்மா வாங்கிட்டேனே தவிர, ஏதும் படிக்கலை. இங்க வெட்டு வெட்டுன்னு உட்கார்ந்துட்டு இருக்கறதுக்கு படிக்கலாம். வக்கீலு என்ன சொல்றாரு.''

''சேட்டு பிடிபடுறவரைக்கும் கஷ்டம்தான்னு.''

''பிடிபடமாட்டான். இங்க சேட்டு பத்தி விவரம் தெரிஞ்சவங்க நாலைஞ்சு பேர் இருக்கானுங்க சேட்டு மாட்டிவிட்ட ஒரு வெள்ளைக்காரன் இருக்கான்.''

''சாப்பிடறீங்களா?''

''ஏதோ கொடுக்கறதை.''

''முறுக்கு சீடை கொண்ணாந்திருக்கேன்.''

''வேணாம் இப்ப சாப்பிட நல்லா இருக்கும். ஆசைப்படறபோது கிடைக்காது. பட்டறை போய் பார்த்தியா? அந்தக் கம்பெனில சுப்பிரமணின்னு ஒரு ஆள் இருப்பாரு. அவர்கிட்ட பேசு நான் சொன்னேன்னு சொல்லு. விக்க ஏற்பாடு செய்வான்.''

''பட்டறை ஒடுது.''

''எப்படி?''

''வேற எஞ்சினியர் அனுப்பினாங்க?''

''கம்பெனிலேர்ந்தா?''

''ஆமாம்''

''சுப்பிரமணியா?''

''இல்லை. பெரியவரு ராவ்.''

''வேற இடம் கிடைக்கறவரைக்கும் எதுனா செய்வாங்க. இன்னொரு பட்டறை டெவலப் பண்ணிட்டா நம்பளை கவுத்துடுவாங்க.''

''நாமே அறநூறு போடறோம்.''

''மேலேயே போடலாம். கரிக்கடை ஆளுக்கு காசு கொடுத்திட்டியா?''

''செட்டில் பண்ணிட்டேன்.''

''சார் நேரமாவுது.'' பின்னே போலீஸ் குரல் கேட்டது.

''ஒரு இரண்டு நிமிஷம் அண்ணே. முறுக்கு சாப்பிட நீங்களா?'' அவளிடம் இருந்து வாங்கி நீட்டினான்.

''சட்டுனு வாங்க.''

''சேட்டு வீட்லேர்ந்து ஏதாவது தகவல் வந்ததா?''

''பாப்பா வந்தது.''

''எதுக்கு?''

''துட்டு தரேன்னுச்சு, வேண்டாம்னுட்டேன்.''

''ஏன் வாங்கல? அவனுக்கோசரம்தானே நான் சாவறேன். ஏன் வேணாம்னே?''

''கெட்ட சகவாசம் எனக்கு மனசுக்கு பிடிக்கலை.''

''எவ்வளோ?''

''நான் கேட்கலை.''

''அடுத்த தடவ வந்தா கேளு. ஏழு லட்ச ரூபாய்க்கு பூனால வீடு கட்டிக் கொடுத்திருக்கான். ஒரு ஆளுக்கு புள்ளைங்க படிப்பு எல்லாம் சேட்டு காசுதான். பொண்ணு என்ன செய்யறா?''

''பள்ளிக்கூடம் போகமாட்டேன்னுது.''

''விட்டுரு. சேட்டுக்கிட்ட காசு வாங்கி கல்யாணத்த பண்ணிடலாம்.''

''சார் போதும், வெளிய வாங்க.''

''வந்துட்டேன். அப்ப கிளம்பறியா? நல்லவேளை நான் நினைச்ச புஸ்தகம் கொண்டாந்துட்டே. இங்க பொழுதே போகலை, வரட்டா!''

இறங்கி பெரிய மரம் தாண்டி வளைவான ஒரு வாசலுக்கு நடந்தான். யாரோ அருகே நடக்க, பேசிக்கொண்டு புத்தகங்கள் காட்டியபடி மறைந்தான்.

புவனா வெளியே வந்தாள்.

தன்னைப்பற்றி எதுவுமே கேட்கவில்லையே என்று தோன்றியது. 'ஏன்?' என்று கேள்வி எழுந்தது. புத்தகம் பார்த்த சந்தோஷமா, தான் நலம் என்று பார்வையில் தெரிந்துவிட்டதா? எப்படி பட்டறை நடத்துகிறாய் என்று கேள்வியே இல்லையே. ஒருவேளை யாரோ தனக்காக நடத்துகிறார்கள் என்கிற எண்ணமா?

நான் சரியாய் சொல்லவில்லையோ?

ஏனோ தனித்துப் போனது போல புவனாவுக்குத் தோன்றியது.

வால்டாக்ஸ் சாலையில் வண்டி போகும்போது உள்ளே ஒரு கசப்பு மண்டியது.

விற்று விடலாமா? எனக்கு எதற்கு இந்த அவஸ்தை? விடிகால் வேதனை. கொல்லுரும், கிளவுஸும் டூட்ரம்மும், கரியோடும் நான் ஏன் கட்டிக்கொண்டு அழ வேண்டும்?

ஏழே கால் மணிக்கு பட்டறைக் கதவைத் திறந்தாள். பையன்கள் காத்திருந்தார்கள்.

இன்று அடுப்பு மூட்டணுமா என்று கேட்டார்கள்.

முரளி மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினான். காரிலிருந்து சாமான்கள் இறக்கப்படுவது பார்த்து புன்னகை செய்தான்.

''குட்மானிங். காலையிலேயே கொண்டாந்திட்டீங்க எல்லாம்?''

''ராத்திரியே வாங்கிட்டேன். ராமசாமி வரலையா?''

''எட்டு மணிக்கு வருவாரு. இன்னிக்கு ஃபர்னஸ் பத்த வச்சுடலாம்.''

சிவன் பூஜை போட்டார்கள். குத்து விளக்கு திரியிலிருந்து கற்பூரம் ஏற்றி காட்டினார்கள். தட்டு நீட்டினார்கள். அவளிடம் தந்து அப்படியே அடுப்புக்குள் வீசச் சொன்னார்கள்.

டூஸலில் நனைத்த கரி பட்டென்று பற்றி எரிந்தது. களிமண் பிசைய ஆட்கள் உட்கார்ந்தார்கள். அடுப்பு உயர் நிலை சூடுக்கு வர இரண்டு மணி நேரம் ஆகும்.

புதுக் கருவிகள் சரி பார்த்து முரளி ஆட்களுக்கு கொடுத்தான். மோல்டிங், மண்ணில் செய்வதை புவனா அருகில் இருந்து வேடிக்கை பார்த்தாள். உருக்கு ஊற்ற ஒரு துவாரமும், காற்று வெளியே போக ஒரு துவாரமும் செய்யப்பட்டதை கவனித்தாள். அச்சுக்கள் அடுக்கப்பட்டன.

இடையே தேநீர் விநியோகம் நடந்தது. புது டரேயில் கொதிக்க கொதிக்க டீ வந்தது.

பதினோரு மணிக்கு பார்லி வாட்டர் கொடுக்க தீர்மானமாயிற்று. பார்லி கரைக்க பழைய ட்ரம் போதும் என்று முரளி சொல்லிவிட்டான்.

ஆபீஸுக்கு வந்து கரி அளவுக்கு ரிஜிஸ்டர் திறந்தான். ஒரு நாளைக்கு எத்தனை ட்ராலி கரி என்பது கணக்கு சொல்லவேண்டும் என்று பையனுக்கு உத்தரவிட்டான்.

பாளம் பாளமான உருக்குகள் கொதி நிலைக்கு வந்தன.

கையுறை போட்டார்கள்.

முரளி பிரித்து வழங்க, மூன்றாவது நிமிடம் திரும்பினார்கள். 'சரியாக இல்லை' என்றார்கள்.

இடது கை உறையாகவே எல்லா உறைகளும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எப்படி இது? புவனா திகைத்தாள். முரளி சிரித்தான்.

''அட்ஜஸ்ட் பண்ணிக்கப்பா.'' வலது கையில் கந்தையும் இடது கையில் தோலுறையும் அணிந்து உருக்கு பக்கெட் வெளியே இழுக்கப்பட்டது.

புவனா வீட்டிற்குப் போன் செய்தாள்.

மகள் குரல் எதிர் முனையில் கேட்டது. கையுறைகள் பற்றி கேட்டாள். வலது கை உறைகளாக இருப்பது தெரிந்தது. 'உடனே எடுத்துகிட்டு ஆட்டோல வரியா?''

அரை மணியில் மகள் அங்கே கையுறையுடன் வர, முரளிக்கு அறிமுகப்படுத்தப்பட்டாள்.

''பள்ளிக்கூடம் போகலையா?''

''இல்லை.''

''ஏன்?''

''இனிமே நான் அம்மாவோட பட்டறைக்கு வரப் போறேன்.''

''வொய்?''

''ஐ லைக் ஹர் வெரிமச். அவங்க மட்டும் ஏன் கஷ்டப்படணும்...நானும் தினம் வந்து பட்டறைய கவனிச்சுக்கறேன்.''

''ப்ளஸ் டு பாஸ் பண்ணா போதுமா?''

''எங்கப்பா ப்ளஸ் டுவா படிச்சாரு? இது போதும்.''

யாரோ தனக்கு துணையிருக்கிறார்கள். தான் தனியில்லை என்று புவனாவுக்கு தோன்றியது. மகளை மெல்ல அணைத்துக் கொண்டாள்.

28

''நம்ம பட்டறைல நாம என்னம்மா தயார் பண்றோம்?''

''ஆக்ஸில் ஹவுஸிங் தாட்சாயினி.''

''அப்படின்னா?''

''காரு லாரில உண்டான ஒரு பாகம்.''

''கார்ல எங்க இருக்கும்?''

''பின் பக்கச் சக்கரத்துல இருக்கும். இதுதான் ஆக்ஸில் ஹவுஸிங் படம். நம்ம கார்ல எங்க இருக்குது... கண்டுபிடி.''

''அதான் பின்னாலன்னு சொன்னியே.''

''எங்கன்னு பாரு.''

பெண் வெளியே போயிற்று. கார் சுற்றி வந்தது. புவனா ஜன்னல் வழியே புன்சிரிப்புடன் மகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தொலைவிலிருந்து அது திரும்பிப் பார்த்தது. 'எங்கே ஆக்ஸில் ஹவுஸிங்' என்று விழிகளால் கேட்டது.

''குனி. கீழே உட்கார்ந்து பார்.'' புவனா ஜாடையிலேயே பதில் சொன்னாள். மிடி உடையை கவனத்துடன் மடித்துக்கொண்டு உட்கார்ந்து காரின் அடியில் ஆக்ஸில் ஹவுஸிங் மகள் தேட,

''எனிதிங் ராங்?'' முரளி குறுக்கிட, பெண் பதறி எழுந்தது அம்மாவைப் பார்த்தது.

'ம்ம்...கேள்,' அம்மா கண்களால் பெண்ணை ஊக்குவித்தாள்.

''எங்க ஆக்ஸில் ஹவுஸிங் வருது ஒரு கார்ல?''

''ஐஸி. யூ வாண்ட்டு லேர்ன்.''

''எஸ் சார்.''

''ஐ வில் டீச் யூ.'' முரளியும் தாட்சாயினியும் காரின் பின்புறம் குத்திட்டு உட்கார்ந்தார்கள்.

புவனா ஒரு நிம்மதியோடு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அறியும் ஆசை தெரிந்து கொள்ளும் தேடல் விளக்கிச் சொல்லுங்கள் என்கிற தாபம். ஏன், எது, எதனால், என்கிற கேள்விகளின் படையெடுப்பு...எவ்வளவு ஆரோக்கியம். இளம் வயதில் இவை எழுவது எத்தனைச் சிறப்பு.

அவளுக்கு இவைகள் எழுந்தன. இளம் வயதில் இயல்பாய் பொங்கின.

''அண்ணே, மோட்டார் கார் எதுல ஓடுது?''

''ரோட்ல.''

''அதுல்லண்ணே...எதுல ஓடுது?''

''ஒரு ஆள் ஓட்டறான், ஓடுது?''

''அதான் உள்ள என்ன விஷயம்ன்னு கேட்கறேன்.''

''தாமிரத் தகடு இல்ல...சுத்தத் தகடு அதுல சக்கரம் எழுதி மேல வெள்ளி போட்டு மடிச்சு சீல் வச்சுருவாங்க. அத புஜத்தில கட்டிக்கணும். தினம் தொட்டு கும்பிட்டு, சாம்பிராணி, ஊதுவத்தி காட்டி கடவுளே காரு ஓட்டுன்னா போதும்.''

''அட போங்கண்ணே, சதாய்க்கிறீங்க.''

''நெசம் புவனா.''

''ராயப்பேட்டை ஆஸ்பத்திரியாண்ட குதிரைக்காரன் தோள்பட்டைல பெரிசா பில்லை கட்டிருப்பானே பார்க்கலை, அதான் அது.''

''இல்லேண்ணே, உள்ள எண்ணெய் ஊத்தி...''

''ஆமா மண்ணெண்ணெய். போடி. கார் ஓடறது தெரிஞ்சு ஆவணுமா உனக்கு...ஏறி உட்கார்ந்தா சொல்ற இடத்துக்கு ஓட்டிக்கிட்டு போறான். உனக்கேண்டி இதெல்லாம்?''

''சொல்லக் கூடாதா?''

''சொன்னா புரியாது.'' நகர்ந்து விட்டான்.

''இலை போட்டதும் தண்ணி வையின்னு எத்தனை தடவை சொல்றது? அறிவு வேணாம். இந்த அழகுல காரு ஓட்டறது கேட்க வந்துட்டா. கொழுப்பாய் போச் சுடி.?'

பிறகு கேட்கவேயில்லை. புருஷன்தான் வலிந்து சொல்லிக் கொடுத்தான்.

''பெட்ரோல்லதானுங்களே கார் ஓடுது.''

''ஏன் டீஸல்லையும் ஓடுது.''

''டீஸலுக்கும் பெட்ரோலுக்கும் என்ன வித்தியாசம்?''

''துட்டு கூட பெட்ரோலுக்கு.''

''இல்லை அமைப்புல.''

திரும்பிப் பார்த்தான்.

ஏன் கேட்கிறாய் என்கிற மாதிரி புருவங்கள் உயர்ந்தன.

''சொல்லலாம்ன்னா சொல்லுங்க.'' முகத்தில் பயம் பரவ திரும்பிய போது வாய் விட்டு சிரித்தான்.

''தெரிஞ்சுக்கணும்ங்கற ஆசை ரொம்ப உசத்தி புவனா. லேடீஸ் நிறைய தெரிஞ்சுக்கணும். உலகத்துல விஷயங்களையும் புரிஞ்சுக்கணும்ங்கறது என் ஆசை. இதுக்கு ஏன் பயப்படற...உண்மைல பெட்ரோலுக்கும், டீசலுக்கும் என்ன வித்தியாசம்? எனக்கும் தெரியாது, தெரிஞ்சுப்போம் வா-''

கார் பெட்ரோல் பங்கில் திரும்பி நிரப்பிக்கொண்ட போது, பெட்ரோல் போடுபவனைக் கேட்க, 'தெரியாது' என்று அவனும் சொன்னான். முதலாளியைக் கேட்க, 'அது செவப்பு கலர். இது நீலக் கலர். அது தவிர வேறு தெரியாது.' அவனுக்கு ஆவல் அதிகமாயிற்று. விடக் கூடாது. தெரிஞ்ச பிறகுதான் வீடு திரும்பணும். நாலாவது பெட்ரோல் பங்கில் ஒரு ஸ்கூட்டர் ஆள் இடை மறித்து சொல்லித்தர, வாய்பிளந்து புருஷனும், மனைவியும் கேட்டார்கள்.

''கலைபுதிர்னு ஒரு தமிழ்ப் பத்திரிகை வருது. அதுல இதுமாதிரி நிறைய போட்டிருக்கும். லஸ்ஸுல கிடைக்கும்.''

வாங்கினார்கள்.

வரும்போது கேட்டான், ''கார் கத்துக்கிறியா புவனா?''

''ஐயோ''

''என்ன ஐயோ?''

''ஓட்ட முடியுமா?''

''கிட்ட உட்கார். ஸ்டியரிங் பிடி.''

''நல்லாருக்காதுங்க. பட்டப் பகல்ல வெட்ட வெளில...''

''கத்துக்க வேணாமா?''

''இப்படியா?''

''வேற எப்படியும் வராது. கிட்டவா. வெட்கம் விடு.''

அறிதலுக்கு வெட்கம் தடை. கேள்விக்கு லஜ்ஜை தடை என்பது புரிய வைத்தான். புருஷன் ஆசானாய், தோழனாய் பலது சொல்லிக் கொடுத்தான்.

''ஒரு சந்தேகம் புவனா...''

''என்னங்க?''

''எப்பவும் நான்தானே கூப்பிடறேன். நீயேன் கூப்பிட மாட்டேங்கறே.''

''அது எப்படி பொம்பளை கூப்புடறது. இதுக்குப் போயி...''

''அதான் சந்தேகம்''

''என்ன?''

''பொண்ணுக்குக் காமம் கிடையாதா?''

''இருக்கும்.''

''ஏன் வெளிய தெரியப்படுத்தறதில்லை?''

''கூடாதுன்னு ஒரு நெறி.''

''அதான் ஏன்?''

''நல்லாருக்காது.''

''ஏன்?''

யோசித்தாள். நான் பதில் சொல்றேன் என்றாள். நாள் முழுவதும் சிந்தனை செய்தாள், நூறு கேள்விகளை எழுப்பி பதில் தேடி அலைந்தாள்.

''ஐயா, நாம பண்றது குடித்தனம்.''

''சரி.''

''அதுல ஒருத்தரையொருத்தர் அவமானப்படுத்த லாமா.''

''கூடாது.''

''ஆம்பளைக்கு அவமானமாயிடக் கூடாதுன்னுதான் பொம்பளை முதல்ல துவங்கறதில்லை.''

''புரியலை...?''

''இன்னைக்கு உங்களுக்கு சாப்பாடு இல்லை. மனசு ரோதனை. உடம்பு ஜ்வரம். பகல் சோறு சாப்பிட முடியலை அலுப்பு கவலை. அப்ப உங்களால...''

''புரியது.''

''நான் புரியாத கூப்புட்டு...நீங்க முடியாத தவிச்சு... உள்ள வேதனைப்பட்டு அந்த வேதனையை வேறவிதமா காமிச்சு... பொம்பளை உடம்புக்கு ஏமாற்றம் வேணாமே.''

''ஆமாமா. அதனாலதான்.''

''ஆமாம். ஆனா உனக்கும் வேணும்கற மாதிரி இருக்குமில்லை.''

''இருக்கும்.''

''அத எப்படி சொல்லுவே?''

''மூஞ்சி சொல்லும்.''

''எனக்கு சொன்ன மாதிரி தெரியலையே புவனா.''

''உடுப்பு சொல்லும்.''

''எப்படி?''

''சீரா உடுத்தி பூவாட்டம் சிரிப்பா மின்னு கொஞ்சலா பேசி...''

''அடடா அதானா இது?''

''அது மட்டும் இல்லை அது மாதிரி...''

''புவனா, நான் ஒரு மக்கு முண்டம். சமயத்துல இது எதுவும் மனசுல ஒட்டாது. வாயைத் திறந்து நீ கூப்பிட்டா என்ன? நமக்குள்ள மான அவமானம் ஏன்?''

''ஐயோ பாயசத்தை வாய்ல மொத்தமா கவத்துக்க லாமா... உறிஞ்சி கொஞ்சம் கொஞ்சமா குடிக்கணும்.''

''சத்தியமா புரியலை.''

''தடால்னு கூப்புடறது அசிங்கம். பொண்டாட்டி கிட்ட முழிப்பா இரேன். பட்டறைல இலை ஆடினாலும் தெரிஞ்சுடும்ங்கறே இல்லே. பொண்டாட்டிய முழுசா பாரேன். ஏன் கண்ணை மூடிக்கிட்டு வார்த்தைக்குக் காத்திருக்கணும்?''

''ஆ...இன்னிக்கு உனக்கு ஜோராயிடுச்சு.''

''இல்லியே.''

''பூ வச்சுருக்கே.''

''எப்பவும் வச்சுக்கறதுதான்.''

''மூஞ்சில சிரிப்பு இருக்கு.''

''எப்பவும் இருக்கறதுதான்.''

''இது புதுசா இல்லையே...சலவைக்குப் போட்டதா? எனக்குப் புடிச்ச கலர்ன்னுதானே கட்டியிருக்கே.''

''இல்லப்பா, வீட்ல கட்டுற புடவைதான்.''

''அடி போடி.''

''ஏன்?''

''நீ சரியா சொல்லி தரலை எனக்கு.''

வாய் கொள்ளாத சிரிப்பு பொங்கியது.

''ஆக்காங்... சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை.'' ஒரு நடிப்பு நடித்து, இடுப்பு நெளித்து, ஒயில் காட்டி நடந்தாள்.

''ஆஹா' என்று விழி விரியப் பார்த்தான். அவனுக்குப் புரிந்துவிட்டது.

''அடடா, இந்த சமாச்சாரம் நடைல இருக்குது. எப்படி எப்படி? இன்னொரு தடவை நட.''

புருஷன் மாணவனாக, மனைவி ஆசிரியையானாள். வஞ்சனையின்றி சொல்லிக் கொடுத்தாள். கற்றுக்கொள்ள ஆசைவேண்டும். புரிந்து கொள்ள ஆர்வம் வேண்டும். அவனுக்கு மனைவி மீது ஆசையும், கூடல் மீது ஆர்வமும் இருந்தது. அறிந்தான். தெளிந்தான்.

மனைவியைப் புரிந்துகொள்ளும் ஆசையை உடைய புருஷர்கள் பாக்கியவான்கள். சொர்க்கம் அவர்களுக்குக் கட்டிலில் இருக்கிறது. புருஷனைப் புரிந்து கொள்ள ஆசைப்படும் பெண்கள் ஞானவான்கள். மன திடத்தை அவர்களுக்குக் குடும்பம் தருகிறது.

பெண் அன்புக்கு ஏங்குபவள். அவளின் அன்பே அவளை இறைத்தனமைக்கு அழைத்துச் செல்கிறது. ஆண் தியாகமென்கிற ஒருமுகச் சிந்தனை உடையவன். இதன் உச்சம் அவனை அன்புள்ளவனாய் மாற்றுகிறது.

இங்கே புருஷன் மனைவியை தியானித்தான். அன்பானான். மனைவி அன்பை ஏற்றாள். இறைத்தன்மை அடைந்தாள்.

அன்பும் ஒருமுகப்பட்ட கட்டளையும் ஒன்றே. அன்பில்லாத இடத்தில் அக்கறை வருமா? அக்கறை கொண்ட இடத்தில் அன்பில்லாது போகுமா?

புருஷனின் அன்புதான் ஒருமுகப்பட்ட அக்கறையாய் மாறிற்று. அதுதான் பட்டறை நடத்தும் உறுதி தந்தது.

அதோ அங்கே பெண்ணரசி முழு கவனத்துடன் ஆக்ஸில் ஹவுஸிங் பற்றி தெரிந்து கொள்கிறாள்.

மாலபிள் காஸ்டிங் பற்றி கேள்வி கேட்கிறாள். இரும்பில் எத்தனை வகையென்று கூறுகிறாள்.

இதன் அடிவேர் ஆசை. ஆசை வளர்த்த ஆர்வம். ஆர்வம் தழைக்க அக்கறை. அக்கறை கிளை விட, அன்பு என்கிற கனி.

தாட்சாயினி வளர். வளர்ந்து மரமாய் நில். மனசு கூவலுடன் ஆசீர்வதித்தது.

அம்மாவும் பெண்ணும் வழியெல்லாம் பட்டறை பற்றி பேசிக்கொண்டு வந்தார்கள். சாப்பிடும்போது கொள்முதல் லாபம் பற்றி விவாதித்தார்கள். அருகருகே படுத்துக் கொண்டு 'நாளைக்கு என்ன வேலை' என்று திட்டமிட்டார்கள்.

உருக்கு உலை இடைவிடாது எரிந்தது. பக்கெட் தளதளத்தது சிவப்பு உருக்கு மண் அச்சு நிரப்பிற்று. உளி ஓசையும், சக்கர தேய்ப்பான் ஓசையும் இசையாயின.

''நான் இன்ஸ்பெக்ஷன் கவனிச்சுக்கட்டுமா. பாவம் முரளியே எல்லாம் செய்யறது.''

''செய்.''

''எனக்கும் எதுனா போட்டுக் கொடேன்.''

''எதுடி?''

''சம்பளம்.''

''அடி சிறுக்கி.''

''ஏன்... ஏன் உழைக்கிறேனில்லை?''

''முரளிக்கிட்ட பேசிட்டு சொல்றேன்.''

''என்னம்மா... மெள்ள மெள்ள என்னைய வெளியத்தள்ளிடலாம்ன்னு பார்க்கறியா?''

''ஐயோ, இல்லை சார்.''

''ஆமார் சார். நீங்க செய்யணும் சார். நான் ஒரு வருஷம்தான் சார் உங்க பட்டறைல இருப்பேன்.''

''ஏன்?''

''நீ தயாராயிட்டா நான் எதுக்கு தாட்சாயினி.''

''எ நோஸ் ஈஸ் எ நோஸ். எஞ்சினியர், எஞ்சினியர் தான்.''

''பட்டம் எஞ்சினியராக்காது, பழக்கம் எஞ்சினியராக்கும். இன்ஸ்பெக்ஷன் போறதுக்கு முன்னாடி ஒரு தடவை இரும்பு ஊத்து. ஒரு தடவை கார் கம்பெனிக்கு போய் டெலிவரி கொடுத்துட்டு வா. பிராட்வே போய் நீயே டூல்ஸ் பர்ச்சேஸ் நடத்து.''

பெண்ணரசி கம்பெனிக்கு ஆக்ஸில் ஹவுஸிங் லாரியில் போயிற்று. முகம் சிவந்து வந்தது.

''என்னடி?''

''உளறிட்டேன்.''

''என்ன?''

''இடது பக்க ஆக்ஸில் ஹவுஸிங் எப்படி வித்தியாசம் கண்டுபிடிப்பேன்னு கேட்டாங்க. கரெக்ட்டா தப்பு சொன்னேன். சிரிச்சுட்டாங்க. வெட்கமாயிடுச்சு.''

''தட்ஸ் குட், இனிமே எந்த தப்பும் வரவே வராது.''

''நல்லா தெரிஞ்ச விஷயம். ச்சே ஏன் அவ்வளவு கரெக்ட்டா தப்பு பண்ணினேன்?''

''வெட்கம். அறிவுக்குத் தடை. லஜ்ஜை உயர்வுக்குத் தடை.''

''வெட்கம் விடு. லஜ்ஜை உடை.

அம்மா சொல்லித்தர, பெண் உடைத்தாள். அடுத்த ஆக்ஸில் டெலிவரிக்கும் அவளே போனாள் 'ஆள் இல்லை. நீயே போடு' என்றார்களாம் லாரி கிளீனரும் அவளுமாய் ஹவுஸிங் இறக்கினார்களாம்.

''கஷ்டமா இருக்கா தாட்சாயினி?''

''இல்லம்மா. எல்லாத்துக்கும் நான் ரெடி.'' சிறையிடப்பட்ட கோட்டைக் கதவுகள் உடைந்து விழ. வழி தாண்டி குதிரை எகிறிற்று. சிட்டாகப் பறந்தது.

பெண்ணுக்கு சிறை என்பது வீடு. அகழி என்பது வெளி உலகம். அந்த குதிரை அவள் மனசு. இனி அவளைச் சிறைப்படுத்தல் என்பது முடியாது. 'செய் அல்லது செத்து மடி.'

அம்மாவுக்கும், பெண்ணுக்கும் புரிந்து விட்டது.

சிறைப்பட்ட புருஷனுக்கு புரியவில்லை. அவன் இடுப்பு வேட்டியை யாருக்கோ போர்த்திவிட்டு ஜட்டியுடன் சிரித்துக் கொண்டிருந்தான்.

29

மனசு மிகவும் விசித்திரமானது. கூட்டத்தினிடையே பேசிப் பழக ஒரு மனசும், உள்ளே தனியே பேசிப் பழகியதை யோசித்தபடி ஒரு மனசுமாய் பிளவு பட்டிருப்பதை வெளியே காட்டிக்கொள்ள முடியாது. உள் மனசை வெளியிலிருப்பவருக்கு சொல்லக்கூடாது. ஒன்றான மனசாய் உலவ வேண்டும் ஊரோடு ஒத்து வாழ வேண்டும்.

பிளவுபட்டிருப்பது முதற்குற்றம். பிளவை பேசிப் பேசி வளர்த்துக் கொண்டிருப்பது இரண்டாவது குற்றம். பிளவா...என் மனசா...இல்லையே சொன்ன சொல்தான்

உள்ளேயும் உள்ளிருப்பதுதான் வெளியே சொன்னதும் என்று மறைப்பது மூன்றாவது குற்றம்.

ஆனால் இந்தக் குற்றத்துக்கு என்ன தண்டனை? எந்தச் சட்டத்தில் இது தவறென்று சொல்லப்பட்டிருக்கிறது? யார் தண்டனை வழங்குவார்கள்? பிளவுபட்டிருக்கிறது என்று வெளியே இருப்பவரால் கண்டு பிடிக்க முடியுமா...''

இடதும், வலதும் இரண்டாய் பிளவுபட்டதை மூன்றாம் நிலை மனசாட்சிக்குப் புரியும். வெளியே சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறானே, உள்ளே இத்தனை அழுகை இருக்கிறதே என்று தெரியவரும். 'ஏன்' என்கிற கேள்வி வரும். அப்படித்தான் என்கிற பதில் வரும். வெளியே எதையும் காட்டாது உபசார வார்த்தைகள் கூறி உள்ளே எதிர்ப்பதமாய் கோபம் கொண்டு வாழ்கிற துச்சம் புரியும். இப்படி இருப்பதில் தான் 'வெற்றி' என்கிற முடிவு முதலில் தெரியும். இந்த முடிவால் மனசுப் பிளவு அதிகரிக்கும். ஒவ்வொரு செய்கையும் இரண்டிரண்டாகும். 'வணக்கம்' என்று வாய் மலரச் சொல்கிற போதே மகாபாவி அயோக்கியன் இவனுக்கு வணக்கமா என்கிற சீற்றம் உள்ளே ஓடும்.

பிளவு பட்டும் வெளி வேஷம் போட்டும் வெற்றி கிட்டாமல் போக வேதனை வர, ஏதேனும் விபரீத நிகழ்ச்சியில் கதி கலங்கிப் போக, எதற்கிந்த வேடம் என்கிற அலட்சிய வேதனை வருகிறது. வணங்கினாலும் வைத்ததற்கு உண்டான விளைவுதான் ஏற்படுகிறது. வணங்கிடுவானேன் என்கிற சலிப்பு வருகிறது. வணக்கம் விடை பெறுகிறது. போலிப் பணிவு நகர்ந்து விடுகிறது. உள்ளே உள்ள கோபம் உண்மையான கோபம்—கொப்பளித்துக் கிளம்புகிறது.

சிவப்பிரகாசம் சிறைக்குள் வந்ததும் கோபத்தால் இவ்விதமே கொப்பளித்தான். எப்படியாவது விடுதலை

அடைந்துவிட வேண்டும் என்று ஆத்திரப்பட்டான். வணங்கிய கடவுள்கள் இடையே சிறிது சோதனை நடத்தினாலும் வெற்றி தனக்கு என்று நம்பினான். வேதனை தொடர்ந்தது. வெற்றி இல்லை என்பது உணர முடிந்தது. இது ஊழ்வினை என்று கொஞ்ச காலம் மௌனமாய் இருந்தனை.

மௌனமாய் காலத்தில் மனசு இரண்டாய் பிளந்திருப்பது உணர முடிந்தது. எல்லா இடத்திலும் இரண்டிரண்டாய் நடந்து கொண்டிருக்கிறோம் என்ற விஷயம் கூர்மையாய் புத்தியில் தைத்தது.

எதற்கு இப்படி நடந்து கொண்டோம்... இதனால் என்ன பலன்...எவ்வளவு ஒழுக்கமாய். கம்பீரனாய், கருணையுள்ளவனாய் நடந்தபோதும், விதி சிறைக்குத் தானே கொண்டு வந்து என்னைத் தள்ளியது. ஊர் சிரிக்க ஒரு அவமான நாடகப் பயணம்.

இனி நான் இரண்டில்லை. ஒன்று, இனி பொய் யில்லை. எல்லாம் உண்மை. எது உள்ளேயோ அதுவே வெளியே, இனி கபட நாடகம் இல்லை. வேண்டாம் என்று தோன்றியது. சிறையில் படித்த புத்தகங்கள் உள்ளே நெருப்பைக் கொட்டின. புத்தி, பற்றி எரியத் துவங்கியது.

தான் என்னும் ஆணவமும் தத்துவமும் கெட்டொழிந்தே
ஏன் என்ற பேச்சும் இலாது இலங்குவது எக்காலம்
நான் யாரோ நீ யாரோ நன்றாப் பரமனே
தான் யாரோ என்றுணர்ந்து தவம் முடிப்பதெக்காலம்

—படிக்கப் படிக்க கூடு விட்டுப் போயிற்று. உயிர் உலர்ந்து போயிற்று. எதனோடும் ஒட்டாது போயிற்று. சிறையில் வாய்விட்டு சிவப்பிரகாசம் சிரிக்கத் துவங்கினான். எவர் பற்றியும், எது பற்றியும் யோசிக்காது வெறுமே இருக்கப் பழகினான். எது யோசிக்க முனைந்

தாலும் யார் இதை யோசிப்பது என்று பார்க்கத் துவங்கினான்.

புத்தியின் இந்த மாற்றம், உடம்பை முகத்தை மெல்ல வேறாக்கியது. உடம்பு இளைத்தது. முகம் விசாலமாயிற்று. கண்கள் பெரிதாயின. உதட்டில் மலர்ச்சி நின்றது. நெற்றியில் மடிப்புகள் மிகுந்தன.

''ஐயா சிவப்பிரகாசம். நேத்தும் சாப்பிடலை. இன்னிக்கும் சாப்பிடலை. செத்துப்போறீங்க துரை.'' யாரோ சொன்னார்கள்.

பித்தாயம் கொண்டு பிரணவத்தை ஊடறுத்த
செத்தாரைப்போல திரிவது இனி எக்காலம்

—பத்தரகிரியார் பாட்டு பதிலாய் வரும்.

''தூங்கலீங்களா...நடந்துகிட்டே இருக்கீங்க. ராத்திரி மூச்சூடும்.''

காசினியெல்லாம் கால் ஓய்ந்து போகாமல்
வாசிதனில் ஏறி வருவது இனி எக்காலம்

யாருக்கும் எந்த தீங்கும் நினைக்காது தானே தனக்குள் பேசி திகைத்து நின்ற சிவப்பிரகாசத்தை சிறை நண்பர்கள் உற்றுப் பார்த்து வியந்தார்கள். 'பாவம்' என்றார்கள். 'உள்ளே ஒடிங்கிட்டாரு அவரைத் தொந்தரவு பண்ணாதீங்க' என்று தனித்து விட்டார்கள். வற்புறுத்தி சிறிதளவு சாப்பிட வைத்தார்கள்.

கடும் ஜுரத்தில் ஒரு கைதி தவித்து முனகியபோது சிவப்பிரகாசம் செல் விட்டு செல் வந்து படுத்துத் தவிப்பவனை உற்றுப் பார்த்தான். உள்ளே மனசு குவித்து இதைக் காப்பாற்று' என்றான். வேட்டி அவிழ்த்து காப்பாற்றும் வேலையின் முதல் படியாய் அவனுக்குப் போர்த்தினான். வேட்டி ஜுரப்பட்டவனை கனிந்த ஒரு தாய் போல் வளைத்துக் கொண்டது. சிவப்பிரகாசம் வேட்டிக்கு என்ன பரிவு என்று

நினைத்துச் சிரித்தான். சிறை அவன் சிரிப்புக் குரல்கண்டு வியந்தது.

ஜுரம் அரை மணியில் நின்று விட்டது வியர்த்து விட்டது. உட்கார்ந்து கஞ்சி குடிக்க முடிந்தது.

''அந்தாளு என்னவோ பெரிய்ய ஆளுன்னு தோணுது. என்னவோ ஒரு பவர் இருக்குது. ஒருவேளை சோறு இல்லாட்டி நமக்குக் கண் சொருகுது. அந்தாள் இரண்டு நாளா பச்சத் தண்ணிகூட குடிக்கலை நட்ட கல்லா நிக்கிறாரு.''

''வேட்டி போர்த்தினதும் ஜுரம் வுட்டுருச்சுப்பா, மந்திரம் போட்டுறுப்பாரா.''

''தெரியலை, ஆனா அந்தாளு பெரிய ஆளு. அவரு தாண்டி போனா எழுந்து நின்று கும்பிடு உனக்கு நல்லது.''

அது மந்திரமில்லை. பிளவுபட்ட மனது, வேதனைப்பட்டு சிந்தித்து அடிநிலை அறிந்து நன்றாயிற்று, ஒருமுகப்பட்ட மனசு அதனுள் பொங்கிய அன்பு அவன் எண்ணம் செயலாயிற்று. ஜுரம் நீங்கிற்று.

கிராப் வளர்ந்த தலை, முகத்துத் தாடி, மலர்ந்த கண்கள் வித்தியாசப்படுத்திற்று.

தண்டனை பெற்ற கைதியில்லை. விசாரிப்புக்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட கைதிதான். எனவே சிலில் உடைகளும் சிறிது சுதந்திரமும் உண்டு.

ஆறு ஏக்கர் சிறையில் சிவப்பிரகாசம் அலைந்தான். தன்னுள் தன்னைத் தேடினான்.

ஆண், அன்பு என்கிற விஷயத்தை தியானத்தின் மூலம் அடைகிறான். தியானம் என்பது தன்னுள்தான் மூழ்குவது இவ்விதம் மூழ்கி வெளியே வந்தவர் புத்தர்.

கௌதமர் அரச குமாரனாய் வலம்வந்தவர் கேள்வி எழ, ஒருஇரவு நேரம் வெளி உலகம் போனார் எல்லா இடத்திலும் வேதனையின் குரல் ஒலிப்பது கண்டார். காரணம் தேடினார். காரணம் தேட, தன்னுள் தானே மூழ்கினார், ஒரு நாள் புரிந்தது. தன்னைத் தன் மனைவியை தன் குழந்தைகள் தன் நாட்டை நேசித்த கௌதமர் சகலரையும் சகல நேரமும் நேசிடும் புத்தரா னார்.

ஆனால் பெண் வேறு விதம். அவள் அன்போடு பிறந் தவள். அன்பே உருவாய் இருப்பவள். அன்புக்கு ஏங்கு பவள். அவள் அன்பு ஏக்கம் இறையருள் சேர்க்கும். அன்பைத் தியானமாய் மாற்றியவள் மீரா. அவள் நேசிக்க, ஆள் கிடைக்காமல் கிருஷ்ணன் என்பவரை உரு வகித்துக் கொண்டாள். எல்லோரையும் கிருஷ்ணனாய் பார்த்துக் காதலித்தாள். உள்ளே இறைமை வளர்ந் தது.

சிவப்பிரகாசம் தன்னை புத்தனாய் மாற்றிக்கொள்ள புவனா தன்னை மீராவாய் மாற்றிக்கொண்டாள். அவளு டைய கிருஷ்ணன் சிவப்பிரகாசம். சிவப்பிரகாசம் நேரில் இல்லாதபோது அவன் விட்டுப்போன தொழிற்சாலை அவளுக்கு சிவப்பிரகாசமாய் இருந்தது. புருஷன் உபசரிப் புக்கு பதில் புவனாவுக்கு தொழிற்சாலை வளர்ப்பு வந்து விட்டது. அதன் வளர்ச்சி புருஷன் உபசரணையாகி விட்டது, சிவப்பிரகாசம் கவனித்ததை விட கருணை யோடு தொழிற்சாலையை கவனிக்க முடிந்தது.

பத்துமணிக்கு டீ தாகம் எடுக்கும்போது மற்றவர்க்கு டீ வந்துவிட்டதா என்று முதலில் பார்க்கத் தோன்றியது. 25 சி வெய்யிலில் தண்ணீர் ஃபில்டர் வடுத்து இருபது பேர் குடிக்கும் அளவு தண்ணீர் உண்டா என்று சோதிக்க வைத்தது. கையுறையும், காலுறையும் எப்போது கேட்டாலும் கிடைத்தது. சனிக்கிழமை கூலியை எதை

வேண்டுமானாலும் அடகு வைத்துக் கொடுக்கும் குணம் வந்தது.

''இந்த வாரம் நூத்தி நாற்பத்தி ரெண்டு ஆக்ஸில் கூட ஊத்தியிருக்கிறோம் தாயே, அதுக்கு எதுனா போட்டுத் தரணும்.''

''போட்டுடேன். ஊத்தின உங்களுக்கு ஒரு ரூபா ஒரு ஆக்ஸிலுக்கு சைட் வேலை செஞ்சவங்களுக்கு எட்டணா ஒரு ஆக்ஸிலுக்கு,''

விண்ணப்பிக்கும் முன்னரே வேலைக்குத் தகுந்த கூலி தரப்பட்டது,

''போன தடவை பத்தரை ரூபா இருமல் மருந்து கொடுத்தீங்க. அது கழிச்சுக்கலையா.''

''அட, போப்பா. மருந்துக்கு துட்டா, நீ குடிக்கலைன்னு சொல்லு, உன் குடும்பத்துக்கே வைத்திய காசு தரேன்.''

''இந்த வேலைக்கு குடிக்காம முடியாது தாயே... உனக்குப் புரியலை.''

''நாதன் ஒயின்ஸ்ல ஆளுக்கு ஒரு அரைபாட்டில் ரம் வாங்கிக்கலாம். இது ஆயுத பூஜைக்கு. வாங்கிட்டு அப்படியே போயிடணும் இங்க வரக்கூடாது.''

''நான் குடிக்கறதில்லே...''

''சொன்னாங்க, முப்பது ரூபாய்க்கு பிஸ்கட் வாங்கிக்குங்க.''

''கண்ணுல தூள் பட்டிருச்சும்மா.''

''இப்படி படு. நான் மருந்து ஊத்தறேன் கொஞ்சம் எரியும். அரை மணி நேரம் அப்படியே படுத்துக்கிட்டு இரு. காகிள்ஸ் போட்டு வேலை செய்.''

மூன்றாவது மாதம் எழுநூறு ஆக்ஸில் ஹவுஸிங் அனுப்பினாள். அட்வான்ஸாக இருந்தாள். ராயரிட மிருந்து பாராட்டுக் கடிதம் வந்தது. தொடர்ந்து உழைக்க, வாழ்த்து தெரிவித்திருந்தது.

அந்த பேட்டை சித்திர மாசம் விழாவுக்கு நாலு அண்டா கூழ் தொழிற்சாலை ஊற்றியது. ஊற்றும்போது கண்கலங்கியது.

ஒரு சொம்புக் கூழ் எடுத்துக் கொண்டு பத்து மணிக்கு சிறைச்சாலைக்குப் போனாள்.

சிறையில் எல்லோரும் அவளை மரியாதையுடன் வரவேற்றார்கள்.

''ஐயா வந்துருவாங்க.'' என்றார்கள்.

''ஐயா வந்தார். சிரித்தார் புவனா மிரண்டாள். புத்தரை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

மனைவி யசோதரை மட்டும் கேள்வி கேட்டாள்.

''உம்மை புத்தனென்று எல்லோரும் சொல்கிறார்கள்.''

''ஆனால் உம்மையே நேசித்த என்னைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்த உம்மை எப்படி நான் புத்தனென்று அழைப்பது?''

''என்னை ஏற்றுக் கொள்ளும்போது உண்டான அன்பு என்னைப் பிரியும்போது உமக்கேன் இப்போது போயிற்று?''

''உமக்கு ஜுரம் வந்தபோதும் செல்வம் வந்தபோதும் அவமதிப்பு வந்தபோதும் அதிக மதிப்பு வந்தபோதும் நான் இருந்தேன். உமக்கு வேண்டியிருந்தேன். ஞானம் வந்தபோது மட்டும் தான் வேண்டாமா? கெடுக உம் ஞானம்,'' யசோதரை புத்தனைப்பார்த்துக்கூச்சலிட்டாள்

புத்தன் சிரித்தான்.

''குழந்தாய், அமைதியாய் இரு'' என்று மனசுள் வேண்டினான். பதில் பேசாது இருந்தான்.

அதுதான் மறுபடி அங்கே நடந்தது.

30

உதிரி பாகங்களுக்கு ஒரே தயாரிப்பாளரை நாம் நம்பியிருத்தல் கூடாது. தயாரிப்பாளரின் சொந்த கஷ்ட நஷ்டத்தால் நம்முடைய கார் கம்பெனியில் உற்பத்தி முடக்கம் ஏற்பட்டுவிடக் கூடாது. உதாரணமாய் ஆக்ஸில் ஹவுஸிங் என்கிற பாகத்துக்கு தொந்தரவு ஏற்பட்டது. நமக்கு இரண்டாவது தயாரிப்பாளர் இல்லை. ஒரு ஆளையே நம்பும் நிலை. அவர்கள் கஷ்டத்தை நமது கஷ்டமாய் ஏற்றுக்கொண்டு ஒருவாறு ஒப்பேற்றினோம். இந்நிலை தொடரக்கூடாது. எல்லா உதிரி பாகங்களுக்கும் இரண்டு அல்லது மூன்று தயாரிப்பாளர்கள் தேவை. தேசமெங்கும் பல்வேறு கம்பெனிகளில் கொடேஷன் கேளுங்கள் தரக்கட்டுப்பாடு அவசியம் என்று சொல்லுங்கள்

டெவலப் அனதர் ஸோர்ஸ்—மாதாந்திர கூட்டத்தில் அந்தக் கம்பெனியில் கட்டளையிடப்பட்டது. கட்டளை தாங்கி கடிதங்கள், டெலக்ஸ்கள் பறந்தன. பல்வேறு உதிரி பாகங்களுக்குப் பல்வேறு கம்பெனியிடமிருந்து விலை நிர்ணயங்கள் வந்தன.

ஆக்ஸில் ஹவுஸிங் பதினேழு பேர் விலை தந்திருந்தார்கள். இத்தனை விலையும் புவனாவின் பட்டறை விலையை விட ஒரு மடங்கு, ஒன்னரை மடங்கு அதிகம் புவனாவின் தயாரிப்பு விலை சொல்லி, இவ்வளவுதான் தரமுடியும் என்று கார் கம்பெனி கடிதம் எழுதியபோது சகலரும் கட்டுப்படியாகாது என்று மறுத்துவிட்டார்கள்.

''முரளி, இந்த மேடத்திற்கு மட்டும் எப்படி கட்டுப் படியாகிறது?'' என்று ராவ் ஆச்சரியப்பட்டார்.

''நவீன கருவிகள் ஏதுமில்லை நூறு வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் உருக்கு ஊற்றும் முறை எப்படி இருந்ததோ அதே முறையில் இங்கே ஊற்றுகிறார்கள். இவர்களுக்கு கம்பெனியை விஸ்தரிக்கும் எண்ணமில்லை. இது மட்டும் தயாரித்து காலத்தை ஓட்டினால் சரி என்கிற எண்ணம். அடுத்த மாதச் செலவிற்கு இந்த மாதம் உழைக்கும் ஏற்பாடு. இது தவறு.''

''ஏன்?''

''ஒரு மழையில் புயல் காற்றில் கூரை சரிந்தாலும் இந்த மேடம் தன் கழுத்து நகைகளைதான் அடகு வைக்க வேண்டுமே ஒழிய, வந்த லாபத்தில் கூரை போட இயலாது. லாபத்தின் ஒரு பகுதி அடுத்த முதலீட்டிற்கு என்கிற எண்ணமில்லை.''

''வேறு ஸோர்ஸ் டெவலப் செய்யமுடியவில்லையே?''

''இந்த விலைக்கு முடியாது அங்கிள். விலை அதிகமானாலும் வேறு தயாரிப்பாளரும் உங்களுக்கு இருப்பது நல்லது.''

''இவர்களுக்கு ஒரு விலை, மற்றவருக்கு ஒருவிலையா. ஆடிட்டிங்கில் கேள்வி வருமே. அரசு தணிக்கையின்போது விசாரணை செய்யுமே.''

இவர்களுக்கு தரும் விலையும் கொஞ்சம் ஏற்றி விடுங்கள்.''

''இதை மேடம் கேட்கவில்லை.''

''கேட்கச் சொல்கிறேன்.''

''அது தவறு. பத்து ரூபாய்க்கு ஒரு பொருள் விற்கிறேன் என்பவரிடம் பனிரெண்டு ரூபாய் கேள்

வாங்கிக் கொள்கிறேன் என்பது என்ன வியாபாரம். அது கம்பெனிக்குச் செய்யும் துரோகம்.''

''இதை வேறு விதமாகப் பாருங்கள் அங்கிள்.''

''எப்படி?''

''புவனா மேடம் கேட்க பயப்படுகிறார்கள். உள்ள ஒரு ஆர்டரும் போய்விடக் கூடாது என்கிற கவலையில் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட போதும் போதாததுமான நிலையில் வியாபாரம் செய்கிறார்கள். நாளை நான் சொன்னது போல எதிர்பாராத வேதனை, புயல் மழை, தீவிபத்து என்று வந்தால் புவனா பட்டறையை இழுத்து மூடி, வீட்டோடு அடைந்து விடுவார்கள். உங்கள் கம்பெனி தவிக்கும் இந்த கம்பெனியை சுப்ரமண்யம் போன்ற ஆட்கள் லீசுக்கு எடுத்தால் நிச்சயம் யானை விலை குதிரை விலை ஆக்ஸில் ஹவுஸிங்கு கேட்பார்கள் எனவே...''

''எனவே...?''

''விலையை உயர்த்தி அவர்கள் லாபத்தை சிறிது அதிகப்படுத்துவது உங்கள் கம்பெனிக்கு பெரிதும் நல்லது. கம்பெனி வாசலில் பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை கட்டிக் கொடுத்திருக்கிறது உங்கள் கம்பெனி. பல்லவன் பயணிகளிடம் உங்களுக்கு என்ன கருணை. உங்கள் கம்பெனி ஊழியர்கள் அங்கே இறங்கி ஏறுகிறார்கள். அவர்கள் மழையில் நனையாமல் வெய்யிலில் காயாமல் அதன் பொருட்டு விடுப்பு எடுக்காமல்...''

''முரளி போதும். உன்னை நான் வகுப்பு எடுக்கச் சொல்லவில்லை.'' ராவ் யோசித்தார். முரளி நமுட்டு விஷமத்தோடு அக்காவின் புருஷன் யோசிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அந்த அம்மாவை விலை கூடுதல் கேட்கச் சொல்.'' ராவ் கட்டளையிட்டார்.

''இன்னொரு ஸோர்ஸ் உண்டா?''

''நிச்சயம்.''

''அப்போது இவர்கள் பங்கு குறையுமா? அறுநூறு ஜோடிக்கு பதில் மூன்னூறு ஜோடி கேட்பீர்களா?''

''கேட்கலாம். ஆனால் நாம் உற்பத்தி அதிகப் படுத்தப் போகிறோம. ஆயிரம் ஜோடிகள் தேவைப் படும் ஒவ்வொரு மாதமும். ஐநூறு ஐநூறு என்று பிரித்துத் தரப்படும்''

''நல்லது'' முரளி எழுந்தான்.

ஃ ஃ ஃ

''எப்படிங்க தடார்னு ஒரு ஆக்ஸில் ஹவுஸிங்குக்கு நாப்பது ரூபா கூட கேட்கறது. மாட்டேனுட்டாங் கன்னா?'' புவனா புருவம் உயர்த்தினாள்.

''மாட்டேன்னா இருபது கேளுங்க.'' ஆபீஸ் அறையின் எதிர் நாறகாலியில் முரளி உட்கார்ந்து கொண்டான்.

''அதுவும் மாட்டேன்னா?''

''கேளுங்க மேடம்.''

''ஆர்டர் கேன்சல் ஆச்சுன்னா?''

''எப்படி கேன்சல் ஆவும். அவங்ககிட்ட வேற ஸோர்ஸ் இல்லை, வேற போக்கிடம் இல்லை.''

''அது தப்புங்க. இந்த பட்டறை நிலைக்கக் காரணமே அவங்க கம்பெனி.''

''நீங்க டெவலப் பண்ண வேணாமா...பட்டறைல இன்னும் இரண்டு பர்னஸ் போட வேண்டாமா...உங்க ஆபீஸ் ரூம் ஏ.ஸி. பண்ண வேணாமா...உங்க இரண்டா வது மக கல்யாணம் நடத்த காசு வேணாமா?''

''ஏ. ஸி. எதுக்கு? இந்த இடம் போதும். இப்ப ஓடற ஓட்டம் போதும். எத்தினி சம்பாதிச்சாலும் ரசம் சோறு

கரைச்சுதானே குடிக்கணும். கட்டியாவா தின்ன முடியும்?''

''மேடம் உங்களுக்குப் போறாது?''

''போதுங்க.''

''என்ன போதும்?''

''இந்த நிலைமை நின்னா போதும். நான் சீவி சிங்காரிக்க சம்பாதிக்கலை. வீட்ல நல்லதுக்கு காசு வேணும்னு பறக்கலை. தோப்பு துறவு வாங்க, வளைச்சிப் போட இந்தப் பட்டறை நடத்தலை. அவரு வெளியே வரச்சொல்ல இந்த பட்டறை அடுப்பு எரிஞ்சுகிட்டு இருக்கணும். இந்த இடம் உசிரோட இருக்கணும். அவ்வளவுதான்.''

''நோ, யூ ஆர் ராங்.''

''தம்பி, நீங்க படிச்சவங்க. ஆனா நான் வயசுல பெரியவ. வாழ்ந்தவ. எனக்குத் தெரியும். காசு மட்டுமே சந்தோஷம் இல்லை தம்பி, நாளைக்கு காசால எம்புருஷன் வெளியே வராரன்னா, இப்பவே இது மொத்தமும் வித்துருவேன். வரமுடியாதே. காசு வச்சுகிட்டு என்ன செய்யறது நான்?

''இங்க உட்கார்ந்து சலான் எழுதறதுல ஒரு ஆத்ம திருப்தி. என் புருஷன் வேலை இதுன்னு ஒரு சந்தோஷம். என்னிக்கு அவரு பட்டறைக்கு உள்ள வராறோ அன்னிக்கு நான் வீட்டுக்குப் போயிடுவேன். அவருக்குப் புடிக்கும்ன்னு உருளைக்கிழங்கும் எங்களுக்குப் புடிக்குமேன்னு கத்திரிக்கா கறியும் டிபன் பாக்ஸ்ல அடைச்சு அனுப்புவேன்.''

''பழங்காலப் பொம்பளையாவே இருக்கீங்கம்மா, உருளைக்கிழங்கு கத்திரிக்காய்ன்னு.?''

''புது பொம்பளை என்ன பண்ணுவா...எப்படி இருப்பா...ஓட்டல்ல சோறு ஆர்டர் பண்ணி புருஷ

னுடைய ப்ளூன் கைல கொடுத்து அனுப்பிட்டு தான் தனியா சாப்பிடுவாளா...'' நிதானமாய் கேட்டாலும் புவனாவின் குரலில் ஒரு கோபம் தெரிந்தது.

''ஏன், என்ன தப்பு? சமைக்கத்தான் பொம்பளையா? கோலம் போடத்தான் குணவதியா...இது முட்டாள் தனம்.''

''இல்லை, நான் அப்படி சொல்லலை. நான் இந்தப் பட்டறைக்கு எம்.டி. என்னால சமைக்க முடியாது இனின்னு சொல்றதுதான் முட்டாள்தனம். சமைக்கிறது எனக்கு சந்தோஷம். ஏன் தெரியுங்களா. என்னை சந்தோஷமா என் புருஷன் வச்சுகிட்டு இருக்கிறதால புருஷன் மேல வெறுப்பு வந்தா பொட்டு இடறது கூட அலுப்பா ஆவும். புடவை கட்டறது கூட கவலையா தெரியும். இதே நல்ல புருஷன் கிடைக்கட்டும். என்னா வேணா செய்யத் தோணும். பெ.ங்கிப் பொங்கி உபசரணை பண்ணி...வேணாம் தம்பி...உங்களுக்கு வாழ்க்கை புரியலை.''

முரளி அவனை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''புரியும், ஒரு நாள் புரியும். நாப்பது ஐம்பதுல புரியும். சுல்யாணம் கட்டி மூணு பெத்து, வீடு முழுக்க மூலைக்கு மூலை புஸ்தகமும், சாக்ஸும் ஃப்ராக்கும் ட்ராயரும் கிடைக்கும் பாருங்க. அப்ப புரியும். ஒவ்வொன்னா எடுத்து வைப்பீங்க. பையனுக்கு அலம்பி விடுவீங்க. பொண்ணுக்கு தலை வாருவீங்க. இடது கை விடுவீங்க. பொண்ணுக்கு தலை வாருவீங்க. இடது கை விட்டுப்போன மாதிரி நோவும். எக்ஸிபிஷன் முழுக்க தூக்கிக்கிட்டு சுத்துவீங்க. ராட்டினக்காரன்கிட்ட மெள்ள சுத்து, மெள்ள சுத்துன்னு கெஞ்சுவீங்க, ஜுரம் வந்தாக் குழந்தையை ராத்திரி முழுக்க மடில போட்டு கிடப்பா உங்க பொண்டாட்டி அடுப்பு மூட்டி வெந்நீர் போட்டு

தரைல உட்கார்ந்து பால் கரைப்பீங்க. செய்வீங்களா, மாட்டீங்களா?''

முரளி யோசித்தான்.

செய்தா குடித்தனம், செய்யாட்டி குப்பை. ஜுரக் குழந்தைக்கு புருஷன் உட்கார்ந்து பால் கரைச்சா பெண் டாட்டி நெஞ்சு நெக்குவிட்டு போகும்.

''நெளவ்வடேஸ் லேடீஸ் வித்தியாசமா...''

''என்ன தம்பி வித்தியாசம் சொல்லுங்க? எந்த இடம் வித்தியாசமாயிடுச்சி? லேடீசுக்கு மீசை முளைச்சுடுச்சா? தலைல கொம்பு வளர்த்து விட்டாங்களா...வேலைக்குப் போனாங்கன்னா உடனே மூணு மணி நேர சமையல் முக்கா மணியாயிடுச்சு இல்லே குப்புன்னு காஸ் அடுப்பு, கூன்னு குக்கர், குளிர் பொட்டி, முக்கா நிமிஷத்துல அரைக்கிற மிக்ஸி...ஊறப்போட்ட அரிசியை கொட்டினா தானா தள்ளி அரைக்கிற கிரைண்டர், அலசிதுணி புழியற வாஷிங் மெஷின். இதுக்கப்புறமும் அலுப்பு வந்தா நீ சந்தோஷமா இல்லைன்னு அர்த்தம். மனசுல சந்தோஷம் இல்லைன்னா வாங்கித் தின்னாலும் குமட்டும்.''

''அடிமையா அடுப்படில இருக்கறது சந்தோஷம் உங்களுக்கு.''

புவனா சிரித்தாள்.

''அடிமையா இருக்கறது கஷ்டம்தான், வீடா இருந்தாலும், ஆபீஸா இருந்தாலும், ரோடா இருந்தாலும் கஷ்டம்தான். ஆனா எல்லா இடத்துலயும் யாரும் இஷ்டத்துக்கு இருந்திட முடியாது கண்டபடி கிராஸ் பண்ண முடியாது—நினைச்ச நேரத்துல தூங்க முடியாது, நான் சமைக்க மாட்டேன் போன்னு கைகட்ட முடியாது. சுதந்திரம்னா சும்மா உட்கார்ந்து சோறு திங்கறதுன்னு யாரு சொன்னா?''

''அப்போ சமைக்கறது பொம்பளை வேலைன்னு சத்தியம் பண்றீங்க?''

''இல்லை. என் ஆம்பளை பட்டறைக்குப்போனா என் இடம் சமையலறை. என் ஆம்பளை ஜெயிலுக்குப் போனா என் இடம் பட்டறை. பிகாஸ் ஐ லவ் ஹீம் இப்ப எல்லாரும் லவ்வு லல்வுன்னுதானே பேசறீங்க, இதுதான் லவ்''

''இந்த அளவு அவரு உங்களை லவ் பண்ணறா...சாரி நான் பர்ஸனலா கேட்கறதா...''

''கேளுங்களேன். பூ வாசனை அடிக்கலைன்னா, முகர்ந்து பார்ப்போமா...தண்ணி சாக்கடையா இருந்தா தலைக்கு குளிப்போமா...மரம் முழுக்க கம்பளி பூச்சின்னா நிழலுக்கு நிப்பமா...என் புருஷன் முருங்க மரமில்லை. அரசமரம். காவிரி ஜலம். செண்பகப்பூ.''

''காட்? என்ன டிவோஷன்?''

''டிவோஷன் எப்ப வரும் தம்பி? நெஞ்சு நெறைஞ்சா வரும் அவமானப்படுத்தப்படற பொம்பளதான் அகங்காரமா இருப்பா. ஆத்திரமா பேசுவா.''

''இப்ப நெறைய லேடீஸ் கதந்திரம் பத்தி பேசி ஆத்திரப்படறாங்களே...''

''நிஜம். நெறைய பேர் அவமானப்படறாங்க. புருஷன் என்னை புரிஞ்சுக்கலையேன்னு ஏக்கப்படறாங்க. அந்த ஏக்கம் தர துக்கத்துல கோவமா பேசறாங்க.''

''என்ன தீர்வு இதுக்கு?''

'பொம்பளைய கேவலப்பட வைக்கறது பேய்த்தனம்ன்னு ஆம்பளைக்குப் புரியணும். அவனுக்குப் புரிய வைக்க பொம்பளை முயற்சி செய்யணும்.''

''ஏன், ஏன் அவ முயற்சி செய்யணும். ஆம்பளை தான்...''

''ஏன்னா உனக்குத்தானே சுதந்திரம் வேணும். ஏன் வேணும்னு கேட்டா பதில் சொல்லு. முடியாதுன்னா எதிர்த்து நில்லு.''

''ஆங் இப்ப சொன்னீங்களே...''

''வெயிட் சமைக்க மாட்டேங்கறது எதிர்ப்பில்லை. சமைக்கறது கேவலம்னு நினைக்கறது பழியில்லை. ஒரு பொண்ணு ஒரு நாளைக்கு இருபது தோசை சுடறா. இருபது வருஷத்துக்கு எத்தினி தோசை சுடுவான்னு டி.வி.ல பட்டிமன்றத்துல பேசினாங்க. சிரிப்பு வந்திடுச்சு எனக்கு. ஒரு முழத்துல எழுவத்தெட்டு மல்லிப்பூ. ஒரு வருஷத்துக்கு இத்தினி மல்லிப்பூ அருபது வருஷத்துக்கு எத்தினி மல்லிப்பூன்னு பதிலுக்கு கணக்குப் போட்டா தலையில இருக்கற பூவை உருவி தரைல போட்டு மிதிப்பாங்களா இவங்க... ஒரு பொண்ணு அம்பது வயசுக்கு எழுவத்தஞ்சு கிலோ பவுடர் உபயோகம் செய்யுதுன்னு வாங்காத இருப்பாங்களா... இந்தக் கணக்கு பாவாடை நாடா, புடவை ரவிக்கை பிஸ்ஸுனு முடிவில்லாத போயிடும், இந்த தோசைக் கணக்குக்கு ஆடிடறதா பொம்பளையா இருக்கறவ?''

''மேடம், பெண் சுதந்திரம் பெண் விடுதலைன்னா உங்கக் கணக்குல என்ன அர்த்தம்?'' முரளி பதிலுக்கு சரிந்து கேட்டான்.

''இது கேள்வி ஆண் தன் அன்பை, அறிவை. அனுபவத்தை பெண்ணோடு பகிர்தல். அவள் பகிர்ந்து கொள்ள அதை ஆண் ஏற்றல். இதுவே சுதந்திரம். அல்லது வாழ்க்கை.''

''நல்லா பேசுறீங்க மேடம்.''

''நான் பேசலீங்க முரளி. என் வாழ்க்கை பேசுது.''

''குட். இருவது ரூபா கூட விலை கேட்டு இப்பவே கம்பெனில பேசறீங்க. இது என் சஜஷன். என்னுடைய ப்ளான். உங்களுக்கு இது நல்லது.''

''ஏங்க இது?''

என் அறிவை அன்பை இப்படி ஒரு நல்லா ஐடியாவா உங்களோட பகிர்ந்துக்கிறேன். அப்புறம் உங்க இஷ்டம். சிரித்தான்.

பதினைந்து ரூபாய் உயர்வு கிடைத்தது. புவனா ஆச்சர்யப்பட்டாள். கேட்டதும் டக்குன்னு உசத்திட் டாங்களே என்று சந்தோஷப்பட்டாள்.

''தம்பி உங்களுக்கு கூட ஐநூறு ரூபா தரேன்.'' அவளும் தன் அன்பை பகிர்ந்து கொண்டாள். வேலை யாட்களுக்கு கூலி உயர்த்தினாள்.

முரளி—அவள் பேச்சு மொத்தமும் ராயரிடம், ராயர் மனைவியிடம் ஒரு லயன்ஸ் கிளப் விருந்தில் வியந்து பேசினான். ராயர் மனைவி சந்தோஷப்பட்டாள். ராயர் ஆச்சர்யப்பட்டார்.

ல்யன்ஸ் கிளப் அவளை அந்த வருடத்து தனித்து உழைக்கும் பெண்மணி என்று கௌரவிக்க முடிவு செய்தது.

31

''உழைக்கும் பெண்மணியா? விருதா... பாராட்டா... எனக்கா? ஊர்ல இருக்கற அத்தனை பெண்களுக்குமில்ல கொடுக்கணும். எந்த பொம்பளை உழைக்கலை?''

''இல்லம்மா. இப்படி பட்டறை வச்சு...''

''அப்ப சமையல் சுவிட்ச் போட்டா வருதுன்னு நினைக்கிறீங்க?''

சஃபாரி சூட்டும் கூலிங்கிளாஸுமாய் லயன்ஸ் கிளப் சங்கத்தினர்கள் இருவர் வர விவரம் சொல்ல புவனா வியந் தாள். எனக்கு எதற்கு என்று வாதாடினாள்.

''இந்தப் பட்டறை நான் உருவாக்கியதில்லை. என் புருஷன் நின்று நடத்தி பெரிசாக்கினாரு. தேர் அச்சாணி கழண்டபோது யாரோ ஒரு பொம்பளை ஆள்காட்டி விரல் வச்சு யுத்தத்துல தோல்வியில்லாத புருஷனை ஜெயிக்க வச்சாளாமே அந்தக் கதை இது.''

''அப்ப இதுக்குப் பாராட்டிடுவோம்.''

''அதுக்குப் பாராட்டதான் மூணு வரம் கொடுத் தாங்க. அந்தப் பொம்பளைக்கு இந்த மாதிரி லயன்ஸ் கிளப்ல தரலை. அவ புருஷன் தசரதமகாராஜா தந்தாரு.''

''ராமாயணமா நாங்க வரம் தர முடியாதும்மா. ராவ் சொன்னாரு இவங்களைப் பாராட்டலாம்ன்னு அட்ரஸ் கொடுத்தாரு.''

உட்கார்ந்தவள் எழுந்தாள்.

''சொல்லவே இல்லீங்களே அவரு உங்க கிளப்புங் களா? வரேன்.''

மணி அடித்து கூட்டம் துவங்கப்பட்டது. அறிவித்து உறுதிமொழி கூறி யாரோ எதற்கோ முன்மொழிந்து எவரோ வருமொழிந்து ஒன்றும் புரியவில்லை. கிளப் மீட்டிங் மொத்தமும் ஆங்கிலத்தில் நடந்தது. இடை யிடையே தமிழிலும் பேசினார்கள்.

இரண்டு யானைகள் முட்டுக்கொடுக்கப்பட்ட பலகை யில் அவள் பெயர் எழுதி மிகச் சிறந்த பெண்மணி என்று பொறிக்கப்பட்டிருப்பதை கைதட்டல்களுக்கு இடையே தந்தார்கள்.

நன்றி நவிலல் என்றார்கள்.

நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

மைக்குக்கு முன்னால இதுவரை நின்றதேயில்லை, தொண்டை செருமிக்கொள்ள செருமல் எதிர் சுவரில் மோதி திரும்பி வந்து தாக்கிற்று. வியர்த்தது.

''தமிழில் பேசலாம் மேடம்.''

''சரிங்க.''

மறுபடி குரல் சுவர் மீது மோதி எதிரொலித்தது தானே தன்னை அதட்டுவதுபோல் தெரிந்தது.

''அன்பார்ந்த நண்பர்களே இப்படி மேடைல பேசி எனக்கு பழக்கமில்லீங்க. பரிசுன்னு நான் வாங்கினமுத விஷயம் என் வாழ்க்கைல இதுதான். நீங்க எல்லோரும் கைதட்டறபோது பரிசை கீழ போட்டுறுவேனோன்னு பயமா இருந்துச்சு.''

கூட்டம் சிரித்தது.

உட்கார்ந்த உடனே என் படபடப்பு எனக்கே வெட்கமா போச்சு. அடுத்த தடவை பரிசு கொடுக்கற போது இத்தனை நடுங்கக் கூடாதுன்னு நினைச்சுக் கிட்டேன்.

மறுபடி சிரித்தது.

''எனக்கும் சிரிப்பாயிடுச்சுங்க. அடுத்த தடவ பரிசு கொடுக்கற போதுன்னு எப்படி யோசிச்சேன் என்ன யோக்கியதைல யோசிச்சேன். இந்த தடவை நீங்க கொடுத்த உற்சாகத்துல வந்த ஆசை இது. இது நல்லதா கெட்டதா தெரியலை. ஆனா கொடுத்த மனசு. கொடு என்று சொன்ன மனசு அதை கையெடுத்து கும்புடறேன்.''

பெண்கள் நிமிரணும். வளரணும். தனியா நிக்கணும்னு நான் பட்டறை நடத்த வரலை வேற வழியில்லை. வந்தேன். வித்திருக்கலாம் பட்டறையை.

விக்காம தடுத்தது எது? என் புருஷன் உறவு வளர உதவினது சில நல்ல ஆண்களின் மனசு.

நான் தனிச்சு நிக்கற பெண் இல்லைங்க. நாலு பேர் துணையோட நிற்கிற பெண். நாலு பேருக்கு உதவியா இருக்கணும்னு நெனைக்கற பெண்.

''உழைப்புல ஆண் பெண் வித்தியாசமில்லீங்க. லேடின்னு பாராட்டு தரதவிட, மோல்டிங் காஸ்டிங்க பத்தி நல்லா தெரிஞ்சவங்கன்னு உங்ககிட்ட பரிசு வாங்கணும். மோல்டிங்குல புதுசா ஒரு மெத்தட் கண்டுபிடிச்சா புவனான்னு பேர் வாங்கணும்.

எந்த யோக்கியதையும் இல்லாத எனக்கு பரிசு கொடுத்த மனசு நோகக் கூடாதுன்னு வாங்கிட்டேன். இது என்னை பலப்படுத்தும்னு நெனச்சு ஏத்துக் கிட்டேன். நன்றின்னு சொல்லக்கூட கூச்சமா இருக்கு. நல்லாயிருக்கணும் எல்லாம்ன்னு மனசுல ஒரு வேண்டுதல் வருது. வேண்டுதலையே நன்றியா சொல்லி...''

கூட்டம் கைதட்டிற்று.

''மேடம்'' யாரோ எழுந்தார்கள்.

''ஒரு கேள்வி.''

''தேவையா?'' யாரோ மறித்தார்கள்.

''என்னங்க?''

''புருஷனுக்காக பட்டறை நடத்தறேன்னு சொன்னீங்க. எனக்குப் புரியுது. ஒரு லேடி தனக்காக என்ன செய்யணும்?''

''புருஷனை கவனிச்சுக்கணும்'' உடனே பதில் சொன்னாள்.

வாய்விட்டு சிரித்தார்கள்.

''புருஷன் இல்லாத லேடி?''

''மகள், மகன், அம்மா, அப்பா, தம்பி தங்கை யாராவது இருப்பாங்களே...''

''தன்னைப்பத்தி எந்த லேடியும் கவலைப்படற தில்லையா?''

''உங்க தலைக்கு மேல சுத்தற விசிறி கொக்கியப் பத்தி கவலைப்படுங்க. கொக்கி ஸீலீங் பத்தி கவலைப் படும். ஸீலிங் சுவர் பத்தி கவலைப்படும். சுவர் தரையப் பத்திக் கவலைப்படும். தரை சுத்தற விசிறியைப் பத்தி கவலைப்படும். விழுந்து தன்னைப் பேத்துறாத இருக்கணும்ன்னு ''

மறுபடி ஹால் முழுவதும் சிரித்தது.

''அதாவது ஒருவருக்கு ஒருவர் தொடர்புன்றீங்க. வித்தியாசமில்லைன்றீங்க.''

''ஆமாங்க.''

''அப்ப பஸ்ல தனியிடம், சினிமா தியேட்டர்ல தனியிடம் ஏன்? நீங்க ஏன் என் மாதிரி பேண்ட் போடலை? ஏன் புடவை கட்டறீங்க?''

''ஒரு வாதத்துக்கு இதையே நான் புரட்டிக் கேட்கலாம்.'' மெல்ல புன்னகை செய்தாள்.

சிலருக்குப் புரிந்தது.

''ஆனா இது பதில் ஆகாதுன்னு எனக்குத் தெரியும், வித்தியாசம் இருக்கும். இருக்கணும். ஆனா பசி, தூக்கம், கவலை வலி எல்லாம் இரண்டு பேருக்கு ஒன்னு. மாறுதலை புரிஞ்சுக்கிட்டு பார்த்தது என்னன்னு யோசிக்க முடியாதா. அப்படி யோசிக்கறது கேவலமா?''

கை தட்டினார்கள்.

''லேடின்னு பாராட்டறது வெக்கமா இருக்குன்னு நீங்களே படிச்சீங்களே, அதுனால கேட்டேன்.

''ஆம்பளையா ஆகணும்னு எல்லா லேடியும் விரும்ப றாங்களான்னு கேட்கறா போல...''

''அப்படியில்லை. லேடின்னு நினைக்காதேன்னு ஒரு இடம். நான் லேடின்னு ஒரு இடம். உண்மைல எது நீங்க. உங்களை மட்டும் நான் கேட்கலை. மொத்த லேடீசை யும் பார்த்து கேட்கற கேள்வி இது. பதில் சொல்ல இஷ்டமிருந்தா சொல்லலாம். கட்டாயமில்லை.''

''இது பாராட்டு மட்டுமில்லை. பாராட்டுத் தெரி வித்துவிட்டு வம்புக்கும் இழுக்கிற வேலை. உயரத்தாண்டு தலுக்கு பதக்கம் தந்துவிட்டு, ஏன் தாண்டினே, என்ன காரணம் என்று கேட்கிற அலட்டல்.''

பதில் சொல்லாது போனால் வாங்கிய பரிசு சுமையாய் நிற்கும். காட்டடியாய் பதில் சொன்னால் பரிசு கொடுத்த மனசு நோவும், யோசித்தாள்.

''ஐயா, உங்க வீட்டு அம்மாவை விட நீங்க சாமர்த் தியம்தான் இல்லையா?''

''நிச்சயம்.''

''ஆனா, புள்ளை யார் பெற முடியும்? யார் பால் தரமுடியும்?''

''அதுதான் வேலைங்கறேன்.''

''நான் இல்லைன்னு சொல்லலை. ஆனா நீங்க செய்யற டாக்டர். என்ஜினியர் வேலையை உங்க வீட்டு அம்மாவும் செய்ய முடியும். மலை ஏற முடியும். ராக்கெட்ல போக முடியும். கம்ப்யூட்டர் செய்ய முடியும்.''

''உடல் கூறு சொல்லிட்டு வேற எங்கியோ போறீங்க.''

''உடல் கூறுதான் வித்தியாசம். வலிவேதனை ஒன்று. சுமை பொறுப்பு ஒன்று. கண்ணாடில முகம் பார்க்கறீங்களே, அப்ப தெரியறது உங்க முகமா கண்ணாடியா?''

''முகம்.''

''ஏன் கண்ணாடியும் தெரியுமேய்யா'' யாரோ சொன்னார்கள்.

''ஏங்க இரண்டும் ஒரே நேரம் பார்க்க முடியாதா? கண்ணாடியில் தெரியும் முகம்னு புரியாதா?''

''புரியும்.''

''கண்ணாடி உங்க வீட்டு அம்மா. உங்க முகம் அவங்க மனசுல தெரியும். உங்க மனசுல அவங்க முகம் தெரியணும். நான் ஒரு மனைவி. கண்ணாடி. என் புருஷனைப் பிரதிபலிக்கிறேன். அதனால் பட்டறை நடத்துகிறேன். நான் அவர் மனைவி. என் முகம் அவர் நெஞ்சுல தெரியுது அதனாலேயே பல அவமானங்களை தாங்கிக்கிட்டு வளைய வராரு. எனக்காக உயிரோட இருக்கணும்னு நினைக்கறாரு.''

''கண்ணில் குப்பென்று ஜலம் பொங்கி வார்த்தை குளறியது.

''பிரிச்சு ஒதுக்கி வைக்கிறது கஷ்டமேயில்லை யார் வேணா செய்யலாம். புரிஞ்சுக்கிட்டு ஒத்துமையா இருக்கறதுக்கு கண்ணாடி, முகம் ரெண்டையும் பார்க்கற பொறுமை வேணும்.''

''ஐ திங். இது போதும்னு நினைக்கிறேன்'' ராவ் எழுந்து இடைமறித்தார்.

உணவு வகைகள் உள்ளே வந்தன.

காரில் வீடு திரும்பியபோது உள்ளே நெஞ்சுக்கு அடியில் லேசாய் ஒரு வலி இருந்தது.

ஆண்களுக்கு ஏன் பெண்களை முழுமையாய் நேசிக்க முடியவில்லை என்கிற கேள்வி வந்தது.

''பொறுமை இல்லையா?''

''பயமா?''

''அதிகாரம் இனி எங்கே செய்ய முடியும் என்கிற ஆவேசமா?''

ஏன் முழுமையாய் நம்ப முடியவில்லை? சில விஷயங்களுக்கு மட்டும் பெண் தேவை என்று ஏன் எண்ண வேண்டும்?

ஆணிடம் என்ன கோளாறு? நம்பிக்கையின்மை எப்படி வாழ்வின் அடித்தளம் ஆகும். அவநம்பிக்கை எப்படி பிடிப்பாகும்?

என்ன காரணம்?

இரவு முழுவதும் விதவிதமாய் யோசனை செய்தாள். விடிந்தபிறகு யாரோ அழைப்பு மணியை அழுத்துவது தெரிந்தது.

முத்துலட்சுமி கதவைத் திறந்து ''அம்மா'' என்று குரல் கொடுத்தாள்.

''ஐயா வந்துட்டாரு'' அழகிரி கத்தினான்.

வாரி சுருட்டி வாசலுக்கு வந்தாள்.

சட்டையும் அண்டர்வேருமாய் புவனாவின் புருஷன் வாசற்படியில் ஏறி நின்றான்.

32

எது மிகப் பெரிய சந்தோஷம்?

பிரிந்தவர் கூடுவது.

எது மிகப் பெரிய துக்கம்?

வெகு நாட்கள் பிரிந்து கூடும் நேரத்தில் பிரிவுத்துயர் மொத்தமும் நெஞ்சில் பொங்கி வருவது.

எது மிகப் பெரிய பொய்?

அவ்விதம் கூடும் நேரத்தில், பிரிவுத் துயரில் வேதனை என்று கூறுவது.

எது மரணத்திற்கு நிகரான நிம்மதி?

பிரிவுக்குப் பிறகு சேர்ந்து கைகோர்த்து வாய் குழறி நெஞ்சில் முகம் புதைத்து, அப்பா அது போதும்...இனி எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று வரும் நேரம்.

எது கசப்பு?

பிரிவு சிறிது நாள் சேர்வதின் சந்தோஷம். சில மணி நேரம். பிரிவு துக்கம் முற்றிலும் உழன்று மறுபடி சேர்ந்த சந்தோஷம். அழுகை, ஆரவாரம் எல்லாம் அனுபவித்து சரி இனி மேற்கொண்டு என்ன என்கிற இடம் பிரிவு எவ்வளவு சுகம் என்று மனம் கூடிய பிறகு நினைக்கும் இடம்.

புவனா புவனேஸ்வரி சகலவித கேள்விகளாலும், உணர்ச்சிகளாலும் அலைக்கழிக்கப்பட்டார்கள். நிற்க முடியாமல் துவண்டாள். வேதனையையும் சந்தோஷத்தையும், அழுகையையும், ஆனந்தத்தையும் ஒருசேர அனுபவித்தாள்.

ஆனால் இதெல்லாம் சாதாரண மனிதர்களுக்கு... மனிதர்களை மனிதர்களுக்காக நேசிப்பவருக்கு, புருஷன் உயர்வு, மனைவி மரியாதை, குடும்பம், சுகம், பிள்ளைகள் உலகம் என்கிற மனிதருக்கு, இவைகள் இல்லாதவரும் உண்டு. இவைகளைக் கடந்தவர் உண்டு. கடக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர் உண்டு. சிவப்பிரகாசம் கடக்க ஆசைப்பட்டார். எனக்கு நேர்ந்த விபத்து ஏன் துக்கமாக போயிற்று. என்னை சிறையில் அடைத்தது. எனக்கு ஏன் அவமானமாய் போயிற்று. இந்த துக்கமும் அவமானமும் என் பொருட்டா...எனக்கு சிறை வேதனையாய் இருந்ததா...இல்லையே, சிறையில் உணவு கிடைத்ததே, உறங்க இடம் இருந்ததே, உடுக்க உடைதரப் பட்டதே. உணவு, உடை, உறைவிடம் அங்கும் கிடைத்ததே. பிறகு ஏன் அழுகை?

நான் மனைவி அழுவாளே என்று அழுதேன். பெண் குழந்தை வேதனைப்படுவாளே என்று வேதனைப் பட்டேன். மாப்பிள்ளை கேலி செய்வாரோ என்று மறுகினேன். பட்டறை ஆட்கள் புறம் பேசுவார்களோ என்று அஞ்சினேன், கம்பெனி ஆட்கள் குடைந்து குடைந்து கேள்வி கேட்பார்களோ என்று கலவரப் பட்டேன்.

மனைவி, பெண், மாப்பிள்ளை, பட்டறை, கம்பெனி இதெல்லாம் என்ன...எப்படி வந்தன...இவை... தானா என்னோடு பிறந்தவைவா? சிவப்பிரகாசம் என்றால் இவை தானா...சிவப்பிரகாசம்? யார்? கணவனா, தகப்பனா முதலாளியா, கஸ்டமரா...எது நான்? யார் நான்? நான் ஏதுமில்லை. நானென்பது மனசின் காரியம் மனம் தோற்றுவிக்கும் மாயை எனக்கும் மனசுக்கும் சம்பந்தமில்லை. மனசு என்பது கற்பிதம். கற்பிதங்கள் கலையும், மறுபடி வரும். மறுபடி கலையும். கலைவது நானா? கலைந்து கலைந்து வருமெனில், வருவது இயல்பெனில்

கவலை எதற்கு...நானென்பது மனசு, மனசு நானில்லை. அது உண்மையான நானில்லை.

என் உள்ளே உள்ள அது அசையாதது. எதற்கும் ஆடாதது. அதற்கும் இவ்வித உணர்வுக்கும் சம்பந்த மில்லை. நீருக்குள் உள்ள சூரியன் நீர் ஆட ஆடும், அவையும் உண்மையில் சூரியன் ஆடவில்லை. நீர் வழியே பார்க்க ஆடுகிறது. நிமிர்ந்து பார் அதுவே உண்மைச் சூரியன் நீர் நிலையில் தெரிவது சூரியன் பிம்பம். கண்ணா டியில் தெரியும் நாற்பத்தைந்து வயசு சிவப்பிரகாசம் நிழல் அது உண்மைச் சூரியன் இல்லை. சூரியனின் பிம்பம் இருள் வர, பிம்பம் மறையும் மரணம் வர, சிவப்பிரகாசம் காணாது போவான். உண்மைச் சூரியன் மேலே வெகு உயரே எப்போதும் உண்டு. உன் சூரியன் உன்னுள்ளே பிம்பம் பற்றிக் கவலைப்படாது சுடர் விட்டுக் கொண்டிருக் கிறது.

கூடத்தில் அழகிரி முத்துலட்சுமி, புவனா, சிவப்பிர காசம், இரண்டாவது பெண் எல்லோரும் நின்றார் கள்.

''என்னங்க, விட்டுட்டாங்களா...பரோலா?''

சிவப்பிரகாசம் மெள்ள உள்ளே நுழைந்து ஹால் சோபாவில் உட்கார்ந்தான்.

''ஏம்பா சொல்லுங்களேள். நீங்க இல்லைன்னு ஆயிடுச்சா. சேட்டு மாட்டிக்கிட்டானா?''

''தெரியலை.வெளியே போன்னாங்க. வந்துட்டேன்''

''விடுதலையா'''

''தெரியலை.''

''கேஸு நடத்தணுமா?''

வாசலில் நிழல் ஆடிற்று. பாப்பா வராண்டா படி யேறிவந்தாள். கதவோரம் நின்றாள்.

புவனா அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

இவள் தான் காரணமா என்று வியந்தாள்.

''காலைல ஆறு மணிக்கு விட்டுட்டாங்களே, இப்பத் தான் வந்தாரா''

''என்னங்க ஆச்சு. சொல்ல மாட்டேன்றாரே...''

''அப்பா டெல்லில இருந்து ஏதோ செய்திருக்காரு.''

''செய்ய முடியுமா அப்படி?''

''இவர் மனுவா இவர் கையெழுத்துப் போட்டு மினிஸ்டர்கிட்ட மூவ் பண்ணி. இவரு இதுல சம்பந்தம் இல்லைன்னு சொல்லி...''

''செய்ய முடியுங்களா அப்படி...கேஸே கூட ஆட முடியாதுன்னாங்களே...''

''நம்ம இந்தியாவுல எதுவும் செய்யலாம். அப்பாவை ஏன் புடிக்கலை, இவரையெல்லாம் ஏன் பிடிச்சேன்னு மினிஸ்டரே கேள்வி கேட்க, அவரு கோபம் பார்த்து, இவரு இல்லைன்னு விட்டுட்டாங்க. இது எப்பமோ செய்துருக்க வேண்டியது. என்னவோ லேட்டாயிடுச்சு..'

''உள்ள வாங்க'' புவனா குரலில் நன்றி மிதந்தது.

''இல்லை. அப்பா நேரே பார்த்து போன் செய்யச் சொன்னாரு. நான் போன் போட்டுக்கட்டுமா?எஸ்.டி.டி. இருக்கா?''

''இருக்கு, வாங்க.''

''அம்மா ஐயாவை உள்ள கூட்டுகிட்டு போ. அதிர்ச் சியா இருக்காரு'' முத்துலட்சுமி சொன்னாள். அழகிரி மெல்ல சிவப்பிரகாசத்தைத் தூக்கினான். உள்ளே கொண்டுபோய் கட்டிலில் உட்கார வைத்தான். சிவப்பிர காசத்தின் மகள் அருகே நெருங்கி அப்பாவைத் தடவிக் கொடுத்தாள்.

புவனா சமையலறைக்கு ஓடினாள். காபி கலந்தாள். நுரை பொங்க ஆற்றினாள். எடுத்து படுக்கையறைக்கு விரைந்தாள். நடையில் ஓர் உற்சாகம் இருந்தது. 'கடவுளே...கடவுளே...' உள்ளே மனசு கூறிற்று.

ஹாலில் பாப்பா ஹிந்தியில் யாரையோ விசாரித்துக் கொண்டிருந்தாள். காப்பி டம்ளரை சிவப்பிரகாசம் கைகளில் புவனா திணிக்க, ''அம்மா, இங்க வாங்க ஒரு நிமிஷம்'' பாப்பா கூப்பிட்டாள். ரிஸீவரை அவள் கையில் கொடுத்தாள். ''அப்பா பேசறாங்க.''

''ஹலோ, சேட்டா? வந்துட்டாருங்க. விடுதலை ஆயிடுச்சாம் உங்க மக சொல்லிச்சு.'.

எதிர் குரல் மெல்ல கனைத்தது.

''அம்மா நடந்தது எல்லாத்துக்கும் நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன். என் தப்பால உங்க வீட்டுக்கு இத்தினி கஷ்டம். நான் தூங்கவேயில்லை. ஒரு நாள்கூடத் தூங்கலை. நீங்க அழுதது எனக்கு மனசுலயே நின்னுது. இந்த கஷ்டத்துக்கு உங்களுக்கு நான் நாலு தலைமுறைக்கு உதவி செய்யணும். என்ன உதவி வேணும்னாலும் சிவப்பிரகாசத்துக்குச் செய்வேன்னு சொல்லுங்க. எத்தினி லோடு கரி வேணாலும் என் பாம்பே ஆபீஸ் தரும்ன்னு சொல்லுங்க. வேறு எது வேணாலும் பாப்பா கிட்ட கேட்க சொல்லுங்க. அது எனக்கு ஒரே மக. அவ நல்லாருக்கணும்னுதான் நான் இத்தினி கஷ்டப் பட்டேன். இனி எதுவும் தொந்தரவு வராது. பாப்பாக் கிட்ட போன் கொடுங்க.''

புவனாவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. உதவி வேண்டுமா, வேண்டாமா தெரிய வில்லை. அதை சிவப்பிரகாசம் முடிவு பண்ணட்டும். இனி நமக்கென்ன அதைப்பற்றி.

''பாப்பா, அப்பா கூப்பிடறாரு.''

பாப்பா மறுபடி இந்தியில் பேசினாள் ''நான் வரேங்க அவருகிட்ட அப்புறமா பேசறேன். எது வேணாலும் என்னைக் கேளுங்க. இப்பக்கூட காசு கொண்டாந்துருக்கேன்... எதுனா?''

''வேணாம் பாப்பா அவரு தெளியட்டும். என்னவோ போல் உட்கார்ந்திருக்காரு. அப்புறம் அவரையே பேசச் சொல்றேன்..'

''சரி'' பாப்பா நகர்ந்தாள்.

''பாப்பா...''

''என்னங்க..'

''நான் எதுன கோபமா பேசியிருந்தா மனசுல வச்சுக்காதே. ஏதோ வேதனைல பேசிட்டனே தவிர...''

''இல்லம்மா. நீங்க கோவமா பேசலை. பேசியிருந்தா எனக்கு இத்தினி உறுத்தியிருக்காது. பேசாததுதான் என்னைக் கொன்னுடுச்சு. நான் இரண்டு நாள் கழிச்சு போன் செய்யறேன். அவரை கவனிங்க.''

''ஒரு நிமிஷம் இரு.''

''என்ன?''

''குங்குமம் எடுத்துக்க.''

ஓடிப்போய் பூஜையறையிலிருந்து குங்குமச் சிமிழ் கொண்டு வந்தாள். பாப்பாவிடம் நீட்டினாள். சிமிழாய் வாங்குவதா, சிறிது எடுத்துக் கொள்வதா... கையில் போடுவார்களா இல்லை. விரலால் தடவி நெற்றியில் இட்டுக் கொள்வதா... பாப்பா தடுமாறினாள்.

புவனா சட்டென்று ஒரு பொட்டு எடுத்து அவள் நெற்றியில் இட்டாள்.

''எல்லா வேதனையும் எல்லாருக்கும் ஒழிஞ்சுபோய், எல்லாரும் நல்லாருக்கணும்.'' புவனாவுக்கு சொல்லும் போது குரல் தழுதழுத்தது.

வந்த பெண் அவள் துடிதுடிப்பில் தவித்தது விழிகள் விரிந்து வாய் பிளந்து எத்தனை கஷ்டம் நம்ம இரண்டு பேருக்கும் என்பதாய் பார்த்தது. புவனாவின் கைகளை சிமிழோடு பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டது. குனிந்து புவனாவின் பாதம் தொட்டு நெற்றி வகிட்டில் தடவிக் கொண்டது. ''நான் வரேங்க.' புவனா தலையசைத் தாள். மெல்ல நிறைவுடன் சிரித்தாள். அவள் திரும்பி காருக்குப் போன வேகத்தில் அந்த பழைய அலட்சியம், கம்பீரம் இருந்தது. ஒரு ஒயில் இருந்தது. கம்பீரமும் ஒயிலும் சந்தோஷத்தின் வெளிப்பாடுகள்.

''யம்மா இங்க வா, அப்பா கொஞ்சம் தூங்கட்டும்'' படுக்கையறை விளிம்பில் உள்ள முத்துலட்சுமி பெண்ணை அழைத்தாள். புவனாவுக்கு வழிவிட்டாள்.

பெண் எழுந்து ஹாலுக்கு வந்தது.

''போய் குளி'' முத்துலட்சுமி துரத்த, டவலுடன் பின்பக்கம் போயிற்று. முத்துலட்சுமி மெல்ல படுக்கை அறைக் கதவு சாத்தினாள்.

அப்படிச் செய்வதில் அவளுக்கும் சந்தோஷம் இருந்தது. ஹாலின் கோடியில் உள்ள அழகிரி ஒரு கணம் முத்துலட்சுமியைப் பார்த்தான்.

''குளிக்கறீங்களா? குளிச்சுட்டு பட்டறை போலாமா'' அவன் தலையைக் கோதி புவனா கேட்டாள்.

''என்ன பட்டறை?'' அவன் கேட்டான்.

33

''என்ன பட்டறை'' — அவன் கேள்வி புவனாவுக்கு வியப்பாய் இருந்தது.

அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தாள் அதில் வெறுமை தெரிந்தது. ஒருவேளை மனசு நொந்து, என்ன செய்தாலும் கெட்ட பேர்தானே வந்திருக்கிறது என்கிற விரக்தியா? பட்டறைக்கு கரி தேடிப்போய் தானே எனக்கு இந்த கதி என்கிற அலுப்பா? எல்லாவற்றின் மீதும் இனம் புரியாத ஆத்திரமா?

''நம்ம பட்டறைங்க. நடக்குதே'' உடனே பெருமை பொங்க, தான் என்று சொல்ல வெட்கப்பட்டாள். இழுத்து உயர்த்தி பட்டறையை மறுபடி முழு மூச்சுடன் துவக்கி விட்டேன் என்று சொல்ல கூச்சப்பட்டாள்.

''ராவ் போய் பார்த்தேங்க.''

''ம்ம்...''

''ரொம்ப நல்ல மாதிரியா பேசினாரு.''

''திருடனுங்க'' அவன் குரல் உறுமிற்று.

''யாரு?''

''எல்லாரும்.''

''அப்படி சொல்லக் கூடாதுங்க.''

''பட்டறை வேணாம்.''

''ஏன்?''

''மூடிடு, பட்டறை வேணாம்''

''மூரட்டுத்தனமா பேசாத நாய்க்கரே. அம்மா சொல்றது என்னான்னு கேட்டுக்கயேன்.'' முத்துலட்சுமி இடையில் புகுந்து பேசினாள்.

''நல்லா ஓடுதுப்பா பட்டறை அறநூறு காஸ்டிங் தரோம் புது எஞ்சினியர் போட்டுருக்கம். கரிநாலுலோடு கொண்டாந்து தனி ஷெட்டு கட்டி போட்டாச்சு'' பெண் மலர்ச்சியுடன் பேசியது. புவனா நன்றியுடன் பெண்ணைப் பார்த்தாள்.

அம்மாவின் கண்களில் பொங்கின நன்றி பார்த்து பெண் உற்சாகம் கொண்டது.

''அம்மா ராப்பகலா எப்படியும் பட்டறையை நடத்துவேன்னு வெறியோட சுத்துச்சு. தரைலதான் படுக்கை. மறுபடி எல்லா டூல்ஸும் வாங்கிப்போட்டு லேபருக்கு கூட கூலி கொடுத்து காஸ்டிங் ரேட்டு கூட ஏத்தி தராங்கப்பா.''

''எனக்கு இது வேணாம், இது பத்தி யாரும் பேச வேணாம்.''

''ஏம்பா?''

அவன் மௌனமாய் உட்கார்ந்திருந்தான். வீடு வேறு ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டோமோ என்கிற பயத்தில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

''பட்டறையை வித்துரு புவனா.''

''வித்துட்டு?''

''எங்கனா போய்டுவோம்.''

''எதுக்குங்க. வந்து ஒரு தடவை பட்டறைய பாருங்களேன்.''

''இந்த இடம் புடிக்கலை.''

''வேற இடத்தில போய் பட்டறை ஆரம்பிக்கலாம்னு எண்ணமா?''

''இல்லை. எந்த வேலையும் எனக்கு வேணாம்.''

''ஏன்?''

''உண்மையைத் தேடணும்.''

வீடு வாயடைத்தது.

''இது எல்லாம் குப்பை புவனா. எல்லாம் குப்பை. மலக்குப்பை. இது வேணாம் நமக்கு.''

''வேற என்னங்க வேணும்?''

''நாட்டமென்றே இரு சத்குரு
பாதத்தை நம்பு பொம்மல்
ஆட்டமென்றே இரு பொல்லா
உடலை அடர்ந்த சந்தைக்
கூட்டமென்றே இரு சுற்றத்தை
வாழ்வை குடங்கலிழ் நீர்
ஓட்டமென்றே இரு நெஞ்சே
உனக்கு உபதேசம் இதோ—

இதான் சரி. இது மட்டும்தான் சரி, வேற எல்லாம் பொய். அதனாலதான் சொல்றேன் எல்லாத்தையும் வித்துட்டு...'' மூச்சிரைக்க எந்த இலக்கும் இன்றி சுவர் தாண்டி வெறித்தான்.

புவனா கவலையில் மூழ்கினாள்.

''வுட்றும்மா. இரண்டு மூணு நாள்ல சரியா போயிரும். தடக்குன்னு வெளிய விட்டதும் ஐயா என்னம்மா அடிச்சா மாதிரி ஆய்ட்டாரு. வுட்டுப்பிடி. நாய்க்கரே, வா வெந்நீர் விளாவி வைக்கறேன். குளிச்சுட்டு, சாமி கும்பிடுவையாம்.''

அவன் எழுந்தான். குளிக்கக் கூப்பிட்டக் குரலுக்கு செவிமடுத்து செயலில் இறங்கினான் என்று நினைத்தார்கள்.

அவன் வாசல்நோக்கி நடந்தான். வராண்டா தாண்டினான். படியிறங்கினான்.

''முத்துலட்சுமி...'' பயத்துடன் புவனா கூறினாள்.

அழகிரி அவனை நோக்கி ஓடினான் தோள் பிடித்து திருப்பினான்.

''என்ன நாயக்கரே இது அக்கிரமம் பண்றே. உன் பொம்பளை நீயில்லாத நாயா பேயா அலைஞ்சு பட்டறை நிமிர வச்சிருக்கு. அத்தனையும் விட்டுட்டு இப்ப எங்க போறது?''

''மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும்
தன் வாயில் மட்டே
இமையான சுற்றமும் மயானம் மட்டே
வழிக்கேது துணை
தினையாம் அளவு எள்ளளவாகிலும்
முன்பு செய்த தவம்
தனையாள என்று பரலோகம்
சித்திக்கும் சத்தியமே.''

''இது தப்பு நாய்க்கரே.''

அவன் அழகிரியின் பிடியிலிருந்து திமிறினான். புவனா அருகில் ஓடினாள். தோட்டத்தின் நடுவே அவன் காலில் விழுந்தாள்.

''நீங்க வரணும்னுதாம்பா நோன்பு நோக்கற மாதிரி இத்தனையும் செஞ்சேன். தப்புன்னா மன்னிச் சுடுங்க என்னை விட்டு எங்கேயும் போகாதீங்க.'' அவன் பெண் கலங்கி விம்மினாள்.

''அத்தமும் வாழ்வும் அகத்து
மட்டே விழியும் பொழுகி
மெத்திய மாதரும் வீதி மட்டே
விம்மி விம்மி இரு
கைத்தலம் மேல் வைத்து அழும்
மைந்தரும் சுடுகாடு மட்டே
பற்றி தொடர்வது இருவினை
புண்ணிய பாவமே ''

உரத்த குரலில் அவன் சொன்னான். தரையில் விழுந்து வணங்கிய புவனாவை சேறு தாண்டுவது போல் எம்பித் தாண்டினான். திறந்த வாசல் வழியே வெளியேறினான்,

புவனா அப்படியே தரையில் புரண்டாள். நாலும் விட்டு ஒருக்களித்து விம்மி விம்மி தெருவில் போவோர் பார்க்க அழுதாள்.

அழகிரி தொடர்ந்து போனான். முத்துலட்சுமி வாரி இழுத்து புவனாவை வராண்டாவுக்கு கொண்டு வந்தாள்.

''ஐயோ...ஐயோ...என் தாயே...உனக்கு இன்னும் விடியலையே...உனக்கு இன்னும் விடியலையே'' என்று அலறினாள்.

மகள் உதறியபடி அம்மாவை அணைத்துக் கொண்டது.

அழகிரி திரும்பி வந்தான். கடைவாயில் ரத்தம் ஒழுகியிருந்தது.

முகத்தில் குத்தி 'சீ நாயே போ அப்பால' என்று சொல்லிவிட்டானாம். அதைத் தடுக்க முடியாது என்று தெரிந்துவிட்டதாம்.

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி... அடையாளம் சொல்லி...

'வேண்டாம்' என்று கைகாட்டி புவனா நிறுத்தினாள்.

''போகட்டும் விடு.''

''அது எங்கோ கூப்பிட்டுதே, போய் தொலைஞ்சுருக் கலாமே நீயும்.''

''நான் போறதா இல்லை.''

''ஏம்மா?''

''அது போற இடத்துக்கு என்னால் போ முடியாது.''

''ஏம்மா?''

''எனக்கு பட்டறை மேல பிடிப்பு இருக்கு. என் பொண்ணு மேல ஆசை இருக்கு. என்னால அறுத்துக் கிட்டு போக முடியாது.''

''அப்படியே அதுங்கூட போனாலும் எங்கே அறுத்துக்கிட்டு நடுநிசி தனியா வுட்டுட்டு போவுமே தவிர காப்பாத்தாது.''

''தப்பா இல்லை, அதுதான் சரியாங்கறதும் புரியலை ஆனா அது இனிமே நம்ம வழிக்கு வராது. நான் அது வழிக்கு போறதா இல்லை. முத்துலட்சுமி கைகொடுறி.''

தூக்கி நிறுத்த தள்ளாடி எழுந்தாள். சுவர் பிடித்து நின்றாள். சிரித்தாள்.

டெலிபோன் மணி அடித்தது.

எடுத்து நிதானமாகி 'ஹலோ' என்றாள்.

''முரளி பேசறேன், வரலையா நீங்க.''

''ஒன் அவர்ல வரேன் தம்பி.''

''அவரு விடுதலையாயிட்டாராம். ராமசாமி சொன் னான்.''

''ஆமாங்க, வந்தவுடனே தேசாந்திரம் கிளம்பிட் டாரு.''

''அப்படின்னா என்ன?''

''ஊர் ஊரா...கோவில் கோவிலா சுத்தறது.''

''நீங்க போவலையா கூட?''

''பட்டறை இருக்கே. இன்னிக்கு டெலிவரி உண்டுங் களா?''

''நாற்பது ரெடி. இன்னும் பத்து ஊத்தி அம்பதா அனுப்பலாம்னு நினைக்கிறேன்.''

''வந்துடறேன்.''

டெலிபோன் வைத்தாள்.

'அம்மா நீயும் போய்டுவியா என்னை விட்டு.'' மகள் விம்மல் தணியாது கேட்டாள்.

''போறது சுலபம்டி நிக்கறது கஷ்டம். நான் எங்கியும் போகமாட்டேன்.''

''நானும் பட்டறைக்கு வரட்டா?''

''எதுக்கு?''

''வேலை கத்துக்கறேன். உனக்கு உதவியா நிக்கறேன்.''

''குளிச்சுட்டு வா. போலாம். பிராட்வேல ஷம்சுதீ னுக்கு போன் பண்ணி, வெட்டிரும்பு கேட்டது எப்ப தருவேன்னு கேளு. இன்னிக்குத் தரலேன்னா வேற கடை

மாத்திடுவோம்ன்னு சொல்லு. டெலிவரி சலான் எடுத்துக்க. செக் போட்டு காஷ் எடுக்கணும். சம்பளம் தரணும். பதினாறு பேருக்கு போன வார சம்பளம். இந்த வாரம் எழுதிவை. நான் பூஜை பண்ணிட்டு வரேன்.''

உள்ளே நுழைந்து கதவு சாத்திக் கொண்டாள். விளக்கேற்றினாள். கடவுள் படங்களை நோக்கி மெல்ல சிரித்தாள்.

''இவ்வளவுதானே... இவ்வளவுதானே உன்னால முடியும். இதுக்கு மேல ஒன்னும் பண்ணிட முடியாதே... மிஞ்சி மிஞ்சி போனா மரணம் தருவே. அவ்வளவு தானே...நான் ரெடி.''

'உசிரு பிரியறவரைக்கும் புவனா போராடுவா. அடுத்த தலைமுறைக்கு உழைச்சுட்டு வருவா. பட்டறை மூடமாட்டேன். நெருப்பு அணைக்கமாட்டேன். அது எரியும்' நான் இல்லாவிட்டாலும் என் பொண்ணு மூலமா எரியும். ஆம்பளைய அறுத்துக்கிட்டுப் போக வச்சு. முடிஞ்சுதா? இந்தப் பொம்பளை ஆம்பளை ஆயிருவா. அடுத்த பொம்பளையையும் ஆம்பளை ஆக்குவா. பார்க்கறியா...உட்கார்ந்து புவனாவை வேடிக்கைப் பார்க்கறியா...'

''யம்மோவ், பதினாறு பேர் எழுதிட்டேன்.''

''இன்னும் இரண்டு பேர் லிஸ்ட்ல எழுது.''

''யார் யாரு?''

''உன் பேர் எழுது.''

''இது சம்பள லிஸ்ட்.''

''எழுதுடி. சும்மாவா வேலை செய்யப்போற... எழுது. வொர்க்கிங் பார்ட்னர்தானே நீ. ட்ரெய்னின்னு எழுது.

''எத்தினி சம்பளம்?''

''நானூறுன்னு போட்டுக்க. சரியா வேலை செய்தா அடுத்த வருஷம் கூட்டித் தரேன்.''

''உனக்கு?''

''ஆயிரத்தி நானூறு. வேற பேர் போட்டு எழுதறது நல்லது. நம்ம கைச்செலவுக்கு வேணும். புடவை ரவிக்கை வாங்கணுமில்ல.''

''என்ன பேர் எழுத?''

''உங்கப்பா பேர் போட்டுரு.''

''என்னான்னு எழுத?''

''ட்ரெயினீன்னு அதன் பேரு போடு.'' மகள் சிரித்தாள். புவனாவுக்கும் சிரிப்பு வந்தது.

□□□